©
GOVERNMENT OF TAMIL NADU
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 55.20 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 46A] CHENNAI, WEDNESDAY, NOVEMBER 19, 2025
Karthigai 3, Visuvaavasu, Thiruvalluvar Aandu–2056

## Part II—Section 1

**(Supplement)**

## NOTIFICATIONS BY GOVERNMENT

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை**

No.II(1)/REVDM/31/2025.

**[வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – திருச்சிராப்பள்ளி மாவட்டம்–திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம்–திருச்சிராப்பள்ளி வடக்கு குறுவட்டத்திலுள்ள புத்தூர் வருவாய் கிராமத்தை இரண்டாகப் பிரித்து தென்னூர் எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்குதல்–ஆணை வெளியிடப்படுகிறது.]**

கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.

*[அரசாணை (நிலை) எண்.651, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 25 செப்டம்பர் 2025 புரட்டாசி 9, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980.
2. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு , நாள் 03.04.2025.
3. அரசு கடித எண் 5483/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
4. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண்.COLREV/8161/2025–E4, நாள் 07.04.2025.
5. கூடுதல் தலைமைச் செயலாளர் /வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01–04/132/2025, நாள் 16.04.2025.
6. அரசாணை (நிலை) எண் 649, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை: எண். 651, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு வ.நி-1(1) பிரிவு நாள். 25 செப்டம்பர் 2025.**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**15. "பொதுமக்களுக்கு வருவாய்த் துறையின் சேவைகளை விரைவாக வழங்கும் பொருட்டு, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 8 மாவட்டங்களில் மொத்தம் 25 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், திருச்சிராப்பள்ளி வடக்கு குறுவட்டத்திலுள்ள புத்தூர் வருவாய் கிராமத்தை இரண்டாகப் பிரித்து தென்னூர் எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்குவது தொடர்பாக மேலே நான்காவதாக படிக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:—

i. திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், திருச்சிராப்பள்ளி வடக்கு குறுவட்டத்தில் உள்ள 4.புத்தூர் (4/1—தென்னூர், 4/3–பெரிய வடவூர் உட்பட) வருவாய் கிராமத்தினை இரண்டாக பிரித்து தென்னூர் எனும் தனி\\acer—3 வருவாய் கிராமம் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், உத்தேசிக்கப்பட்டுள்ள தென்னூர் வருவாய் கிராமமானது திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உட்பட்ட கோ.அபிஷேகபுரம் மண்டலத்திற்கு உட்பட்ட பகுதியாகும்.

ii. **புதியதாக தென்னூர் வருவாய் கிராமம் தோற்றுவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து தெரிவித்துள்ள விவரங்கள்:-**

- திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், வடக்கு பகுதி, புத்தூர் வருவாய் கிராமத்தில் தென்னூர், பெரிய வடவூர் ஹேம்லெட் (Hamlet) உள்ள நிலையில் சான்றுகள் இணைய வழியாக விண்ணப்பம் செய்யும் பொழுது தென்னூர், பெரிய வடவூர் குக்கிராமங்களிலுள்ள பொதுமக்கள் புத்தூர் கிராமம் என விண்ணப்பம் செய்கின்றனர்.
- மேலும், தென்னூர் கிராமம் மக்கள் தொகை நெருக்கம் மிகுந்த பகுதியாகும். இருப்பினும், பொது மக்கள் இணைய வழியில் சான்றுகள் விண்ணப்பிக்கும் பொழுது புத்தூர் என்ற கிராமத்தினை தெரிவு செய்வதால், இணைய வழியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட தரவுகளில் புத்தூர் கிராமத்தில் சான்றுகளின் எண்ணிக்கை அதிகமாகவும், மற்ற கிராமங்களில் சான்றுகளின் எண்ணிக்கை குறைவாகவும் உள்ளது.
- திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், வடக்கு பகுதி, புத்தூர் வருவாய் கிராமத்திற்கு வருடத்திற்கு சுமார் 7000 க்கும் மேற்பட்ட மனுக்கள் சான்று வழங்கிட கோரி இணையம் வாயிலாகவும், மேற்படி சான்றுகளில் திருத்தம் செய்திடக் கேட்டு 400—க்கும் மேற்பட்ட மேல்முறையீடு மனுக்கள் தபால் மூலமாகவும் வரப்பெறுகின்றன. மேலும் இதனைத் தவிர்த்து முதியோர் உதவித் தொகை கோரி வரப்பெறும் மனுக்கள், விதவை உதவித்தொகை, கலைஞர் உதவித்தொகை, முதிர்கன்னி உதவித்தொகை, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, உழவர் பாதுகாப்புத் திட்டம், நலிந்தோர் உதவித்தொகை, விபத்து நிவாரணம், முதலமைச்சர் பொது நிவாரணம், சமூக பாதுகாப்பு திட்ட மனுக்கள், தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் இலவச வீடு மற்றும் இலவச வீட்டுமனை பட்டா கேட்டு வரப்பெறும் மனுக்கள், வரன்முறை செய்து கேட்டு வரப்பெறும் பட்டா மனுக்கள், சட்டமன்ற தொகுதி உறுப்பினரிடம் பொதுமக்களால் அளிக்கப்படும் மனுக்கள் இவ்வாறான மனுக்கள் மீதான நடவடிக்கைகளின் பணி, மகாத்மா காந்தி நினைவு அரசு பொது மருத்துமனையும் இவ்வட்டத்தில் அமைந்துள்ளதால் பொது மக்கள் அதிகமாக வந்து செல்வதாலும் அதனால் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதாலும் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்கள் போன்றவை அதிகம் நடைபெறுவதாலும் கூடுதல் பணி சுமை குறுவட்ட வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிருவாக அலுவலருக்கு உள்ளது.

iii. திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், வடக்கு குறுவட்டத்தில் உள்ள புத்தூர் வருவாய் கிராமத்தை இரண்டாகப் பிரித்து புதியதாக தென்னூர் வருவாய் கிராமம் உருவாக்கலாம் என திருச்சி மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்.

iv. திருச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையானது தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் அரசாணைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது. திருச்சிராப்பள்ளி மேற்கு வருவாய் வட்டத்தில், தற்போது 2 வருவாய் குறுவட்டங்கள் மற்றும் 8 வருவாய் கிராமங்கள் உள்ளன.

v. மேலும், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், வடக்கு பகுதி, புத்தூர் வருவாய் கிராமத்திற்கு மட்டும் ஒரு வருடத்திற்கு தோராயமாக வரப்பெறும் இணையம் வாயிலாக சான்றுகளின் விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளது:—

| *வ.எண்* | *வருவாய் கிராமத்தின் எண்* | *வருவாய் கிராமத்தின் பெயர்* | *சான்றுகளின் எண்ணிக்கை* | |
|---|---|---|---|---|
| | | | *2024* | *2025 (ஜனவரி – மார்ச்)* |
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 1 | 4 | புத்தூர் | 5149 | 393 |
| 2. | 4.1 | தென்னூர் | 1784 | 133 |
| 3. | 4.3 | பெரிய வடவூர் | 235 | 30 |
| **மொத்தம்** | | | **7168** | **556** |

vi. புதிய வருவாய் கிராமம் தோற்றுவிக்கும் நேர்வில், அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை நாள் 01.12.1980—இல் புதிய கிராம நிருவாக அலுவலர் பணியிடம் உருவாக்கும் அளவுகோல்களின்படி உத்தேசிக்கப்பட்டுள்ள தென்னூர் வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள புத்தூர் வருவாய் கிராமம் கீழ்க்கண்டவாறு அமையும்.

| நிபந்தனை விவரம் | நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் | சீரமைக்கப்படவுள்ள புத்தூர் கிராமம் (பிரிவினைக்கு பின்னர்) | உத்தேசிக்கப்பட்டுள்ள தென்னூர் கிராமம் (பிரிவினைக்கு பின்னர்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000வரை | 51758 (பூர்த்தியாகிறது) | 55376 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 427 (பூர்த்தியாகவில்லை) | 534 (பூர்த்தியாகவில்லை) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | 561.22 ஏக்கர்.சென்ட் (பூர்த்தியாகவில்லை) | 124.89 ஏக்கர்.சென்ட் (பூர்த்தியாகவில்லை) |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 219.07 ஏக்கர். சென்ட் (பூர்த்தியாகவில்லை) | 114.87 ஏக்கர்.சென்ட் (பூர்த்தியாகவில்லை) |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | 8,049/– (பூர்த்தியாகவில்லை) | 2,188/– (பூர்த்தியாகவில்லை) |

vii. மேற்கண்ட அட்டவணையில், கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுள் மக்கள்தொகையினை தவிர்த்து பிற நிபந்தனைகளை பூர்த்தி செய்யவில்லை. இருப்பினும் மாநகராட்சி போன்ற பகுதிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கத்தினால் வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு எடுக்கவும், சட்டம் மற்றும் ஒழுங்கு பணிகள், தேர்தல் பணிகள் போன்ற பல்வகையான பணிகள் கிராம நிருவாக அலுவலருக்கு உள்ளதென்பதால் இந்நேர்வினை சிறப்பினமாக கருதி புத்தூர் வருவாய் கிராமத்தை பிரித்து தென்னூர் எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்கலாம். மேலும், அக்கிராமத்திற்கு மக்கள்தொகை அடிப்படையில் புதியதாக கிராம நிருவாக அலுவலர் பணியிடத்தை நிரந்தரமாக வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

viii. கிராம உதவியாளர் பணியிடத்தை பொறுத்தவரை ஒரு கிராமத்திற்கு ஒரு உதவியாளர் பணியிடம் வழங்கப்படுகிறது. மேலும், அப்பணியிடமானது சிறப்பு காலமுறை ஊதியம் என்ற அடிப்படையில் உள்ளதால் அப்பணியிடத்தை தோற்றுவிக்கும் நேர்வில் சிறப்பு காலமுறை ஊதிய நிலை பணியிடமாகவே வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | நிலை மற்றும் ஊதிய விகிதம் | புதிய பணியிடம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | கிராம நிருவாக அலுவலர் | நிலை–8, (ரூ.19,500/–– 62,000/–) | 1 |
| 2. | கிராம உதவியாளர் | சிறப்பு காலமுறை ஊதிய நிலை | 1 |
| | | மொத்தம் | 2 |

ix. மேலும், புதிய வருவாய் கிராமமாக தென்னூர் வருவாய் கிராமம் தோற்றுவிக்கும் நேர்வில், வட்ட அளவில் மாற்றங்கள் ஏதும் இல்லை என்பதால் புதியதாக தோற்றுவிக்கும் கிராம நிருவாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் பணியிடங்களை திருச்சி மேற்கு வட்டத்தின் வட்டாட்சியர் DDO Code - BF431/15060031–ன் உள்ளடக்கப்பட (Mapping) வேண்டும்.

x. மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் அமைக்கப்பட்ட ஐந்து உயர் அலுவலர்கள் கொண்ட குழுவின் பரிந்துரை அறிக்கையின் அடிப்படையிலும், மாநகராட்சிகளில் பெருகிவரும் மக்கள்தொகை பெருக்கம் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு காணும் பொருட்டு, இந்நேர்வினை சிறப்பினமாக கருதி திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், திருச்சி வடக்கு குறுவட்டத்தில் உள்ள புத்தூர் (தென்னூர், பெரிய வடவூர் உட்பட) என்ற வருவாய் கிராமத்தினைப் பிரித்து தென்னூர் எனும் புதிய வருவாய் கிராமம் தோற்றுவிக்க ஆவண செய்யும் படி அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 25 வருவாய் கிராமங்களுக்கு தலா ஒரு கிராம நிருவாக அலுவலர் பணியிடம் வீதம் 25 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாகவும் மற்றும் தலா ஒரு கிராம உதவியாளர் பணியிடம் வீதம் 25 கிராம உதவியாளர் பணியிடங்களை சிறப்பு காலமுறை ஊதிய விகிதப் பணியிடங்களாக தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.1,55,95,200/–க்கு (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஐந்து ஆயிரத்து இருநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஆகியோரின் கருத்துருக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், திருச்சிராப்பள்ளி வடக்கு குறுவட்டத்திலுள்ள புத்தூர் வருவாய் கிராமத்தை இரண்டாகப் பிரித்து (பிற்சேர்க்கை–I (ம) II–இல் உள்ளவாறு) தென்னூர் எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்க அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

6. **இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் கிராமம் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் கிராமம் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஆறில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1111.

(IFHRMS Additional Sanction Ledger No.2025081111)
PSL No.202509PSL0172.

**பிற்சேர்க்கை–I**

*[அரசாணை (நிலை) எண்.651, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 25.09.2025.]*

**தற்போதுள்ள புத்தூர் வருவாய் கிராமம், புதிய தென்னூர் வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள புத்தூர் வருவாய் கிராமம் ஆகியவற்றின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| *வ. எண்* | *தற்போதுள்ள புத்தூர் வருவாய் கிராமம்* | | *புதிய தென்னூர் வருவாய் கிராமம்* | | *எஞ்சியுள்ள புத்தூர் வருவாய் கிராமம்* | |
|---|---|---|---|---|---|---|
| | *கிராம எண்* | *கிராமத்தின் பெயர்* | *கிராம எண்* | *கிராமத்தின் பெயர்* | *கிராம எண்* | *கிராமத்தின் பெயர்* |
| 1. | 04 | புத்தூர் (4.1. தென்னூர், 4.3 பெரிய வடவூர் உட்பட) | 6 | தென்னூர் | 4 | புத்தூர் (4.3 பெரிய வடவூர் உட்பட) |

**வார்டு மற்றும் பிளாக் விவரங்கள்**

| *வ. எண்* | *தற்போதுள்ள புத்தூர் வருவாய் கிராமத்தின் வார்டு மற்றும் பிளாக்* | | *புதிய தென்னூர் வருவாய் கிராமத்தின் வார்டு மற்றும் பிளாக்* | | *எஞ்சியுள்ள புத்தூர் வருவாய் கிராமத்தின் வார்டு மற்றும் பிளாக்* | |
|---|---|---|---|---|---|---|
| | *வார்டு* | *பிளாக்* | *வார்டு* | *பிளாக்* | *வார்டு* | *பிளாக்* |
| 1. | G (9) | 20, 21 | Y (1) | 10 முதல் 33 வரை | K (13) | 1 முதல் 19 வரை |
| 2. | K (13) | 1 முதல் 19 வரை | G (9) | 20, 21 | L (12) | 21 முதல் 34 வரை |
| 3. | L (12) | 21 முதல் 34 வரை | M (2) | 22 முதல் 41 வரை | Y (1) | 1 முதல் 9 வரை |
| 4. | M (2) | 22 முதல் 41 வரை | – | – | Z (8) | 1 முதல் 25 வரை |
| 5. | Y (1) | 1 முதல் 33 வரை | – | – | – | – |
| 6. | Z (8) | 1 முதல் 25 வரை | – | – | – | – |

## பிற்சேர்க்கை-II

*[அரசாணை (நிலை) எண்.651, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 25.09.2025.]*

**தற்போதுள்ள புத்தூர் வருவாய் கிராமம், புதிய தென்னூர் வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள புத்தூர் வருவாய் கிராமங்களின் ஆட்சி எல்லைப் பட்டியல்**

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விவரம்* | *பிரிக்கப்படும் வருவாய் கிராமம் – புத்தூர் (Parent Village)* | | |
|---|---|---|---|---|
| | | *தற்போதுள்ள புத்தூர் வருவாய் கிராமம்* | *புதிய வருவாய் கிராமம்* | *எஞ்சியுள்ள வருவாய் கிராமம்* |
| 1. | தலைமையிடம் | புத்தூர் (4.1 தென்னூர், 4.3 பெரிய வடவூர் உட்பட) | தென்னூர் (6) | புத்தூர் (4.3 பெரிய வடவூர் உட்பட) |
| 2. | பரப்பளவு (ச.கி.மீ) | 5.27 ச.கி.மீ | 1.28 ச.கி.மீ | 3.99 ச.கி.மீ |
| 3. | மக்கள் தொகை | 1,07,134 | 55,376 | 51,758 |
| 4. | பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 961 | 534 | 427 |
| 5. | நஞ்சை (ஏக்கர்) | 686.11 | 124.89 | 561.22 |
| 6. | புஞ்சை (ஏக்கர்) | 333.94 | 114.87 | 219.07 |
| 7. | நில வருவாய் | ரூ.10,237/– | ரூ.2,188/– | ரூ.8,049/– |
| 8. | வருவாய் வட்டத்தின் பெயர் | திருச்சிராப்பள்ளி மேற்கு | | |
| 9. | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருச்சிராப்பள்ளி | | |
| 10. | சட்டமன்றம் | திருச்சிராப்பள்ளி மேற்கு சட்டமன்ற தொகுதி | | |
| 11. | பாராளுமன்றம் | திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதி | | |
| 12. | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | (திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உட்பட்டது) | (திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உட்பட்டது) | (திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உட்பட்டது) |

No.II(1)/REVDM/32/2025.

**[வருவாய் நிருவாகம் — ஆட்சி எல்லை — விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம் வட்டம் - விழுப்புரம் வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து சாலாமேடு எனும் புதிய குறுவட்டம் உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.652, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 25 செப்டம்பர் 2025 புரட்டாசி 9, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு, நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
3. விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண் எச்.2/ 3000505/2025 நாள் 08.04.2025, 03.05.2025 மற்றும் 09.05.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர் /வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க. பணி6(1)/01–04/121/2025, நாள் 16.04.2025 மற்றும் 07.05.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025

**ஆணை: 652, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு வ.நி-1(1) பிரிவு நாள். 25 செப்டம்பர் 2025.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**14. ''மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்''.**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து சாலாமேடு எனும் புதிய குறுவட்டம் உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. தற்போது அமைந்துள்ள விழுப்புரம் குறுவட்டமானது 33 வருவாய் கிராமங்களை கொண்டுள்ளதாகவும், அவற்றுள், உத்தேசிக்கப்பட்டுள்ள சாலாமேடு குறுவட்டத்திற்கு 18 வருவாய் கிராமங்களை கொண்டு புதியதாக சாலாமேடு குறுவட்டம் உருவாக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ii. **உத்தேசிக்கப்பட்டுள்ள சாலாமேடு குறுவட்டம் தோற்றுவிக்க வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை:–**

- விழுப்புரம் குறுவட்டத்தில் பொது மக்களிடமிருந்து அதிக எண்ணிக்கையில் இணைய வழிச்சான்றுகள் வரப்பெறுவதால், மேற்படி வட்டத்திற்குரிய சார் நிலை அலுவலர்களால் சான்றிதழ்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது.
- மக்கள் தொகை பெருக்கம் மற்றும் இணைய வழி சான்றுகள் குறித்த காலத்திற்குள் பொது மக்களுக்கு வழங்க வழிவகை செய்திடும் பொருட்டு குறுவட்டம் தோற்றுவிக்கப்பட வேண்டும்.
- விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் இடைப்பட்ட தூரமானது 20 கி.மீட்டருக்குட்பட்டுள்ளதால், பொது மக்களுக்கு இணையவழியில் அளிக்கப்படும் சான்றிதழ் மற்றும் பட்டா மாற்றம் தொடர்பான சேவையினை பெற அதிக தொலைவு செல்ல வேண்டிய சூழலினை தவிர்த்திடவும், பொது மக்களின் நன்மை கருதியும், அரசின் நலத்திட்டங்கள் வெகுவிரைவாக எளிதில் பொது மக்களை சென்றடையவும் விழுப்புரம் குறுவட்டத்தை சீரமைத்து சாலாமேடு குறுவட்டம் தோற்றுவிக்க வேண்டியது அவசியமாகிறது என மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- விழுப்புரம் குறுவட்டத்தை சீரமைத்து புதியதாக சாலாமேடு குறுவட்டத்தை தலைமையிடமாக கொண்டு புதிய குறுவட்டம் தோற்றுவிக்க விழுப்புரம் மாவட்ட ஆட்சியரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது

iii. விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையானது தொடர்புடைய அறிக்கைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது. உத்தேசிக்கப்பட்டுள்ள சாலாமேடு குறுவட்டமானது, தற்போது விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் குறுவட்டத்தில் ஒரு வருவாய் கிராமமாக அமைந்துள்ளது. மேலும், தற்போதுள்ள விழுப்புரம் குறுவட்டத்தில் உள்ள 33 வருவாய் கிராமங்களில் 18 வருவாய் கிராமங்களை ஒருங்கிணைத்து உத்தேசிக்கப்பட்டுள்ள சாலாமேடு குறுவட்டமும், எஞ்சியுள்ள 15 வருவாய் கிராமங்களை கொண்டு விழுப்புரம் குறுவட்டமும் செயல்படும் என மாவட்ட ஆட்சியர் அறிக்கையின் பேரில் தெரிய வருகிறது. மேலும், விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் இடைப்பட்ட தூரமானது 20 கி.மீட்டருக்குட்பட்டுள்ளதால், பொது மக்களுக்கு இணையவழியில் அளிக்கப்படும் சான்றிதழ் மற்றும் பட்டா மாற்றம் தொடர்பான சேவையினை பெற அதிக தொலைவு செல்ல வேண்டிய சூழலினை தவிர்த்திட விழுப்புரம் குறுவட்டத்தினை சீரமைத்து புதியதாக சாலாமேடு குறுவட்டம் உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மேலும், புதியதாக கோரப்படும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிரந்தர பணியிடம் மற்றும் ஊதிய நிலை விகிதம் கீழ்க்கண்டவாறு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது:–

| *வ. எண்* | *பணியிடங்களின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம் (In pay revised scale)* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை–10, ரூ.20,600 – 75,900/– | 1 |
| | | **மொத்தம்** | 1 |

iv. விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் நகராட்சி பகுதிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையினை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் எளிதில் சென்றடைய ஏதுவாகவும், நிருவாக நலன் கருதியும் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று விழுப்புரம் குறுவட்டத்தினை சீரமைத்து சாலாமேடு எனும் புதிய குறுவட்டம் உருவாக்கிட ஆவண செய்யுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் மாவட்டம் ஆகியோரின் கருத்துருக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை I (ம) II-இல் உள்ளவாறு)** சாலாமேடு எனும் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்க அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டம் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121
(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)
PSL No.202509PSL0171.

**பிற்சேர்க்கை — I**

*[அரசாணை (நிலை) எண்.652, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 25.09.2025.]*

**தற்போதுள்ள விழுப்புரம் குறுவட்டம், புதிய சாலாமேடு குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள விழுப்புரம் ஆகிய குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள விழுப்புரம் குறுவட்டம் | | புதிய சாலாமேடு குறுவட்டம் | | எஞ்சியுள்ள விழுப்புரம் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 52 | விழுப்புரம் | 50 | சாலாமேடு | 52 | விழுப்புரம் |
| 2. | 54 | கீழ்பெரும்பாக்கம் | 29 | வழுதரெட்டி | 54 | கீழ்பெரும்பாக்கம் |
| 3. | 63 | பாணாம்பட்டு | 41 | கண்டமானடி | 63 | பாணாம்பட்டு |
| 4. | 27 | விராட்டிகுப்பம் | 38 | மரகதபுரம் | 27 | விராட்டிக்குப்பம் |
| 5. | 26 | ஆலாத்தூர் | 39 | கண்டியமடை | 26 | ஆலாத்தூர் |
| 6. | 55 | எருமணந்தாங்கல் | 40 | கண்டம்பாக்கம் | 55 | எருமணந்தாங்கல் |
| 7. | 61 | மகாராஜபுரம் | 42 | பிடாகம் | 61 | மகாராஜபுரம் |
| 8. | 09 | சோழம்பூண்டி | 66 | ஆனாங்கூர் | 09 | சோழம்பூண்டி |
| 9. | 08 | ஆசாரங்குப்பம் | 46 | தளவானூர் (திருவாதி) | 08 | ஆசாரங்குப்பம் |
| 10. | 10 | இடப்பாளையம் | 45 | கொங்கரகொண்டான் | 10 | இடப்பாளையம் |
| 11. | 53 | காகுப்பம் | 44 | வேளியம்பாக்கம் | 53 | காகுப்பம் |
| 12. | 51 | பூந்தோட்டம் | 43 | அத்தியூர் (திருவாதி) | 51 | பூந்தோட்டம் |
| 13. | 62 | மருதூர் | 67 | காவணிப்பாக்கம் | 62 | மருதூர் |
| 14. | 28 | நன்னாடு | 47 | சித்தாத்தூர் திருக்கை | 28 | நன்னாடு |
| 15. | 25 | வேடம்பட்டு | 68 | திருப்பாச்சனூர் | 25 | வேடம்பட்டு |
| 16. | 50 | சாலாமேடு | 48 | அரியலூர் (விழுப்புரம்) | – | – |
| 17. | 29 | வழுதரெட்டி | 49 | குளத்தூர் | – | – |
| 18. | 41 | கண்டமானடி | 30 | கொண்டங்கி | – | – |
| 19. | 38 | மரகதபுரம் | – | – | – | – |
| 20. | 39 | கண்டியமடை | – | – | – | – |
| 21. | 40 | கண்டம்பாக்கம் | – | – | – | – |
| 22. | 42 | பிடாகம் | – | – | – | – |
| 23. | 66 | ஆனாங்கூர் | – | – | – | – |
| 24. | 46 | தளவானூர் (திருவாதி) | – | – | – | – |
| 25. | 45 | கொங்கரகொண்டான் | – | – | – | – |
| 26. | 44 | வேளியம்பாக்கம் | – | – | – | – |
| 27. | 43 | அத்தியூர் (திருவாதி) | – | – | – | – |

| வ. எண் | தற்போதுள்ள விழுப்புரம் குறுவட்டம் | | புதிய சாலாமேடு குறுவட்டம் | | எஞ்சியுள்ள விழுப்புரம் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 28. | 67 | காவணிப்பாக்கம் | – | – | – | – |
| 29. | 47 | சித்தாத்தூர் திருக்கை | – | – | – | – |
| 30. | 68 | திருப்பாச்சனூர் | – | – | – | – |
| 31. | 48 | அரியலூர் (விழுப்புரம்) | – | – | – | – |
| 32. | 49 | குளத்தூர் | – | – | – | – |
| 33. | 30 | கொண்டங்கி | – | – | – | – |

**பிற்சேர்க்கை – II**

*[அரசாணை (நிலை) எண்.652, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 25.09.2025.]*

**தற்போதுள்ள விழுப்புரம் குறுவட்டம், புதிய சாலாமேடு குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள விழுப்புரம் ஆகிய குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் குறுவட்டம் (Parent Firka) | | |
|---|---|---|---|---|
| | | தற்போதுள்ள விழுப்புரம் குறுவட்டம் | புதிய குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் |
| 1. | தலைமையிடம் | விழுப்புரம் | சாலாமேடு | விழுப்புரம் |
| 2. | பரப்பளவு | 101.15 Sq.km. | 60.49 Sq.km. | 40.66 Sq.km. |
| 3. | மக்கள் தொகை | 1,90,085 | 75,304 | 1,14,781 |
| 4. | வருவாய் வட்டத்தின் பெயர் | விழுப்புரம் | | |
| 5. | வருவாய் கோட்டத்தின்பெயர் | விழுப்புரம் | | |
| 6. | சட்டமன்ற தொகுதி பெயர் | விழுப்புரம் மற்றும் விக்கிரவாண்டி | விழுப்புரம் | விழுப்புரம் மற்றும் விக்கிரவாண்டி |
| 7. | பாராளுமன்ற தொகுதி பெயர் | விழுப்புரம் | | |
| 8. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 33 | 18 | 15 |
| 9. | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 25 | 16 | 09 |
| 10. | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம்/தூரம் | 12 | 09 | 03 |

No.II(1)/REVDM/33/2025.

**[வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – மதுரை மாவட்டம் - மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள வருவாய் கிராமங்களைப் பிரித்து தல்லாகுளம்-II, வடக்குமதுரை-II, மேல்மதுரை-II, மேல்மதுரை-III, மேல்மதுரை-IV, ஆரப்பாளையம் கொக்குளப்பி, மாடக்குளம்-II, மாடக்குளம்-III மற்றும் மாடக்குளம்-IV ஆகிய 9 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.656, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980.
2. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு, நாள் 03.04.2025.
3. அரசு கடித எண் 5483/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
4. மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண் 3009863/2025–ஜி2 நாள் 08.04.2025.
5. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/453/2025, நாள் 23.04.2025 மற்றும் 08.05.2025.
6. அரசாணை (நிலை) எண் 649, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:- எண்.656. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**15. “பொதுமக்களுக்கு வருவாய்த் துறையின் சேவைகளை விரைவாக வழங்கும் பொருட்டு, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 8 மாவட்டங்களில் மொத்தம் 25 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்கப்படும்”.**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், மதுரை மாவட்டம், மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள வருவாய் கிராமங்களைப் பிரித்து தல்லாகுளம்–II, வடக்குமதுரை–II, மேல்மதுரை–II, மேல்மதுரை–III, மேல்மதுரை–IV, ஆரப்பாளையம் கொக்குளப்பி, மாடக்குளம்–II, மாடக்குளம்–III மற்றும் மாடக்குளம்–IV ஆகிய 9 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்குவது தொடர்பாக மேலே நான்காவதாக படிக்கப்பட்ட மதுரை மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. **புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 9 வருவாய் கிராமங்களின் விவரங்கள்**

- மதுரை வடக்கு வட்டம், தல்லாகுளம் குறுவட்டத்தில் உள்ள தல்லாகுளம் வருவாய் கிராமத்தை பிரித்து தல்லாகுளம்–II எனும் புதிய வருவாய் கிராமம். எஞ்சியுள்ள தல்லாகுளம் வருவாய் கிராமம் தல்லாகுளம்–I என பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்.
- மதுரை வடக்கு வட்டம், சாத்தமங்கலம் குறுவட்டத்தில் உள்ள வடக்குமதுரை வருவாய் கிராமத்தை பிரித்து வடக்குமதுரை–II எனும் புதிய வருவாய் கிராமம். எஞ்சியுள்ள வடக்குமதுரை வருவாய் கிராமம் வடக்குமதுரை–I என பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்.
- மதுரை மேற்கு வட்டம், மதுரை மேற்கு குறுவட்டத்தில் உள்ள மேல்மதுரை வருவாய் கிராமத்தை சீரமைத்து மேல்மதுரை–II, மேல்மதுரை–III , மேல் மதுரை–IV என 3 வருவாய் கிராமமாக பிரித்தல். எஞ்சியுள்ள மேல்மதுரை வருவாய் கிராமம் மேல்மதுரை–I என பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்.
- மதுரை மேற்கு வட்டம், மதுரை மேற்கு குறுவட்டத்தில் உள்ள ஆரப்பாளையம் கொக்குளப்பி, பொன்மேனி குரூப் வருவாய் கிராமத்தை சீரமைத்து ஆரப்பாளையம் கொக்குளப்பி எனும் புதிய வருவாய் கிராமம்.
- திருப்பரங்குன்றம் வட்டம், திருப்பரங்குன்றம் குறுவட்டத்தில் உள்ள மாடக்குளம் வருவாய் கிராமத்தை சீரமைத்து மாடக்குளம்–II, மாடக்குளம்–III மற்றும் மாடக்குளம்–IV எனும் 3 புதிய வருவாய் கிராமங்கள். எஞ்சியுள்ள மாடக்குளம் வருவாய் கிராமம் மாடக்குளம்–I என பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

ii. புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 9 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்க வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை குறித்த காரணங்கள்:–

- மதுரை மாவட்டம், மதுரை மாநகராட்சி எல்லைக்குள் மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதாலும் வருவாய் கிராமங்களில் சான்றிதழ்கள் கோரி இணைய வழியில் விண்ணப்பிக்கும் மனுக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.
- இதன் காரணமாக ஒரு கிராம நிருவாக அலுவலரால் அனைத்து சான்றிதழ்களையும் சரிபார்த்து வருவாய் ஆய்வாளருக்கு பரிந்துரை செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது.
- மேலும், மதுரை மாநகருக்குள் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும்போதும் உள்வட்ட வருவாய் ஆய்வாளருக்கு உடனுக்குடன் தகவல் தெரிவிப்பதிலும் காலதாமதம் ஏற்படுகிறது.
- மேலும், நிலவரி, நகர்புறநிலவரி, வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் வசூல் செய்ய வேண்டிய இனங்களும் அதிக அளவில் நிலுவையில் உள்ளதால் ஒரு கிராம நிருவாக அலுவலரால் அவற்றில் கவனம் செலுத்தி அரசிற்கு வரவேண்டிய வருவாய் இனங்களை வசூல் செய்வதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, மதுரை மாநகர எல்கைக்குள் உள்ள வருவாய் குறுவட்டத்தினை பிரிப்பது அவசியமாகிறது.

iii. புதியதாக 9 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்கும் நேர்வில் தேவைப்படும் புதிய பணியிட விவரங்கள் பின்வருமாறு:–

| *வ. எண்* | *பணியிட விவரங்கள்* | *மொத்தம்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | கிராம நிருவாக அலுவலர் | 9 |
| 2 | கிராம உதவியாளர் | 9 |

iv. மதுரை மாவட்டம், மதுரை மாநகராட்சி பகுதிகளில் பெருகி வரும் மக்கள்தொகை, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களின் பெருக்கம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் 5 உயர் அலுவலர்களின் பரிந்துரையின்படி 9 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்க மதுரை மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

v. மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையானது தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் அரசாணைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அதன் விவரங்கள் பின்வருமாறு:—

- **மதுரை மாவட்டத்தில் உள்ள வருவாய் கோட்டம், வட்டம், உள்வட்டம் மற்றும் வருவாய் கிராமங்கள் விபரங்கள்.**

| *வ. எண்* | *வருவாய் கோட்டத்தின் பெயர்* | *வட்டத்தின் பெயர்* | *வருவாய் உள் வட்டத்தின் எண்ணிக்கை* | *வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 1. | மதுரை | மதுரை வடக்கு | 5 | 82 |
| 2. | | மதுரை மேற்கு | 2 | 21 |
| 3. | | வாடிப்பட்டி | 7 | 77 |
| 4. | மேலூர் | மதுரை தெற்கு | 3 | 31 |
| 5. | | மதுரை கிழக்கு | 7 | 106 |
| 6. | | மேலூர் | 8 | 84 |
| 7. | திருமங்கலம் | திருமங்கலம் | 3 | 61 |
| 8. | | கள்ளிக்குடி | 3 | 47 |
| 9. | | திருப்பரங்குன்றம் | 2 | 27 |
| 10 | உசிலம்பட்டி | உசிலம்பட்டி | 5 | 54 |
| 11 | | பேரையூர் | 6 | 75 |
| | மொத்தம் | | 51 | 665 |

- **மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் புதியதாக உருவாக்கப்படும் வருவாய் கிராமங்களின் பட்டியல்**

| *வ. எண்* | *வட்டத்தின் விபரம்* | *தற்போதைய கிராமம்* | *புதிய கிராமம்* | *எஞ்சியுள்ள கிராமம்* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 1. | மதுரை வடக்கு | தல்லாகுளம் | தல்லாகுளம்—II | தல்லாகுளம்—I |
| | | வடக்குமதுரை | வடக்குமதுரை—II | வடக்குமதுரை —I |
| 2. | மதுரை மேற்கு | மேல்மதுரை | மேல்மதுரை—II, மேல்மதுரை—III, மேல்மதுரை—IV | மேல்மதுரை—I |
| | | பொன்மேனி ஆராப்பாளையம் கொக்குளப்பி குரூப் | ஆராப்பாளையம் கொக்குளப்பி குரூப் | பொன்மேனி |
| 3. | திருப்பரங்—குன்றம் | மாடக்குளம் | மாடக்குளம்—II, மாடக்குளம்—III மற்றும் மாடக்குளம்—IV | மாடக்குளம்—I |
| மொத்தம் | | | 9 | 5 |

- **உத்தேசிக்கப்பட்டுள்ள தல்லாகுளம் பிட்-II வருவாய் கிராமம்**

மதுரை வடக்கு வட்டம், தல்லாகுளம் குறுவட்டத்திலுள்ள தல்லாகுளம் வருவாய் கிராமமானது நிருவாக நலன் கருதி இரண்டு வருவாய் கிராமங்களாக பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள வருவாய் கிராமம் தல்லாகுளம்—II எனவும், எஞ்சியுள்ள தல்லாகுளம் வருவாய் கிராமம் தல்லாகுளம்—I என பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும். தற்போது இவ்வருவாய் கிராமத்தில் ஆண்டொன்றுக்கு 11,661 இணையவழிச் சான்றுகள் வரப்பெறுவதாக மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள தல்லாகுளம்—II மற்றும் தல்லாகுளம்—I முழுவதும் மதுரை மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

| வ. எண் | கிராமத்தின் பெயர் | தற்போதைய குறுவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர் | பிரிவினைக்கு முன்பு | | பிரிவினைக்கு பின்பு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பரப்பு (ஹெக்.) | மக்கள் தொகை | கிராமத்தின் பெயர் | தற்போதைய குறுவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர் | பரப்பு (ஹெக்.) | மக்கள் தொகை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | தல்லாகுளம் | தல்லாகுளம் குறுவட்டம் | 652.41.31 | 82987 | தல்லாகுளம் –I | தல்லாகுளம் குறுவட்டம் | 163.04.81 | 46529 |
| 2. | | மதுரை வடக்கு வட்டம் | | | தல்லாகுளம் –II | மதுரை வடக்கு வட்டம் | 489.36.50 | 36458 |
| **மொத்தம்** | | | **652.41.31** | **82987** | **மொத்தம்** | | **652.41.31** | **82987** |

- **உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்குமதுரை-II வருவாய் கிராமம்**

மதுரை வடக்கு வட்டம், சாத்தமங்கலம் குறுவட்டத்திலுள்ள வடக்குமதுரை கிராமமானது நிருவாக நலன் கருதி சீரமைத்து வடக்கு மதுரை–II எனும் புதிய வருவாய் கிராமம் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள வடக்குமதுரை வருவாய்கிராமம் வடக்குமதுரை–I என பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும். தற்போது இவ்வருவாய் கிராமத்தில் ஆண்டொன்றுக்கு 13038 இணையவழிச் சான்றுகள் வரப்பெறுவதாக மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்குமதுரை–II மற்றும் வடக்குமதுரை–I முழுவதும் மதுரை மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

| பிரிவினைக்கு முன்பு | | | | | பிரிவினைக்கு பின்பு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | கிராமத்தின் பெயர் | தற்போதைய குறுவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர் | பரப்பு (ஹெக்.) | மக்கள் தொகை | கிராமத்தின் பெயர் | தற்போதைய குறுவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர் | பரப்பு (ஹெக்.) | மக்கள் தொகை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | வடக்கு மதுரை | சாத்தமங்கலம் குறுவட்டம் | 691.17.21 | 83816 | வடக்கு மதுரை –I | சாத்தமங்கலம் குறுவட்டம் | 436.10.29 | 42414 |
| 2. | | மதுரை வடக்கு வட்டம் | | | வடக்கு மதுரை –II | மதுரை வடக்கு வட்டம் | 255.06.92 | 41402 |
| **மொத்தம்** | | | **691.17.21** | **83816** | **மொத்தம்** | | **691.17.21** | **83816** |

- **உத்தேசிக்கப்பட்டுள்ள மேல்மதுரை–II, மேல்மதுரை-III மற்றும் மேல்மதுரை -IV எனும் 3 வருவாய் கிராமங்கள்**

மதுரை மேற்கு வட்டம், மதுரை மேற்கு குறுவட்டத்தில் உள்ள மேல்மதுரை வருவாய் கிராமமானது நிருவாக நலன் கருதி மேல்மதுரை–II, மேல்மதுரை–III மற்றும் மேல்மதுரை–IV என 3 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள மேல்மதுரை வருவாய் கிராமம் மேல்மதுரை–I என பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

தற்போது இயங்கி வரும் மேல்மதுரை வருவாய் கிராமத்தில் ஆண்டொன்றுக்கு 16000 இணையவழிச் சான்றுகள் வரப்பெறுவதாக மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள மேல்மதுரை–II, மேல்மதுரை–III, மேல்மதுரை–IV மற்றும் எஞ்சியுள்ள மேல்மதுரை–I வருவாய் கிராமங்கள் முழுவதும் மதுரை மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

| வ. எண் | கிராமத்தின் பெயர் | பிரிவினைக்கு முன்பு | | | பிரிவினைக்கு பின்பு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தற்போதைய குறுவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர் | பரப்பு (ஹெக்.) | மக்கள் தொகை | கிராமத்தின் பெயர் | தற்போதைய குறுவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர் | பரப்பு (ஹெக்.) | மக்கள் தொகை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | மேல் மதுரை | மதுரை மேற்கு குறு வட்டம் | 517.5 | 206400 | மேல்மதுரை–I | உத்தேசிக்கப்பட்டுள்ள அரசரடி குறுவட்டம், மதுரை மேற்கு வட்டம் | 158.50 | 56864 |
| | | | | | மேல்மதுரை–II | உத்தேசிக்கப்பட்டுள்ள அரசரடி குறுவட்டம், மதுரை மேற்கு வட்டம் | 154.50 | 44114 |
| | | மதுரை மேற்கு வட்டம் | | | மேல்மதுரை–III | மதுரை மேற்கு குறுவட்டம் மற்றும் வட்டம் | 73.50 | 55263 |
| | | | | | மேல்மதுரை– IV | மதுரை மேற்கு குறுவட்டம் மற்றும் வட்டம் | 132.00 | 50159 |
| மொத்தம் | | | 517.5 | 206400 | மொத்தம் | | 517.50 | 206400 |

- **உத்தேசிக்கப்பட்டுள்ள ஆரப்பாளையம், கொக்குளப்பி வருவாய் கிராமம்**

மதுரை மேற்கு வட்டம், மதுரை மேற்கு குறுவட்டத்தில் உள்ள பொன்மேனி குரூப் வருவாய் கிராமத்தினை சீரமைத்து நிருவாக நலன் கருதி ஆரப்பாளையம் கொக்குளப்பி எனும் வருவாய் கிராமத்தை தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது இயங்கி வரும் பொன்மேனி வருவாய் கிராமத்தில் ஆண்டொன்றுக்கு 7000 இணையவழிச் சான்றுகள் வரப்பெறுவதாக மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள ஆரப்பாளையம் கொக்குளப்பி வருவாய் கிராமங்கள் முழுவதும் மதுரை மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

| வ. எண் | கிராமத்தின் பெயர் | பிரிவினைக்கு முன்பு | | | பிரிவினைக்கு பின்பு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தற்போதைய குறுவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர் | பரப்பு (ஹெக்.) | மக்கள் தொகை | கிராமத்தின் பெயர் | தற்போதைய குறுவட்டம் மற்றும் வட்டத்தின் பெயர் | பரப்பு (ஹெக்.) | மக்கள் தொகை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | பொன்மேனி, ஆரப்பாளையம், கொக்குளப்பி | மதுரை மேற்கு குறுவட்டம் | 468 | 88136 | ஆரப்பாளையம், கொக்குளப்பி | உத்தேசிக்கப்பட்டுள்ள பொன்மேனி குறுவட்டம், மதுரை மேற்கு வட்டம் | 154 | 42592 |
| | | மதுரை மேற்கு வட்டம் | | | பொன்மேனி | உத்தேசிக்கப்பட்டுள்ள பொன்மேனி குறுவட்டம், மதுரை மேற்கு வட்டம் | 314 | 45544 |
| மொத்தம் | | | 468 | 88136 | மொத்தம் | | 468 | 88136 |

- **உத்தேசிக்கப்பட்டுள்ள மாடக்குளம்-II, மாடக்குளம்-III மற்றும் மாடக்குளம்-IV வருவாய் கிராமங்கள்**

திருப்பரங்குன்றம் வட்டம், திருப்பரங்குன்றம் குறுவட்டத்தில் உள்ள மாடக்குளம் வருவாய் கிராமத்தை சீரமைத்து மாடக்குளம்–II, மாடக்குளம்–III மற்றும் மாடக்குளம்–IV எனும் 3 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள மாடக்குளம் வருவாய் கிராமம் மாடக்குளம்–I என பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும். தற்போது இயங்கி வரும் மாடக்குளம் வருவாய் கிராமத்தில் ஆண்டொன்றுக்கு 16,000 இணையவழிச் சான்றுகள் வரப்பெறுவதாக மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள மாடக்குளம்–II, மாடக்குளம்–III மற்றும் மாடக்குளம்–IV மற்றும் எஞ்சியுள்ள மாடக்குளம்–I ஆகிய 4 வருவாய் கிராமங்கள் முழுவதும் மதுரை மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

- **ஆட்சி எல்லைப்பட்டியல் (கிராமம்- மாடக்குளம் குரூப் வருவாய் கிராமம்)**

| வ. எண் | கிராமத்தின் பெயர் | பிரிவினைக்கு முன்பு | | | பிரிவினைக்கு பின்பு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தற்போதைய குறுவட்டம் மற்றும் வட்டம் | பரப்பு (ஹெக்.) | மக்கள் தொகை | கிராமத்தின் பெயர் | தற்போதைய குறுவட்டம் மற்றும் வட்டம் | பரப்பு (ஹெக்.) | மக்கள் தொகை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | மாடக்குளம் | திருப்பரங் குன்றம் குறுவட்டம் | 1369 | 187614 | மாடக்குளம்–I | உத்தேசிக்கப்பட்டுள்ள மாடக்குளம் வடக்கு குறுவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம் | 395 | 44727 |
| | | திருப்பரங் குன்றம் வட்டம் | | | மாடக்குளம்–II | உத்தேசிக்கப்பட்டுள்ள மாடக்குளம் வடக்கு குறுவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம் | 349 | 40725 |
| | | | | | மாடக்குளம்–III | உத்தேசிக்கப்பட்டுள்ள மாடக்குளம் தெற்கு குறுவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம் | 305 | 51566 |
| | | | | | மாடக்குளம்–IV | உத்தேசிக்கப் பட்டுள்ள மாடக்குளம் தெற்கு குறுவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம் | 320 | 50596 |
| **மொத்தம்** | | | **1369** | **187614** | **மொத்தம்** | | **1369** | **187614** |

vi**.** ஆனால், புதிய வருவாய் கிராமம் தோற்றுவிக்கும் நேர்வில், அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980–இல் புதிய கிராம நிருவாக அலுவலர் பணியிடம் உருவாக்க பின்வரும் வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன**.** உத்தேசிக்கப்பட்டுள்ள 9 வருவாய் கிராமங்களும் அவ்வரையறைகளை பூர்த்தி செய்கின்றனவா என்ற விவரம் பின்வரும் விவரிக்கப்பட்டுள்ளது**.**

**தல்லாகுளம் வருவாய் கிராமம்**

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள்* | *சீரமைக்கப்படவுள்ள (தல்லாகுளம்) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப்பட்டுள்ள (தல்லாகுளம்–II) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 46529 (பூர்த்தியாகிறது) | 36458 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 5866 (பூர்த்தியாகிறது) | 3731 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | –– | –– |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | –– | –– |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | –– | ––– |

**வடக்குமதுரை வருவாய் கிராமம்**

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள்* | *சீரமைக்கப்படவுள்ள (வடக்குமதுரை) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப்பட்டுள்ள (வடக்குமதுரை–II) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 42414 (பூர்த்தியாகிறது) | 41402 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 4825 (பூர்த்தியாகிறது) | 5670 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | –– | –– |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | –– | –– |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | –– | ––– |

**மேல்மதுரை வருவாய் கிராமம்**

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப் பட்ட அளவு கோல்கள்* | *சீரமைக்கப்படவுள்ள (மேல்மதுரை) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப்பட்டுள்ள (மேல்மதுரை–II) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப்பட்டுள்ள (மேல்மதுரை–III) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப் பட்டுள்ள (மேல்மதுரை–IV) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 56864 (பூர்த்தியாகிறது) | 44114 (பூர்த்தியாகிறது) | 55263 (பூர்த்தியாகிறது) | 50159 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர் களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 7054 (பூர்த்தியாகிறது) | 6781 (பூர்த்தியாகிறது) | 6535 (பூர்த்தியாகிறது) | 6408 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | மேல்மதுரை கிராமம் முழுவதும் நகர்புறம் என்பதால் நன்செய் நிலங்கள் ஏதுமில்லை | | | |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | மேல்மதுரை கிராமம் முழுவதும் நகர்புறம் என்பதால் புன்செய் நிலங்கள் ஏதுமில்லை | | | |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | மேல்மதுரை கிராமம் முழுவதும் நகர்புறம் என்பதால் நில வருவாய் வசூல் இல்லை. நகர்புற நிலவரி (ULT) வசூல் செய்யப்பட்டு வருகிறது. | | | |

**ஆரப்பாளையம் கொக்குளப்பி வருவாய் கிராமம்**

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவு கோல்கள்* | *சீரமைக்கப்படவுள்ள (ஆரப்பாளையம், கொக்குளப்பி, பொன்மேனி) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப்பட்டுள்ள (ஆரப்பாளையம் கொக்குளப்பி) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *எஞ்சியுள்ள பொன்மேனி (கிராம பிரிவினைக்கு பின்னர்)* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 88136 (பூர்த்தியாகிறது) | 42592 (பூர்த்தியாகிறது) | 45544 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 9527 (பூர்த்தியாகிறது) | 5273 (பூர்த்தியாகிறது) | 4254 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | ஆரப்பாளையம், கொக்குளப்பி, பொன்மேனி வருவாய் கிராமங்கள் முழுவதும் நகர்புறம் என்பதால் நன்செய் நிலங்கள் ஏதுமில்லை | | |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | ஆரப்பாளையம், கொக்குளப்பி , பொன்மேனி வருவாய் கிராமங்கள் முழுவதும் நகர்புறம் என்பதால் புன்செய் நிலங்கள் ஏதுமில்லை | | |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | ஆரப்பாளையம், கொக்குளப்பி , பொன்மேனி வருவாய் கிராமங்கள் முழுவதும் நகர்புறம் என்பதால் நில வருவாய் வசூல் இல்லை. நகர்புற நிலவரி (ULT) வசூல் செய்யப்பட்டு வருகிறது. | | |

**மாடக்குளம் வருவாய் கிராமம்**

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள்* | *சீரமைக்கப்படவுள்ள (மாடக்குளம்) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப்பட்டுள்ள (மாடக்குளம்–II) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப்பட்டுள்ள (மாடக்குளம்–III) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப்பட்டுள்ள (மாடக்குளம்–IV) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 44274 (பூர்த்தியாகிறது) | 40725 (பூர்த்தியாகிறது) | 51556 (பூர்த்தியாகிறது) | 50596 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 5200 (பூர்த்தியாகிறது) | 7450 (பூர்த்தியாகிறது) | 9125 (பூர்த்தியாகிறது) | 7300 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில்) ஹெக்டேரில் மாற்றம் செய்யும் போது X 2.47 | 2000 முதல் 2500 வரை | 618.73 ஏக்கர், சென்ட் (பூர்த்தி செய்யவில்லை) | 988.49 ஏக்கர், சென்ட் (பூர்த்தி செய்யவில்லை) | 1605.99 ஏக்கர். சென்ட் (பூர்த்தி செய்யவில்லை) | 1111.27 ஏக்கர். சென்ட் (பூர்த்தி செய்யவில்லை) |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 209.95 ஏக்கர் சென்ட் (பூர்த்தி செய்யவில்லை) | 222.3 ஏக்கர் சென்ட் (பூர்த்தி செய்யவில்லை) | 135.85 ஏக்கர் சென்ட் (பூர்த்தி செய்யவில்லை) | 137.75 ஏக்கர். சென்ட் (பூர்த்தி செய்யவில்லை) |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | 1792 (பூர்த்தி செய்யவில்லை) | 2111 (பூர்த்தி செய்யவில்லை) | 3245 (பூர்த்தி செய்யவில்லை) | 2281 (பூர்த்தி செய்யவில்லை) |

vii. கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுள் மக்கள்தொகை மற்றும் பட்டாதாரர்கள் தவிர்த்து அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யவில்லை. இருப்பினும் மாநகராட்சி போன்ற பகுதிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கத்தினால் வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு எடுக்கவும், சட்டம் மற்றும் ஒழுங்கு பணிகள், தேர்தல் பணிகள் போன்ற பல்வகையான பணிகள் கிராம நிருவாக அலுவலருக்கு உள்ளதென்பதால் இந்நேர்வினை சிறப்பினமாக கருதி பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 9 வருவாய் கிராமங்களுக்கு மக்கள்தொகை அடிப்படையில் புதியதாக கிராம நிருவாக அலுவலர் பணியிடத்தை நிரந்தரமாக வழங்க அரசிடம் கோரப்படுகிறது.

viii. கிராம உதவியாளர் பணியிடத்தை பொறுத்தவரை ஒரு கிராமத்திற்கு ஒரு உதவியாளர் பணியிடம் வழங்கப்படுகிறது. மேலும், உத்தேசபடவிருக்கும் 9 வருவாய் கிராமங்களுக்கும் ஒப்பளிக்கப்படவிருக்கும் கிராம உதவியாளர் பணியிடத்தை தோற்றுவிக்கும் நேர்வில் சிறப்பு காலமுறை ஊதிய நிலை பணியிடமாகவே வழங்கும்படி அரசிடம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| *வ.எண்* | *பணியிடத்தின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம்* | *புதிய பணியிடங்கள்* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1. | கிராம நிருவாக அலுவலர் | நிலை–8, (ரூ.19,500/– – 62,000/–) | 9 |
| 2. | கிராம உதவியாளர் | சிறப்பு காலமுறை ஊதிய நிலை | 9 |
| **மொத்தம்** | | | **18** |

ix. மேலும், புதிய வருவாய் கிராமங்களாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் தல்லாகுளம்–II மற்றும் வடக்குமதுரை–II மதுரை வடக்கு வட்டத்தில் அமையவுள்ளது. மேல்மதுரை–II, III, IV மற்றும் ஆரப்பாளையம் கொக்குளப்பி வருவாய் கிராமங்கள் மதுரை மேற்கு வட்டத்தில் அமையவுள்ளது. மாடக்குளம்பிட்–II, III, IV ஆகிய வருவாய் கிராமங்கள் திருப்பரங்குன்றம் வட்டத்தில் அமையவுள்ளது. மேற்காணும் 9 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்கும் நேர்வில், வட்ட அளவில் மாற்றங்கள் ஏதும் இல்லை என்பதால் புதியதாக தோற்றுவிக்கும் கிராம நிருவாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் பணியிடங்களை மேற்சொன்ன வட்டங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள DDO Code–இன் (DDO Code விவரம் மேலே தெரிவிக்கப்பட்டுள்ளது) உள்ளடக்கப்பட வேண்டும்.

x. மேலும், மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் அமைக்கப்பட்ட ஐந்து உயர் அலுவலர்கள் கொண்ட குழுவின் பரிந்துரை அறிக்கையின் அடிப்படையிலும், மாநகராட்சிகளில் பெருகிவரும் மக்கள் தொகை பெருக்கம் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு காணும் பொருட்டு, இந்நேர்வினை சிறப்பினமாக கருதி பின்வரும் 9 வருவாய் கிராமங்களை தோற்றுவிக்க ஆவண செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| *வ. எண்* | *தற்போதுள்ள வருவாய் கிராமங்களின் பெயர்கள் குறுவட்டம் மற்றும் வட்டம்* | *உத்தேசிக்கப் பட்டுள்ள வருவாய் கிராமம்* | *உத்தேசிக்கப்பட்டுள்ள வருவாய் கிராமங்கள் அமைய வேண்டிய குறுவட்டம் மற்றும் வட்டம்* | *பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டிய எஞ்சியுள்ள வருவாய் கிராமம்* | *எஞ்சியுள்ள வருவாய் கிராமங்கள் அமைய வேண்டிய குறுவட்டம் மற்றும் வட்டம்* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| 1 | **தல்லாகுளம்** தல்லாகுளம் குறுவட்டம் மற்றும் மதுரை வடக்கு வட்டம் | தல்லாகுளம்–II | தல்லாகுளம் குறுவட்டம் மற்றும் மதுரை வடக்கு வட்டம் | தல்லாகுளம்–I | தல்லாகுளம் குறுவட்டம் மற்றும் மதுரை வடக்கு வட்டம் |
| 2 | **வடக்குமதுரை** சாத்தமங்கலம் குறுவட்டம் மற்றும் மதுரை வடக்கு வட்டம் | வடக்குமதுரை–II | சாத்தமங்கலம் குறுவட்டம் மற்றும் மதுரை வடக்கு வட்டம் | வடக்குமதுரை–I | சாத்தமங்கலம் குறுவட்டம் மற்றும் மதுரை வடக்கு வட்டம் |
| 3 | **மேல்மதுரை** மதுரை மேற்கு குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் | மேல்மதுரை –II | உத்தேசிக்கப்பட்டுள்ள அரசரடி குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் | மேல்மதுரை–I | உத்தேசிக்கப் பட்டுள்ள அரசரடி குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் |
| | | மேல்மதுரை–III மற்றும் மேல்மதுரை–IV | மதுரைமேற்கு குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் | | |
| 4 | **ஆரப்பாளையம், கொக்குளப்பி, பொன்மேனி குரூப் வருவாய் கிராமம்** மதுரை மேற்கு குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் | ஆரப்பாளையம், கொக்குளப்பி | உத்தேசிக்கப்பட்டுள்ள பொன்மேனி குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் | பொன்மேனி (பெயர் மாற்றம் செய்ய வேண்டிய தேவை இராது) | உத்தேசிக்கப் பட்டுள்ள பொன்மேனி குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் |

| வ. எண் | தற்போதுள்ள வருவாய் கிராமங்களின் பெயர்கள் குறுவட்டம் மற்றும் வட்டம் | உத்தேசிக்கப் பட்டுள்ள வருவாய் கிராமம் | உத்தேசிக்கப்பட்டுள்ள வருவாய் கிராமங்கள் அமைய வேண்டிய குறுவட்டம் மற்றும் வட்டம் | பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டிய எஞ்சியுள்ள வருவாய் கிராமம் | எஞ்சியுள்ள வருவாய் கிராமங்கள் அமைய வேண்டிய குறுவட்டம் மற்றும் வட்டம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 5 | **மாடக்குளம், புதுக்குளம் பிட்–2 குரூப்** திருப்பரங்குன்றம் குறுவட்டம் மற்றும் வட்டம் | மாடக்குளம்–II | உத்தேசிக்கப்பட்டுள்ள மாடக்குளம் வடக்கு குறுவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம் | மாடக்குளம்–I | உத்தேசிக்கப் பட்டுள்ள மாடக்குளம் வடக்கு குறுவட்டம் மற்றும் திருப்பரங்குன்றம் வட்டம் |
| | | மாடக்குளம்–III மற்றும் மாடக்குளம்–IV | உத்தேசிக்கப்பட்டுள்ள மாடக்குளம் தெற்கு குறுவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம். | புதுக்குளம் பிட்–2 | உத்தேசிக்கப் பட்டுள்ள மாடக்குளம் தெற்கு குறுவட்டம் மற்றும் திருப்பரங்குன்றம் வட்டம் |

4. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 25 வருவாய் கிராமங்களுக்கு தலா ஒரு கிராம நிருவாக அலுவலர் பணியிடம் வீதம் 25 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாகவும் மற்றும் தலா ஒரு கிராம உதவியாளர் பணியிடம் வீதம் 25 கிராம உதவியாளர் பணியிடங்களை சிறப்பு காலமுறை ஊதிய விகிதப் பணியிடங்களாக தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.1,55,95,200/–க்கு (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஐந்து ஆயிரத்து இருநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், மதுரை மாவட்டம் ஆகியோரின் கருத்துருக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, கீழ்கண்டவாறு அமையும் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது:–

அ) மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், தல்லாகுளம் குறுவட்டத்தில் உள்ள தல்லாகுளம் வருவாய் கிராமத்தைப் பிரித்து **(பிற்சேர்க்கை–I மற்றும் பிற்சேர்க்கை–II, அறிவிக்கை 1–இல் உள்ளவாறு) தல்லாகுளம்–II** எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள தல்லாகுளம் வருவாய் கிராமம் தல்லாகுளம்–I என அமையும்.

ஆ) மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், சாத்தமங்கலம் குறுவட்டத்தில் உள்ள வடக்குமதுரை வருவாய் கிராமத்தைப் பிரித்து **(பிற்சேர்க்கை–I மற்றும் பிற்சேர்க்கை–II, அறிவிக்கை 2–இல் உள்ளவாறு) வடக்கு மதுரை–II** எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள வடக்குமதுரை வருவாய் கிராமம் வடக்குமதுரை–I என அமையும்.

இ) மதுரை மேற்கு வட்டம், மதுரை மேற்கு குறுவட்டத்தில் உள்ள மேல்மதுரை வருவாய் கிராமத்தைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை–I மற்றும் பிற்சேர்க்கை–II, அறிவிக்கை 3–இல் உள்ளவாறு) மேல்மதுரை–II, மேல்மதுரை–III** மற்றும் **மேல் மதுரை–IV** எனும் 3 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள மேல்மதுரை வருவாய் கிராமம் மேல்மதுரை–Iஎன அமையும்.

ஈ) மதுரை மேற்கு வட்டம், மதுரை மேற்கு குறுவட்டத்தில் உள்ள பொன்மேனி ஆரப்பாளையம் கொக்குளப்பி குரூப் வருவாய் கிராமத்தைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை–I மற்றும் பிற்சேர்க்கை–II, அறிவிக்கை 4–இல் உள்ளவாறு)** ஆரப்பாளையம் கொக்குளப்பி எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள பொன்மேனி ஆரப்பாளையம் கொக்குளப்பி குரூப் வருவாய் கிராமம் பொன்மேனி என அமையும்.

உ) திருப்பரங்குன்றம் வட்டம், திருப்பரங்குன்றம் குறுவட்டத்தில் உள்ள மாடக்குளம் வருவாய் கிராமத்தைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை–I மற்றும் பிற்சேர்க்கை–II, அறிவிக்கை 5–இல் உள்ளவாறு) மாடக்குளம்–II, மாடக்குளம்–III** மற்றும் **மாடக்குளம்–IV** எனும் 3 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள மாடக்குளம் வருவாய் கிராமம் மாடக்குளம்–I என அமையும்.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் கிராமங்கள் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஆறில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1111.

(IFHRMS Additional Sanction Ledger No.2025081111)
PSL No.202509PSL0172.

**பிற்சேர்க்கை — I**

*[அரசாணை (நிலை) எண்.656, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29.09.2025]*

**[மதுரை மாவட்டம், மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள வருவாய் கிராமங்களைப் பிரித்து தல்லாகுளம்-II, வடக்கு மதுரை-II, மேல்மதுரை-II, மேல்மதுரை-III, மேல்மதுரை-IV, ஆரப்பாளையம் கொக்குளப்பி, மாடக்குளம்-II, மாடக்குளம்-III மற்றும் மாடக்குளம்-IV ஆகிய 9 புதிய வருவாய் கிராமங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்]**

| *வ. எண்* | *தற்போதுள்ள வருவாய் கிராமங்களின் பெயர்கள் குறுவட்டம் மற்றும் வட்டம்* | *புதிய வருவாய் கிராமங்களின் பெயர் அமைய வேண்டிய குறுவட்டம் மற்றும் வட்டம்* | *எஞ்சியுள்ள வருவாய் கிராமங்களின் பெயர் அமைய வேண்டிய குறுவட்டம் மற்றும் வட்டம்* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1 | **தல்லாகுளம்**<br>தல்லாகுளம் குறுவட்டம் மற்றும் மதுரை வடக்கு வட்டம் | **தல்லாகுளம்–II**<br>வார்டு 16 (பிளாக் 1–19, 31–38, 57–65), வார்டு 17 (பிளாக் 1–15)<br>தல்லாகுளம் குறுவட்டம் மற்றும் மதுரை வடக்கு வட்டம் | **தல்லாகுளம் –I**<br>வார்டு 15 (பிளாக் 1–6)<br>வார்டு 16 (பிளாக் 20–30, 39–56)<br>தல்லாகுளம் குறுவட்டம் மற்றும் மதுரை வடக்கு வட்டம் |
| 2 | **வடக்குமதுரை**<br>சாத்தமங்கலம் குறுவட்டம் மற்றும் மதுரை வடக்கு வட்டம் | **வடக்குமதுரை–II**<br>வார்டு 10 (பிளாக் 33–36, 45–67, 106–120, 148–163)<br>சாத்தமங்கலம் குறுவட்டம் மற்றும் மதுரை வடக்கு வட்டம் | **வடக்குமதுரை–I**<br>வார்டு 10 (பிளாக் 1–24, 69–72, 77–84, 89, 121–139)<br>சாத்தமங்கலம் குறுவட்டம் மற்றும் மதுரை வடக்கு வட்டம் |
| 3 | **மேல்மதுரை**<br>மதுரை மேற்கு குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் | **மேல்மதுரை–II**<br>(வார்டு 5 (பிளாக் 1–12, 17,18, 31, 42, 43, 49, 50, 51, 81, 83, 84, 85, 86, 87))<br>புதிய அரசரடி குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் | **மேல்மதுரை–I**<br>(வார்டு 5 (பிளாக் 13–16, 19–30, 32–41, 44–48, 52–80, 82, 88–95))<br>புதிய அரசரடி குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் |
| | | **மேல்மதுரை–III**<br>வார்டு 6 (பிளாக் 1–10)<br>வார்டு 7 (பிளாக் 1–13)<br>வார்டு 8 (பிளாக் 1–13)<br>மதுரை மேற்கு குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் | |
| | | **மேல்மதுரை–IV**<br>வார்டு 4 (பிளாக் 1–25, 34–46)<br>வார்டு 3 (பிளாக் 1–20)<br>மதுரை மேற்கு குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் | |
| 4 | **ஆரப்பாளையம் கொக்குளப்பி பொன்மேனி குரூப் வருவாய் கிராமம்**<br>மதுரை மேற்கு குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் | **ஆரப்பாளையம் கொக்குளப்பி**<br>வார்டு 24 (பிளாக் 1–28)<br>புதிய பொன்மேனி குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் | **பொன்மேனி**<br>வார்டு 23 (பிளாக் 1–32)<br>வார்டு 5A (பிளாக் 1–15)<br>புதிய பொன்மேனி குறுவட்டம் மற்றும் மதுரை மேற்கு வட்டம் |

| *வ. எண்* | *தற்போதுள்ள வருவாய் கிராமங்களின் பெயர்கள் குறுவட்டம் மற்றும் வட்டம்* | *புதிய வருவாய் கிராமங்களின் பெயர் அமைய வேண்டிய குறுவட்டம் மற்றும் வட்டம்* | *எஞ்சியுள்ள வருவாய் கிராமங்களின் பெயர் அமைய வேண்டிய குறுவட்டம் மற்றும் வட்டம்* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 5 | **மாடக்குளம், புதுக்குளம் பிட்–2 குரூப்**<br>திருப்பரங்குன்றம் குறுவட்டம் மற்றும் வட்டம் | **மாடக்குளம்–II**<br>(வார்டு–22 (பிளாக் 11 முதல் 26 வரை மற்றும் பிளாக் 37 முதல் 63 வரை))<br>(வார்டு 4 (பிளாக் 28 மற்றும் பிளாக் 58 முதல் 60 வரை))<br>புதிய மாடக்குளம் வடக்கு குறுவட்டம் மற்றும் திருப்பரங்குன்றம் வட்டம் | **மாடக்குளம்–I**<br>(வார்டு–22 (பிளாக் 1 முதல் 10 வரை மற்றும் பிளாக் 27 முதல் 36 வரை))<br>(வார்டு 4 (பிளாக் 27 மற்றும் பிளாக் 48 முதல் 51 வரை))<br>புதிய மாடக்குளம் வடக்கு குறுவட்டம் மற்றும் திருப்பரங்குன்றம் வட்டம் |
| | | **மாடக்குளம்–III**<br>(வார்டு–21 (பிளாக் 1 முதல் 17 வரை)<br>புதிய மாடக்குளம் தெற்கு குறுவட்டம் மற்றும் திருப்பரங்குன்றம் வட்டம் | **புதுக்குளம்–2**<br>(சர்வே எண். 1 முதல் 18 வரை (புதுக்குளம்–2 கிராமம்))<br>புதிய மாடக்குளம் தெற்கு குறுவட்டம் மற்றும் திருப்பரங்குன்றம் வட்டம் |
| | | **மாடக்குளம்–IV**<br>(வார்டு–21 (பிளாக் 18 முதல் 55 வரை)<br>(வார்டு–4 (பிளாக் 26, 29, 30, 31, 32, 33, 47, 52, 53, 54, 55, 57, 59)<br>புதிய மாடக்குளம் தெற்கு குறுவட்டம் மற்றும் திருப்பரங்குன்றம் வட்டம் | |

**பிற்சேர்க்கை – II**

*[அரசாணை (நிலை) எண்.656, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29.09.2025]*

**அறிவிக்கை-1**

**தற்போதுள்ள தல்லாகுளம் வருவாய் கிராமம், புதிய தல்லாகுளம்–II வருவாய் கிராமம், எஞ்சியுள்ள தல்லாகுளம்–I வருவாய் கிராமம் ஆகியவற்றின் ஆட்சி எல்லை விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| *வ. எண்.* | *ஆட்சி எல்லை விவரங்கள்* | *தற்போதுள்ள கிராமம் (Parent Village)* | *புதிய கிராமம்* | *எஞ்சியுள்ள கிராமம்* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 1 | தலைமையிடம் | தல்லாகுளம் | தல்லாகுளம்–II | தல்லாகுளம்–I |
| 2 | பரப்பளவு (ஹெக்.) | 652.41.31 | 489.36.50 | 163.04.81 |
| 3 | மக்கள் தொகை | 82987 | 36458 | 46529 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | மதுரை வடக்கு | மதுரை வடக்கு | மதுரை வடக்கு |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | மதுரை | மதுரை | மதுரை |
| 6 | சட்ட மன்றம் பெயர் | மதுரை வடக்கு | மதுரை வடக்கு | மதுரை வடக்கு |
| 7 | பாராளுமன்றம் பெயர் | மதுரை | மதுரை | மதுரை |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 1 | 1 | 1 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | – | – | – |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | 4 - கி.மீ | 2- கி.மீ | 2- கி.மீ |

## அறிவிக்கை-2

**தற்போதுள்ள வடக்குமதுரை வருவாய் கிராமம், புதிய வடக்குமதுரை—II வருவாய் கிராமம், எஞ்சியுள்ள வடக்குமதுரை—I வருவாய் கிராமம் ஆகியவற்றின் ஆட்சி எல்லை விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விவரங்கள்* | *தற்போதுள்ள கிராமம் (Parent Village)* | *புதிய கிராமம்* | *எஞ்சியுள்ள கிராமம்* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 1 | தலைமையிடம் | வடக்குமதுரை | வடக்குமதுரை—II | வடக்குமதுரை—I |
| 2 | பரப்பளவு (ஹெக்.) | 691.17.21 | 255.06.92 | 436.10.29 |
| 3 | மக்கள் தொகை | 83816 | 41402 | 42414 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | மதுரை வடக்கு | மதுரை வடக்கு | மதுரை வடக்கு |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | மதுரை | மதுரை | மதுரை |
| 6 | சட்ட மன்றம் பெயர் | மதுரை வடக்கு | மதுரை வடக்கு | மதுரை வடக்கு |
| 7 | பாராளுமன்றம் பெயர் | மதுரை | மதுரை | மதுரை |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 1 | 1 | 1 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | – | – | – |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | 4 – கி.மீ | 2 – கி.மீ | 2 – கி.மீ |

## அறிவிக்கை-3

**தற்போதுள்ள மேல்மதுரை வருவாய் கிராமம், புதிய மேல்மதுரை—II, மேல்மதுரை—III மற்றும் மேல்மதுரை—IV வருவாய் கிராமங்கள், எஞ்சியுள்ள மேல்மதுரை—I வருவாய் கிராமம் ஆகியவற்றின் ஆட்சி எல்லை விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விவரங்கள்* | *தற்போதுள்ள கிராமம்* | *எஞ்சியுள்ள கிராமம்* | *புதிய கிராமம்* | *புதிய கிராமம்* | *புதிய கிராமம்* |
|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* |
| 1 | தலைமையிடம் | மேல்மதுரை | மேல்மதுரை—1 | மேல்மதுரை—II | மேல்மதுரை—III | மேல்மதுரை—IV |
| 2 | பரப்பளவு (சதுர கி.மீ) | 5.17 | 1.58 | 1.54 | 0.73 | 1.32 |
| 3 | மக்கள்தொகை | 2,06,400 | 56,864 | 44,114 | 55,263 | 50,159 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | மதுரை மேற்கு | மதுரை மேற்கு | மதுரை மேற்கு | மதுரை மேற்கு | மதுரை மேற்கு |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | மதுரை | மதுரை | மதுரை | மதுரை | மதுரை |
| 6 | சட்டமன்றம் பெயர் | மதுரைமேற்கு, மதுரைமத்தியம் | மதுரைமேற்கு, மதுரைமத்தியம் | மதுரை மத்தியம் | மதுரை மத்தியம் | மதுரை மத்தியம் |
| 7 | பாராளுமன்றம் பெயர் | மதுரை | மதுரை | மதுரை | மதுரை | மதுரை |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 01 | 01 | 01 | 01 | 01 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | – | – | – | – | – |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | 1.7 – கி.மீ | – | – | – | 1.7 – கி.மீ |

**அறிவிக்கை — 4**

**தற்போதுள்ள பொன்மேனி ஆரப்பாளையம் கொக்குளப்பி குரூப் வருவாய் கிராமம், புதிய ஆரப்பாளையம் கொக்குளப்பி வருவாய் கிராமம், எஞ்சியுள்ள பொன்மேனி வருவாய் கிராமம் ஆகியவற்றின் ஆட்சி எல்லை விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விவரங்கள்* | *தற்போதுள்ள வருவாய் கிராமம்* | *புதிய வருவாய் கிராமம்* | *எஞ்சியுள்ள வருவாய் கிராமம்* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 1 | தலைமையிடம் | பொன்மேனி, கொக்குளப்பி, ஆரப்பாளையம் குரூப் | ஆரப்பாளையம் கொக்குளப்பி | பொன்மேனி |
| 2 | பரப்பளவு (சதுர கி.மீ) | 4.68 | 1.54 | 3.14 |
| 3 | மக்கள்தொகை | 88,136 | 42,592 | 45,544 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | மதுரைமேற்கு | மதுரைமேற்கு | மதுரைமேற்கு |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | மதுரை | மதுரை | மதுரை |
| 6 | சட்டமன்றம் பெயர் | மதுரைமேற்கு, | மதுரைமேற்கு, | மதுரைமேற்கு |
| 7 | பாராளுமன்றம் பெயர் | மதுரை | மதுரை | மதுரை |
| 8 | வருவாய்கிராமங்களின் எண்ணிக்கை | 01 | 01 | 01 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | – | – | – |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | – | – | – |

**அறிவிக்கை — 5**

தற்போதுள்ள மாடக்குளம் வருவாய் கிராமம், புதிய **மாடக்குளம்–II, மாடக்குளம்–III** மற்றும் **மாடக்குளம்–IV** வருவாய் கிராமங்கள், எஞ்சியுள்ள மாடக்குளம்–I வருவாய் கிராமம் ஆகியவற்றின் ஆட்சி எல்லை விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விவரங்கள்* | *தற்போதுள்ள கிராமம்* | *புதிய வருவாய் கிராமம்* | *புதிய வருவாய் கிராமம்* | *புதிய வருவாய் கிராமம்* | *புதிய வருவாய் கிராமம்* |
|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* |
| 1 | தலைமையிடம் | மாடக்குளம் குரூப் | மாடக்குளம்–I | மாடக்குளம்–II | மாடக்குளம்–III | மாடக்குளம்–IV |
| 2 | பரப்பளவு (சதுர கி.மீ) | 13.69 | 3.95 | 3.49 | 3.05 | 3.20 |
| 3 | மக்கள் தொகை | 187614 | 44727 | 40725 | 51566 | 50596 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருமங்கலம் | திருமங்கலம் | திருமங்கலம் | திருமங்கலம் | திருமங்கலம் |
| 6 | சட்ட மன்றம் பெயர் | மதுரைமேற்கு மற்றும் மத்தியம் | மதுரைமேற்கு | மதுரை மேற்கு | மதுரைமேற்கு மற்றும் மத்தியம் | மதுரைமேற்கு மற்றும் மத்தியம் |
| 7 | பாராளுமன்றம் பெயர் | மதுரை | மதுரை | மதுரை | மதுரை | மதுரை |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 02 | 01 | 01 | 02 | 01 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | – | – | – | – | – |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள கிராமம் / தூரம் | – | – | – | – | – |

No.II(1)/REVDM/34/2025.

**[வருவாய் நிருவாகம் — ஆட்சி எல்லை — கோயம்புத்தூர் மாவட்டம் - கோயம்புத்தூர் மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் உள்ள வருவாய் கிராமங்களைப் பிரித்து குறிச்சி கிழக்கு, சங்கனூர் தெற்கு, சிக்கதாசம்பாளையம் கிழக்கு மற்றும் கோயம்புத்தூர் டவுன் வடக்கு ஆகிய 4 புதிய வருவாய் கிராமங்களை உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.657, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. அரசாணை (நிலை) எண். 2681, வருவாய்த்துறை, நாள். 01.12.1980.
2. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு, நாள் 03.04.2025.
3. அரசு கடித எண் 5483/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
4. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண்.CLRREV–4452/2025/–அ1, நாள் 08.04.2025.
5. கூடுதல் தலைமைச் செயலாளர் /வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01–04/474/2025, நாள் 21.04.2025.
6. அரசாணை (நிலை) எண் 649, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:- எண்.657, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1)பிரிவு 29 செப்டம்பர் 2025**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**15. “பொதுமக்களுக்கு வருவாய்த் துறையின் சேவைகளை விரைவாக வழங்கும் பொருட்டு, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 8 மாவட்டங்களில் மொத்தம் 25 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்கப்படும்”.**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் உள்ள வருவாய் கிராமங்களை பிரித்து புதியதாக **குறிச்சி கிழக்கு, சங்கனூர் தெற்கு, சிக்கதாசம்பாளையம் கிழக்கு மற்றும் கோயம்புத்தூர் டவுன் வடக்கு** என 4 வருவாய் கிராமங்கள் உருவாக்குவது தொடர்பாக மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. கோயம்புத்தூர் மாவட்டத்தில் பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வருவாய் கிராமங்களின் விவரம்:–

- மதுக்கரை வட்டம், குறிச்சி குறுவட்டத்தில் அமைந்துள்ள குறிச்சி கிராமத்தை சீரமைத்து உத்தேசிக்கப்பட்டுள்ள குறிச்சி கிழக்கு எனும் புதிய வருவாய் கிராமத்தை தோற்றுவித்தல் மற்றும் எஞ்சியுள்ள குறிச்சி கிராமத்தை குறிச்சி மேற்கு என பெயர் மாற்றம் செய்தல்.
- மேட்டுப்பாளையம் வட்டம், மேட்டுப்பாளையம் குறுவட்டத்தில் அமைந்துள்ள சிக்கதாசம்பாளையம் கிராமத்தை சீரமைத்து சிக்கதாசம்பாளையம் கிழக்கு எனும் புதிய வருவாய் கிராமத்தை தோற்றுவித்தல் மற்றும் எஞ்சியுள்ள சிக்கதாசம்பாளையம் கிராமத்தை சிக்கதாசம்பாளையம் மேற்கு என பெயர் மாற்றம் செய்தல்.
- கோயம்புத்தூர் வடக்கு வட்டம், கணபதி குறுவட்டத்தில் அமைந்துள்ள சங்கனூர் கிராமத்தை சீரமைத்து சங்கனூர் தெற்கு எனும் புதிய வருவாய் கிராமம் தோற்றுவித்தல் மற்றும் எஞ்சியுள்ள சங்கனூர் கிராமத்தை சங்கனூர் வடக்கு என பெயர் மாற்றம் செய்தல்.
- கோயம்புத்தூர் தெற்கு வட்டம், கோயம்புத்தூர் டவுன் குறுவட்டத்தில் அமைந்துள்ள கோயம்புத்தூர் டவுன் கிராமத்தை சீரமைத்து கோயம்புத்தூர் டவுன் வடக்கு எனும் புதிய வருவாய் கிராமம் தோற்றுவித்தல் மற்றும் எஞ்சியுள்ள கோயம்புத்தூர் டவுன் கிராமத்தை கோயம்புத்தூர் டவுன் தெற்கு என பெயர் மாற்றம் செய்தல்.

ii. பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 4 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்க வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை குறித்த விவரங்கள் பின்வருமாறு:–

மக்கள் தொகை பெருக்கம், பொதுமக்களிடம் இருந்து வரப்பெறும் அதிகப்படியான மனுக்களின் எண்ணிக்கையின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் நிருவாக நலன் கருதியும் குறிச்சி கிழக்கு, சங்கனூர் தெற்கு, சிக்கதாசம்பாளையம் கிழக்கு மற்றும் கோயம்புத்தூர் டவுன் வடக்கு என புதியதாக 4 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

iii. கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் பெருகி வரும் மக்கள்தொகை, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களின் பெருக்கம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலான உயர் அலுவலர்களின் குழு மேற்கண்ட 4 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்க ஒப்புதல் அளித்துள்ளது.

iv. **தற்போதுள்ள குறிச்சி வருவாய் கிராமம் (மறு சீரமைப்புக்கு முன்)**

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், குறிச்சி குறுவட்டத்திற்குட்பட்ட குறிச்சி வருவாய் கிராமத்தின் மொத்த பரப்பளவு 2031.75.00 ஹெக்டேர் ஆகும். குறிச்சி கிராமமானது கோயம்புத்தூர் மாநகராட்சியின் தெற்கு மண்டலத்தை சார்ந்த 8 வார்டுகளை உள்ளடக்கியது. குறிச்சி கிராமமானது 122. கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதிக்குள்ளும், 21. பொள்ளாச்சி பாராளுமன்றத் தொகுதிக்குள்ளும் வருகிறது. குறிச்சி கிராமத்தின் 2025 ஆம் ஆண்டில் உத்தேச மக்கள் தொகை 1,75,179 ஆகும்.

v. **தற்போதுள்ள சிக்கதாசம்பாளையம் வருவாய் கிராமம் (மறு சீரமைப்புக்கு முன்)**

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், மேட்டுப்பாளையம் குறுவட்டத்திற்குட்பட்ட சிக்கதாசம்பாளையம் வருவாய் கிராமத்தின் மொத்த பரப்பளவு 2423.01.58 ஹெக்டேர் ஆகும். சிக்கதாசம்பாளையம் கிராமமானது மேட்டுப்பாளையம் நகராட்சி மற்றும் சிக்கதாசம்பாளையம் ஊராட்சியை உள்ளடக்கியது. சிக்கதாசம்பாளையம் கிராமமானது மேட்டுப்பாளையம் நகராட்சியில் 32 வார்டுகள் மற்றும் சிக்கதாசம்பாளையம் ஊராட்சியில் 15 வார்டுகள் உள்ளடக்கியது. சிக்கதாசம்பாளையம் கிராமமானது 111. மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குள்ளும், 19. நீலகிரி பாராளுமன்றத் தொகுதிக்குள்ளும் வருகிறது. சிக்கதாசம்பாளையம் கிராமத்தின் 2025 ஆம் ஆண்டில் உத்தேச மக்கள் தொகை 1,43,804 ஆகும்.

vi. **தற்போதுள்ள சங்கனூர் வருவாய் கிராமம் (மறு சீரமைப்புக்கு முன்)**

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், கணபதி குறுவட்டத்திற்குட்பட்ட சங்கனூர் வருவாய் கிராமத்தின் மொத்த பரப்பளவு 844.95.00 ஹெக்டேர் ஆகும். சங்கனூர் கிராமமானது, கோயம்புத்தூர் மாநகராட்சியின் மத்திய மண்டலம், வடக்கு மண்டலம் மற்றும் மேற்கு மண்டலத்தை சார்ந்த 9 வார்டுகளை உள்ளடக்கியது. சங்கனூர் கிராமமானது 118. கோயம்புத்தூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குள்ளும், 20. கோயம்புத்தூர் பாராளுமன்றத் தொகுதிக்குள்ளும் வருகிறது. சங்கனூர் கிராமத்தின் 2025–ஆம் ஆண்டில் உத்தேச மக்கள் தொகை 1,78,199 ஆகும்.

vii. **தற்போதுள்ள கோயம்புத்தூர் டவுன் (மறுசீரமைப்புக்கு முன்)**

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், கோயம்புத்தூர் டவுன் குறுவட்டத்திற்குட்பட்ட கோயம்புத்தூர் டவுன் வருவாய் கிராமத்தின் மொத்த பரப்பளவு 438.1 ஹெக்டேர் ஆகும். கோயம்புத்தூர் டவுன் கிராமமானது, கோயம்புத்தூர் மாநகராட்சியின் மத்திய மண்டலம் மற்றும் வடக்கு மண்டலத்தை சார்ந்த 7 வார்டுகளை உள்ளடக்கியது. கோயம்புத்தூர் டவுன் கிராமமானது 119.தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குள்ளும், 20.கோயம்புத்தூர் பாராளுமன்றத் தொகுதிக்குள்ளும் வருகிறது. கோயம்புத்தூர் டவுன் கிராமத்தின் உத்தேச மக்கள் தொகை 2,45,779 ஆகும்.

viii. புதிய வருவாய் கிராமம் தோற்றுவிக்கும் நேர்வில், அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980–இல் புதிய கிராம நிருவாக அலுவலர் பணியிடம் உருவாக்க பின்வரும் வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில், உத்தேசிக்கப்பட்டுள்ள 4 வருவாய் கிராமங்களும் அவ்வரையறைகளை பூர்த்தி செய்கின்றனவா என்ற விவரம் பின்வருமாறு:–

- **உத்தேசிக்கப்பட்டுள்ள குறிச்சி கிழக்கு வருவாய் கிராமம் – மதுக்கரை வட்டம்**

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்* | *சீரமைப்பிற்கு முன் குறிச்சி கிராமம்* | *புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்படும் கிராமம் (குறிச்சி கிழக்கு)* | *எஞ்சியுள்ள கிராமம் (குறிச்சி மேற்கு)* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 175179 | 98127 (பூர்த்தியாகிறது) | 77052 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 7556 | 4025 (பூர்த்தியாகிறது) | 3531 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | 457.02 | 441.83 (பூர்த்தியாகவில்லை) | 15.19 (பூர்த்தியாகவில்லை) |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 2912.56 | 1106.62 (பூர்த்தியாகவில்லை) | 1805.94 (பூர்த்தியாகவில்லை) |
| நில வருவாய் (ரூ.) | 20000 முதல் 25000 வரை | 6553 | 4418 (பூர்த்தியாகவில்லை) | 2135 (பூர்த்தியாகவில்லை) |

● உத்தேசிக்கப்பட்டுள்ள சிக்கதாசம்பாளையம் கிழக்கு கிராமம்– மேட்டுப்பாளையம் வட்டம்

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்* | *சீரமைப்பிற்கு முன் சிக்கதாசம்பாளையம்* | *புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்படும் கிராமம் (சிக்கதாசம் பாளையம் கிழக்கு)* | *எஞ்சியுள்ள கிராமம் (சிக்கதாசம் பாளையம் மேற்கு)* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 143804 | 123466 (பூர்த்தியாகிறது) | 20338 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 17180 | 14644 (பூர்த்தியாகிறது) | 2536 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | – | – | – |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 4140.00 | 1096.00 (பூர்த்தியாகவில்லை) | 3045.00 (பூர்த்தியாகவில்லை) |
| நில வருவாய் (ரூ.) | 20000 முதல் 25000 வரை | 8380.73 | 2217.65 (பூர்த்தியாகவில்லை) | 6163.08 (பூர்த்தியாகவில்லை) |

● உத்தேசிக்கப்பட்டுள்ள சங்கனூர் தெற்கு கிராமம் – கோயம்புத்தூர் வடக்கு வட்டம்

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்* | *சீரமைப்பிற்கு முன் சங்கனூர்* | *புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்படும் கிராமம் (சங்கனூர் தெற்கு)* | *எஞ்சியுள்ள கிராமம் (சங்கனூர் வடக்கு)* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 178199 | 78088 (பூர்த்தியாகிறது) | 100111 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 5490 | 2440 (பூர்த்தியாகிறது) | 3050 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | – | – | – |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 2088 | 967 (பூர்த்தியாகவில்லை) | 1121 (பூர்த்தியாகவில்லை) |
| நில வருவாய் (ரூ.) | 20000 முதல் 25000 வரை | 20226 | 9365 (பூர்த்தியாகவில்லை) | 10861 (பூர்த்தியாகவில்லை) |

● உத்தேசிக்கப்பட்டுள்ள கோயம்புத்தூர் டவுன் வடக்கு கிராமம் – கோயம்புத்தூர் தெற்கு வட்டம்

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்* | *சீரமைப்பிற்கு முன் கோயம்புத்தூர் டவுன்* | *புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்படும் கிராமம் (கோயம்புத்தூர் டவுன் வடக்கு)* | *எஞ்சியுள்ள கிராமம் (கோயம்புத்தூர் டவுன் கிழக்கு)* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 2,45,779 | 1,23,073 (பூர்த்தியாகிறது) | 1,22,706 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 1165 | 536 (பூர்த்தியாகவில்லை) | 629 (பூர்த்தியாகவில்லை) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | 294.97 | 135.69 (பூர்த்தியாகவில்லை) | 159.29 (பூர்த்தியாகவில்லை) |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 1260.83 | 579.98 (பூர்த்தியாகவில்லை) | 680.85 (பூர்த்தியாகவில்லை) |
| நில வருவாய் (ரூ.) | 20000 முதல் 25000 வரை | 1798 | 827 (பூர்த்தியாகவில்லை) | 971 (பூர்த்தியாகவில்லை) |

ix. கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுள், மக்கள்தொகை தவிர்த்து அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யவில்லை. இருப்பினும் மாநகராட்சி, நகராட்சி போன்ற பகுதிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கத்தினால் வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு எடுக்கவும், சட்டம் மற்றும் ஒழுங்கு பணிகள், தேர்தல் பணிகள் போன்ற பல்வகையான பணிகள் கிராம நிருவாக அலுவலருக்கு உள்ளதென்பதால் இந்நேர்வினை சிறப்பினமாக கருதி பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 4 வருவாய் கிராமங்களுக்கு மக்கள்தொகை அடிப்படையில் புதியதாக கிராம நிருவாக அலுவலர் பணியிடத்தை நிரந்தரமாக வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

x. கிராம உதவியாளர் பணியிடத்தை பொறுத்தவரை ஒரு கிராமத்திற்கு ஒரு கிராம உதவியாளர் பணியிடம் வழங்கப்படுகிறது. மேலும், புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 4 வருவாய் கிராமங்களுக்கும் ஒப்பளிக்கப்படவிருக்கும் கிராம உதவியாளர் பணியிடத்தை தோற்றுவிக்கும் நேர்வில் சிறப்பு காலமுறை ஊதிய நிலை பணியிடமாகவே வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| *வ.எண்* | *பணியிடத்தின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம்* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1. | கிராம நிருவாக அலுவலர் | நிலை–8,<br>(ரூ.19,500/– – 62,000/–) | 4 |
| 2. | கிராம உதவியாளர் | சிறப்பு காலமுறை ஊதிய நிலை | 4 |
| **மொத்தம்** | | | **8** |

xi. மேலும், புதிய வருவாய் கிராமங்களாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் குறிச்சி கிழக்கு வருவாய் கிராமம், மதுக்கரை வட்டத்தில் அமையவுள்ளது. சிக்கதாசம்பாளையம் கிழக்கு வருவாய் கிராமம், மேட்டுப்பாளையம் வட்டத்தில் அமையவுள்ளது. சங்கனூர் தெற்கு வருவாய் கிராமம் கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில் அமையவுள்ளது. கோயம்புத்தூர் டவுன் வடக்கு வருவாய் கிராமம் கோயம்புத்தூர் தெற்கு வட்டத்தில் அமையவுள்ளது. மேற்காணும் 4 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்கும் நேர்வில், வட்ட அளவில் மாற்றங்கள் ஏதும் இல்லை என்பதால் புதியதாக தோற்றுவிக்கும் கிராம நிருவாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் பணியிடங்களை மேற்சொன்ன வட்டங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள DDO Code–இன்கீழ் உள்ளடக்கப்பட வேண்டும்.

xii. மேலும், மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் அமைக்கப்பட்ட ஐந்து உயர் அலுவலர்கள் கொண்ட குழுவின் பரிந்துரை அறிக்கையின் அடிப்படையிலும், மாநகராட்சி, நகராட்சிகளில் பெருகிவரும் மக்கள் தொகை பெருக்கம் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு காணும் பொருட்டு, இந்நேர்வினை சிறப்பினமாக கருதி கோயம்புத்தூர் மாவட்டத்தில் பின்வரும் 4 வருவாய் கிராமங்களை தோற்றுவிக்க ஆவண செய்யும்படி கேட்டுக் கொண்டுள்ளார்:–

| *வ. எண்* | *தற்போதுள்ள வருவாய் கிராமங்களின் பெயர்கள், குறுவட்டம் மற்றும் வட்டம்* | *உத்தேசிக்கப்பட்டுள்ள வருவாய் கிராமம்* | *உத்தேசிக்கப்பட்டுள்ள வருவாய் கிராமங்கள் அமைய வேண்டிய குறுவட்டம் மற்றும் வட்டம்* | *பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டிய எஞ்சியுள்ள வருவாய் கிராமம்* | *எஞ்சியுள்ள வருவாய் கிராமங்கள் அமைய வேண்டிய குறுவட்டம் மற்றும் வட்டம்* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| 1 | குறிச்சி வருவாய் கிராமம், குறிச்சி குறுவட்டம், மதுக்கரை வட்டம் | குறிச்சி கிழக்கு | குறிச்சி குறுவட்டம், மதுக்கரை வட்டம் | குறிச்சி மேற்கு | குறிச்சி குறுவட்டம், மதுக்கரை வட்டம் |
| 2 | சிக்கதாசம்பாளையம் வருவாய் கிராமம், மேட்டுப் பாளையம் குறுவட்டம், மேட்டுப் பாளையம் வட்டம் | சிக்கதாசம்பாளையம் கிழக்கு | மேட்டுப்பாளையம் குறுவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம் | சிக்கதாசம் பாளையம் மேற்கு | மேட்டுப்பாளையம் குறுவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம் |
| 3 | சங்கனூர் வருவாய் கிராமம், கணபதி குறுவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம் | சங்கனூர் தெற்கு | சங்கனூர் குறுவட்டம் (உத்தேசிக்கப்பட்டுள்ளது) கோயம்புத்தூர் வடக்கு வட்டம் | சங்கனூர் வடக்கு | சங்கனூர் குறுவட்டம் (உத்தேசிக்கப்பட்டுள்ளது) கோயம்புத்தூர் வடக்கு வட்டம் |
| 4 | கோயம்புத்தூர் டவுன் வருவாய் கிராமம், கோயம்புத்தூர் டவுன் குறுவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம் | கோயம்புத்தூர் டவுன் வடக்கு | கோயம்புத்தூர் டவுன் குறுவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம் | கோயம்புத்தூர் டவுன் தெற்கு | கோயம்புத்தூர் டவுன் குறுவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம் |

4. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 25 வருவாய் கிராமங்களுக்கு தலா ஒரு கிராம நிருவாக அலுவலர் பணியிடம் வீதம் 25 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாகவும் மற்றும் தலா ஒரு கிராம உதவியாளர் பணியிடம் வீதம் 25 கிராம உதவியாளர் பணியிடங்களை சிறப்பு காலமுறை ஊதிய விகிதப் பணியிடங்களாக தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.1,55,95,200/–க்கு (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஐந்து ஆயிரத்து இருநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் மாவட்டம் ஆகியோரின் கருத்துருக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, கீழ்கண்டவாறு அமையும் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது:–

அ) கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், குறிச்சி குறுவட்டத்தில் அமைந்துள்ள குறிச்சி வருவாய் கிராமத்தைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை–I–இல் உள்ளவாறு) குறிச்சி கிழக்கு** எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள குறிச்சி வருவாய் கிராமமானது குறிச்சி மேற்கு என அமையும்.

ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், மேட்டுப்பாளையம் குறுவட்டத்தில் அமைந்துள்ள சிக்கதாசம்பாளையம் கிராமத்தைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை–II–இல் உள்ளவாறு) சிக்கதாசம்பாளையம் கிழக்கு** எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள சிக்கதாசம்பாளையம் கிராமமானது சிக்கதாசம்பாளையம் மேற்கு என அமையும்.

இ) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், கணபதி குறுவட்டத்தில் அமைந்துள்ள சங்கனூர் கிராமத்தைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை–III–இல் உள்ளவாறு) சங்கனூர் தெற்கு** எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள சங்கனூர் கிராமமானது சங்கனூர் வடக்கு என அமையும்.

ஈ) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், கோயம்புத்தூர் டவுன் குறுவட்டம், கோயம்புத்தூர் டவுன் கிராமத்தைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை–IV–இல் உள்ளவாறு) கோயம்புத்தூர் டவுன் வடக்கு** எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள கோயம்புத்தூர் டவுன் கிராமமானது கோயம்புத்தூர் டவுன் தெற்கு என அமையும்.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் கிராமங்கள் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஆறில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1111.

(IFHRMS Additional Sanction Ledger No.2025081111)
PSL No.202509PSL0172.

## பிற்சேர்க்கை – I

*[அரசாணை (நிலை) எண்.657, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025]*

**தற்போதுள்ள குறிச்சி வருவாய் கிராமம், புதிய குறிச்சி கிழக்கு வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள குறிச்சி மேற்கு ஆகிய கிராமங்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்:–**

| வ. எண் | தற்போதுள்ள குறிச்சி வருவாய் கிராமம் | | புதிய குறிச்சி கிழக்கு | | எஞ்சியுள்ள குறிச்சி மேற்கு | |
|---|---|---|---|---|---|---|
| | குறிச்சி கிராம எண் | குக்கிராமத்தின் பெயர் | குறிச்சி கிழக்கு கிராம எண் | குக்கிராமத்தின் பெயர் | குறிச்சி மேற்கு கிராம எண் | குக்கிராமத்தின் பெயர் |
| 1. | 15 | குறிச்சி | 20 | ஈச்சனாரி | 15 | குறிச்சி |
| 2. | | ஈச்சனாரி | | கோணவாய்க்கால்–பாளையம் | | சுந்தராபுரம் |
| 3 | | கோணவாய்க்கால்–பாளையம் | | மேட்டூர் | | மாச்சம்பாளையம் |
| 4 | | மேட்டூர் | | கணேசபுரம் | | பிள்ளையார்புரம் |
| 5. | | கணேசபுரம் | | போத்தனூர் | | |
| 6. | | போத்தனூர் | | | | |
| 7. | | சுந்தராபுரம் | | | | |
| 8. | | மாச்சம்பாளையம் | | | | |
| 9. | | பிள்ளையார்புரம் | | | | |

**ஆட்சி எல்லைப் பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் கிராமம் | கிராமங்கள் | |
|---|---|---|---|---|
| | | குறிச்சி | எஞ்சியுள்ள குறிச்சி மேற்கு | புதிய குறிச்சி கிழக்கு |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | தலைமையிடம் | மதுக்கரை | மதுக்கரை | மதுக்கரை |
| 2 | பரப்பளவு (ஹெக்டேர்) | 2031.75.00 | 1007.68.00 | 1024.07.00 |
| 3 | மக்கள் தொகை | 175179 | 77052 | 98127 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | மதுக்கரை | | |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் தெற்கு | | |
| 6 | சட்டமன்ற தொகுதி பெயர் | 122. கிணத்துக்கடவு | | |
| 7 | பாராளுமன்ற தொகுதி பெயர் | 21. பொள்ளாச்சி | | |
| 8 | வருவாய் குக்கிராமங்களின் எண்ணிக்கை | 9<br>**குறிச்சி, ஈச்சனாரி,** கோணவாய்க்கால்பாளையம், மேட்டூர், கணேசபுரம், போத்தனூர், சுந்தராபுரம், மாச்சம்பாளையம், பிள்ளையார்புரம் | 4<br>**குறிச்சி மேற்கு**<br>1. குறிச்சி,<br>2. பிள்ளையார்புரம்,<br>3. சுந்தராபுரம்,<br>4. மாச்சம்பாளையம் | 5<br>**குறிச்சி கிழக்கு**<br>1. ஈச்சனாரி,<br>2. கோணவாய்க் கால்பாளையம்,<br>3. மேட்டூர்,<br>4. கணேசபுரம்,<br>5. போத்தனூர் |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | மாநகராட்சி வார்டுகள் – 8 | மாநகராட்சி வார்டுகள் –4 | மாநகராட்சி வார்டுகள் – 4 |
| 10 | தலைமையிடத்தில் இருந்து வெகு தொலைவில் உள்ள குக்கிராமம் / தூரம் | குறிச்சி – 5.0 கி.மீ | குறிச்சி (குறிச்சி மேற்கு) – 5.0 கி.மீ. | போத்தனூர் (குறிச்சி கிழக்கு) – 7 கி.மீ. |
| 11 | ஓராண்டில் சான்றுகள் வழங்கப்பட்ட விவரம் | 7690 | 3523 | 4167 |

**பிற்சேர்க்கை — II**

*[அரசாணை (நிலை) எண்.657, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025]*

**தற்போதுள்ள சிக்கதாசம்பாளையம் கிராமம், புதிய சிக்கதாசம்பாளையம் கிழக்கு வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள சிக்கதாசம்பாளையம் மேற்கு ஆகிய கிராமங்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்:—**

| வ. எண் | தற்போதுள்ள சிக்கதாசம்பாளையம் வருவாய் கிராமம் | | புதிய சிக்கதாசம்பாளையம் கிழக்கு | | எஞ்சியுள்ள சிக்கதாசம்பாளையம் மேற்கு | |
|---|---|---|---|---|---|---|
| | சிக்கதாசம் பாளையம் கிராம எண் | நகராட்சி/ ஊராட்சி வார்டுகளின் எண்ணிக்கை | சிக்கதாசம் பாளையம் கிழக்கு கிராம எண் | ஊராட்சி வார்டுகளின் எண்ணிக்கை | சிக்கதாசம் பாளையம் மேற்கு கிராம எண் | நகராட்சி வார்டுகளின் எண்ணிக்கை |
| 1 | 10 | நகராட்சியில் 32 வார்டுகள் | 20 | கிராம ஊராட்சி வார்டுகள்– 15 | 10 | நகராட்சி வார்டுகள்— 32 |
| 2 | | சிக்கதாசம்பாளையம் ஊராட்சியில் 15 வார்டுகள் | | | | |

**ஆட்சி எல்லைப்பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் கிராமம் | கிராமங்கள் | |
|---|---|---|---|---|
| | | சிக்கதாசம் பாளையம் | எஞ்சியுள்ள சிக்கதாசம் பாளையம் மேற்கு | புதிய சிக்கதாசம்பாளையம் கிழக்கு |
| 1 | தலைமையிடம் | மேட்டுப்பாளையம் | | |
| 2 | பரப்பளவு (ஹெக்டர்) | 2423.01.58 | 613.6308.7 | 1809.38.5 |
| 3 | மக்கள் தொகை | 143804 | 123466 | 20338 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | மேட்டுப்பாளையம் | | |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் வடக்கு | | |
| 6 | சட்டமன்ற தொகுதி பெயர் | 111. மேட்டுப்பாளையம் | | |
| 7 | பாராளுமன்ற தொகுதி பெயர் | 19. நீலகிரி | | |
| 8 | வருவாய் குக்கிராமங்களின் எண்ணிக்கை | நகராட்சி வார்டுகள் –32 ஊராட்சி வார்டுகள் 15 | நகராட்சி வார்டுகள் – 32 | ஊராட்சி வார்டுகள் – 15 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | நகராட்சி வார்டுகள் 32 கிராம ஊராட்சி 1 | நகராட்சி வார்டுகள் – 32 | கிராம ஊராட்சி 1 |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | வேடர்காலனி – 8 கி.மீ | கெண்டையூர் – 4 கி.மீ | வேடர்காலனி – 6 கி.மீ |
| 11 | கடந்த ஓராண்டில் சான்றுகள் வழங்கப்பட்ட விவரம் | 8742 | 5994 | 2748 |

**பிற்சேர்க்கை – III**

*[அரசாணை (நிலை) எண்.657, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025]*

**தற்போதுள்ள சங்கனூர் கிராமம், புதிய சங்கனூர் தெற்கு வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள சங்கனூர் வடக்கு ஆகிய கிராமங்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்:–**

| வ. எண் | தற்போதுள்ள சங்கனூர் வருவாய் கிராமம் | | புதிய சங்கனூர் தெற்கு | | எஞ்சியுள்ள சங்கனூர் வடக்கு | |
|---|---|---|---|---|---|---|
| | சங்கனூர் கிராம எண் | குக்கிராமத்தின் பெயர் | சங்கனூர் தெற்கு கிராம எண் | குக்கிராமத்தின் பெயர் | சங்கனூர் வடக்கு கிராம எண் | குக்கிராமத்தின் பெயர் |
| 1. | 19 | சங்கனூர் | 26 | சிவானந்தாகாலனி | 19 | சங்கனூர் |
| 2. | | இரத்தினபுரி | | சாய்பாபாகாலனி | | இரத்தினபுரி |
| 3. | | நல்லாம்பாளையம் | | கே.கே.புதூர் | | நல்லாம்பாளையம் |
| 4. | | சிவானந்தாகாலனி | | – | | – |
| 5. | | சாய்பாபாகாலனி | | – | | – |
| 6. | | கே.கே.புதூர் | | – | | – |

**ஆட்சி எல்லைப் பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் கிராமம் | கிராமங்கள் | |
|---|---|---|---|---|
| | | சங்கனூர் | எஞ்சியுள்ள சங்கனூர் வடக்கு | புதிய சங்கனூர் தெற்கு |
| 1 | தலைமையிடம் | கோயம்புத்தூர் வடக்கு | கோயம்புத்தூர் வடக்கு | கோயம்புத்தூர் வடக்கு |
| 2 | பரப்பளவு (ஹெக்டேர்) | 844.95.00 | 453.72.28 | 391.22.72 |
| 3 | மக்கள் தொகை | 178199 | 100111 | 78088 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் வடக்கு | | |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் வடக்கு | | |
| 6 | சட்டமன்ற தொகுதி பெயர் | 118. கோயம்புத்தூர் வடக்கு | | |
| 7 | பாராளுமன்ற தொகுதி பெயர் | 20. கோயம்புத்தூர் | | |

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் கிராமம் | கிராமங்கள் | |
|---|---|---|---|---|
| | | சங்கனூர் | எஞ்சியுள்ள சங்கனூர் வடக்கு | புதிய சங்கனூர் தெற்கு |
| 8 | வருவாய் குக்கிராமங்களின் எண்ணிக்கை | 6<br>1. சங்கனூர்<br>2. இரத்தினபுரி<br>3. நல்லாம்பாளையம்<br>4. சிவானந்தாகாலனி<br>5. சாய்பாபாகாலனி<br>6. கே.கே.புதூர் | 3<br>1. சங்கனூர்<br>2. இரத்தினபுரி<br>3. நல்லாம்பாளையம் | 3<br>1. சிவானந்தாகாலனி<br>2. சாய்பாபாகாலனி<br>3. கே.கே.புதூர் |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | மாநகராட்சி வார்டுகள் – 9 | மாநகராட்சி வார்டுகள் – 5 | மாநகராட்சி வார்டுகள் – 4 |
| 10 | தலைமையிடத்தில் இருந்து வெகு தொலைவில் உள்ள குக்கிராமம் / தூரம் | கே.கே.புதூர்– 5.3 கி.மீ | நல்லாம்பாளையம் – 5.0 கி.மீ | கே.கே.புதூர் – 5.3 கி.மீ |
| 11 | கடந்த ஓராண்டில் சான்றுகள் வழங்கப்பட்ட விவரம் | 7341 | 4124 | 3217 |

**பிற்சேர்க்கை – IV**

*[அரசாணை (நிலை) எண்.657, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025 ]*

**தற்போதுள்ள கோயம்புத்தூர் டவுன் கிராமம், புதிய கோயம்புத்தூர் டவுன் வடக்கு வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள கோயம்புத்தூர் டவுன் தெற்கு ஆகிய கிராமங்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்:–**

| வ. எண் | தற்போதுள்ள கோயம்புத்தூர் டவுன் வருவாய் கிராமம் | | புதிய கோயம்புத்தூர் டவுன் வடக்கு | | எஞ்சியுள்ள கோயம்புத்தூர் டவுன் தெற்கு | |
|---|---|---|---|---|---|---|
| | கோயம்புத்தூர் டவுன் கிராம எண் | மாநகராட்சி வார்டுகளின் எண்ணிக்கை | கோயம்புத்தூர் டவுன் வடக்கு கிராம எண் | மாநகராட்சி வார்டுகளின் எண்ணிக்கை | கோயம்புத்தூர் டவுன் தெற்கு கிராம எண் | மாநகராட்சி வார்டுகளின் எண்ணிக்கை |
| 1. | 1 | மாநகராட்சி வார்டுகள் – 7 | 6 | மாநகராட்சி வார்டுகள் 3 | 7 | மாநகராட்சி வார்டுகள் –4 |

**ஆட்சி எல்லைப் பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் கிராமம் | கிராமங்கள் | |
|---|---|---|---|---|
| | | கோயம்புத்தூர் டவுன் | எஞ்சியுள்ள கோயம்புத்தூர் டவுன் வடக்கு | புதிய கோயம்புத்தூர் டவுன் தெற்கு |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | தலைமையிடம் | கோயம்புத்தூர் தெற்கு | கோயம்புத்தூர் தெற்கு | கோயம்புத்தூர் தெற்கு |
| 2 | பரப்பளவு (ஹெக்டேர்) | 438.1 | 276.2 | 161.9 |
| 3 | மக்கள் தொகை | 2,45,779 | 1,22,706 | 1,23,073 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் தெற்கு | | |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் தெற்கு | | |
| 6 | சட்டமன்ற தொகுதி பெயர் | 119. தொண்டாமுத்தூர் | | |
| 7 | பாராளுமன்ற தொகுதி பெயர் | 20. கோயம்புத்தூர் | | |
| 8 | வருவாய் குக்கிராமங்களின் எண்ணிக்கை | மாநகராட்சி முழுவதும் | | |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | மாநகராட்சி வார்டுகள் – 7 | மாநகராட்சி வார்டுகள் – 3 | மாநகராட்சி வார்டுகள் – 4 |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள குக்கிராமம் / தூரம் | கோயம்புத்தூர் டவுன் – 1 கி.மீ | கோயம்புத்தூர் டவுன் கிழக்கு – 3 கி.மீ | கோயம்புத்தூர் டவுன் மேற்கு – 3 கி.மீ |
| 11 | கடந்த ஓராண்டில் சான்றுகள் வழங்கப்பட்ட விவரம் | 9907 | 4558 | 5349 |

No.II(1)/REVDM/35/2025.

**[வருவாய் நிருவாகம் — ஆட்சி எல்லை — சேலம் மாவட்டம் - சேலம் மாநகராட்சி பகுதிகளில் உள்ள வருவாய் கிராமங்களை பிரித்து சேலம்டவுன் தெற்கு, சின்னதிருப்பதி, பொன்னம்மாபேட்டை, அம்மாபேட்டை தெற்கு மற்றும் அல்லிக்குட்டை ஆகிய 5 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:-**

*[அரசாணை (நிலை) எண்.658, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி—1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு—2056.]*

**படிக்கவும்:-**

1. அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980.
2. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025—2026—ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு, நாள் 03.04.2025.
3. அரசு கடித எண் 5483/வ.நி.1(1)/2025—1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
4. சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண் 3146388/ 2025— அ3, நாள் 07.04.2025.
5. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01—04/138/2025, நாள் 21.04.2025.
6. அரசாணை (நிலை) எண் 649, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:— எண்.658. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி—1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025—2026—ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:—

**15. "பொதுமக்களுக்கு வருவாய்த் துறையின் சேவைகளை விரைவாக வழங்கும் பொருட்டு, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 8 மாவட்டங்களில் மொத்தம் 25 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், சேலம் மாவட்டம், சேலம் மாநகராட்சி பகுதிகளில் உள்ள வருவாய் கிராமங்களை பிரித்து **சேலம்டவுன் தெற்கு, சின்னதிருப்பதி, பொன்னம்மாபேட்டை, அம்மாபேட்டை தெற்கு மற்றும் அல்லிக்குட்டை** ஆகிய 5 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்குவது தொடர்பாக மேலே நான்காவதாக படிக்கப்பட்ட சேலம் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:—

i. சேலம் வட்டம், சேலம் டவுன் குறுவட்டத்திற்குட்பட்ட சேலம் டவுன், குமாரசாமிபட்டி, அம்மாபேட்டை டவுன், அம்மாபேட்டை ரூரல், தாதம்பட்டி ஆகிய 5 கிராமங்களை பிரித்து சேலம்டவுன் தெற்கு, சின்னதிருப்பதி, பொன்னம்மாபேட்டை, அம்மாபேட்டை தெற்கு, அல்லிக்குட்டை ஆகிய 5 புதிய கிராமங்கள் உருவாக்கலாம்.

ii. பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 5 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்க வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை குறித்த விவரங்கள்:—

- மேற்படி கிராமங்களில், அதிகப்படியான மக்கள் தொகை பெருக்கம் மற்றும் பொதுமக்களிடம் இருந்து வரப்பெறும் அதிகப்படியான இணைய வழி சான்றுகளான வகுப்புச் சான்று, வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, வாரிசுச் சான்று, மக்களுடன் முதல்வர் முகாம், மக்கள் குறைத்தீர்க்கும் நாள் மனுக்கள் மற்றும் முதல்வரின் முகவரி போன்ற இணையவழி செயலியின் மூலம் வரப்பெறும் மனுக்களின் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அதிக காலம் தேவைப்படுவதாலும், இலவச வீட்டுமனைப் பட்டா, புதிய பட்டா வழங்குதல், பட்டா மாறுதல் ஆகியவை கோரி வரப்பெறும் மனுக்களின் மீது புலத்தணிக்கை செய்து நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மாதாந்திர ஒய்வூதியமான, முதியோர் ஒய்வூதியம், மாற்றுத்திறனாளிகள் ஒய்வூதியம், விதவை ஒய்வூதியம், நலிந்தோர் உதவித் தொகை, விபத்து நிவாரண நிதி, உழவர் பாதுகாப்பு திட்டத் தொகை மற்றும் புதிய குடும்ப அட்டை ஆகிய நலத்திட்டங்கள் வழங்க விசாரணை மற்றும் ஆய்வு மேற்கொண்டு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாகவும், அரசின் நலத்திட்டங்களை விரைந்து மக்களிடம் கொண்டு சேர்க்க ஏதுவாகவும் மற்றும் நிருவாக நலன் கருதியும், புதிதாக கிராமங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

iii. புதியதாக ஐந்து (5) வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்கும் நேர்வில் தேவைப்படும் பணியிட விவரங்கள்:—

| *வ.எண்* | *பணியிட விவரங்கள்* | *மொத்தம்* |
|---|---|---|
| 1. | கிராம நிருவாக அலுவலர் | 5 |
| 2. | கிராம உதவியாளர் | 5 |

iv. இந்நேர்வில், சேலம் மாவட்டம், சேலம் மாநகராட்சி பகுதிகளில் பெருகி வரும் மக்கள்தொகை, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களின் பெருக்கம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் 5 உயர் அலுவலர்களின் பரிந்துரையின்படி சேலம் டவுன் தெற்கு, சின்ன திருப்பதி, பொன்னம்மாபேட்டை, அம்மாபேட்டை தெற்கு, அல்லிக்குட்டை ஆகிய 5 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்க கோரியுள்ளார்.

v. சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையானது தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் அரசாணைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அதன் விவரங்கள் பின்வருமாறு:–

**சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் புதியதாக உருவாக்கப்படும் வருவாய் கிராமங்களின் பட்டியல்**

| வ. எண் | பிரிக்கப்படும் கிராமம் | கிராமத்தின் பெயர் | வார்டு | பரப்பளவு (ஹெக்) (Approx) | மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | சேலம் டவுன் | உத்தேசிக்கப்பட்டுள்ள சேலம் டவுன் தெற்கு | 41,42,43, 44,45,46 | 139.44.5 | 62969 |
| 2 | | எஞ்சிய சேலம் டவுன் | 29,30,31, 32,33,34 | 248.28.0 | 58360 |
| 3 | குமாரசாமிபட்டி | உத்தேசிக்கப்பட்டுள்ள சின்னத்திருப்பதி | 12 part | 330.22.5 | 38769 |
| 4 | | எஞ்சிய குமாரசாமிபட்டி | 8,12 Part 14 | 144.87.0 | 43050 |
| 5 | அம்மாபேட்டை டவுன் | எஞ்சிய அம்மாபேட்டை டவுன் | 10,11,35,36 (Part) | 179.55.0 | 59300 |
| 6 | | உத்தேசிக்கப்பட்டுள்ள பொன்னம்மாபேட்டை | 38,39,40,41 (Part) | 98.63.0 | 48112 |
| 7 | அம்மாபேட்டை ரூரல் | எஞ்சிய அம்மாபேட்டை ரூரல் | 09,10,11,36, 37,40 (Part) | 201.31.5 | 49548 |
| 8 | | உத்தேசிக்கப்பட்டுள்ள அம்மாபேட்டை தெற்கு | 09,10,11,36, 37,40 (Part) | 591.25.0 | 69369 |
| 9 | தாதம்பட்டி | எஞ்சிய தாதம்பட்டி | 36, 37(Part) | 232.42.5 | 38320 |
| 10 | | உத்தேசிக்கப்பட்டுள்ள அல்லிகுட்டை | 09 (Part) | 131.26.0 | 38377 |
| | **மொத்தம்** | | | | **506174** |

**தற்போது இயங்கி வரும் சேலம் டவுன் குறுவட்டத்திற்குட்பட்ட கிராமங்கள்**

- தற்போது இயங்கி வரும் சேலம் டவுன் குறுவட்டத்தில் சேலம் மாநகராட்சியில் 9 டவுன் கிராமங்களும், 5 வருவாய் கிராமங்களும் ஆக மொத்தம் 14 வருவாய் கிராமங்கள் உள்ளன. இதன் மொத்த பரப்பு 6007.81.54 ஹெக்டேர் (அல்லது) 60.07 சதுர கிலோ மீட்டர் பரப்பளவாகும்.
- இதில், சேலம் டவுன் குறுவட்டத்தில் தாதம்பட்டி, அம்மாபேட்டை டவுன், அம்மாபேட்டைரூரல், குமாரசாமிப்பட்டி, அஸ்தம்பட்டி, மிட்டா அய்யம்பெருமாம்பட்டி, சேலம்டவுன், கொண்டப்ப நாயக்கன்பட்டி, எருமாபாளையம், கன்னங்குறிச்சி, பெரியேரி, மரவனேரி, உடையாப்பட்டி குரூப் மற்றும் அதிகாரிப்பட்டி ஆகிய 14 கிராமங்கள் உள்ளடக்கியது. இவற்றில், தாதம்பட்டி, அம்மாபேட்டை டவுன், அம்மாப்பேட்டை ரூரல், குமாரசாமிப்பட்டி மற்றும் சேலம் டவுன் ஆகிய கிராமங்கள் சேலம் மாநகராட்சிக்கு உட்பட்டது. மேற்படி கிராமங்களில் 2023 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 5,06,174 ஆகும்.

vi. புதிய வருவாய் கிராமம் தோற்றுவிக்கும் நேர்வில். அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980–இல் புதிய கிராம நிருவாக அலுவலர் பணியிடம் உருவாக்க பின்வரும் வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. சேலம் மாவட்டம், சேலம் வட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள 5 வருவாய் கிராமங்களில் கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது:–

**I. உத்தேசிக்கப்பட்டுள்ள சேலம் டவுன் தெற்கு கிராமம்**

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவு கோல்கள்* | *சீரமைக்கப்படவுள்ள சேலம் டவுன் கிராமம் (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப்பட்டுள்ள சேலம் டவுன் தெற்கு (கிராம பிரிவினைக்கு பின்னர்)* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| மக்கள்தொகை | 3500 முதல் 5000 வரை | 58360 (பூர்த்தியாகிறது) | 62969 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 8930 (பூர்த்தியாகிறது) | 7379 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | நகரப்பகுதி என்பதால் இவ்வினா எழவில்லை | |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | | |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | | |

**II. உத்தேசிக்கப்பட்டுள்ள சின்ன திருப்பதி வருவாய் கிராமம்**

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள்* | *சீரமைக்கப்படவுள்ள குமாரசாமிப்பட்டி (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப்பட்டுள்ள சின்னதிருப்பதி (கிராம பிரிவினைக்கு பின்னர்)* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 43050 (பூர்த்தியாகிறது) | 38769 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 1351 (பூர்த்தியாகவில்லை) | 2154 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | 61.03 ஏக்கர் .செண்ட் (பூர்த்தியாகவில்லை) | 613.13 ஏக்கர். செண்ட் (பூர்த்தியாகவில்லை) |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 104.4 ஏக்கர். செண்ட் (பூர்த்தியாகவில்லை) | 131.2 ஏக்கர். செண்ட் (பூர்த்தியாகவில்லை) |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | 1254/– ரூபாய் (பூர்த்தியாகவில்லை) | 3155/– ரூபாய் (பூர்த்தியாகவில்லை) |

**III. உத்தேசிக்கப்பட்டுள்ள பொன்னாம்மாப்பேட்டை வருவாய் கிராமம்**

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள்* | *சீரமைக்கப்படவுள்ள அம்மாபேட்டை டவுன் கிராமம் (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப்பட்டுள்ள பொன்னாம்மாப் பேட்டை (கிராம பிரிவினைக்கு பின்னர்)* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 59300 (பூர்த்தியாகிறது) | 48112 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 12262 (பூர்த்தியாகிறது) | 4322 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | 20.3 ஏக்கர் .செண்ட் (பூர்த்தியாகவில்லை) | 124.89 ஏக்கர்.செண்ட் (பூர்த்தியாகவில்லை) |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 243.4 ஏக்கர்.செண்ட் (பூர்த்தியாகவில்லை) | 62.7 ஏக்கர். செண்ட் (பூர்த்தியாகவில்லை) |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | 686 ரூபாய் (பூர்த்தியாகவில்லை) | 164 ரூபாய் (பூர்த்தியாகவில்லை) |

IV. **உத்தேசிக்கப்பட்டுள்ள அம்மாபேட்டை தெற்கு கிராமம்**

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள்* | *சீரமைக்கப்படவுள்ள அம்மாபேட்டை ரூரல் (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப்பட்டுள்ள அம்மாபேட்டை தெற்கு (கிராம பிரிவினைக்கு பின்னர்)* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 49548 (பூர்த்தியாகிறது) | 69369 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 10584 (பூர்த்தியாகிறது) | 22584 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | 67.3 ஏக்கர் .செண்ட் (பூர்த்தியாகவில்லை) | 188.3 ஏக்கர். செண்ட் (பூர்த்தியாகவில்லை) |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 340 ஏக்கர் (பூர்த்தியாகவில்லை) | 680 ஏக்கர் (பூர்த்தியாகவில்லை) |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | 4002 ரூபாய் (பூர்த்தியாகவில்லை) | 2229 ரூபாய் (பூர்த்தியாகவில்லை) |

V. **உத்தேசிக்கப்பட்டுள்ள அல்லிக்குட்டை வருவாய் கிராமம்**

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள்* | *சீரமைக்கப்படவுள்ள தாதம்பட்டி (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப்பட்டுள்ள அல்லிக்குட்டை (கிராம பிரிவினைக்கு பின்னர்)* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 38320 (பூர்த்தியாகிறது) | 38377 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 10960 (பூர்த்தியாகிறது) | 5420 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில் ) | 2000 முதல் 2500 வரை | 88.6 ஏக்கர். செண்ட் (பூர்த்தியாகவில்லை) | 104.2 ஏக்கர். செண்ட் (பூர்த்தியாகவில்லை) |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 355 ஏக்கர் (பூர்த்தியாகவில்லை) | 211.3 ஏக்கர். செண்ட் (பூர்த்தியாகவில்லை) |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | 1116 ரூபாய் (பூர்த்தியாகவில்லை) | 909 ரூபாய் (பூர்த்தியாகவில்லை) |

vii. கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுள் மக்கள்தொகை மற்றும் பட்டாதாரர்களின் எண்ணிக்கையினை தவிர்த்து பிற நிபந்தனைகளை பூர்த்தி செய்யவில்லை. இருப்பினும் மாநகராட்சி போன்ற பகுதிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கத்தினால் வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு எடுக்கவும், சட்டம் மற்றும் ஒழுங்கு பணிகள், தேர்தல் பணிகள் போன்ற பல்வகையான பணிகள் கிராம நிருவாக அலுவலருக்கு உள்ளதென்பதால் இந்நேர்வினை சிறப்பினமாக கருதி பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சேலம் டவுன் தெற்கு, சின்னத்திருப்பதி, பொன்னாம்மாப்பேட்டை, அம்மாபேட்டை தெற்கு மற்றும் அல்லிக்குட்டை வருவாய் கிராமத்திற்கு மக்கள்தொகை அடிப்படையில் புதியதாக 5 கிராம நிருவாக அலுவலர் பணியிடத்தை நிரந்தரமாக வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

viii. கிராம உதவியாளர் பணியிடத்தை பொறுத்தவரை ஒரு கிராமத்திற்கு ஒரு கிராம உதவியாளர் பணியிடம் வழங்கப்படுகிறது. மேலும், கிராம உதவியாளர் பணியிடம் என்பது சிறப்பு காலமுறை ஊதியம் என்ற அடிப்படையில் உள்ளதால், தற்போது புதியதாக தோற்றுவிக்கப்படவிருக்கும் 5 வருவாய் கிராமங்களுக்கு 5 கிராம உதவியாளர் பணியிடங்களை தோற்றுவிக்கும் நேர்வில் சிறப்பு காலமுறை ஊதிய நிலை பணியிடமாகவே வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| *வ. எண்* | *பணியிடத்தின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம்* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | கிராம நிருவாக அலுவலர் | நிலை–8, (ரூ.19,500/––62,000/–) | 5 |
| 2. | கிராம உதவியாளர் | சிறப்பு காலமுறை ஊதிய நிலை | 5 |
| **மொத்தம்** | | | **10** |

ix. மேலும், புதியதாக சேலம் டவுன் தெற்கு, சின்னதிருப்பதி, பொன்னம்மாபேட்டை, அம்மாபேட்டை தெற்கு, அல்லிக்குட்டை ஆகிய 5 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்கும் நேர்வில், வட்ட அளவில் மாற்றங்கள் ஏதும் இல்லை என்பதால் புதியதாக தோற்றுவிக்கும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் பணியிடங்களை சேலம் வட்டத்தின் வட்டாட்சியர் DDO Code–BF415/14050085–ன் உள்ளடக்கப்பட (Mapping) வேண்டும்.

x. மேலும், மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் அமைக்கப்பட்ட ஐந்து உயர் அலுவலர்கள் கொண்ட குழுவின் பரிந்துரை அறிக்கையின் அடிப்படையிலும், மாநகராட்சிகளில் பெருகிவரும் மக்கள் தொகை பெருக்கம் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு காணும் பொருட்டு, இந்நேர்வினை சிறப்பினமாக கருதி சேலம் டவுன், குமாரசாமிபட்டி, அம்மாபேட்டை டவுன், அம்மாபேட்டை ரூரல், தாதம்பட்டி ஆகிய 5 கிராமங்களை பிரித்து **சேலம்டவுன் தெற்கு, சின்னதிருப்பதி, பொன்னம்மாபேட்டை, அம்மாபேட்டை தெற்கு, அல்லிக்குட்டை** எனும் 5 புதிய வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்க ஆவண செய்யும் படி அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 25 வருவாய் கிராமங்களுக்கு தலா ஒரு கிராம நிருவாக அலுவலர் பணியிடம் வீதம் 25 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாகவும் மற்றும் தலா ஒரு கிராம உதவியாளர் பணியிடம் வீதம் 25 கிராம உதவியாளர் பணியிடங்களை சிறப்பு காலமுறை ஊதிய விகிதப் பணியிடங்களாக தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.1,55,95,200/–க்கு (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஐந்து ஆயிரத்து இருநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், சேலம் மாவட்டம் ஆகியோரின் கருத்துருக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, சேலம் மாவட்டம், சேலம் வட்டம், சேலம் டவுன் குறுவட்டத்திற்குட்பட்ட சேலம் டவுன் வருவாய் கிராமத்தினைப் பிரித்து (பிற்சேர்க்கை–I–இல் உள்ளவாறு) சேலம் டவுன் தெற்கு, குமாரசாமிபட்டி வருவாய் கிராமத்தினைப் பிரித்து (பிற்சேர்க்கை–II–இல் உள்ளவாறு) சின்னதிருப்பதி, அம்மாபேட்டை டவுன் வருவாய் கிராமத்தினைப் பிரித்து (பிற்சேர்க்கை–III–இல் உள்ளவாறு) பொன்னம்மாபேட்டை, அம்மாபேட்டை ரூரல் வருவாய் கிராமத்தினைப் பிரித்து (பிற்சேர்க்கை–IV–இல் உள்ளவாறு) அம்மாபேட்டை தெற்கு மற்றும் தாதம்பட்டி வருவாய் கிராமத்தினைப் பிரித்து (பிற்சேர்க்கை–V–இல் உள்ளவாறு) அல்லிக்குட்டை ஆகிய 5 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்க அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் கிராமங்கள் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஆறில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1111.

(IFHRMS Additional Sanction Ledger No.2025081111)
PSL No.202509PSL0172.

## பிற்சேர்க்கை – I

*[அரசாணை (நிலை) எண்.658, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025]*

**தற்போதுள்ள சேலம் டவுன் வருவாய் கிராமத்தினைப் பிரித்து சேலம் டவுன் தெற்கு எனும் புதிய வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள சேலம் டவுன் கிராமம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போது உள்ள சேலம் டவுன் வருவாய் கிராமம் | புதிய சேலம்டவுன் தெற்கு | எஞ்சியுள்ள சேலம் டவுன் |
|---|---|---|---|
| | வார்டு எண்கள் | வார்டு எண்கள் | வார்டு எண்கள் |
| 1. | 29,30,31 32,33,34, 41,42,43, 44,45,46 | 41,42,43, 44,45,46 | 29,30,31 32,33,34 |

**ஆட்சி எல்லைப் பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் வருவாய் கிராமம் - சேலம் டவுன் (Parent Village) | | |
|---|---|---|---|---|
| | | பிரிக்கப்படும் கிராமம் | புதிய வருவாய் கிராமம் | எஞ்சியுள்ள கிராமம் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | தலைமையிடம் | சேலம் டவுன் | சேலம் டவுன் தெற்கு | சேலம் டவுன் |
| 2 | பரப்பளவு | 387.72.5 | 139.44.5 | 248.28.0 |
| 3 | மக்கள் தொகை | 1,21,329 | 62,969 | 58,360 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் வருவாய் கிராமம் - சேலம் டவுன் (Parent Village) | | |
|---|---|---|---|---|
| | | பிரிக்கப்படும் கிராமம் | புதிய வருவாய் கிராமம் | எஞ்சியுள்ள கிராமம் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 6 | சட்டமன்றம் பெயர் | சேலம் தெற்கு, சேலம் வடக்கு | சேலம் தெற்கு | சேலம் வடக்கு |
| 7 | பாராளுமன்றம் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 1 | 1 | 1 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 0 | 0 | 0 |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | 2 | 2 | 2 |

**பிற்சேர்க்கை — II**

*[அரசாணை (நிலை) எண்.658, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள குமாரசாமிபட்டி வருவாய் கிராமத்தினைப் பிரித்து சின்னத்திருப்பதி எனும் புதிய வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள குமாரசாமிபட்டி வருவாய் கிராமம் கீழ்க்கண்டவாறு அமையும்**

| வ. எண் | தற்போது உள்ள குமாரசாமிபட்டி வருவாய் கிராமம் | புதிய சின்னத்திருப்பதி | எஞ்சியுள்ள குமாரசாமிபட்டி |
|---|---|---|---|
| | வார்டு எண்கள் | வார்டு எண்கள் | வார்டு எண்கள் |
| | 8, 12 (Part), 14 | 12 (part) | 8, 12 (Part), 14 |

**ஆட்சி எல்லைப் பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் வருவாய் கிராமம் - குமாரசாமிபட்டி (Parent Village) | | |
|---|---|---|---|---|
| | | பிரிக்கப்படும் கிராமம் | புதிய வருவாய் கிராமம் | எஞ்சியுள்ள கிராமம் |
| 1 | தலைமையிடம் | குமாரசாமிபட்டி | சின்னத் திருப்பதி | குமாரசாமிபட்டி |
| 2 | பரப்பளவு | 475.09.5 | 330.22.5 | 144.87.0 |
| 3 | மக்கள் தொகை | 81,819 | 38,769 | 43,050 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |
| 6 | சட்டமன்றம் பெயர் | சேலம் வடக்கு | சேலம் வடக்கு | சேலம் வடக்கு |
| 7 | பாராளுமன்றம் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 1 | 1 | 1 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 0 | 0 | 0 |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | 1 | 1 | 1 |

**பிற்சேர்க்கை — III**

*[அரசாணை (நிலை) எண்.658, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**அம்மாபேட்டை டவுன் வருவாய் கிராமத்தினைப் பிரித்து பொன்னம்மாபேட்டை எனும் புதிய வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள அம்மாபேட்டை டவுன் கீழ்க்கண்டவாறு அமையும்**

| வ. எண் | தற்போது உள்ள அம்மாபேட்டை டவுன் | புதிய பொன்னம்மாபேட்டை | எஞ்சியுள்ள அம்மாபேட்டை டவுன் |
|---|---|---|---|
| | வார்டு எண்கள் | வார்டு எண்கள் | வார்டு எண்கள் |
| 1. | 10,11,35,36(Part),38,39, 40, 41 (Part) | 38,39,40,41(Part) | 10, 11, 35, 36(Part) |

**ஆட்சி எல்லைப் பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் வருவாய் கிராமம் – அம்மாபேட்டை டவுன் (Parent Village) | | |
|---|---|---|---|---|
| | | பிரிக்கப்படும் கிராமம் | புதிய வருவாய் கிராமம் | எஞ்சியுள்ள கிராமம் |
| 1 | தலைமையிடம் | அம்மாபேட்டை டவுன் | பொன்னம்மாபேட்டை | அம்மாபேட்டை டவுன் |
| 2 | பரப்பளவு | 278.18.0 | 98.63.0 | 179.55.0 |
| 3 | மக்கள் தொகை | 81,819 | 38,769 | 43,050 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |
| 6 | சட்டமன்றம் பெயர் | சேலம் வடக்கு | சேலம் வடக்கு | சேலம் வடக்கு |
| 7 | பாராளுமன்றம் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 1 | 1 | 1 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 0 | 0 | 0 |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | 5 | 5 | 5 |

**பிற்சேர்க்கை — IV**

*[அரசாணை (நிலை) எண்.658, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள அம்மாபேட்டை ரூரல் வருவாய் கிராமத்தினைப் பிரித்து அம்மாபேட்டை தெற்கு எனும் புதிய வருவாய் கிராமம மற்றும் எஞ்சியுள்ள அம்மாபேட்டை ரூரல் கீழ்க்கண்டவாறு அமையும்**

| வ. எண் | தற்போது உள்ள அம்மாபேட்டை ரூரல் | புதிய அம்மாபேட்டை தெற்கு | எஞ்சியுள்ள அம்மாபேட்டை ரூரல் |
|---|---|---|---|
| | வார்டு எண்கள் | வார்டு எண்கள் | வார்டு எண்கள் |
| 1. | 09,10,11,36,37,40 (Part), | 09,10,11,36, 37, 40 (Part) | 09,10,11,36, 37,40 (Part) |

**ஆட்சி எல்லைப் பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் வருவாய் கிராமம்–அம்மாபேட்டை ரூரல் (Parent Village) | | |
|---|---|---|---|---|
| | | பிரிக்கப்படும் கிராமம் | புதிய வருவாய் கிராமம் | எஞ்சியுள்ள கிராமம் |
| 1 | தலைமையிடம் | அம்மாபேட்டை ரூரல் | அம்மாபேட்டை தெற்கு | அம்மாபேட்டை ரூரல் |
| 2 | பரப்பளவு | 792.56.5 | 591.25.0 | 201.31.5 |
| 3 | மக்கள் தொகை | 1,18,917 | 69,369 | 49,548 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் வருவாய் கிராமம்-அம்மாபேட்டை ரூரல் (Parent Village) | | |
|---|---|---|---|---|
| | | பிரிக்கப்படும் கிராமம் | புதிய வருவாய் கிராமம் | எஞ்சியுள்ள கிராமம் |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |
| 6 | சட்ட மன்றம் பெயர் | சேலம் வடக்கு, சேலம் தெற்கு | சேலம் தெற்கு | சேலம் வடக்கு |
| 7 | பாராளுமன்றம் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 1 | 1 | 1 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 0 | 0 | 0 |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | 5 | 5 | 5 |

**பிற்சேர்க்கை — V**

*[அரசாணை (நிலை) எண்.658, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள தாதம்பட்டி வருவாய் கிராமத்தினைப் பிரித்து அல்லிக்குட்டை எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்குதல் மற்றும் எஞ்சியுள்ள தாதம்பட்டி கீழ்க்கண்டவாறு அமையும்**

| வ. எண் | தற்போதுள்ள தாதம்பட்டி | புதிய அல்லிக்குட்டை | எஞ்சியுள்ள தாதம்பட்டி |
|---|---|---|---|
| | வார்டு எண்கள் | வார்டு எண்கள் | வார்டு எண்கள் |
| | 09 (Part), 36, 37 (Part) | 09 (Part) | 36, 37 (Part) |

**ஆட்சி எல்லைப் பட்டியல்**

| வ. எண். | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் வருவாய் கிராமம் – தாதம்பட்டி (Parent Village) | | |
|---|---|---|---|---|
| | | பிரிக்கப்படும் கிராமம் | புதிய வருவாய் கிராமம் | எஞ்சியுள்ள கிராமம் |
| 1 | தலைமையிடம் | தாதம்பட்டி | அல்லிக்குட்டை | தாதம்பட்டி |
| 2 | பரப்பளவு | 363.68.5 | 131.26.0 | 232.42.5 |
| 3 | மக்கள் தொகை | 76,697 | 38,377 | 38,320 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |
| 6 | சட்ட மன்றம் பெயர் | சேலம் வடக்கு | சேலம் வடக்கு | சேலம் வடக்கு |
| 7 | பாராளுமன்றம் பெயர் | சேலம் | சேலம் | சேலம் |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 1 | 1 | 1 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 0 | 0 | 0 |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | 7 | 7 | 7 |

No.II(1)/REVDM/36/2025.

**[வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – செங்கல்பட்டு மாவட்டம் – செங்கல்பட்டு மாநகராட்சி பகுதிகளில் உள்ள வருவாய் கிராமங்களைப் பிரித்து ஜமீன் பல்லாவரம்-II, பம்மல்-II மற்றும் அனகாபுத்தூர்-II எனும் 3 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.659, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980.
2. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு, நாள் 03.04.2025.
3. அரசு கடித எண் 5483/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
4. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண்.4001/ 2025/அ7, நாள் 07.04.2025.
5. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/154/2025, நாள் 22.04.2025.
6. அரசாணை (நிலை) எண் 649, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:– எண்.659. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**15.“பொதுமக்களுக்கு வருவாய்த் துறையின் சேவைகளை விரைவாக வழங்கும் பொருட்டு, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 8 மாவட்டங்களில் மொத்தம் 25 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்கப்படும்”.**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு மாநகராட்சி பகுதிகளில் உள்ள வருவாய் கிராமங்களைப் பிரித்து ஜமீன் பல்லாவரம்–II, பம்மல்–II மற்றும் அனகாபுத்தூர்–II எனும் 3 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்குவது தொடர்பாக மேலே நான்காவதாக படிக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. உத்தேசிக்கப்பட்டுள்ள 3 வருவாய் கிராமங்களின் விவரங்கள்:–

- செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டம், பல்லாவரம் குறுவட்டத்திற்குட்பட்ட ஜமீன் பல்லாவரம் கிராமத்தினைச் சீரமைத்து ஜமீன் பல்லாவரம்–II எனவும், எஞ்சிய கிராமத்தை ஜமீன் பல்லாவரம் I என பெயர் மாற்றம் செய்யவும்,
- பம்மல் குறுவட்டத்திற்குட்பட்ட பம்மல் கிராமத்தினை சீரமைத்து உத்தேசிக்கப்பட்டுள்ள பம்மல்–II எனவும் எஞ்சிய கிராமத்தை பம்மல் – I என பெயர் மாற்றம் செய்யவும்,
- அனகாபுத்தூர் கிராமத்தினைச் சீரமைத்து உத்தேசிக்கப்பட்டுள்ள அனகாபுத்தூர்–II எனவும் எஞ்சிய கிராமத்தை அனகாபுத்தூர்–I என புதியதாக 3 வருவாய் கிராமங்கள் உருவாக்கலாம்.

ii. உத்தேசிக்கப்பட்டுள்ள 3 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்க வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை குறித்து மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ள காரணங்கள்:–

- பல்லாவரம் வட்டம், ஜமீன்பல்லாவரம், பம்மல் மற்றும் அனகாபுத்தூர் கிராமங்களில் அதிகப்படியான மக்கள் தொகை பெருக்கம் மற்றும் பொதுமக்களிடம் இருந்து வரப்பெறும் அதிகப்படியான இணைய வழி சான்றுகளான வகுப்புச் சான்று, வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, வாரிசுச் சான்று, மக்களுடன் முதல்வர் முகாம், மக்கள் குறைத்தீர்க்கும் நாள் மனுக்கள் மற்றும் முதல்வரின் முகவரி போன்ற இணையவழி செயலியின் மூலம் வரப்பெறும் மனுக்களின் மீது துரித விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளவும், இலவச வீட்டுமனைப் பட்டா, புதிய பட்டா வழங்குதல், பட்டா மாறுதல் ஆகியவை கோரி வரப்பெறும் மனுக்களின் மீது புலத்தணிக்கை செய்து நடவடிக்கை மேற்கொள்ளவும்.

- மேலும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மாதாந்திர ஒய்வூதியமான, முதியோர் ஒய்வூதியம், மாற்றுத்திறனாளிகள் ஒய்வூதியம், விதவை ஒய்வூதியம், நலிந்தோர் உதவித் தொகை, விபத்து நிவாரண நிதி, உழவர் பாதுகாப்பு திட்டத் தொகை மற்றும் புதிய குடும்ப அட்டை ஆகிய நலத்திட்டங்கள் வழங்க விசாரணை மற்றும் ஆய்வு மேற்கொண்டு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாகவும், அரசின் நலத்திட்டங்களை விரைந்து மக்களிடம் கொண்டு சேர்க்க ஏதுவாகவும், நிருவாக நலன் கருதியும், புதிதாக கிராமங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

iii. புதியதாக 3 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்கும் நேர்வில் தேவைப்படும் பணியிட விவரங்களாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ள விவரங்கள்:–

| வ. எண் | பணியிட விவரங்கள் | மொத்தம் |
|---|---|---|
| 1 | கிராம நிருவாக அலுவலர் | 3 |
| 2 | கிராம உதவியாளர் | 3 |

iv. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையானது தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் அரசாணைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அதன் விவரங்கள் பின்வருமாறு:–

- **தாம்பரம் மாநகராட்சிப் பகுதிகளில் புதியதாக உருவாக்கப்படும் வருவாய் கிராமங்களின் பட்டியல்**

| வ. எண் | வட்டத்தின் விபரம் | தற்போதைய கிராமம் | குறு வட்டம் | உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய கிராமம் | பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டிய எஞ்சியுள்ள கிராமங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | பல்லாவரம் | ஜமீன் பல்லாவரம் | பல்லாவரம் | ஜமீன் பல்லாவரம்– II | ஜமீன் பல்லாவரம்–I |
| | | பம்மல் | பம்மல் | பம்மல் –II | பம்மல் – I |
| | | அனகாபுத்தூர் | பம்மல் | அனகாபுத்தூர்– II | அனகாபுத்தூர்– I |
| **மொத்தம்** | | | | **3** | **3** |

**ஜமீன் பல்லாவரம்–II வருவாய் கிராமம்**

| நிபந்தனை விவரம் | நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் | சீரமைக்கப்படவுள்ள (ஜமீன் பல்லாவரம் –I) (கிராம பிரிவினைக்கு பின்னர்) | உத்தேசிக்கப்பட்டுள்ள (ஜமீன் பல்லாவரம் – II) (கிராம பிரிவினைக்கு பின்னர்) |
|---|---|---|---|
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 46484 (பூர்த்தியாகிறது) | 68360 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 15640 (பூர்த்தியாகிறது) | 6466 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | 445.67 (பூர்த்தியாகவில்லை) | 142.06 (பூர்த்தியாகவில்லை) |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 65.16 (பூர்த்தியாகவில்லை) | 154.21 (பூர்த்தியாகவில்லை) |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | 5506 (பூர்த்தியாகவில்லை) | 9074 (பூர்த்தியாகவில்லை) |

**பம்மல்-II வருவாய் கிராமம்**

| நிபந்தனை விவரம் | நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் | சீரமைக்கப்படவுள்ள (பம்மல்–I) (கிராம பிரிவினைக்கு பின்னர்) | உத்தேசிக்கப்பட்டுள்ள (பம்மல்–II) (கிராம பிரிவினைக்கு பின்னர்) |
|---|---|---|---|
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 60080 (பூர்த்தியாகிறது) | 50638 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 6390 (பூர்த்தியாகிறது) | 7916 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில் ) | 2000 முதல் 2500 வரை | 171.15 (பூர்த்தியாகவில்லை) | 134.03 (பூர்த்தியாகவில்லை) |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 241.50 (பூர்த்தியாகவில்லை) | 365.20 (பூர்த்தியாகவில்லை) |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | 6264 (பூர்த்தியாகவில்லை) | 7352 (பூர்த்தியாகவில்லை) |

**அனகாபுத்தூர் -II வருவாய் கிராமம்**

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள்* | *சீரமைக்கப்படவுள்ள (அனகாபுத்தூர்–I) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* | *உத்தேசிக்கப்பட்டுள்ள (அனகாபுத்தூர் – II) (கிராம பிரிவினைக்கு பின்னர்)* |
|---|---|---|---|
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 31350 (பூர்த்தியாகிறது) | 31350 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 4430 (பூர்த்தியாகிறது) | 6642 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | 126.07 (பூர்த்தியாகவில்லை) | 26.93 (பூர்த்தியாகவில்லை) |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 80.58 (பூர்த்தியாகவில்லை) | 143.57 (பூர்த்தியாகவில்லை) |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | 6264 (பூர்த்தியாகவில்லை) | 7352 (பூர்த்தியாகவில்லை) |

v. கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை நாள் 01.12.1980–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுள் மக்கள்தொகை மற்றும் பட்டதாரர்கள் தவிர்த்து அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யவில்லை. இருப்பினும் மாநகராட்சி போன்ற பகுதிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கத்தினால் வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு எடுக்கவும், சட்ட மற்றும் ஒழுங்கு பணிகள், தேர்தல் பணிகள் போன்ற பல்வகையான பணிகள் கிராம நிருவாக அலுவலருக்கு உள்ளதென்பதால் இந்நேர்வினை சிறப்பினமாக கருதி பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | நிலை மற்றும் ஊதிய விகிதம் | புதிய பணியிடம் |
|---|---|---|---|
| 1. | கிராம நிருவாக அலுவலர் | நிலை–8, (ரூ.19,500/– – 62,000/–) | 3 |
| 2. | கிராம உதவியாளர் | சிறப்பு காலமுறை ஊதிய நிலை | 3 |
| | | **மொத்தம்** | **6** |

vi. மேலும், புதிய வருவாய் கிராமங்களாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் பல்லாவரம் குறுவட்டத்திற்குட்பட்ட **ஜமீன் பல்லாவரம்–II, பம்மல்** குறுவட்டத்திற்குட்பட்ட பம்மல்–II மற்றும் **அனகாபுத்தூர்–II** ஆகிய 3 வருவாய் கிராமங்கள் பல்லாவரம் வட்டத்தில் அமையவுள்ளது. மேற்காணும் 3 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்கும் நேர்வில், வட்ட அளவில் மாற்றங்கள் ஏதும் இல்லை என்பதால் புதியதாக தோற்றுவிக்கும் கிராம நிருவாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் பணியிடங்களை மேற்சொன்ன பல்லாவரம் வட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.

vii. 3 வருவாய் கிராமங்கள் தோற்றுவிக்கும் நேர்வில், ஜமீன் பல்லாவரம்–II மற்றும் எஞ்சியுள்ள ஜமீன் பல்லாவரம்–I, பம்மல்–II மற்றும் எஞ்சியுள்ள பம்மல்–I, ஆகிய வருவாய் கிராமங்கள் ஏற்கனவே இயங்கி வரும் குறுவட்டங்களிலேயே அமையப்பெறும். மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள அனகாபுத்தூர்–II மற்றும் எஞ்சியுள்ள அனகாபுத்தூர்–I வருவாய் கிராமங்கள் புதியதாக உத்தேசிக்கப்பட்டுள்ள அனகாபுத்தூர் குறுவட்டத்தில் அமையப்பெறும்.

4. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 25 வருவாய் கிராமங்களுக்கு தலா ஒரு கிராம நிருவாக அலுவலர் பணியிடம் வீதம் 25 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாகவும் மற்றும் தலா ஒரு கிராம உதவியாளர் பணியிடம் வீதம் 25 கிராம உதவியாளர் பணியிடங்களை சிறப்பு காலமுறை ஊதிய விகிதப் பணியிடங்களாக தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.1,55,95,200/–க்கு (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஐந்து ஆயிரத்து இருநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு மாவட்டம் ஆகியோரின் கருத்துருக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, கீழ்கண்டவாறு அமையும் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது:–

அ) செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டம், பல்லாவரம் குறுவட்டத்திலுள்ள ஜமீன் பல்லாவரம் கிராமத்தினைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை-I மற்றும் பிற்சேர்க்கை-IV, அறிவிக்கை 1-இல் உள்ளவாறு) ஜமீன் பல்லாவரம்-II** எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள ஜமீன் பல்லாவரம் கிராமமானது ஜமீன் பல்லாவரம்–I என அமையும்.

ஆ) செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டம், பம்மல் குறுவட்டத்திலுள்ள பம்மல் கிராமத்தினைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை-II மற்றும் பிற்சேர்க்கை-IV, அறிவிக்கை 2-இல் உள்ளவாறு)** பம்மல்–II எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள பம்மல் கிராமமானது பம்மல்–I என அமையும்.

இ) செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டம், பம்மல் குறுவட்டத்திலுள்ள அனகாபுத்தூர் கிராமத்தினைச் சீரமைத்து சீரமைத்து **(பிற்சேர்க்கை-III மற்றும் பிற்சேர்க்கை-IV, அறிவிக்கை 3-இல் உள்ளவாறு) அனகாபுத்தூர்–II** எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள அனகாபுத்தூர் கிராமமானது அனகாபுத்தூர்–I என அமையும்.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் கிராமங்கள் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஆறில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1111.

(IFHRMS Additional Sanction Ledger No.2025081111)
PSL No.202509PSL0172.

**பிற்சேர்க்கை – I**

*[அரசாணை (நிலை) எண்.659, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள ஜமீன் பல்லாவரம் வருவாய் கிராமம், புதிய ஜமீன் பல்லாவரம் –II எனும் புதிய வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள ஜமீன் பல்லாவரம்-I வருவாய் கிராமங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்**

| *விவரங்கள்* | *தற்போது உள்ள ஜமீன் பல்லாவரம் வருவாய் கிராமம்* | *எஞ்சியுள்ள ஜமீன் பல்லாவரம்–I* | *புதிய ஜமீன் பல்லாவரம்–II* |
|---|---|---|---|
| புல எண்கள் | புல எண்.1 முதல் புல எண்.535 வரை | புல எண்.1 முதல் புல எண்.213 வரை | புல எண்.214 முதல் புல எண்.535 வரை |
| மொத்தப் பரப்பு (ஹெக்) | 938.12.0 | 352.79.0 | 585.33.0 |
| நன்செய் பரப்பு (ஹெக்) | 237.86.0 | 180.36.5 | 57.49.5 |
| புன்செய் பரப்பு (ஹெக்) | 88.79.0 | 26.37.5 | 62.41.5 |
| மானாவரி (ஹெக்) | 274.65.0 | 47.38.0 | 227.27.0 |
| இதர அரசு புறம்போக்கு(ஹெக்) | 336.82.0 | 98.67.0 | 238.15.0 |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 15640 | 9174 | 6466 |
| நில வருவாய் | 14580 | 5506 | 9074 |
| மக்கள் தொகை விவரம் | 114844 | 46484 | 68360 |

**பிற்சேர்க்கை – II**

*[அரசாணை (நிலை) எண்.659, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள பம்மல் வருவாய் கிராமம், புதிய பம்மல்–II வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள பம்மல்-I வருவாய் கிராமங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்**

| *விவரங்கள்* | *தற்போதுள்ள பம்மல் வருவாய் கிராமம்* | *எஞ்சியுள்ள பம்மல் – I வருவாய் கிராமம்* | *புதிய பம்மல் – II வருவாய் கிராமம்* |
|---|---|---|---|
| *புல எண்கள்* | *புல எண்.1 முதல் புல எண்.209 வரை* | *புல எண்.1 முதல் புல எண்.116 வரை (WARD – D,E,F,G,H,I,J,N)* | *புல எண்.117 முதல் புல எண்.209 வரை (WARD – A, B, C,K,L,M,O)* |
| மொத்தப் பரப்பு (ஹெக்) | 520.62.50 | 249.36.50 | 271.26.00 |
| நன்செய் பரப்பு (ஹெக்) | 123.51.00 | 69.26.50 | 54.24.50 |
| புன்செய் பரப்பு (ஹெக்) | 245.52.50 | 97.73.50 | 147.79.00 |
| மானாவரி (ஹெக்) | 30.77.5 | 19.39.50 | 11.38.00 |
| இதர அரசு புறம்போக்கு (ஹெக்) | 120.81.5 | 62.97.00 | 57.84.50 |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 14306 | 6390 | 7916 |
| நில வருவாய் | 13616 | 6264 | 7352 |
| மக்கள் தொகை விவரம் | 110718 | 60080 | 50638 |

**பிற்சேர்க்கை – III**

*[அரசாணை (நிலை) எண்.659, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள அனகாபுத்தூர் வருவாய் கிராமம், புதிய அனாகபுத்தூர்–II வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள அனகாபுத்தூர்-I வருவாய் கிராமங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்**

| *விவரங்கள்* | *தற்போதுள்ள அனகாபுத்தூர் வருவாய் கிராமம்* | *எஞ்சியுள்ள அனகாபுத்தூர் – I வருவாய் கிராமம்* | *புதிய அனகாபுத்தூர் – II வருவாய் கிராமம்* |
|---|---|---|---|
| *புல எண்கள்* | *புல எண்.1 முதல் புல எண்.323 வரை* | *புல எண்.1 முதல் புல எண்.178 வரை மற்றும் புல எண். 322 (WARD – A,B,C,D,E)* | *புல எண்.179 முதல் புல எண்.321 வரை மற்றும் புல எண். 323 (WARD – F,G,H,I,J,K)* |
| மொத்தப் பரப்பு (ஹெக்) | 298.38.00 | 128.70.00 | 169.68.00 |
| நன்செய் பரப்பு (ஹெக்) | 61.92 | 51.02.00 | 10.90.00 |
| புன்செய் பரப்பு (ஹெக்) | 90.71 | 32.61.00 | 58.10.00 |
| மானாவரி (ஹெக்) | 26.69.50 | 09.68.00 | 20.01.50 |
| இதர அரசு புறம்போக்கு (ஹெக்) | 116.05.50 | 35.39.00 | 80.66.50 |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 11072 | 4430 | 6642 |
| நில வருவாய் | 10302 | 4327 | 5975 |
| மக்கள் தொகை விவரம் | 62700 | 31350 | 31350 |

**பிற்சேர்க்கை – IV**

*[அரசாணை (நிலை) எண்.659, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**அறிவிக்கை 1**

**புதிய ஜமீன் பல்லாவரம்–II மற்றும் எஞ்சியுள்ள ஜமீன் பல்லாவரம்-I வருவாய் கிராமங்களின் ஆட்சி எல்லைப் பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | கிராமம் | | |
|---|---|---|---|---|
| | | பிரிக்கப்படும் கிராமம் | புதிய கிராமம் | எஞ்சியுள்ள கிராமம் |
| 1 | தலைமையிடம் | ஜமீன் பல்லாவரம் | ஜமீன் பல்லாவரம் – II | ஜமீன் பல்லாவரம் – I |
| 2 | பரப்பளவு | 938.12.0 | 585.33.0 | 352.79.0 |
| 3 | மக்கள்தொகை | 114844 | 68360 | 46484 |
| 4 | வருவாய் வட்டம் | பல்லாவரம் | | |
| 5 | வருவாய் கோட்டம் | தாம்பரம் | | |
| 6 | சட்டமன்ற தொகுதி | பல்லாவரம் | பல்லாவரம் | பல்லாவரம் |
| 7 | பாரளுமன்ற தொகுதி | ஸ்ரீபெரும்புதூர் | | |

**அறிவிக்கை - 2**

**புதிய பம்மல்–II மற்றும் எஞ்சியுள்ள பம்மல்-I வருவாய் கிராமங்களின் ஆட்சி எல்லைப் பட்டியல்3**

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விவரங்கள்* | *கிராமம்* | | |
|---|---|---|---|---|
| | | *பிரிக்கப்படும் கிராமம்* | *புதிய கிராமம்* | *எஞ்சியுள்ள கிராமம்* |
| 1 | தலைமையிடம் | பம்மல் | பம்மல்–II | பம்மல்– I |
| 2 | பரப்பளவு | 520.62.50 | 271.26.00 | 249.36.50 |
| 3 | மக்கள்தொகை | 110718 | 50638 | 60080 |
| 4 | வருவாய் வட்டம் | பல்லாவரம் | | |
| 5 | வருவாய் கோட்டம் | தாம்பரம் | | |
| 6 | சட்டமன்ற தொகுதி | பல்லாவரம் | பல்லாவரம் | பல்லாவரம் |
| 7 | பாராளுமன்ற தொகுதி | ஸ்ரீபெரும்புதூர் | | |

**அறிவிக்கை - 3**

புதிய அனாகபுத்தூர்–II மற்றும் எஞ்சியுள்ள அனகாபுத்தூர்–I வருவாய் கிராமங்களின் ஆட்சி எல்லைப் பட்டியல்

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விவரங்கள்* | *கிராமம்* | | |
|---|---|---|---|---|
| | | *பிரிக்கப்படும் கிராமம்* | *புதிய கிராமம்* | *எஞ்சியுள்ள கிராமம்* |
| 1. | தலைமையிடம் | அனகாபுத்தூர் | அனகாபுத்தூர்– II | அனகாபுத்தூர் – I |
| 2. | பரப்பளவு | 298.38.00 | 169.68.00 | 128.70.00 |
| 3. | மக்கள்தொகை | 62700 | 31350 | 31350 |
| 4. | வருவாய் வட்டம் | பல்லாவரம் | | |
| 5. | வருவாய் கோட்டம் | தாம்பரம் | | |
| 6. | சட்டமன்ற தொகுதி | பல்லாவரம் | பல்லாவரம் | பல்லாவரம் |
| 7. | பாராளுமன்ற தொகுதி | ஸ்ரீபெரும்புதூர் | | |

No.II(1)/REVDM/37/2025.

**[வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – திண்டுக்கல் மாவட்டம் - திண்டுக்கல் கிழக்கு வட்டம் - திண்டுக்கல் கிழக்கு குறுவட்டத்திலுள்ள அடியனூத்து வருவாய் கிராமத்தினைப் பிரித்து அடியனூத்து கிழக்கு எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.660, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980.
2. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம்ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு , நாள் 03.04.2025.
3. அரசு கடித எண் 5483/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
4. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க.எண் 3178746/2025/ஆ2, நாள் 07.04.2025.
5. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01–04/147/2025, நாள் 21.04.2025.
6. அரசாணை (நிலை) எண் 649, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:– எண்.660. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**15. "பொதுமக்களுக்கு வருவாய்த் துறையின் சேவைகளை விரைவாக வழங்கும் பொருட்டு, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 8 மாவட்டங்களில் மொத்தம் 25 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், திண்டுக்கல் கிழக்கு குறுவட்டத்திலுள்ள அடியனூத்து வருவாய் கிராமத்தினை பிரித்து அடியனூத்து கிழக்கு எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்குவது தொடர்பாக மேலே நான்காவதாக படிக்கப்பட்ட திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. அடியனூத்து கிராமம், திண்டுக்கல் கிழக்கு குறுவட்டத்தில் அமையப்பெற்றுள்ளது. இக்கிராமம் மாநகராட்சி மற்றும் கிராம பகுதிகளை உள்ளடக்கியது இதன் மொத்த பரப்பு 28.22 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் 4.30 சதுர கிலோ மீட்டரும், கிராம பகுதியில் 23.92 சதுர கிலோமீட்டர் பரப்பளவும் உள்ளடக்கியது.

ii. மேற்படி அடியனூத்து கிராமத்தில் 2011–ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி கிராம பகுதியில் மக்கள்தொகை 17,851 ஆகும். மேற்படி அடியனூத்து கிராமத்தின் மாநகராட்சி பகுதி திண்டுக்கல் சட்டமன்ற தொகுதிக்கும் அடியனூத்து கிராமபுறப் பகுதி நத்தம் சட்டமன்ற தொகுதிக்கும் கட்டுப்பட்டதாகும்.

iii. புதிய அடியனூத்து கிராமத்தினை சீரமைத்து அடியனூத்து கிழக்கு வருவாய் கிராமம் தோற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை குறித்து மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ள காரணங்கள்:–

- திண்டுக்கல் கிழக்கு வட்டம் அடியனூத்து கிராமம் திண்டுக்கல் மாநகர் மற்றும் கிராமப்பகுதியில் அமையப்பெற்றுள்ளது. மேற்படி கிராமத்தின் மொத்த பரப்பு 28.22 சதுர கிலோ மீட்டர் ஆகும். மேற்படி அடியனூத்து வருவாய் கிராமத்தில் மட்டும் 01.04.2024 முதல் 31.03.2025 வரை ஒராண்டில் மட்டும் சுமார் 16,377 சான்றிதழ்கள் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும், மக்கள் தொகை பெருக்கம், பொதுமக்களிடம் இருந்து வரப்பெறும் அதிகபடியான மனுக்கள் மற்றும் சான்றிதழ்களின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் நிருவாக நலன் கருதியும், புதிதாக அடியனூத்து கிழக்கு வருவாய் கிராமம் தோற்றுவிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.
- நிருவாக நலன், மக்கள் தொகை பெருக்கம், சான்றிதழ்கள் மற்றும் மக்கள் நலப்பணிகள் விரைவில் பொதுமக்களை சென்றடைய அடியனூத்து வருவாய் கிராமத்தினை சீரமைத்து அடியனூத்து கிழக்கு என புதிய வருவாய் கிராமம் பிரிக்க பரிந்துரை செய்து மாவட்ட கூட்டுக்குழு அறிக்கை அளித்துள்ளது எனவும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

iv. திண்டுக்கல் கிழக்கு குறுவட்டத்தில் உள்ள அடியனூத்து வருவாய் கிராமத்தினை இரண்டாக பிரித்து புதியதாக அடியனூத்து கிழக்கு எனும் வருவாய் கிராமமும் எஞ்சியுள்ள அடியனூத்து வருவாய் கிராமத்தை அடியனூத்து மேற்கு என பெயர் மாற்றம் செய்யவும் மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

v. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையானது தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் அரசாணைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

vi. புதிய வருவாய் கிராமம் தோற்றுவிக்கும் நேர்வில், அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980–இல் புதிய கிராம நிருவாக அலுவலர் பணியிடம் உருவாக்க பின்வரும் வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

| *பொருள்* | *அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோல்கள்* | *ஒருங் கிணைந்த அடியனூத்து கிராமம்* | *அடியனூத்து மேற்கு கிராமம் (புதிய கிராமம் பிரித்தலுக்கு பின் உள்ளது)* | *அடியனூத்து கிழக்கு கிராமம் (புதியதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்படும் கிராமம்)* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| மக்கள்தொகை | 3500 முதல் 5000 | 17,851 | 13,030 (பூர்த்தியாகிறது) | 4,821 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்எண்ணிக்கை | 1500 முதல் 2000 | 18,323 | 11,255 (பூர்த்தியாகிறது) | 7,068 (பூர்த்தியாகிறது) |
| நஞ்சை நிலங்கள் | 2000 ஏக்கர் முதல் 2500 ஏக்கர் வரை | 162.6 | 162.6 | – |
| புன்செய் நிலங்கள் | 4000 ஏக்கர் முதல் 5000 ஏக்கர் வரை | 4458 | 2013 (பூர்த்தியாகவில்லை) | 2,445 (பூர்த்தியாகவில்லை) |
| நில வருவாய் (ரூபாய்) | 20,000 முதல் 25,000 வரை | 18,170 | 10,105 (பூர்த்தியாகவில்லை) | 8,065 (பூர்த்தியாகவில்லை) |

vii. கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுள் மக்கள்தொகை மற்றும் பட்டாதாரர்களின் எண்ணிக்கையினை தவிர்த்து நன்செய், புன்செய் மற்றும் நிலவருவாய் ஆகிய நிபந்தனைகளை பூர்த்தி செய்யவில்லை. இருப்பினும் மாநகராட்சி போன்ற பகுதிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கத்தினால் வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு எடுக்கவும், சட்ட மற்றும் ஒழுங்கு பணிகள், தேர்தல் பணிகள் போன்ற பல்வகையான பணிகள் கிராம நிருவாக அலுவலருக்கு உள்ளதென்பதால், இந்நேர்வினை சிறப்பினமாக கருதி பிரிக்க புதிய அடியனூத்து கிழக்கு கிராமத்திற்கு மக்கள்தொகை அடிப்படையில் புதியதாக கிராம நிருவாக அலுவலர் பணியிடத்தை நிரந்தரமாக வழங்க அரசிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

viii. கிராம உதவியாளர் பணியிடத்தை பொறுத்தவரை ஒரு கிராமத்திற்கு ஒரு உதவியாளர் பணியிடம் வழங்கப்படுகிறது. மேலும், அப்பணியிடமானது சிறப்பு காலமுறை ஊதியம் என்ற அடிப்படையில் உள்ளதால் அப்பணியிடத்தை தோற்றுவிக்கும் நேர்வில் சிறப்பு காலமுறை ஊதிய நிலை பணியிடமாகவே வழங்கும்படி அரசிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| *வ.எண்* | *பணியிடத்தின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம்* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | கிராம நிருவாக அலுவலர் | நிலை–8,<br>(ரூ.19,500/– – 62,000/–) | 1 |
| 2. | கிராம உதவியாளர் | சிறப்பு காலமுறை ஊதிய நிலை | 1 |
| **மொத்தம்** | | | **2** |

ix. மேலும், புதிய வருவாய் கிராமமாக அடியனூத்து கிழக்கு வருவாய் கிராமம் தோற்றுவிக்கும் நேர்வில், வட்ட அளவில் மாற்றங்கள் ஏதும் இல்லை என்பதால் புதியதாக தோற்றுவிக்கும் கிராம நிருவாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் பணியிடங்களை திண்டுக்கல் கிழக்கு வட்டத்தின் வட்டாட்சியர் DDO Code – BF511/04020002–ன் உள்ளடக்கப்பட (Mapping) வேண்டும்.

x. மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் அமைக்கப்பட்ட ஐந்து உயர் அலுவலர்கள் கொண்ட குழுவின் பரிந்துரை அறிக்கையின் அடிப்படையிலும், நிருவாக நலன் கருதியும், மக்களின் தொகை பெருக்கம், சான்றிதழ்கள், மக்கள் நலப்பணிகள், அரசின் நலத்திட்டங்கள் விரைவாக பொதுமக்களை சென்றடையும் வண்ணமும், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வருவாய் கோட்டத்திற்குட்பட்ட திண்டுக்கல் கிழக்கு வட்டம், திண்டுக்கல் கிழக்கு உள்வட்டம், அடியனூத்து வருவாய் கிராமத்தினை மறுசீரமைத்து அடியனூத்து கிழக்கு எனும் புதிய வருவாய் கிராமத்தினையும் எஞ்சியுள்ள அடியனூத்து வருவாய் கிராமத்தை அடியனூத்து மேற்கு என பெயர் மாற்றம் செய்ய ஆவண செய்யுமாறு அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 25 வருவாய் கிராமங்களுக்கு தலா ஒரு கிராம நிருவாக அலுவலர் பணியிடம் வீதம் 25 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாகவும் மற்றும் தலா ஒரு கிராம உதவியாளர் பணியிடம் வீதம் 25 கிராம உதவியாளர் பணியிடங்களை சிறப்பு காலமுறை ஊதிய விகிதப் பணியிடங்களாக தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.1,55,95,200/–க்கு (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஐந்து ஆயிரத்து இருநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் மாவட்டம் ஆகியோரின் கருத்துருக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், திண்டுக்கல் கிழக்கு குறுவட்டத்திலுள்ள அடியனூத்து வருவாய் கிராமத்தினை பிரித்து **(பிற்சேர்க்கை–I (ம) II–இல் உள்ளவாறு) அடியனூத்து கிழக்கு** எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள அடியனூத்து கிராமமானது அடியனூத்து மேற்கு என அமையும், என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் கிராமம் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஆறில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1111.

(IFHRMS Additional Sanction Ledger No.2025081111)
PSL No.202509PSL0172.

**பிற்சேர்க்கை – I**

*[அரசாணை (நிலை) எண்.660, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**[தற்போதுள்ள அடியனூத்து வருவாய் கிராமத்தினைப் பிரித்து அடியனூத்து கிழக்கு எனும் புதிய வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள அடியனூத்து வருவாய் கிராமமானது அடியனூத்து மேற்கு என அமையும். அவற்றின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்.]**

| வ. எண் | தற்போது உள்ள அடியனூத்து வருவாய் கிராமம் | | புதிய அடியனூத்து கிழக்கு | | எஞ்சியுள்ள அடியனூத்து மேற்கு | |
|---|---|---|---|---|---|---|
| | கிராம எண் | கிராமத்தின் பெயர் | கிராம எண் | கிராமத்தின் பெயர் | கிராம எண் | கிராமத்தின் பெயர் |
| 1. | 8 | திண்டுக்கல் மாநகர்பகுதி | 41 | தண்டல்காரன்பட்டி | 8 | திண்டுக்கல் மாநகர்பகுதி |
| 2. | | தோமையார்புரம் | | கண்ணார்பட்டி | | தோமையார்புரம் |
| 3. | | மொட்டணம்பட்டி | | வாழைக்காய்பட்டி | | மொட்டணம்பட்டி |
| 4. | | மருதாசிபுரம் | | கல்லூத்தாம்பட்டி | | மருதாசிபுரம் |
| 5. | | யாகப்பன்பட்டி | | சூசையார்புரம் | | யாகப்பன்பட்டி |
| 6. | | தண்டல்காரன்பட்டி | | உரிமிக்காரன்பட்டி | | குள்ளனம்பட்டி |
| 7. | | கண்ணார்பட்டி | | கொல்ராம்பட்டி | | நம்பிக்கோட்டை |
| 8. | | வாழைக்காய்பட்டி | | – | | பெருமாள்கோவில்பட்டி |
| 9. | | கல்லூத்தாம்பட்டி | | – | | நல்லாம்பட்டி |
| 10. | | சூசையார்புரம் | | – | | – |
| 11. | | உரிமிக்காரன்பட்டி | | – | | – |
| 12. | | கொல்ராம்பட்டி | | – | | – |
| 13. | | குள்ளனம்பட்டி | | – | | – |
| 14. | | நம்பிக்கோட்டை | | – | | – |
| 15. | | பெருமாள்கோவில்பட்டி | | – | | – |
| 16. | | நல்லாம்பட்டி | | – | | – |

**பிற்சேர்க்கை -II**

*[அரசாணை (நிலை) எண்.660, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**[தற்போதுள்ள அடியனூத்து வருவாய் கிராமத்தினைப் பிரித்து அடியனூத்து கிழக்கு எனும் புதிய வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள அடியனூத்து வருவாய் கிராமமானது அடியனூத்து மேற்கு என அமையும். அவற்றின் ஆட்சி எல்லைப் பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்.]**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் வருவாய் கிராமம் – அடியனூத்து (Parent Village) | | |
|---|---|---|---|---|
| | | பிரிக்கப்படும் கிராமம் | எஞ்சியுள்ள கிராமம் | புதிய கிராமம் |
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 1 | தலைமையிடம் | அடியனூத்து | அடியனூத்து மேற்கு | அடியனூத்து கிழக்கு |
| 2 | பரப்பளவு (சதுர கி.மீ) | 28.22 | 14.22 | 14 |
| 3 | மக்கள் தொகை | 17851 | 13030 | 4821 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் கிழக்கு |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | திண்டுக்கல் | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 6 | சட்டமன்ற தொகுதி பெயர் | திண்டுக்கல் | திண்டுக்கல் | நத்தம் |
| 7 | பாராளுமன்ற தொகுதி பெயர் | திண்டுக்கல் | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 01 | 01 | 01 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 1 | – | – |
| 10 | மாநகராட்சி | 1 (திண்டுக்கல்) | 1 | – |
| 11 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | – | – | – |

No.II(1)/REVDM/38/2025.

**[வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – திருநெல்வேலி மாவட்டம் - பாளையங்கோட்டை வட்டம் - பாளையங்கோட்டை குறுவட்டத்தில் உள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமத்தினை மறுசீரமைத்து புதியதாக கீழவீரராகவபுரம்-II எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.661, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980.
2. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு , நாள் 03.04.2025.
3. அரசு கடித எண் 5483/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
4. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண். COLTNV/2233/2025– A1 நாள் 05.04.2025.
5. கூடுதல் தலைமைச் செயலாளர் /வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/151/2025, நாள் 22.04.2025.
6. அரசாணை (நிலை) எண் 649, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:– எண்.661. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

> **15. "பொதுமக்களுக்கு வருவாய்த் துறையின் சேவைகளை விரைவாக வழங்கும் பொருட்டு, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 8 மாவட்டங்களில் மொத்தம் 25 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், பாளையங்கோட்டை குறுவட்டத்தில் உள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமத்தினை மறுசீரமைத்து புதியதாக கீழவீரராகவபுரம்–II எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்குவது தொடர்பாக மேலே நான்காவதாக படிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி கோட்டம், பாளையங்கோட்டை வட்டம், பாளையங்கோட்டை குறுவட்டத்தில் உள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமத்தினை மறுசீரமைத்து உத்தேசிக்கப்பட்டுள்ள வருவாய் கிராமத்தினை கீழவீரராகவபுரம்–II எனவும், எஞ்சியுள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமத்தை கீழவீரராகவபுரம்–I என பெயர் மாற்றம் செய்ய வேண்டும். மேலும், கீழவீரராகவபுரம் வருவாய் கிராமமானது திருநெல்வேலி மாநகராட்சியின் பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் மண்டலத்திற்கு உட்பட்ட பகுதியாகும்.

ii. உத்தேசிக்கப்பட்டுள்ள கீழவீரராகவபுரம்–II தோற்றுவிக்க வேண்டியதன் அவசியம் குறித்த காரணங்கள் பின்வருமாறு:–

- கீழவீரராகவபுரம் கிராம எல்லைக்குட்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகை கவனித்தல், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் கண்காணித்து அறிக்கை அனுப்புதல் போன்ற அதிகப்படியான பணிகள் உள்ளது.
- இணையவழி வழங்கப்படும் சான்றிதழ் சேவைகளை விரைந்து முடித்திடவும், வருவாய் வசூல் நடவடிக்கையினை மேம்படுத்தவும், கிராம நிருவாகத்தை வலுப்படுத்தவும், அரசு இயற்றும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் நிருவாக நலன் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மேற்படி கீழவீரராகவபுரம் கிராமத்தினை மறுசீரமைத்து கீழவீரராகவபுரம்–II எனவும் மற்றும் எஞ்சியுள்ள கீழவீரராகவபுரம் கிராமத்தினை கீழவீரராகவபுரம்–I என பெயர் மாற்றம் செய்யவும் அவசியமாகிறது.
- மேலும் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் அமைக்கப்பட்ட ஐந்து உயர் அலுவலர்கள் கொண்ட குழுவின் பரிந்துரை அறிக்கையின் அடிப்படையிலும், தற்போதைய மக்கள் தொகை பெருக்கம் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு காணும் பொருட்டு சிறப்பினமாகக் கருதி கீழவீரராகவபுரம் கிராமத்தினை மறுசீரமைத்து கீழவீரராகவபுரம்–II மற்றும் எஞ்சியுள்ள கீழவீரராகவபுரம் கிராமத்தினை கீழவீரராகவபுரம்–I என பெயர் மாற்றம் செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

iii. உத்தேசிக்கப்பட்டுள்ள கீழவீரராகவபுரம்–II வருவாய் கிராமம் தோற்றுவிக்கும் நேர்வில் புதிய பணியிடம் விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம் |
|---|---|---|
| 1 | கிராம நிருவாக அலுவலர் | 1 |
| 2 | கிராம உதவியாளர் | 1 |

iv. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், பாளையங்கோட்டை குறுவட்டத்தில் உள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமத்தை மறுசீரமைத்து புதியதாக கீழவீரராகவபுரம்–II எனவும், மற்றும் எஞ்சியுள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமத்தினை கீழவீரராகவபுரம்–I என பெயர் மாற்றம் செய்ய திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

v. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையானது தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் அரசாணைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது. கீழவீரராகவபுரம் வருவாய் கிராமத்தினைப் பிரித்து உத்தேசிக்கப்பட்டுள்ள கீழவீரராகவபுரம்–II மற்றும் எஞ்சியுள்ள கீழவீரராகவபுரம்–I ஆக பிரிக்கப்படவுள்ள கிராமங்களின் வருவாய் கிராம எல்லை மற்றும் பரப்பளவில் மட்டுமே மாறுதல்கள் ஏற்படுகிறது.

vi. உத்தேசிக்கப்பட்டுள்ள கீழவீரராகவபுரம்–II வருவாய் கிராமம் தோற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை:–

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், பாளையங்கோட்டை குறுவட்டத்தில் உள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமத்திற்கு மட்டும் ஒரு வருடத்திற்கு தோராயமாக வரப்பெறும் இணையம் வாயிலாக சான்றுகளின் விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளது:–

| வ. எண் | வருவாய் கிராமத்தின் பெயர் | வரப்பெற்ற சான்றுகளின் எண்ணிக்கை 2024 | வரப்பெறும் சான்றுகளின் எண்ணிக்கை (தோராயமாக) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | கீழவீரராகவபுரம் | 6,977 | – |
| 2. | எஞ்சியுள்ள கீழவீரராகவபுரம்–I | – | 3,038 |
| 3. | உத்தேசிக்கப்பட்டுள்ளகீழவீரராகவபுரம்–II | – | 3,939 |

vii. ஆனால், புதிய வருவாய் கிராமம் தோற்றுவிக்கும் நேர்வில், அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980–இல் புதிய கிராம நிருவாக அலுவலர் பணியிடம் உருவாக்க பின்வரும் வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

| நிபந்தனை விவரம் | நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் | தற்போது கீழவீரராகவபுரம் | கீழவீரராகவபுரம்–I (கிராம பிரிவினைக்கு பின்னர்) | உத்தேசிக்கப்பட்டுள்ள கீழவீரராகவபுரம்–II |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 82500 | 35,150 (பூர்த்தியாகிறது) | 47,350 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 977 | 435 (பூர்த்தியாகவில்லை) | 542 (பூர்த்தியாகவில்லை) |
| நன்செய் (ஏக்கரில்) | 2000 முதல் 2500 வரை | 482.03 | 482.03 ஏக்கர் (பூர்த்தியாகவில்லை) | 0 (பூர்த்தியாகவில்லை) |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 859.37 | 273.60 ஏக்கர்(பூர்த்தியாகவில்லை) | 585.77 ஏக்கர் (பூர்த்தியாகவில்லை) |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | 2341.866 | 2341.866 (பூர்த்தியாகவில்லை) | – |

viii. கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை நாள் 01.12.1980–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுள் மக்கள்தொகையினை தவிர்த்து அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யவில்லை. இருப்பினும் மாநகராட்சி போன்ற பகுதிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கத்தினால் வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு எடுக்கவும், சட்ட மற்றும் ஒழுங்கு பணிகள், தேர்தல் பணிகள் போன்ற பல்வகையான பணிகள் கிராம நிருவாக அலுவலருக்கு உள்ளதென்பதால் இந்நேர்வினை சிறப்பினமாக கருதி பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கீழவீரராகவபுரம்–II வருவாய் கிராமத்திற்கு மக்கள்தொகை அடிப்படையில் புதியதாக கிராம நிருவாக அலுவலர் பணியிடத்தை நிரந்தரமாக வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ix. கிராம உதவியாளர் பணியிடத்தை பொறுத்தவரை ஒரு கிராமத்திற்கு ஒரு உதவியாளர் பணியிடம் வழங்கப்படுகிறது. மேலும், அப்பணியிடமானது சிறப்பு காலமுறை ஊதியம் என்ற அடிப்படையில் உள்ளதால் அப்பணியிடத்தை தோற்றுவிக்கும் நேர்வில் சிறப்பு காலமுறை ஊதிய நிலை பணியிடமாகவே வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | நிலை மற்றும் ஊதிய விகிதம் | புதிய பணியிடம் |
|---|---|---|---|
| 1. | கிராம நிருவாக அலுவலர் | நிலை–8, (ரூ.19,500/– – 62,000/–) | 1 |
| 2. | கிராம உதவியாளர் | சிறப்பு காலமுறை ஊதிய நிலை | 1 |
| **மொத்தம்** | | | **2** |

x. மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய வருவாய் கிராமமாக கீழவீரராகவபுரம்–II மற்றும் எஞ்சியுள்ள கீழவீரராகவபுரம்–I வருவாய் கிராமம் தோற்றுவிக்கும் நேர்வில், வட்ட அளவில் மாற்றங்கள் ஏதும் இல்லை என்பதால் புதியதாக தோற்றுவிக்கும் கிராம நிருவாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் பணியிடங்களை திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை வட்டத்தின் வட்டாட்சியர் DDO Code - 04102/17050019–இன் உள்ளடக்கப்பட (Mapping) வேண்டும்.

xi. மேலும், மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் அமைக்கப்பட்ட ஐந்து உயர் அலுவலர்கள் கொண்ட குழுவின் பரிந்துரை அறிக்கையின் அடிப்படையிலும், மாநகராட்சிகளில் பெருகிவரும் மக்கள் தொகை பெருக்கம் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு காணும் பொருட்டு, இந்நேர்வினை சிறப்பினமாக கருதி திருநெல்வேலி மாவட்டம். பாளையங்கோட்டை வட்டம், பாளையங்கோட்டை குறுவட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள கீழவீரராகவபுரம்–II மற்றும் எஞ்சியுள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமத்தினை கீழவீரராகவபுரம்–I என பெயர் மாற்றம் செய்ய ஆவண செய்யும் படி அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 25 வருவாய் கிராமங்களுக்கு தலா ஒரு கிராம நிருவாக அலுவலர் பணியிடம் வீதம் 25 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாகவும் மற்றும் தலா ஒரு கிராம உதவியாளர் பணியிடம் வீதம் 25 கிராம உதவியாளர் பணியிடங்களை சிறப்பு காலமுறை ஊதிய விகிதப் பணியிடங்களாக தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.1,55,95,200/–க்கு (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஐந்து ஆயிரத்து இருநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி மாவட்டம் ஆகியோரின் கருத்துருக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், பாளையங்கோட்டை குறுவட்டத்திலுள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமத்தினைப் பிரித்து **(பிற்சேர்க்கை–I (ம) II–இல் உள்ளவாறு) கீழவீரராகவபுரம்–II** எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமம் கீழவீரராகவபுரம்–I என அமையும், என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் கிராமம் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஆறில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1111.

(IFHRMS Additional Sanction Ledger No.2025081111)
PSL No.202509PSL0172.

**பிற்சேர்க்கை – I**

*[அரசாணை (நிலை) எண்.661, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025*

**தற்போதுள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமத்தைப் பிரித்து கீழவீரராகவபுரம்–II எனும் புதிய வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமம் கீழவீரராகவபுரம்–I என அமையும். அவற்றின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போது உள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமம் | | புதிய கீழவீரராகவபுரம்–II | | எஞ்சியுள்ள கீழவீரராகவபுரம்–I | |
|---|---|---|---|---|---|---|
| | கிராம எண் | வார்டு பெயர் | கிராம எண் | வார்டு பெயர் | கிராம எண் | வார்டு பெயர் |
| 1. | 33 | AY (Block–10 முதல் 16 வரை, மற்றும் 25) | 33 | AT (Block–1 முதல் 15 வரை) | 33 | AY (Block–10 முதல் 16 வரை, மற்றும் 25) |
| 2. | | AK (Block–1 முதல் 7 வரை) | | AV (Block–29 முதல் 31 வரை, 35 முதல் 48 வரை, 58 முதல் 64 வரை) | | AK (Block–1 முதல் 7 வரை) |
| 3. | | AT (Block–1 முதல் 15 வரை) | | – | | AV (Block–9 முதல் 28 வரை, 32, 55, 56 மற்றும் 57) |
| 4. | | AV (Block–9 முதல் 32 வரை, 35 முதல் 48 வரை, 55 முதல் 64 வரை) | | – | | – |

**பிற்சேர்க்கை-II**

*[அரசாணை (நிலை) எண்.661, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025*

**தற்போதுள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமத்தைப் பிரித்து கீழவீரராகவபுரம்–II எனும் புதிய வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமம் கீழவீரராகவபுரம்–I என அமையும் கிராமங்களின் ஆட்சி எல்லைப் பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| *வ.எண்* | *ஆட்சி எல்லை* | *பிரிக்கப்படும் கிராமம்* | *புதிய கிராமம்* | *எஞ்சியுள்ள கிராமம்* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| 1. | தலைமையிடம் | கீழவீரராகவபுரம் | கீழவீரராகவபுரம்–II | கீழவீரராகவபுரம்–I |
| 2. | பரப்பளவு (ச.கி.மீ) | 5.43 | 2.371 | 3.059 |
| 3. | மக்கள்தொகை | 82,500 | 47,350 | 35,150 |
| 4. | வருவாய் வட்டத்தின் பெயர் | பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை |
| 5. | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 6. | சட்டமன்றம் பெயர் | பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை |
| 7. | பாராளுமன்றம் பெயர் | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 8. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 1 | 1 | 1 |
| 9. | திருநெல்வேலி மாநகராட்சி (மேலப்பாளையம் மண்டலம்) வார்டு மற்றும் பிளாக் எண்ணிக்கை | வார்டு AY (Block–10 முதல் 16 வரை மற்றும் 25), வார்டு AK (Block–1 முதல் 7 வரை), வார்டு AT (Block– 1 முதல் 15 வரை), வார்டு AV (Block–9 முதல் 32 வரை, 35 முதல் 48 வரை, 55 முதல் 64 வரை) | வார்டு AT (Block–1 முதல் 15 வரை), வார்டு AV (Block–29 முதல் 31 வரை, 35 முதல் 48 வரை, 58 முதல் 64 வரை) | வார்டு AY (Block–10 முதல் 16 வரை, மற்றும் 25), வார்டு AK (Block–1 முதல் 7 வரை), வார்டு AV (Block–9 முதல் 28 வரை, 32, 55, 56 மற்றும் 57) |

No.II(1)/REVDM/39/2025.

**[வருவாய் நிருவாகம் — ஆட்சி எல்லை — திருவண்ணாமலை மாவட்டம் - திருவண்ணாமலை வட்டத்திலுள்ள, திருவண்ணாமலை குரூப் கிராமத்தினை மறுசீரமைத்து திருவண்ணாமலை-II எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.662, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980.
2. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு , நாள் 03.04.2025.
3. அரசு கடித எண் 5483/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
4. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண் எம்2/3178759/ 2025, நாள் 07.04.2025.
5. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01–04/146/2025, நாள் 21.04.2025.
6. அரசாணை (நிலை) எண் 649, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:– எண். 662. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**15. “பொதுமக்களுக்கு வருவாய்த் துறையின் சேவைகளை விரைவாக வழங்கும் பொருட்டு, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 8 மாவட்டங்களில் மொத்தம் 25 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்கப்படும்”.**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டத்திலுள்ள, திருவண்ணாமலை குரூப் கிராமத்தினை மறுசீரமைத்து **திருவண்ணாமலை–II** எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்குவது தொடர்பாக மேலே நான்காவதாக படிக்கப்பட்ட திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வடக்கு உள்வட்டத்தில் உள்ள திருவண்ணாமலை குரூப் கிராமத்தினை மறுசீரமைப்பு செய்து, திருவண்ணாமலை நகர வார்டு 1,2,3 ஆகிய பகுதிகள் மற்றும் திருவண்ணாமலை வருவாய் கிராமம் மற்றும் கீழ்நாத்தூர் கிராமம் ஆகியவற்றை ஒரே குரூப் கிராமங்களாக கொண்டு, திருவண்ணாமலை வடக்கு குறுவட்டத்திலேயே தக்கவைத்து திருவண்ணாமலை–I எனவும், வார்டு–4 பகுதியை திருவண்ணாமலை–II என புதிய கிராமம் உருவாக்கி புதியதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அடிஅண்ணாமலை குறு வட்டத்தில் சேர்ப்பதெனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ii. **புதியதாக திருவண்ணாமலை–II வருவாய் கிராமம் தோற்றுவிக்க வேண்டியதன் அவசியம் குறித்த விவரங்கள் பின்வருமாறு:–**

- திருவண்ணாமலை குரூப் கிராமத்தில் சான்றிதழ் மற்றும் இதர அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணி மற்றும் சட்டம் ஒழுங்கு பாதுகாத்தல் ஆகியவை ஒரே ஒரு கிராம நிருவாக அலுவலர் மூலம் செயல்படுத்தப்படுவதால் கடுமையான பணிச்சுமை ஏற்படுவதுடன் பொதுமக்களுக்கு சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் மக்கள் நல திட்டங்களை நிறைவேற்றுவதிலும் காலதாமதம் ஏற்படுகிறது.
- திருவண்ணாமலை கிராம பகுதிகள், பிரிக்கப்படாத திருவண்ணாமலை நகரத்தின் முழு பகுதிகள், கீழ்நாத்தூர் கிராமம் ஆகியவை ஒரு குரூப் கிராமமாக ஒரே கிராம நிருவாக அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும் தற்போது பயன்பாட்டில் உள்ள ‘அ’ பதிவேடு உள்ளிட்ட கிராம கணக்குகளிலும், தமிழ் நிலம் தரவு தளத்திலும் ஒரே கிராமமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.
- திருவண்ணாமலை வருவாய் கிராம பகுதிகள் நிலவியல் ரீதியாக திருவண்ணாமலை நகரத்தின் வடக்கு பகுதியில் சில புல எண்களும், திருவண்ணாமலை நகரத்தின் தெற்கு பகுதியில் சில புல எண்களும், ஒரே எல்லையில் அமையாமல் தனித்தனியாக பிரிந்து அமைந்துள்ளது. எனவே நிலவியல் ரீதியாக திருவண்ணாமலை கிராம பகுதி தனித்தனியே அமைந்து இருந்தாலும் தற்போதும் ஒரே கிராமமாக கருதி ஒரே கிராம நிருவாக அலுவலரின் நிருவாகத்திற்கு வரும்படி முன்மொழிவுகள் உருவாக்கப்பட்டுள்ளது.
- திருவண்ணாமலை குரூப் கிராமத்தில், மக்கள் தொகை மற்றும் பட்டாதாரர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் வருவாய் துறையின் முக்கிய பணிகளில் ஒன்றான இணைய வழி சான்றுகள் பெறுவதில் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமத்தை தவிர்க்கவும், தற்போது அரசு நடைமுறைபடுத்தியுள்ள E–அடங்கல், இணைய வழி பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மற்றும் இணைய வழி சேவைகள் பொது மக்களுக்கு தாமதமின்றி கிடைக்கவும், பேரிடர் காலங்களில் ஏற்படும் இழப்புகளை உடனடியாக அரசுக்கு அறிக்கை அனுப்புவதில் சிரமம் ஏற்படுவதை தவிர்க்கவும். மேலும் தமிழக அரசால் நடைமுறை படுத்தப்படும் நலத்திட்டங்களை உரிய பயனாளிகளுக்கு உடனடியாக சிறந்த முறையில் கொண்டு சேர்க்கவும், பொது மக்களுக்கு வழங்கும் சேவைகளில், எவ்வித தொய்வு ஏற்படாத வண்ணம் திருவண்ணாமலை குரூப் கிராமத்தினை திருவண்ணாமலை நகர வார்டு 1,2,3 மற்றும் திருவண்ணாமலை வருவாய் கிராமம் மற்றும் கீழ்நாத்தூர் கிராமம் ஆகியவற்றை உள்ளடக்கிய 12.66 ச.கி.மீ பரப்பினை கொண்ட திருவண்ணாமலை–1 என்கிற வருவாய் கிராமத்தினையும், திருவண்ணாமலை நகர வார்டு–4–ன் பரப்பான 7.00 ச.கி.மீ உள்ளடக்கிய பகுதியை திருவண்ணாமலை –II எனவும் இரண்டு வருவாய் கிராமங்களாக பிரித்து உருவாக்க வேண்டும்.

iii. புதியதாக திருவண்ணாமலை I மற்றும் II கிராமம் தோற்றுவிக்கும் நேர்வில் தேவைப்படும் புதிய பணியிட விவரங்கள் பின்வருமாறு:–

| *வ. எண்* | *பணியிடத்தின் பெயர்* | *நிரந்தரம்* |
|---|---|---|
| 1. | கிராம நிருவாக அலுவலர் | 1 |
| 2. | கிராம உதவியாளர் | 1 |

iv. திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை மாநகராட்சி பகுதிகளில் பெருகி வரும் மக்கள்தொகை, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களின் பெருக்கம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலான உயர் அலுவலர்களின் குழு புதிய வருவாய் கிராமம் தோற்றுவிக்க ஒப்புதல் அளித்துள்ளது.

v. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்கள், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை குரூப் கிராமத்தினை மறுசீரமைத்து திருவண்ணாமலை I மற்றும் II என உருவாக்குவதற்கு தொடர்பான முன்மொழிவுகள் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டதை தொடர்புடைய ஆவணங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அதன் விவரங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:–

- திருவண்ணாமலை வட்டத்தில், திருவண்ணாமலை (வடக்கு), திருவண்ணாமலை (தெற்கு), தச்சம்பட்டு, வெறையூர், மங்கலம், நாயுடுமங்கலம் மற்றும் துரிஞ்சாபுரம் ஆகிய 7 உள்வட்டங்கள் உள்ளன. இதில், திருவண்ணாமலை குரூப் கிராமம், திருவண்ணாமலை நகர வருவாய் வார்டு 1 முதல் 4 வரை (39 மாநகராட்சி வார்டு), திருவண்ணாமலை வருவாய் கிராமம் மற்றும் கீழ்நாத்தூர் கிராமத்தினை உள்ளடக்கியது.

vi. புதிய வருவாய் கிராமம் தோற்றுவிக்கும் நேர்வில், அரசாணை (நிலை) எண் 2681, வருவாய்த்துறை, நாள் 01.12.1980–இல் புதிய கிராம நிருவாக அலுவலர் பணியிடம் உருவாக்க பின்வரும் வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:–

| *நிபந்தனை விவரம்* | *நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள்* | *எஞ்சியுள்ள திருவண்ணாமலை–I* | *புதியதாக பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திருவண்ணாமலை–II* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| மக்கள் தொகை | 3500 முதல் 5000 வரை | 69423 (பூர்த்தியாகிறது) | 78340 (பூர்த்தியாகிறது) |
| பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 1500 முதல் 2000 வரை | 75332 (பூர்த்தியாகிறது) | 55450 (பூர்த்தியாகிறது) |
| நன்செய் (ஏக்கரில் ) | 2000 முதல் 2500 வரை | 353.32.11 ஏக்கர். செண்ட் (பூர்த்தியாகவில்லை) | – |
| புன்செய் (ஏக்கரில்) | 4000 முதல் 5000 வரை | 822.90.52 ஏக்கர். செண்ட் (பூர்த்தியாகவில்லை) | – |
| நிலவருவாய் (தீர்வை (ரூபாய்)) | 20000 முதல் 25000 வரை | 2759.50 (பூர்த்தியாகவில்லை) | – |

vii. கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க மேற்படி அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுள் மக்கள்தொகை மற்றும் பட்டதாரர்களின் எண்ணிக்கையினை தவிர்த்து நன்செய், புன்செய் மற்றும் நில வருவாய் நிபந்தனைகளை பூர்த்தி செய்யவில்லை. இருப்பினும் மாநகராட்சி போன்ற பகுதிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கத்தினால் வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு எடுக்கவும், சட்டம் மற்றும் ஒழுங்கு பணிகள், தேர்தல் பணிகள் போன்ற பல்வகையான பணிகள் கிராம நிருவாக அலுவலருக்கு உள்ளதென்பதால் இந்நேர்வினை சிறப்பினமாக கருதி பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திருவண்ணாமலை–II கிராமத்திற்கு மக்கள்தொகை அடிப்படையில் புதியதாக கிராம நிருவாக அலுவலர் பணியிடத்தை நிரந்தரமாக வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

viii. கிராம உதவியாளர் பணியிடத்தை பொறுத்தவரை ஒரு கிராமத்திற்கு ஒரு கிராம உதவியாளர் பணியிடம் வழங்கப்படுகிறது. மேலும், அப்பணியிடமானது சிறப்பு காலமுறை ஊதியம் என்ற அடிப்படையில் உள்ளதால் அப்பணியிடத்தை தோற்றுவிக்கும் நேர்வில் சிறப்பு காலமுறை ஊதிய நிலை பணியிடமாகவே வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| *வ.எண்* | *பணியிடத்தின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம்* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | கிராம நிருவாக அலுவலர் | நிலை–8, (ரூ.19,500/– – 62,000/–) | 1 |
| 2. | கிராம உதவியாளர் | சிறப்பு காலமுறை ஊதிய நிலை | 1 |
| **மொத்தம்** | | | **2** |

ix. மேலும், புதிய திருவண்ணாமலை I மற்றும் திருவண்ணாமலை II கிராமம் தோற்றுவிக்கும் நேர்வில், வட்ட அளவில் மாற்றங்கள் ஏதும் இல்லை என்பதால் புதியதாக தோற்றுவிக்கும் கிராம நிருவாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் பணியிடங்களை திருவண்ணாமலை வட்டத்தின் வட்டாட்சியர் DDO Code-BF410/ 16060025–இன் உள்ளடக்கப்பட (Mapping) வேண்டும்.

x. மேலும், மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் அமைக்கப்பட்ட ஐந்து உயர் அலுவலர்கள் கொண்ட குழுவின் பரிந்துரை அறிக்கையின் அடிப்படையிலும், மாநகராட்சிகளில் பெருகிவரும் மக்கள் தொகை பெருக்கம் மற்றும் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மீது விரைவான தீர்வு காணும் பொருட்டு, இந்நேர்வினை சிறப்பினமாக கருதி திருவண்ணாமலை வடக்கு உள்வட்டத்தில் திருவண்ணாமலை குரூப் கிராமத்தினை சீரமைப்பு செய்து புதியதாக திருவண்ணாமலை–II எனவும், எஞ்சியுள்ள திருவண்ணாமலை குரூப் கிராமத்தினை திருவண்ணாமலை–I என பெயர் மாற்றம் செய்ய ஆவண செய்யும் படி கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 25 வருவாய் கிராமங்களுக்கு தலா ஒரு கிராம நிருவாக அலுவலர் பணியிடம் வீதம் 25 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாகவும் மற்றும் தலா ஒரு கிராம உதவியாளர் பணியிடம் வீதம் 25 கிராம உதவியாளர் பணியிடங்களை சிறப்பு காலமுறை ஊதிய விகிதப் பணியிடங்களாக தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.1,55,95,200/–க்கு (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஐந்து ஆயிரத்து இருநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை மாவட்டம் ஆகியோரின் கருத்துருக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், திருவண்ணாமலை வடக்கு குறுவட்டத்திலுள்ள, திருவண்ணாமலை குரூப் கிராமத்தினை மறுசீரமைத்து **(பிற்சேர்க்கை–I (ம) II–இல் உள்ளவாறு) திருவண்ணாமலை–II** எனும் புதிய வருவாய் கிராமம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள திருவண்ணாமலை குரூப் கிராமமானது திருவண்ணாமலை–I என அமையும் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் கிராமம் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஆறில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1111.

(IFHRMS Additional Sanction Ledger No.2025081111)
PSL No.202509PSL0172.

## பிற்சேர்க்கை – I

*[அரசாணை (நிலை) எண்.662, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025]*

**தற்போதுள்ள திருவண்ணாமலை குரூப் கிராமத்தினை மறுசீரமைத்து திருவண்ணாமலை–II எனும் புதிய வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள திருவண்ணாமலை குரூப் கிராமமானது திருவண்ணாமலை–I என அமையும். அவற்றின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்:–**

| வ. எண் | தற்போதுள்ள திருவண்ணாமலை குரூப் வருவாய் கிராமம் | | புதிய திருவண்ணாமலை–II | | எஞ்சியுள்ள திருவண்ணாமலை–I | |
|---|---|---|---|---|---|---|
| | கிராம எண் | கிராமத்தின் பெயர் | கிராம எண் | கிராமத்தின் பெயர் | கிராம எண் | கிராமத்தின் பெயர் |
| 1. | 65 | திருவண்ணாமலை நகரம் வருவாய் வார்டு 1, 2, 3 மற்றும் 4 | 136 | திருவண்ணாமலை நகரம் வருவாய் வார்டு 4 – (பிளாக் 1–39) | 65 | திருவண்ணாமலை நகரம் வருவாய் வார்டு 1 – (பிளாக்1–51) வருவாய் வார்டு 2–(பிளாக்1–28) வருவாய் வார்டு 3 (பிளாக் 1–7) |
| | | திருவண்ணாமலை (கிராமபுறம்) | | | | திருவண்ணாமலை (கிராமபுறம்) |
| 2. | 75 | கீழ்நாத்தூர் | | | 75 | கீழ்நாத்தூர் |

## பிற்சேர்க்கை -II

*[அரசாணை (நிலை) எண்.662, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025]*

**தற்போதுள்ள திருவண்ணாமலை குரூப் கிராமத்தினை மறுசீரமைத்து திருவண்ணாமலை–II எனும் புதிய வருவாய் கிராமம் மற்றும் எஞ்சியுள்ள திருவண்ணாமலை குரூப் கிராமமானது திருவண்ணாமலை–I என அமையும். அவற்றின் ஆட்சி எல்லைப் பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்:–**

| வ. எண் | ஆட்சி எல்லை விளக்கங்கள் | பிரிவினைக்கு முன் திருவண்ணாமலை | புதிய வருவாய் கிராமம் | எஞ்சியுள்ள கிராமம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | தலைமையிடம் | திருவண்ணாமலை | திருவண்ணாமலை–II | திருவண்ணாமலை–I |
| 2 | பரப்பளவு (சதுர கிலோ மீட்டர்) | 19.66 | 7.00 | 12.66 |
| 3 | மக்கள்தொகை | 147763 | 78340 | 69423 |
| 4 | பட்டாதாரர்களின் எண்ணிக்கை | 130782 | 55,450 | 75,332 |
| 5 | நஞ்சை (ஏக்கர்) | 353.32.11 | – | 353.32.11 |
| 6 | புஞ்சை (ஏக்கர்) | 822.90.52 | – | 822.90.52 |
| 7 | நில வருவாய் | 2759.50 | – | 2759.50 |
| 8 | வருவாய் வட்டத்தின் பெயர் | திருவண்ணாமலை | | |
| 9 | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருவண்ணாமலை | | |

| வ. எண் | ஆட்சி எல்லை விளக்கங்கள் | பிரிவினைக்கு முன் திருவண்ணாமலை | புதிய வருவாய் கிராமம் | எஞ்சியுள்ள கிராமம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 10 | சட்டமன்றம் | திருவண்ணாமலை சட்டமன்ற தொகுதி | | |
| 11 | பாராளுமன்றம் | திருவண்ணாமலை பாராளுமன்ற தொகுதி | | |
| 12 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | திருவண்ணாமலை (மாநகராட்சி உட்பட்டது) | திருவண்ணாமலை (மாநகராட்சி உட்பட்டது) | திருவண்ணாமலை (மாநகராட்சி உட்பட்டது) |

No.II(1)/REVDM/40/2025.

**[வருவாய் நிருவாகம் — ஆட்சி எல்லை — ஈரோடு மாவட்டம் - ஈரோடு வட்டத்திலுள்ள ஈரோடு கிழக்கு குறுவட்டத்தை மறுசீரமைத்து ஈரோடு தெற்கு எனும் புதிய குறுவட்டம் உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.663, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி—1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு—2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025—2026—ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு , நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025—1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
3. ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண் 9140/2025—ஈ3, நாள் 07.04.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01/458/2025, நாள் 15.04.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:— எண்.663. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி—1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025—2026—ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:—

**14. “மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்”.**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டத்திலுள்ள ஈரோடு கிழக்கு உள்வட்டத்தை மறுசீரமைத்து ஈரோடு தெற்கு எனும் புதிய குறுவட்டம் உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட ஈரோடு மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:—

i. ஈரோடு வட்டமானது, ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு மற்றும் ஈரோடு வடக்கு ஆகிய மூன்று உள்வட்டங்களை உள்ளடக்கியதாகும். மேற்படி உள்வட்டங்களில், ஈரோடு கிழக்கு உள்வட்டம் 13 வருவாய் கிராமங்களும், ஈரோடு மேற்கு உள்வட்டம் 12 வருவாய் கிராமங்களும், ஈரோடு வடக்கு உள்வட்டம் 7 வருவாய் கிராமங்களும் ஆக மொத்தம் 32 வருவாய் கிராமங்கள் உள்ளதெனவும், இவற்றுள், ஈரோடு கிழக்கு குறுவட்டம் சீரமைத்து உத்தேசிக்கப்பட்டுள்ள ஈரோடு தெற்கு குறுவட்டத்தை உருவாக்க மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

ii. தற்போதுள்ள ஈரோடு வருவாய் வட்டத்தில் உள்ள உள்வட்டங்கள், வருவாய் கிராமங்கள், மக்கள் தொகை மற்றும் பரப்பளவு ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு:—

| வட்டம் | மொத்த குறுவட்டங்களின் எண்ணிக்கை | மொத்த வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | மொத்த மக்கள்தொகை |
|---|---|---|---|
| ஈரோடு | 3 | 32 | 8,52,796 |

**iii. உத்தேசிக்கப்பட்டுள்ள ஈரோடு தெற்கு குறுவட்டம் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்த காரணங்கள் பின்வருமாறு:-**

- 13 கிராமங்கள் அனைத்தும் மாநகராட்சி பகுதியாக உள்ளதாலும், மக்கள் தொகை அதிகப்படியாக உள்ளதாலும், பொதுமக்கள் வருவாய்த்துறை சார்ந்த பணிகளுக்காக அதிக அளவில் ஈரோடு கிழக்கு உள்வட்ட அலுவலகத்திற்கு வருவதால், பொதுமக்களுக்கு உடனுக்குடன் உரிய காலத்தில் பணிகளை செய்து கொடுக்க காலதாமதம் ஏற்படுகிறது.
- பொதுமக்கள் வருவாய்த்துறை பணிகளை எளிதில் முடிக்கவும், அரசின் நலத்திட்டங்கள் பொதுமக்களை உடனுக்குடன் சென்றடையவும், நிருவாக நலன் கருதியும் ஈரோடு கிழக்கு உள்வட்டத்தை சீரமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.
- மேலும், ஈரோடு கிழக்கு உள் வட்டத்தின் மிகுதியான பரப்பின் காரணமாகவும், மக்கள் தொகையின் காரணமாகவும் அதிகப்படியான இணையவழி சான்றுகள் மற்றும் பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் வரப்பெறுவதாலும் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் சட்டம் ஒழுங்கு போன்ற இன்றியமையாத பணிகளை சிரமமின்றி மேற்கொள்ளும் பொருட்டு, ஈரோடு கிழக்கு குறுவட்டத்தினைச் சீரமைத்து புதிய உள்வட்டம் உருவாக்குவதற்கான தேவைகள் இன்றியமையாததாகவுள்ளது.

iv. உத்தேசிக்கப்பட்டுள்ள ஈரோடு தெற்கு குறுவட்டம் தோற்றுவிக்கப்படும் நேர்வில் ஏற்படுத்த வேண்டிய பணியிடங்களின் விவரங்கள் பின்வருமாறு:—

| *வ. எண்* | *பணியிடத்தின் பெயர்* | *நிரந்தரம்* |
|---|---|---|
| 1 | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | 1 |
| 2 | அலுவலக உதவியாளர் | 1 |
| 3 | குறுவட்ட நில அளவர் | 1 |

v. ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின், கோரிக்கையானது தொடர்புடைய அறிக்கைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டதில், ஈரோடு வட்டமானது, ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு மற்றும் ஈரோடு வடக்கு ஆகிய மூன்று உள்வட்டங்களை உள்ளடக்கியது. இவற்றுள், ஈரோடு கிழக்கு குறுவட்டத்தில் உள்ள 13 கிராமங்களை சீரமைத்து புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஈரோடு தெற்கு குறுவட்டம் உருவாக்குவது தொடர்பான முன்மொழிவுகள் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டதை தொடர்புடைய ஆவணங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அதன் விவரங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:—

vi. மறுசீரமைப்பிற்கு பின்னர் ஈரோடு கிழக்கு உள்வட்டத்தினை சீரமைத்து புதிய ஈரோடு தெற்கு உள்வட்டத்தில் அமையவிருக்கும் கிராமங்கள், உள்ளாட்சி அமைப்பின் விவரங்கள், மக்கள் தொகை மற்றும் பரப்பளவு ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு:—

| *உள்வட்டம்* | *மொத்த வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை* | *உள்ளாட்சி அமைப்பின் விபரம்* | *மொத்த மக்கள் தொகை* | *மொத்த பரப்பளவு (ச.கி.மீ)* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |
| ஈரோடு கிழக்கு | 8 | ஈரோடு மாநகராட்சி —8 | 185689 | 23.45 |
| ஈரோடு தெற்கு | 5 | ஈரோடு மாநகராட்சி — 5 | 407883 | 37.29 |
| **மொத்தம்** | **13** | **13** | **593572** | **60.74** |

vii. புதியதாக 1 வருவாய் குறுவட்டம் தோற்றுவிக்கும் நேர்வில் (வருவாய் ஆய்வாளர் - 1, குறுவட்ட நில அளவர்—1 மற்றும் அலுவலக உதவியாளர்—1) என 3 புதிய பணியிடங்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களால் கோரப்பட்டுள்ளது. இருப்பினும், பணியாளர் மாதிரி (Staff Pattern) வடிவமைக்கப்பட்ட பின் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள வட்டங்களுக்கு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிலையில் அலுவலக உதவியாளர் பணியிடம் வழங்கப்படுவதில்லை.

viii. இதனை தவிர்த்து, புதிய குறுவட்டங்கள் தோற்றுவிக்கும் நேர்வில், குறுவட்டங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடங்கள் வழங்கப்படுகிறது. எனவே, தற்போது புதியதாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் 1 குறுவட்டத்திற்கு வழங்கப்படும் 1 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடத்தை நிரந்தர பணியிடமாக வழங்கும்படி அரசிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், புதியதாக கோரப்படும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிரந்தர பணியிடம் மற்றும் ஊதிய நிலை விகிதம் கீழ்க்கண்டவாறு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது:—

| *வ.எண்* | *பணியிடங்களின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம் (In pay revised scale)* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை—10,<br>ரூ.20,600 - 75,900/— | 1 |
| **மொத்தம்** | | | **1** |

ix. மேலும், குறுவட்ட நில அளவர் /நகர சார் ஆய்வாளர் பணியிடங்கள் உருவாக்குதல் குறித்து நில அளவை துறையை சார்ந்தது என்பதால் அத்துறை வாயிலாக தேவைப்படும் நேர்வில் அப்பணியிடம் தோற்றுவிக்க முன்மொழிவுகள் தனியாக அனுப்பி வைக்கப்படலாம்.

x. எனவே இந்நேர்வில், ஈரோடு மாநகராட்சியில் மக்கள்தொகை அதிகரித்து வருவதாலும், பொதுமக்கள் எளிதாக வருவாய் ஆய்வாளரை தொடர்பு கொண்டு பயன்பெறும் வகையிலும், நிருவாக நலன்கருதியும், இணையவழி உள்ளிட்ட அரசு வழங்கும் சேவைகள் அனைத்தையும் விரைந்து பெறும் வகையிலும், தேர்தல் மற்றும் சட்ட ஒழுங்கு நிகழ்வுகளின் போதும் சிறப்புடன் செயல்படவும், ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, ஈரோடு கிழக்கு குறுவட்டத்தினைச் சீரமைத்து புதியதாக ஈரோடு தெற்கு குறுவட்டம் உருவாக்கிட ஆவண செய்யும்படி கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாவட்டம் ஆகியோரின் கருத்துக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டத்திலுள்ள ஈரோடு கிழக்கு குறுவட்டத்தை மறுசீரமைத்து **(பிற்சேர்க்கை I & II–இல் உள்ளவாறு) ஈரோடு தெற்கு** எனும் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்க அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டம் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், ஈரோடு ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121
(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)
PSL No.202509PSL0171.

**பிற்சேர்க்கை – I**

*[அரசாணை (நிலை) எண்.663, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025]*

**தற்போதுள்ள ஈரோடு கிழக்கு குறுவட்டம், புதிய ஈரோடு தெற்கு குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள ஈரோடு கிழக்கு குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள ஈரோடு கிழக்கு குறுவட்டம் | | புதிய ஈரோடு தெற்கு குறுவட்டம் | | எஞ்சியுள்ள ஈரோடு கிழக்கு குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 22 | ஈரோடு A | 37 | சூரம்பட்டி | 17 | பெரியசேமூர் A |
| 2. | 22 | ஈரோடு B | 22 | ஈரோடு A | 17 | பெரியசேமூர் B |
| 3. | 22 | ஈரோடு C | 22 | ஈரோடு B | 38 | சர்க்கார் சின்ன அக்ரஹாரம் |
| 4. | 17 | பெரியசேமூர் A | 22 | ஈரோடு C | 39 | பிராமண சின்ன அக்ரஹாரம் |
| 5. | 17 | பெரியசேமூர் B | 35 | திண்டல் | 19 | பி.பெ.அக்ரஹாரம் |
| 6. | 19 | பி.பெ. அக்ரஹாரம் | 36 | முத்தம்பாளையம் | 20 | நஞ்சை தளவாய்பாளையம் |
| 7. | 38 | சர்க்கார் சின்ன அக்ரஹாரம் | – | – | 40 | பீளமேடு |
| | 39 | பிராமண சின்ன அக்ரஹாரம் | – | – | 41 | வெண்டிபாளையம் |

| வ. எண் | தற்போதுள்ள ஈரோடு கிழக்கு குறுவட்டம் | | புதிய ஈரோடு தெற்கு குறுவட்டம் | | எஞ்சியுள்ள ஈரோடு கிழக்கு குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 8. | 40 | பீளமேடு | – | – | 21 | வைராபாளையம் |
| 9. | 41 | வெண்டிபாளையம் | – | – | – | – |
| 10. | 37 | சூரம்பட்டி | – | – | – | – |
| 11. | 35 | திண்டல் | – | – | – | – |
| | 36 | முத்தம்பாளையம் | – | – | – | – |
| 12. | 20 | நஞ்சை தளவாய்பாளையம் | – | – | – | – |
| 13. | 21 | வைராபாளையம் | – | – | – | – |

## பிற்சேர்க்கை – II

*[அரசாணை (நிலை) எண்.663, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள ஈரோடு கிழக்கு குறுவட்டம், புதிய ஈரோடு தெற்கு குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள ஈரோடு கிழக்கு குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல்**

| வ. எண் | ஆட்சிஎல்லை விவரங்கள் | தற்போதுள்ள ஈரோடு கிழக்கு குறுவட்டம் | புதிய ஈரோடு தெற்கு குறுவட்டம் | எஞ்சியுள்ள ஈரோடு கிழக்கு குறுவட்டம் |
|---|---|---|---|---|
| 1. | தலைமையிடம் | சூரம்பட்டி | சூரம்பட்டி | பெரியசேமூர் ஆ |
| 2. | பரப்பளவு (ச.கி.மீ) | 60.74 ச.கி.மீ. | 37.29 ச.கி.மீ. | 23.45 ச.கி.மீ. |
| 3. | மக்கள்தொகை | 5,93,572 | 4,07,883 | 1,85,689 |
| 4. | வருவாய் வட்டத்தின் பெயர் | ஈரோடு | ஈரோடு | ஈரோடு |
| 5. | வருவாய் கோட்டத்தின் பெயர் | ஈரோடு | ஈரோடு | ஈரோடு |
| 6. | சட்டமன்றம் பெயர் | 98. ஈரோடு (கிழக்கு) மற்றும் 99. ஈரோடு (மேற்கு) சட்டமன்ற தொகுதி | 98. ஈரோடு (கிழக்கு) மற்றும் 99. ஈரோடு (மேற்கு) சட்டமன்ற தொகுதி | 98. ஈரோடு (கிழக்கு) மற்றும் 99. ஈரோடு (மேற்கு) சட்டமன்ற தொகுதி |
| 7. | பாராளுமன்றம் பெயர் | 17. ஈரோடு பாராளுமன்ற தொகுதி | 17. ஈரோடு பாராளுமன்ற தொகுதி | 17. ஈரோடு பாராளுமன்ற தொகுதி |
| 8. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 13 | 5 | 8 |
| 9. | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகள் இல்லை | கிராம ஊராட்சிகள் இல்லை | கிராம ஊராட்சிகள் இல்லை |
| 10. | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | B.P.அக்ரஹாரம் | முத்தம்பாளையம் | வெண்டிபாளையம் |

No.II(1)/REVDM/41/2025.

**[வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – திருப்பத்தூர் மாவட்டம் மற்றும் வட்டம் – திருப்பத்தூர் மற்றும் கந்திலி குறுவட்டங்களைச் சீரமைத்து மாடப்பள்ளி எனும் புதிய குறுவட்டம் உருவாக்குதல்–ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.664, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025* புரட்டாசி 13, *விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு , நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
3. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண்.26292/2022–ஜி2, நாள் 07.04.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01/462/2025, நாள் 15.04.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:- எண்.664. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**14. "மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், திருப்பத்தூர் மாவட்டம் மற்றும் வட்டம், திருப்பத்தூர் மற்றும் கந்திலி குறுவட்டத்தைச் சீரமைத்து மாடப்பள்ளி எனும் புதிய குறுவட்டம் உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. திருப்பத்தூர் உள்வட்டமானது 14 வருவாய் கிராமங்களை உள்ளடக்கி 11784.21.0 ஹெக்டேர் (117.84 சதுர கி.மீ) பரப்பளவில் அமைந்துள்ளது. மேற்படி உள்வட்டத்தில் நகரப்பகுதியும் இணைந்துள்ளதால் நிருவாக வசதிக்காகவும் அதிக மக்கள் தொகையின் காரணமாக பொதுமக்கள் அரசின் சேவைகளை விரைந்து பெறுவதில் உள்ள சிரமங்களை நீக்கவும், கந்திலி உள்வட்டமானது 23 வருவாய் கிராமங்களை உள்ளடக்கி 10860.52.0 (108.60 சதுர கி.மீ) பரப்பளவில் அமைந்துள்ளது.

ii. புதியதாக குறுவட்டம் உருவாக்க வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை குறித்த காரணங்கள் பின்வருமாறு:–

- வெங்களாபுரம் கிராம பொதுமக்கள் அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சேவைகளை பெற திருப்பத்தூர் மற்றும் கொரட்டி உள்வட்டங்களை கடந்து சுமார் 15 கி.மீ நெடுந்தூரம் பயணம் செய்து கந்திலி உள்வட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தை அணுக மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர்.
- தற்போது புதிதாக பிரிக்கப்படும் மாடப்பள்ளி உள்வட்டத்தை அணுக சுமார் 2 கி.மீ தூரமே உள்ள காரணத்தினால், பொதுமக்கள் அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சேவைகளை விரைந்து பெற இயலும்.
- எனவே, கந்திலி உள்வட்டத்திலுள்ள வெங்களாபுரம் கிராமம் மற்றும் திருப்பத்தூர் குறுவட்டத்தில் உள்ள 8 வருவாய் கிராமங்களையும் சேர்த்து மொத்தம் 9 வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய மாடப்பள்ளி உள்வட்டத்தை உருவாக்கலாம்.

iii. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின், திருப்பத்தூர் மற்றும் கந்திலி குறுவட்டத்தைச் சீரமைத்து மாடப்பள்ளி எனும் புதிய குறுவட்டம் உருவாக்குவது தொடர்பான முன்மொழிவுகள் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டதைத் தொடர்புடைய ஆவணங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

iv. புதியதாக மாடப்பள்ளி எனும் குறுவட்டம் தோற்றுவிக்கும் நேர்வில், குறுவட்டங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடங்கள் வழங்கப்படுகிறது. எனவே, தற்போது புதியதாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் ஒரு குறுவட்டத்திற்கு வழங்கப்படும் ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக வழங்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், புதியதாக கோரப்படும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிரந்தர பணியிடம் மற்றும் ஊதிய நிலை விகிதம் கீழ்க்கண்டவாறு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது:–

| வ. எண் | பணியிடங்களின் பெயர் | நிலை மற்றும் ஊதிய விகிதம் (In pay revised scale) | புதிய பணியிடம் |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை–10, ரூ.20,600 - 75,900/– | 1 |
| | | **மொத்தம்** | **1** |

v. மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள் தொகையைக் கருத்திற்கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவில் சென்றடையவும், பேரிடர் காலத்தில் துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மற்றும் நிருவாக வசதிக்காக திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, திருப்பத்தூர் மற்றும் கந்திலி குறுவட்டங்களைச் சீரமைத்து மாடப்பள்ளி எனும் புதிய குறுவட்டம் தோற்றுவிக்க ஆவண செய்யும்படி கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருப்பத்தூர் மாவட்டம் ஆகியோரின் கருத்துக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, திருப்பத்தூர் மாவட்டம் மற்றும் வட்டம், திருப்பத்தூர் மற்றும் கந்திலி குறுவட்டங்களைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை I & III–இல் உள்ளவாறு) மாடப்பள்ளி** எனும் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்க அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டம் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருப்பத்தூர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121

(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)
PSL No.202509PSL0171.

## பிற்சேர்க்கை – I

*[அரசாணை (நிலை) எண்.664, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025]*

**தற்போதுள்ள திருப்பத்தூர் மற்றும் கந்திலி குறுவட்டங்கள் மற்றும் புதிய மாடப்பள்ளி குறுவட்டத்தில் அமையும் கிராமங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள திருப்பத்தூர் குறுவட்டம் | | தற்போதுள்ள கந்திலி குறுவட்டம் | | புதிய மாடப்பள்ளி குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் மற்றும் நகரங்களின் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | 32A | திருப்பத்தூர் நகரம் | 01 | மண்டலநாயனகுண்டா | 57 | ராச்சமங்கலம் |
| 2. | 57 | ராச்சமங்கலம் | 04 | சின்னகந்திலி | 31 | மாடப்பள்ளி |
| 3. | 11 | அச்சமங்கலம் | 05 | கும்மிடிகாண்பட்டி | 21 | தாதவள்ளி |
| 4. | 10 | பாச்சல் | 03 | கந்திலி | 29 | கூடப்பட்டு |
| 5. | 32 | திருப்பத்தூர் கிராமம் | 02 | தோக்கியம் | 56 | பொம்மிகுப்பம் |
| 6. | 31 | மாடப்பள்ளி | 54 | வெங்களாபுரம் | 30 | கதிரம்பட்டி |
| 7. | 21 | தாதவள்ளி | 35 | லக்கிநாயக்கன்பட்டி | 55 | கோனேரிகுப்பம் |
| 8. | 29 | கூடப்பட்டு | 08 | பெரியகரம் | 66 | ஏ.கே.மோட்டூர் |
| 9. | 56 | பொம்மிகுப்பம் | 07 | நரியநேரி | 54 | வெங்களாபுரம் |
| 10. | 30 | கதிரம்பட்டி | 06 | பதனவாடி | – | – |

| வ. எண் | தற்போதுள்ள திருப்பத்தூர் குறுவட்டம் | | தற்போதுள்ள கந்திலி குறுவட்டம் | | புதிய மாடப்பள்ளி குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் மற்றும் நகரங்களின் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 11. | 55 | கோனேரிகுப்பம் | 38 | ஆவல்நாயக்கன்பட்டி | – | – |
| 12. | 09 | கதிரிமங்கலம் | 39 | கிருஷ்ணாபுரம் | – | – |
| 13. | 20 | பால்னாங்குப்பம் | 40 | சுந்தரம்பள்ளி | – | – |
| 14. | 66 | ஏ.கே.மோட்டூர் | 41 | புதுப்பட்டி | – | – |
| 15. | – | – | 42 | நத்தம் | – | – |
| 16. | – | – | 43 | கருங்காலிபட்டி | – | – |
| 17. | – | – | 44 | நரவந்தம்பட்டி | – | – |
| 18. | – | – | 45 | சொக்கனாம்பட்டி | – | – |
| 19. | – | – | 46 | கெங்கிநாயக்கன்பட்டி | – | – |
| 20. | – | – | 37 | எர்ரம்பட்டி | – | – |
| 21. | – | – | 36 | பெரிய கண்ணாலம்பட்டி | – | – |
| 22. | – | – | 47 | காக்கங்கரை | – | – |
| 23. | – | – | 48 | சின்னகண்ணாலம்பட்டி | – | – |

**பிற்சேர்க்கை — II**

*[அரசாணை (நிலை) எண்.664, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025]*

**மறுசீரமைப்பிற்கு பின் எஞ்சியுள்ள திருப்பத்தூர் மற்றும் கந்திலி குறுவட்டங்களில் கிராமங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்**

| வ. எண் | எஞ்சியுள்ள திருப்பத்தூர் குறுவட்டம் | | எஞ்சியுள்ள கந்திலி குறுவட்டம் | |
|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | 32A | திருப்பத்தூர் நகரம் | 1 | மண்டலநாயன குண்டா |
| 2. | 11 | அச்சமங்கலம் | 04 | சின்னகந்திலி |
| 3. | 10 | பாச்சல் | 05 | கும்மிடிகாண்பட்டி |
| 4. | 32 | திருப்பத்தூர் கிராமம் | 03 | கந்திலி |
| 5. | 09 | கதிரிமங்கலம் | 02 | தோக்கியம் |
| 6. | 20 | பால்னாங்குப்பம் | 35 | லக்கிநாயக்கன்பட்டி |
| 7. | – | – | 08 | பெரியகரம் |
| 8. | – | – | 07 | நரியநேரி |
| 9. | – | – | 06 | பதனவாடி |
| 10. | – | – | 38 | ஆவல்நாயக்கன்பட்டி |
| 11. | – | – | 39 | கிருஷ்ணாபுரம் |
| 12. | – | – | 40 | சுந்தரம்பள்ளி |
| 13. | – | – | 41 | புதுப்பட்டி |
| 14. | – | – | 42 | நத்தம் |
| 15. | – | – | 43 | கருங்காலிபட்டி |
| 16. | – | – | 44 | நரவந்தம்பட்டி |
| 17. | – | – | 45 | சொக்கனாம்பட்டி |
| 18. | – | – | 46 | கெங்கி நாயக்கன்பட்டி |

| வ. எண் | எஞ்சியுள்ள திருப்பத்தூர் குறுவட்டம் | | எஞ்சியுள்ள கந்திலி குறுவட்டம் | |
|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 19. | – | – | 37 | எர்ரம்பட்டி |
| 20. | – | – | 36 | பெரிய கண்ணாலம்பட்டி |
| 21. | – | – | 47 | காக்கங்கரை |
| 22. | – | – | 48 | சின்ன கண்ணாலம்பட்டி |

**பிற்சேர்க்கை – III**

*[அரசாணை (நிலை) எண்.664, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025]*

**மறுசீரமைப்பிற்கு பின் திருப்பத்தூர் மற்றும் கந்திலி குறுவட்டங்கள் மற்றும் புதியதாக உருவாக்கப்படும் மாடப்பள்ளி குறுவட்டத்தில் அமையும் கிராமங்களின் ஆட்சி எல்லை பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விரங்கள் | பிரிக்கப்படும் குறுவட்டம் | | புதிய குறுவட்டம் | | எஞ்சியுள்ள குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | தலைமையிடம் | திருப்பத்தூர் | கந்திலி | மாடப்பள்ளி | | திருப்பத்தூர் | கந்திலி |
| 2 | பரப்பளவு(ச.கி.மீ) | 117.84 | 108.60 | 79.17 | 4.74 | 38.67 | 103.86 |
| 3 | மக்கள்தொகை | 207909 | 71529 | 71015 | 6097 | 136894 | 65432 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | திருப்பத்தூர் | | திருப்பத்தூர் | | திருப்பத்தூர் | |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருப்பத்தூர் | | திருப்பத்தூர் | | திருப்பத்தூர் | |
| 6 | சட்டமன்றம் பெயர் | 050. திருப்பத்தூர் | | 050. திருப்பத்தூர் | | 050. திருப்பத்தூர் | |
| 7 | பாராளுமன்ற பெயர் | 011. திருவண்ணாமலை | | 011. திருவண்ணாமலை | | 011.திருவண்ணாமலை | |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 14 | 23 | 8 | 1 | 6 | 22 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 30 | 23 | 20 | 1 | 10 | 22 |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | ஏ.கே. மோட்டூர் (12 கி.மீ) | வெங்களாபுரம் (15 கி.மீ) | ஏ.கே.மோட்டூர் (9 கி.மீ) | | பால்நாங்குப்பம் (6 கி.மீ) | சுந்தரம்பள்ளி (12 கி.மீ) |

No.II(1)/REVDM/42/2025.

**[வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – திண்டுக்கல் மாவட்டம்–திண்டுக்கல் வருவாய் கோட்டம் - திண்டுக்கல் கிழக்கு வருவாய் வட்டத்திலுள்ள திண்டுக்கல் கிழக்கு வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து பாலகிருஷ்ணாபுரம் எனும் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குதல்–ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.665, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025, புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு , நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
3. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண்.ந.க. எண். 3178750/2025/ஆ2, நாள் 07.04.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01–04/123/2025, நாள் 15.04.2025. (இப்பிரிவில் கிடைக்கப்பெற்ற நாள் 24.04.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:- எண்.665. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**14. "மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வருவாய் கோட்டம், திண்டுக்கல் கிழக்கு வருவாய் வட்டத்திலுள்ள திண்டுக்கல் கிழக்கு வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து பாலகிருஷ்ணாபுரம் எனும் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. திண்டுக்கல் கிழக்கு குறுவட்டமானது 10 வருவாய் கிராமங்களுடன் அமைந்துள்ளதாகவும், அவ்வருவாய் கிராமங்களின் பரப்பளவு 19386.38 ஹெக்டேர் மற்றும் 2011–ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் 94,572 ஆகவும் உள்ளது.

ii. புதியதாக பாலகிருஷ்ணாபுரம் உள்வட்டம் பிரிக்கப்படுவதால், திண்டுக்கல் கிழக்கு உள்வட்டம் மற்றும் பாலகிருஷ்ணாபுரம் உள்வட்டம் ஆகியவை திண்டுக்கல் வருவாய் கோட்டம் மற்றும் திண்டுக்கல் கிழக்கு வருவாய் வட்டத்தின் ஆளுகைக்குள் இடம்பெறுகிறது என்பதால் எவ்வித மாற்றமும் இல்லை.

iii. புதியதாக பாலகிருஷ்ணாபுரம் உள்வட்டம் பிரிக்கப்படுவதால் பாலகிருஷ்ணாபுரம் உள்வட்டம் முழுவதும் திண்டுக்கல் சட்டமன்ற தொகுதிக்கும், பிரிக்கப்பட்ட திண்டுக்கல் கிழக்கு உள்வட்டத்தின் மாநகராட்சி பகுதிகள் திண்டுக்கல் சட்டமன்ற தொகுதிக்கும், இதர கிராமப்புறப் பகுதிகள் நத்தம் சட்டமன்ற தொகுதிக்கும் வருகின்றன எனவும், இதிலும் தற்போது உள்ள நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை.

iv. புதியதாக பாலகிருஷ்ணாபுரம் உள்வட்டம் பிரிக்கப்படுவதால் திண்டுக்கல் கிழக்கு உள்வட்டம் மற்றும் பாலகிருஷ்ணாபுரம் உள்வட்டம் ஆகியவை 22.திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதியில் வருகின்றதால் எவ்வித மாற்றமும் இல்லை.

**கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை:**

1. திண்டுக்கல் கிழக்கு உள்வட்டம்:

   1. மாநகராட்சி (திண்டுக்கல்)

   2. 04 ஊராட்சிகள்

| வ.எண் | கிராம எண் | ஊராட்சியின் பெயர் |
|---|---|---|
| 1 | 7 | தோட்டனூத்து |
| 2 | 8 | அடியனூத்து |
| 3 | 9 | எ.வெள்ளோடு |
| 4 | 10 | சிறுமலை |

**2. பாலகிருஷ்ணாபுரம் உள்வட்டம்:**

   1. மாநகராட்சி (திண்டுக்கல்)

   2. 06 ஊராட்சிகள்

| *வ. எண்* | *கிராம எண்* | *ஊராட்சியின் பெயர்* |
|---|---|---|
| 1 | 1 | அம்மாகுளத்துப்பட்டி |
| 2 | 2 | தாமரைப்பாடி |
| 3 | 3 | முள்ளிப்பாடி |
| 4 | 4 | கோவிலூர் |
| 5 | 5 | பெரியகோட்டை |
| 6 | 6 | பாலகிருஷ்ணாபுரம் |

v. உத்தேசிக்கப்பட்டுள்ள பாலகிருஷ்ணாபுரம் உள்வட்டம் தோற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை

- திண்டுக்கல் கிழக்கு உள்வட்டம் மாநகராட்சி பகுதியில் அமையப்பெற்றுள்ள நிலையில் 2024–ஆம் ஆண்டிற்கு மட்டும் சுமார் 32218 சான்றிதழ்களுக்கான மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மேலும், மக்கள் தொகை பெருக்கம் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் அதிகப்படியான கோரிக்கை மனுக்கள் மற்றும் சான்றிதழ்களின் மீது விரைவான நடவடிக்கை மேற்கொள்ளவும்.
- சிறுமலை என்ற மலை கிராமம் உள்ள நிலையில் சிறுமலை கிராமத்தில் உள்ள மலைவாழ் மக்களின் கோரிக்கைகளை விரைவாக வருவாய் ஆய்வாளர் நிலையில் துரிதப்படுத்திட ஏதுவாகவும், அதிகப்படியான மக்கள் நெருக்கம் உள்ள மாநகர பகுதி மக்களின் கோரிக்கைளும், அரசின் நலத்திட்டங்களும் விரைவாக சென்றடையும் வண்ணம் மற்றும் நிருவாக நலன் கருதியும் புதியதாக வருவாய் உள்வட்டம் தோற்றுவிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

vi. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையானது தொடர்புடைய அறிக்கைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது. உத்தேசிக்கப்பட்டுள்ள பாலகிருஷ்ணாபுரம் குறுவட்டமானது, தற்போது திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு குறுவட்டத்தில் ஒரு வருவாய் கிராமமாக அமைந்துள்ளது. மேலும், தற்போதுள்ள திண்டுக்கல் கிழக்கு குறுவட்டத்தில் உள்ள 10 வருவாய் கிராமங்கள் உள்ளது. இவற்றுள், உத்தேசிக்கப்பட்டுள்ள பாலகிருஷ்ணாபுரம் குறுவட்டத்தில் 6 வருவாய் கிராமங்களும், எஞ்சியுள்ள 4 வருவாய் கிராமங்களை (அடியனூத்து வருவாய் கிராமம் சீரமைக்கப்பட்டு அடியனூத்து கிழக்கு எனும் புதிய வருவாய் கிராமம் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது) கொண்டு திண்டுக்கல் கிழக்கு குறுவட்டம் செயல்படும். மேலும், திண்டுக்கல் மாவட்டம் மற்றும் திண்டுக்கல் கிழக்கு வட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் இடைப்பட்ட தூரமானது 20 கி.மீட்டருக்குட்பட்டுள்ளதால், பொது மக்களுக்கு இணையவழியில் அளிக்கப்படும் சான்றிதழ் மற்றும் பட்டா மாற்றம் தொடர்பான சேவையினை பெற அதிக தொலைவு செல்ல வேண்டிய சூழலினை தவிர்த்திட திண்டுக்கல் கிழக்கு குறுவட்டத்தினைச் சீரமைத்து புதியதாக பாலகிருஷ்ணாபுரம் குறுவட்டம் உருவாக்க வேண்டியதன் அவசியம் ஏற்படுகிறது என தெரிவிக்கப்படுகிறது.

vii. உத்தேசிக்கப்பட்டுள்ள பாலகிருஷ்ணாபுரம் குறுவட்டம் தோற்றுவிக்கும் நேர்வில், குறுவட்ட வருவாய் ஆய்வாளர், குறுவட்ட நில அளவர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய 3 பணியிடங்கள் தேவைப்படுவதாக தெரிவித்துள்ளார். மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள பாலகிருஷ்ணாபுரம் குறுவட்டம் உருவாக்கும் நேர்வில், மேலும், புதியதாக கோரப்படும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிரந்தர பணியிடம் மற்றும் ஊதிய நிலை விகிதம் கீழ்க்கண்டவாறு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது:–

| *வ. எண்* | *பணியிடங்களின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம் (In pay revised scale)* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை–10, ரூ.20,600 – 75,900/– | 1 |
| **மொத்தம்** | | | **1** |

viii. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு உள்வட்டம் மாநகராட்சி பகுதிகளில் அமைந்துள்ளதால் மக்கள்தொகையினை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் எளிதில் சென்றடைய ஏதுவாகவும், நிருவாக நலன் கருதியும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று திண்டுக்கல் கிழக்கு குறுவட்டத்தினைக் சீரமைத்து பாலகிருஷ்ணாபுரம் எனும் புதிய குறுவட்டம் உருவாக்கிட ஆவண செய்யும்படி கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் மாவட்டம் ஆகியோரின் கருத்துக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வருவாய் கோட்டம், திண்டுக்கல் கிழக்கு வருவாய் வட்டத்திலுள்ள திண்டுக்கல் கிழக்கு வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை I & II–இல் உள்ளவாறு) பாலகிருஷ்ணாபுரம்** எனும் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்க அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டம் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121

(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)
PSL No.202509PSL0171.

## பிற்சேர்க்கை – I

*[அரசாணை (நிலை) எண்.665, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள திண்டுக்கல் கிழக்கு குறுவட்டம், புதிய பாலகிருஷ்ணாபுரம் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள திண்டுக்கல் கிழக்கு குறுவட்டம் ஆகிய குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | *தற்போதுள்ள திண்டுக்கல் கிழக்கு குறுவட்டம்* | | *புதிய பாலகிருஷ்ணாபுரம் குறுவட்டம்* | | *எஞ்சியுள்ள திண்டுக்கல் கிழக்கு குறுவட்டம்* | |
|---|---|---|---|---|---|---|
| | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* |
| 1. | 1 | அம்மாகுளத்துப்பட்டி | 1 | அம்மாகுளத்துப்பட்டி | 7 | தோட்டனூத்து |
| 2. | 2 | தாமரைப்பாடி | 2 | தாமரைப்பாடி | 8 | அடியனூத்து |
| 3. | 3 | முள்ளிப்பாடி | 3 | முள்ளிப்பாடி | 9 | எ.வெள்ளோடு |
| 4. | 4 | கோவிலூர் | 4 | கோவிலூர் | 10 | சிறுமலை |
| 5. | 5 | பெரியகோட்டை | 5 | பெரியகோட்டை | – | – |
| 6. | 6 | பாலகிருஷ்ணாபுரம் | 6 | பாலகிருஷ்ணாபுரம் | – | – |
| 7. | 7 | தோட்டனூத்து | – | – | – | – |
| 8. | 8 | அடியனூத்து | – | – | – | – |
| 9. | 9 | எ.வெள்ளோடு | – | – | – | – |
| 10. | 10 | சிறுமலை | – | – | – | – |

## பிற்சேர்க்கை – II

*[அரசாணை (நிலை) எண்.665, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள திண்டுக்கல் கிழக்கு குறுவட்டம், புதிய பாலகிருஷ்ணாபுரம் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள திண்டுக்கல் கிழக்கு குறுவட்டம் ஆகிய குறுவட்டங்களின் ஆட்சி எல்லை விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | ஆட்சி எல்லை வவரங்கள் | தற்போதுள்ள குறுவட்டம் | புதிய குறுவட்டம் | எஞ்சிய குறுவட்டம் |
|---|---|---|---|---|
| 1. | தலைமையிடம் | திண்டுக்கல் கிழக்கு | பாலகிருஷ்ணாபுரம் | திண்டுக்கல் கிழக்கு |
| 2. | பரப்பளவு | 193 | 50 | 143 |
| 3. | மக்கள் தொகை | 94572 | 46651 | 47921 |
| 4. | வருவாய் வட்டத்தின் பெயர் | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் கிழக்கு |
| 5. | வருவாய் கோட்டத்தின் பெயர் | திண்டுக்கல் | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 6. | சட்டமன்ற தொகுதியின் பெயர் | 131. நத்தம் மற்றும் 132. திண்டுக்கல் | 132. திண்டுக்கல் | 131. நத்தம் மற்றும் 132.திண்டுக்கல் |
| 7. | பாராளுமன்றத்தின் பெயர் | 22. திண்டுக்கல் | 22. திண்டுக்கல் | 22.திண்டுக்கல் |
| 8. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 10 | 6 | 4 |
| 9. | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 10 | 6 | 4 |
| 10. | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள கிராமம்/தூரம் | சிறுமலை – 18 கி.மீ. | அம்மாகுளத்துப்பட்டி–09 கி.மீ. | சிறுமலை – 18 கி.மீ. |

No.II(1)/REVDM/43/2025.

**[வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – சேலம் மாவட்டம் - சேலம் கோட்டத்திலுள்ள சேலம் வருவாய் வட்டத்திற்குட்பட்ட சேலம் டவுன் குறுவட்டத்தினைப் பிரித்து அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை, கன்னங்குறிச்சி மற்றும் உடையாப்பட்டி ஆகிய 4 புதிய வருவாய் குறுவட்டங்கள் உருவாக்குதல் –ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.666, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு, நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
3. சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண் ந.க.e–3146388/2025, நாள் 07.04.2025
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01/457/2025, நாள் 16.04.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025,

**ஆணை:- எண்.666. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**14. "மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், சேலம் மாவட்டம், சேலம் கோட்டத்திலுள்ள சேலம் வருவாய் வட்டத்திற்குட்பட்ட சேலம் டவுன் குறுவட்டத்தினைப் பிரித்து அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை, கன்னங்குறிச்சி மற்றும் உடையாப்பட்டி ஆகிய 4 புதிய வருவாய் குறுவட்டங்கள் உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட சேலம் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. உத்தேசிக்கப்பட்டுள்ள உள்வட்டம் தோற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை

- சேலம் டவுன் குறுவட்டத்திற்குட்பட்ட கிராமங்கள் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.
- அதிகப்படியான மக்கள் தொகை மற்றும் பொதுமக்களிடம் இருந்து வரப்பெறும் அதிகப்படியான இணைய வழி சான்றுகளான வகுப்புச் சான்று, வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, வாரிசுச் சான்று, மக்களுடன் முதல்வர் முகாம், மக்கள் குறைத்தீர்க்கும் நாள் மனுக்கள் மற்றும் முதல்வரின் முகவரி போன்ற இணையவழி செயலியின் மூலம் வரப்பெறும் மனுக்களின் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அதிக காலம் தேவைப்படுவதாலும், இலவச வீட்டுமனைப் பட்டா, புதிய பட்டா வழங்குதல், நில அளவை மற்றும் பட்டா மாறுதல் ஆகியவை கோரி வரப்பெறும் மனுக்களின் மீது புலத்தணிக்கை செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.
- சமூக பாதுகாப்பு திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியமான, முதியோர் ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம், நலிந்தோர் உதவித் தொகை, விபத்து நிவாரண நிதி, உழவர் பாதுகாப்பு திட்டத் தொகை, மற்றும் புதிய குடும்ப அட்டை ஆகிய நலத்திட்டங்கள் வழங்க விசாரணை மற்றும் ஆய்வு மேற்கொண்டு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாகவும், அரசின் நலத்திட்டங்களை விரைந்து மக்களிடம் கொண்டு சேர்க்க ஏதுவாகவும் மற்றும் நிர்வாக நலன் கருதியும், புதிதாக குறுவட்டம் தோற்றுவிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது.
- சேலம் மாவட்ட வருவாய் அலகில் சேலம் கோட்டத்திற்குட்பட்ட சேலம் வட்டம், சேலம் டவுன் குறுவட்டத்தை சீரமைத்து அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை, கன்னங்குறிச்சி மற்றும் உடையாப்பட்டி என புதிய 4 வருவாய் குறுவட்டங்கள் தோற்றுவிக்க மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ii. சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிக்கையானது தொடர்புடைய அறிக்கைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது. தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள சேலம் டவுன், அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை, கன்னங்குறிச்சி மற்றும் உடையாப்பட்டி குறுவட்டங்களானது சேலம் வருவாய் வட்டம் சேலம் டவுன் குறுவட்டத்தில் வருவாய் கிராமங்களாக இருந்து வருகிறது.

iii. இவற்றுள், சேலம் டவுன் வருவாய் குறுவட்டமானது 60.07 ச.கி.மீ பரப்பளவில் அமைந்துள்ளதாகவும், அக்குறுவட்டத்தில் 2023 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை எண்ணிக்கையானது 7,28,603 என உள்ளதாக தெரிவித்துள்ளார்.

iv. கன்னங்குறிச்சி கிராமம் டவுன் பஞ்சாயத்துக்கும், கொண்டப்பநாயக்கன்பட்டி, எருமாபாளையம், உடையாப்பட்டி குரூப் மற்றும் அதிகாரிப்பட்டி ஆகியவை கிராம பஞ்சாயத்துக்கு சம்மந்தப்பட்டதாகும். மேலும், சேலம் டவுன் குறுவட்டத்தில், சேலம் தெற்கு, சேலம் வடக்கு, சேலம் மேற்கு, வீரபாண்டி மற்றும் ஏற்காடு ஆகிய சட்டமன்ற தொகுதிகள் வருகிறது. இதில், சேலம் மற்றும் கள்ளக்குறிச்சி பாராளுமன்ற தொகுதிகளும் வருகிறது.

- சேலம் டவுன் குறுவட்டம் முழுவதும் சேலம் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள அஸ்தம்பட்டி குறுவட்டம் முழுவதும் சேலம் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள கன்னங்குறிச்சி குறுவட்டமானது சேலம் மாநகராட்சி கன்னங்குறிச்சி பேரூராட்சியிலும் மற்றும் ஊராட்சியிலும் அமைந்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள அம்மாபேட்டை குறுவட்டம் சேலம் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள உடையாப்பட்டி குறுவட்டம் சேலம் மாநகராட்சி மற்றும் ஊராட்சியிலும் அமைந்துள்ளது.

v. புதியதாக தோற்றுவிக்கப்படும் 4 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடங்கள் சேலம் வட்டத்தில் அமையவிருப்பதால் அப்பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு சேலம் வருவாய் வட்டாட்சியர் அவர்களின் DDO (Code)–இன் கீழ் உள்ளடக்கப்பட (Mapping) வேண்டும். குறுவட்டங்களின் அடிப்படையில் 1 குறுவட்டத்திற்கு 1 வருவாய் ஆய்வாளர் வீதம் 4 குறுவட்டங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளதால் 4 குறுவட்டங்களுக்கும் அரசால் ஒப்பளிக்கப்படவிருக்கும் வருவாய் ஆய்வாளர் பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், புதியதாக கோரப்படும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிரந்தர பணியிடம் மற்றும் ஊதிய நிலை விகிதம் கீழ்க்கண்டவாறு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது:–

| *வ. எண்* | *பணியிடங்களின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம் (In pay revised scale)* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை–10,<br>ரூ.20,600 – 75,900/– | 4 |
| **மொத்தம்** | | | **4** |

vi. சேலம் வட்டத்தில் அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கத்தினால் தேவைப்படும் இணையவழி சான்றுகள், அரசு வழங்கும் நலத்திட்டங்கள் மற்றும் பல்வகை சேவைகள், தேர்தல் மற்றும் சட்டம் ஒழுங்கு நிகழ்வுகளின் போதும் சிறப்புடன் செயல்படவும் சேலம் மாவட்ட ஆட்சியரின் கோரிக்கையினை ஏற்று, சேலம் டவுன் குறுவட்டத்தினை மக்கள் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி சீரமைத்து சேலம் டவுன், அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை, கன்னங்குறிச்சி மற்றும் உடையாப்பட்டி ஆகிய 4 குறுவட்டங்களை தோற்றுவிக்க ஆவண செய்யும்படி கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், சேலம் மாவட்டம் ஆகியோரின் கருத்துக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, சேலம் மாவட்டம், சேலம் வட்டம், சேலம் டவுன் குறுவட்டத்தினைப் பிரித்து **(பிற்சேர்க்கை I & II–இல் உள்ளவாறு) அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை, கன்னங்குறிச்சி மற்றும் உடையாப்பட்டி** ஆகிய 4 புதிய வருவாய் குறுவட்டங்கள் உருவாக்க அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டங்கள் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டங்கள் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், சேலம் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121

(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)

PSL No.202509PSL0171.

## பிற்சேர்க்கை — I

*[அரசாணை (நிலை) எண்.666, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள சேலம் டவுன் குறுவட்டம் மற்றும் புதிய அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை, கன்னங்குறிச்சி மற்றும் உடையாப்பட்டி ஆகிய 4 வருவாய் குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள சேலம் டவுன் குறுவட்டம் | | புதிய அஸ்தம்பட்டி குறுவட்டம் | | புதிய அம்மாபேட்டை குறுவட்டம் | | புதிய கன்னங்குறிச்சி குறுவட்டம் | | புதிய உடையாப்பட்டி குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10 | (11) |
| 1. | 48 | தாதம்பட்டி | 52 | அஸ்தம்பட்டி | 50 | அம்மாபேட்டை டவுன் | 32 | கொண்டப்ப நாயக்கன்பட்டி | 59 | உடையாப்பட்டி |
| 2. | 50 | அம்மாபேட்டை டவுன் | 51 | குமாரசாமிபட்டி | 61 | பொன்னம்மா பேட்டை | 33 | கன்னங்குறிச்சி | 48 | தாதம்பட்டி |
| 3. | 50 | அம்மாபேட்டை ரூரல் | 60 | சின்னதிருப்பதி | 62 | அம்மாப்பேட்டை ரூரல் | 53 | மிட்டாஅய்யம் பெருமாம்பட்டி | 64 | அல்லிக்குட்டை |
| 4. | 51 | குமாரசாமிப்பட்டி | – | – | 63 | அம்மாபேட்டை தெற்கு | – | – | 47 | அதிகாரிப்பட்டி |
| 5. | 52 | அஸ்தம்பட்டி | – | – | 58 | எருமாபாளையம் | – | – | – | – |
| 6. | 53 | மிட்டா அய்யம் பெருமாம்பட்டி | – | – | – | – | – | – | – | – |
| 7. | 57 | சேலம் டவுன் | – | – | – | – | – | – | – | – |
| 8. | 32 | கொண்டப்ப நாயக்கன்பட்டி | – | – | – | – | – | – | – | – |
| 9. | 58 | எருமாபாளையம் | – | – | – | – | – | – | – | – |
| 10. | 33 | கன்னங்குறிச்சி | – | – | – | – | – | – | – | – |
| 11. | 55 | பெரியேரி | – | – | – | – | – | – | – | – |
| 12. | 56 | மரவனேரி | – | – | – | – | – | – | – | – |
| 13. | 59 | உடையாப்பட்டி குரூப் | – | – | – | – | – | – | – | – |
| 14. | 47 | அதிகாரிப்பட்டி | – | – | – | – | – | – | – | – |

**மறுசீரமைப்பிற்கு பின் எஞ்சியுள்ள சேலம் டவுன் குறுவட்டம் கீழ்க்கண்டவாறு அமையும்**

| வ.எண் | கிராம எண் | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | 57 | சேலம் டவுன் |
| 2. | 65 | சேலம் டவுன் தெற்கு |
| 3. | 55 | பெரியேரி |
| 4. | 56 | மரவனேரி |

## பிற்சேர்க்கை — II

*[அரசாணை (நிலை) எண்.666, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள சேலம் டவுன் குறுவட்டம், புதிய அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை, கன்னங்குறிச்சி மற்றும் உடையாப்பட்டி ஆகிய 4 வருவாய் குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் குறுவட்டம் (Parent Firka) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிரிக்கப்படும் குறுவட்டம் | புதிய குறுவட்டங்கள் | | | | எஞ்சியுள்ள குறுவட்டம் |
| 1 | தலைமையிடம் | சேலம் டவுன் | கன்னங்குறிச்சி | அஸ்தம்பட்டி | அம்மாபேட்டை | உடையாபட்டி | சேலம் டவுன் |
| 2 | பரப்பளவு | 6255.40.5 | 1349.46.5 | 730.90.0 | 2278.53.0 | 886.52.5 | 1009.98.5 |
| 3 | மக்கள் தொகை | 7,28,603 | 57817 | 146943 | 248339 | 93047 | 182457 |

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் குறுவட்டம் (Parent Firka) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிரிக்கப்படும் குறுவட்டம் | புதிய குறுவட்டங்கள் | | | | எஞ்சியுள்ள குறுவட்டம் |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | சேலம் | சேலம் | சேலம் | சேலம் | சேலம் | சேலம் |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | சேலம் | சேலம் | சேலம் | சேலம் | சேலம் | சேலம் |
| 6 | சட்டமன்ற தொகுதி பெயர் | சேலம் தெற்கு, சேலம் வடக்கு, சேலம் மேற்கு ஏற்காடு | சேலம் மேற்கு, சேலம் வடக்கு, | சேலம் வடக்கு | சேலம் தெற்கு, சேலம் வடக்கு, வீரபாண்டி, | சேலம் வடக்கு, ஏற்காடு | சேலம் தெற்கு, சேலம் வடக்கு |
| 7 | பாராளுமன்ற தொகுதி பெயர் | சேலம், கள்ளக்குறிச்சி | சேலம் | சேலம் | சேலம் | சேலம், கள்ளக்குறிச்சி | சேலம் |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 19 | 3 | 3 | 5 | 4 | 4 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 5 | 1 | 0 | 2 | 2 | 0 |
| 10 | தலைமை இடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | 7 | 5 | 1 | 6 | 7 | 3 |

No.II(1)/REVDM/44/2025.

**[வருவாய் நிருவாகம் — ஆட்சி எல்லை — தூத்துக்குடி மாவட்டம் — தூத்துக்குடி வருவாய் வட்டத்திலுள்ள தூத்துக்குடி குறுவட்டத்தினைச் சீரமைத்து மாப்பிள்ளையூரணி எனும் புதிய குறுவட்டம் உருவாக்குதல்—ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.667, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி—1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025* புரட்டாசி 13, *விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு—2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025—2026—ஆம்ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு , நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025—1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025,
3. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண் ந.க. பி3/3178614/2025, நாள் 07.04.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01/130/2025, நாள் 16.04.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:- எண்.667. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025—2026—ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:—

**14. "மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வருவாய் வட்டத்திலுள்ள தூத்துக்குடி குறுவட்டத்தினைச் சீரமைத்து மாப்பிள்ளையூரணி எனும் புதிய குறுவட்டம் உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. தூத்துக்குடி குறுவட்டமானது 6 வருவாய் கிராமங்களுடன் அமைந்துள்ளதாகவும், அவ்வருவாய் கிராமங்களின் பெயர் பரப்பளவு மற்றும் மக்கள்தொகை விவரங்கள் பின்வருமாறு:–

- **தூத்துக்குடி குறுவட்டம் (மறுசீரமைப்புக்கு முன்)**

| *வ. எண்* | *கிராமத்தின் பெயர்* | *பரப்பு (ச.கி.மீ.)* | *மக்கள்தொகை (2011 ன்படி)* |
|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி பகுதி 1 | 128.57.5 | 237830 |
| 2 | தூத்துக்குடி பகுதி 2 | 1714.39.0 | |
| 3 | மீளவிட்டான் பகுதி 1 | 2087.78.50 | 45863 |
| 4 | மீளவிட்டான் பகுதி 2 | 1489.96.5 | |
| 5 | சங்கரப்பேரி | 1321.78.50 | 19844 |
| 6 | மாப்பிள்ளையூரணி | 871.50.0 | 40035 |
| | **மொத்தம்** | **7615.98** | **3,43,572** |

- உத்தேசிக்கப்பட்டுள்ள மாப்பிள்ளையூரணி குறுவட்டத்தில் உள்ள பரப்பளவு மற்றும் மக்கள்தொகை விவரம்

| *வ.எண்* | *கிராமத்தின் பெயர்* | *பரப்பு (ச.கி.மீ.)* | *மக்கள்தொகை (2011 ன்படி)* |
|---|---|---|---|
| 1 | சங்கரப்பேரி | 1321.78.50 | 19844 |
| 2 | மாப்பிள்ளையூரணி | 871.50.0 | 40035 |
| | மொத்தம் | 2193.28.50 | 59879 |

ii. உத்தேசிக்கப்பட்டுள்ள மாப்பிள்ளையூரணி உள்வட்டம் தோற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை குறித்த காரணங்கள் பின்வருமாறு:–

- தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி குறுவட்டத்திலுள்ள தூத்துக்குடி–I, தூத்துக்குடி–II, மாப்பிள்ளையூரணி, மீளவிட்டான்–I, மீளவிட்டான்–II மற்றும் சங்கரப்பேரி கிராமங்களில் அதிக மக்கள் தொகை இருப்பதாலும், தூத்துக்குடி குறுவட்டத்திலிருந்து அதிக தூரம் உள்ளதால் பொதுமக்கள் சான்றுகள் மற்றும் இதர நலத்திட்ட உதவிகள் பெற அதிக சிரமம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாலும், நிருவாக வசதிக்காகவும், மாநகராட்சியின் விரிவாக்க முன்மொழிவில், மாப்பிள்ளையூரணி கிராமம் இடம் பெற்றுள்ளதாலும், மாப்பிள்ளையூரணி கிராமம் தூத்துக்குடி குறுவட்டத்தில் அதிக மக்கள் அடர்த்தியுடன் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் வரை மக்கள்தொகை கொண்டிருப்பதாலும், பொதுமக்களின் வசதிக்காகவும், தூத்துக்குடி குறுவட்டத்தினைச் சீரமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.
- மேற்படி தூத்துக்குடி வட்டத்தில் உள்ள ஆறு கிராமங்களில் இருந்தும் வருமானசான்று, சாதிச்சான்று, பிறப்பிடச்சான்று, இருப்பிடச்சான்று, முதல் பட்டதாரி சான்று, விதவைச்சான்று, வாரிசு சான்று, சிறு, குறு விவசாயி சான்று ஆகிய சான்றுகள் தொடர்பாக கடந்த ஓராண்டிற்குள் மட்டும் மொத்தம் 42,024 விண்ணப்பங்கள் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்றுள்ளன.
- தூத்துக்குடி வட்டத்தில் 4 குறுவட்டங்களுடன் 33 வருவாய் கிராமங்கள் செயல்பட்டு வருவதாகவும், இதன் மொத்த பரப்பளவு 34669.64.0 ஹெக்டேர் ஆகும். அதனடிப்படையில் 346.69 ச.கி.மீ தூத்துக்குடி வட்டம் உள்ளடக்கி உள்ளது. தூத்துக்குடி வட்டத்தில் தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் உள்ளது. தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குள் 6 கிராமங்களும், தூத்துக்குடி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் 27 கிராமங்களும் இயங்கி வருகின்றன. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தூத்துக்குடி வட்டத்தில் மொத்த மக்கள் தொகை தோராயமாக 4,76,890 ஆகும்.

iii. புதிதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மாப்பிள்ளையூரணி உள்வட்டத்தின் அமைவிடம் குறித்து மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ள விவரங்கள்:–

- புதிதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மாப்பிள்ளையூரணி உள்வட்டமானது, தூத்துக்குடி உள்வட்டத்திற்கு வடக்கிலும், மன்னார் வளைகுடாவிற்கு மேற்கிலும், ஓட்டப்பிடாரம் வட்டத்திற்கு தெற்கிலும், கிழக்கிலும் அமையப்பெற்றுள்ளது.

**வடக்கு - ஓட்டப்பிடாரம் வட்டம்**

**தெற்கு - உள்வட்டம்**

**கிழக்கு - மன்னார் வளைகுடா**

**மேற்கு - ஓட்டப்பிடாரம் வட்டம்**

- புதிதாக உருவாக்கப்படும் மாப்பிள்ளையூரணி குறுவட்டமானது, 2 வருவாய் கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.
- 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தூத்துக்குடி குறுவட்டத்தில் உள்ள மேற்படி கிராமங்களில் உள்ள மக்கள் தொகை 3,43,572 ஆகும். 2021–இல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறாத சூழ்நிலையில் தற்போது மக்கள் தொகை எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
- எனவே நிருவாக காரணங்களுக்காக மாப்பிள்ளையூரணி கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு மாப்பிள்ளையூரணி மற்றும் சங்கரப்பேரி கிராமங்களை உள்ளடக்கி புதிய குறுவட்டத்தை உருவாக்கலாம். மேலும், புதியதாக உருவாக்கப்படும் மாப்பிள்ளையூரணி குறுவட்டத்தில், மாப்பிள்ளையூரணி கிராமத்தை மூன்றாக பிரித்து மாப்பிள்ளையூரணி, தாளமுத்துநகர், ஆரோக்கியபுரம் ஆகிய மூன்று கிராமங்களாகவும் சங்கரப்பேரி கிராமத்தை இரண்டாகப் பிரித்து சங்கரப்பேரி–1, சங்கரப்பேரி–2 ஆகிய இரண்டு கிராமங்களாகவும் பிரித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- தூத்துக்குடி குறுவட்டத்திலிருந்து மாப்பிள்ளையூரணி மற்றும் சங்கரப்பேரி கிராமங்களைப் பிரித்து மாப்பிள்ளையூரணி குறுவட்டம் உருவாக்கலாம்.

iv. தூத்துக்குடி குறுவட்டத்தைச் சீரமைத்து புதியதாக மாப்பிள்ளையூரணி குறுவட்டத்தை தலைமையிடமாக கொண்டு புதிய குறுவட்டம் தோற்றுவிக்க தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்.

v. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையானது தொடர்புடைய அறிக்கைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது. உத்தேசிக்கப்பட்டுள்ள மாப்பிள்ளையூரணி குறுவட்டமானது, தற்போது தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி குறுவட்டத்தில் ஒரு வருவாய் கிராமமாக அமைந்துள்ளது. மேலும், தற்போதுள்ள தூத்துக்குடி குறுவட்டத்தில் 6 வருவாய் கிராமங்கள் உள்ளது. இவற்றுள், உத்தேசிக்கப்பட்டுள்ள மாப்பிள்ளையூரணி குறுவட்டத்தில் 2 வருவாய் கிராமங்களும், எஞ்சியுள்ள தூத்துக்குடி குறுவட்டத்தில் 4 வருவாய் கிராமங்கள் கொண்டு செயல்படும்.

vi. மேலும், தூத்துக்குடி மாவட்டம் மற்றும் தூத்துக்குடி வட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் இடைப்பட்ட தூரமானது 20 கி.மீட்டருக்கு உட்பட்டுள்ளதால், பொது மக்களுக்கு இணையவழியில் அளிக்கப்படும் சான்றிதழ் மற்றும் பட்டா மாற்றம் தொடர்பான சேவையினை பெற அதிக தொலைவு செல்ல வேண்டிய சூழலினை தவிர்த்திட தூத்துக்குடி குறுவட்டத்தினைச் சீரமைத்து புதியதாக மாப்பிள்ளையூரணி குறுவட்டம் உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

vii. இதனை தவிர்த்து, உத்தேசிக்கப்பட்டுள்ள மாப்பிள்ளையூரணி குறுவட்டம் தோற்றுவிக்கும் நேர்வில், குறுவட்ட வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய 2 பணியிடங்கள் தேவைப்படுவதாக தெரிவித்துள்ளார். மேலும், புதியதாக கோரப்படும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிரந்தர பணியிடம் மற்றும் ஊதிய நிலை விகிதம் கீழ்க்கண்டவாறு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது:–

| *வ. எண்* | *பணியிடங்களின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம் (In pay revised scale)* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை–10, ரூ.20,600 – 75,900/– | 1 |
| | | **மொத்தம்** | **1** |

viii. தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி உள்வட்டம் மாநகராட்சி பகுதிகளில் அமைந்துள்ளதால் மக்கள்தொகையினை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் எளிதில் சென்றடைய ஏதுவாகவும், நிருவாக நலன் கருதியும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று தூத்துக்குடி குறுவட்டத்தினைச் சீரமைத்து மாப்பிள்ளையூரணி எனும் புதிய குறுவட்டம் உருவாக்கிட ஆவண செய்யுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம் ஆகியோரின் கருத்துக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டத்திலுள்ள தூத்துக்குடி குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை I & II–இல் உள்ளவாறு) மாப்பிள்ளையூரணி எனும் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்க அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டம் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121

(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)

PSL No.202509PSL0171.

## பிற்சேர்க்கை — I

*[அரசாணை (நிலை) எண்.667, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள தூத்துக்குடி குறுவட்டம், புதிய மாப்பிள்ளையூரணி குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள தூத்துக்குடி குறுவட்டத்தின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள தூத்துக்குடி குறுவட்டம் | | புதிய மாப்பிள்ளையூரணி குறுவட்டம் | | எஞ்சியுள்ள தூத்துக்குடி குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 28 | தூத்துக்குடி பகுதி 1 | 25 | சங்கரப்பேரி | 28 | தூத்துக்குடி பகுதி 1 |
| 2. | 33 | தூத்துக்குடி பகுதி 2 | 27 | மாப்பிள்ளையூரணி | 33 | தூத்துக்குடி பகுதி 2 |
| 3. | 24 | மீளவிட்டான் பகுதி 1 | – | – | 24 | மீளவிட்டான் பகுதி 1 |
| 4. | 32 | மீளவிட்டான் பகுதி 2 | – | – | 32 | மீளவிட்டான் பகுதி 2 |
| 5. | 25 | சங்கரப்பேரி | – | – | – | – |
| 6. | 27 | மாப்பிள்ளையூரணி | – | – | – | – |

## பிற்சேர்க்கை — II

*[அரசாணை (நிலை) எண்.667, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள தூத்துக்குடி குறுவட்டம், புதிய மாப்பிள்ளையூரணி குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள தூத்துக்குடி குறுவட்டத்தின் ஆட்சி எல்லை பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை | குறுவட்டம் | மறுசீரமைப்பிற்கு பின்பு | |
|---|---|---|---|---|
| | | தற்போதுள்ள குறுவட்டம் | புதிய குறுவட்டம் | எஞ்சிய குறுவட்டம் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | தலைமையிடம் | தூத்துக்குடி | மாப்பிள்ளையூரணி | தூத்துக்குடி |
| 2. | பரப்பளவு (ச.கி.மீ) | 76.16 | 21.94 | 54.22 |
| 3. | மக்கள் தொகை | 3,43,572 | 59,879 | 2,83,693 |
| 4. | வருவாய் கோட்டத்தின் பெயர் | தூத்துக்குடி | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 5. | சட்டமன்ற தொகுதியின் பெயர் | தூத்துக்குடி, ஓட்டப்பிடாரம் | தூத்துக்குடி, ஓட்டப்பிடாரம் | தூத்துக்குடி, ஓட்டப்பிடாரம் |
| 6. | பாராளுமன்றத் தொகுதியின் பெயர் | தூத்துக்குடி | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 7. | மாநகராட்சிகளின் எண்ணிக்கை | தூத்துக்குடி | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 8. | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | தூத்துக்குடி | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 9. | கிராமங்களின் எண்ணிக்கை | 6 | 2 | 4 |
| 10 | கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை | 2 | 1 | 1 |
| 11 | தலைமையிடத்திலிருந்து வெகுதொலைவில் உள்ள கிராமத்தின் பெயர் / தூரம் | சங்கரப்பேரி – 11.4 கி.மீ. | சங்கரப்பேரி – 9.5 கி. மீ. | மீளவிட்டான் – 8 கி.மீ. |

No.II(1)/REVDM/45/2025.

**[வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – திருவள்ளூர் மாவட்டம் – பூவிருந்தவல்லி வட்டத்திற்க்குட்பட்ட பூவிருந்தவல்லி குறுவட்டத்தினைச் சீரமைத்து புதியதாக திருவேற்காடு எனும் குறுவட்டம்–ஆவடி வட்டத்திற்கு உட்பட்ட திருமுல்லைவாயல் குறுவட்டத்தினை சீரமைத்து புதியதாக கோவில்பதாகை எனும் குறுவட்டம் ஆகிய 2 புதிய குறுவட்டங்கள் உருவாக்குதல்–ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.668, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025* 13, *விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு , நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
3. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண் ந.க. எண் 12303/2025, நாள் 09.04.2025 மற்றும் 09.05.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01/463/2025, நாள் 16.04.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:- எண்.668. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**14. "மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டத்திற்க்குட்பட்ட பூவிருந்தவல்லி குறுவட்டத்தினைச் சீரமைத்து புதியதாக திருவேற்காடு எனும் குறுவட்டம் மற்றும் ஆவடி வட்டத்திற்கு உட்பட்ட திருமுல்லைவாயல் குறுவட்டத்தினை சீரமைத்து புதியதாக கோவில்பதாகை எனும் குறுவட்டம் ஆகிய 2 புதிய குறுவட்டங்கள் உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. உத்தேசிக்கப்பட்டுள்ள குறுவட்டங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை

- உத்தேசிக்கப்பட்டுள்ள திருவேற்காடு மற்றும் கோவில்பதாகை முழுவதும் சென்னை மாநகராட்சி எல்லைக்கு அருகில் அமைந்துள்ளது.
- ஆவடி மாநகராட்சி, பூவிருந்தவல்லி நகராட்சி, மற்றும் திருவேற்காடு நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. தொழில், கல்வி மற்றும் இதர அடிப்படை வசதி ரீதியாக நாளுக்கு நாள் மக்கள்தொகை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.
- அதிகப்படியான மக்கள் தொகை மற்றும் பொது மக்களிடம் இருந்து வரப்பெறும் இணைய வழி சான்றுகளான வகுப்புச் சான்று, வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, வாரிசுச் சான்று, மக்களுடன் முதல்வர் முகாம் மனுக்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் மனுக்கள் மற்றும் முதல்வரின் முகவரி மனுக்கள் இதுபோன்ற இணையவழி மூலம் வரப்பெறும் அதிகப்படியான மனுக்களின் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதிலும், இலவச வீட்டுமனைப் பட்டா, புதிய பட்டா வழங்குதல், நில அளவை மற்றும் பட்டா மாறுதல் ஆகியவை கோரி வரப்பெறும் மனுக்களின் மீதும் புலத்தணிக்கை செய்து நடவடிக்கை மேற்கொள்ள அதிக காலம் ஆகிறது.
- மேலும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியமான, முதியோர் ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம், நலிந்தோர் உதவித்தொகை, விபத்து நிவாரண நிதி, உழவர் பாதுகாப்பு திட்டத்தொகை மற்றும் புதிய குடும்ப அட்டை ஆகிய நலத்திட்டங்கள் வழங்க விசாரணை மற்றும் ஆய்வு மேற்கொண்டு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாகவும், அரசின் நலத்திட்டங்களை விரைந்து மக்களிடம் கொண்டு சேர்க்க ஏதுவாகவும் மற்றும் நிர்வாக நலன் கருதியும், புதிதாக குறுவட்டம் தோற்றுவிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

ii. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிக்கையானது தொடர்புடைய அறிக்கைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டதில் உத்தேசிக்கப்பட்டுள்ள திருவேற்காடு குறுவட்டம், பூவிருந்தவல்லி வட்டம் பூவிருந்தவல்லி குறுவட்டத்தில் ஒரு வருவாய் கிராமமாக இருந்து வருகிறது. அவ்வாறே உத்தேசிக்கப்பட்டுள்ள கோவில்பதாகை குறுவட்டம் ஆவடி வட்டத்திற்கு உட்பட்ட திருமுல்லைவாயல் குறுவட்டத்தில் ஒரு வருவாய் கிராமமாக உள்ளது.

- **உத்தேசிக்கப்பட்டுள்ள திருவேற்காடு குறுவட்டத்தில் அமையவிருக்கும் வருவாய் கிராமங்கள்**

| *வ. எண்* | *வருவாய் கிராமத்தின் எண்* | *வருவாய் கிராமத்தின் பெயர்* | *உள்ளாட்சி அமைப்பின் விவரங்கள்* | *சட்டமன்ற தொகுதி* | *பரப்பளவு (ஹெக்)* | *மக்கள் தொகை* |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | சென்னீர் குப்பம் | பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் | பூவிருந்தவல்லி | 261.79.50 | 17657 |
| 2 | 14 | திருவேற்காடு | திருவேற்காடு நகராட்சி | ஆவடி | 168.54.50 | 14912 |
| 3 | 12 | வீரராகவபுரம் | திருவேற்காடு நகராட்சி | ஆவடி | 189.45.00 | 3068 |
| 4 | 13 | சுந்தர சோழவரம் | திருவேற்காடு நகராட்சி | ஆவடி | 143.96.00 | 3728 |

- **உத்தேசிக்கப்பட்டுள்ள கோவில்பதாகை குறுவட்டத்தில் அமையவிருக்கும் வருவாய் கிராமங்கள்:-**

| *வ. எண்* | *வருவாய் கிராமத்தின் எண்* | *வருவாய் கிராமத்தின் பெயர்* | *உள்ளாட்சி அமைப்பின் விவரங்கள்* | *சட்டமன்ற தொகுதி* | *பரப்பளவு (ஹெக்)* | *மக்கள் தொகை* |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | கோவில் பதாகை (புல எண்கள் 1 முதல் 765 வரை) | ஆவடி மாநகராட்சி | ஆவடி | 1111.86.50 | 30884 |
| 2 | 09 | பாலவேடு | வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம் | மாதாவரம் | 565.81.50 | 9452 |
| 3 | 10 | முக்தாபுதுப்பேட்டை | ஆவடி மாநகராட்சி | ஆவடி | 400.34.50 | 9029 |
| 4 | 11 | மிட்டனமல்லி | ஆவடி மாநகராட்சி | ஆவடி | 480.48.50 | 9016 |

iii. புதியதாக தோற்றுவிக்கப்படும் 2 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடங்கள் பூவிருந்தவல்லி மற்றும் ஆவடி வட்டங்களில் அமையவிருப்பதால் அப்பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு பூவிருந்தவல்லி மற்றும் ஆவடி வருவாய் வட்டாட்சியர் அவர்களின் DDO (Code)–இன்கீழ் உள்ளடக்கப்பட (Mapping) வேண்டும். குறுவட்டங்களின் அடிப்படையில் 1 குறுவட்டத்திற்கு 1 வருவாய் ஆய்வாளர் வீதம் 2 குறுவட்டங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளதால் 2 குறுவட்டங்களுக்கும் அரசால் ஒப்பளிக்கப்படவிருக்கும் வருவாய் ஆய்வாளர் பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், புதியதாக கோரப்படும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிரந்தர பணியிடம் மற்றும் ஊதிய நிலை விகிதம் கீழ்க்கண்டவாறு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது:–

| *வ. எண்* | *பணியிடங்களின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம் (In pay revised scale)* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை–10, ரூ.20,600 - 75,900/– | 2 |
| **மொத்தம்** | | | **2** |

iv. எனவே, பூவிருந்தவல்லி மற்றும் ஆவடி வட்டத்தில் அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கத்தினால் தேவைப்படும் இணையவழி சான்றுகள், அரசு வழங்கும் நலத்திட்டங்கள் மற்றும் பல்வகை சேவைகள், தேர்தல் மற்றும் சட்டம் ஒழுங்கு நிகழ்வுகளின் போதும் சிறப்புடன் செயல்படவும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் கோரிக்கையினை ஏற்று, பூவிருந்தவல்லி குறுவட்டத்தினை சீரமைத்து திருவேற்காடு எனும் குறுவட்டமும், திருமுல்லைவாயல் குறுவட்டத்தினை சீரமைத்து கோவில்பதாகை எனும் குறுவட்டமும் ஆகிய 2 குறுவட்டங்களை தோற்றுவிக்க ஆவண செய்யும்படி கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம் ஆகியோரின் கருத்துக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, கீழ்கண்டவாறு அமையும் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது:–

அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டத்திலுள்ள பூவிருந்தவல்லி குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை I & III–இல் உள்ளவாறு) திருவேற்காடு எனும் புதிய குறுவட்டம் உருவாக்கப்படுகிறது.

ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டத்திலுள்ள திருமுல்லைவாயல் குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை II & IV–இல் உள்ளவாறு) கோவில்பதாகை எனும் புதிய குறுவட்டம் உருவாக்கப்படுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டங்கள் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121

(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)

PSL No.202509PSL0171.

**பிற்சேர்க்கை – I**

*[அரசாணை (நிலை) எண்.668, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள பூவிருந்தவல்லி குறுவட்டம், புதிய திருவேற்காடு குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள பூவிருந்தவல்லி குறுவட்டங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள பூவிருந்தவல்லி குறுவட்டம் | | புதிய திருவேற்காடு குறுவட்டம் | | எஞ்சியுள்ள பூவிருந்தவல்லி குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 36 | பூவிருந்தவல்லி | 15 | சென்னீர் குப்பம் | 36 | பூவிருந்தவல்லி |
| 2. | 37 | அக்ரஹாரம் | 14 | திருவேற்காடு | 37 | அக்ரஹாரம் |
| 3. | 38 | கோபரசநல்லூர் | 12 | வீரராகவபுரம் | 38 | கோபரசநல்லூர் |
| 4. | 39 | காட்டுப்பாக்கம் | 13 | சுந்தரசோழவரம் | 39 | காட்டுப்பாக்கம் |
| 5. | 15 | சென்னீர்குப்பம் | – | – | – | – |
| 6. | 14 | திருவேற்காடு | – | – | – | – |
| 7. | 12 | வீரராகவபுரம் | – | – | – | – |
| 8. | 13 | சுந்தரசோழவரம் | – | – | – | – |

**பிற்சேர்க்கை – II**

*[அரசாணை (நிலை) எண்.668, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள திருமுல்லைவாயல் குறுவட்டம், புதிய கோவில்பதாகை குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள திருமுல்லைவாயல் குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல்**

| வ. எண் | தற்போதுள்ள திருமுல்லைவாயல் குறுவட்டம் | | புதிய கோவில்பதாகை குறுவட்டம் | | எஞ்சியுள்ள திருமுல்லைவாயல் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 16 | கோவில் பதாகை (புல எண்கள் 1 முதல் 765 வரை) | 16 | கோவில் பதாகை (புல எண்கள் 1 முதல் 765 வரை) | 15 | திருமுல்லைவாயல் (புல எண்கள் 1 முதல் 889 வரை) |
| 2. | 15 | திருமுல்லைவாயல் (புல எண்கள் 1 முதல் 889 வரை) | 09 | பாலவேடு | 27 | அயப்பாக்கம் |
| 3. | 27 | அயப்பாக்கம் | 10 | முக்தாபுதுப்பேட்டை | – | – |

| வ. எண் | தற்போதுள்ள திருமுல்லைவாயல் குறுவட்டம் | | புதிய கோவில்பதாகை குறுவட்டம் | | எஞ்சியுள்ள திருமுல்லைவாயல் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 4. | 09 | பாலவேடு | 11 | மிட்டனமல்லி | – | – |
| 5. | 10 | முக்தாபுதுப்பேட்டை | – | – | – | – |
| 6. | 11 | மிட்டனமல்லி | – | – | – | – |

## பிற்சேர்க்கை – III

*[அரசாணை (நிலை) எண்.668, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள பூவிருந்தவல்லி குறுவட்டம், புதிய திருவேற்காடு குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள பூவிருந்தவல்லி குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல்**

| பூவிருந்தவல்லி வட்டம் | | பூவிருந்தவல்லி குறுவட்டம் | | |
|---|---|---|---|---|
| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | தற்போதுள்ள பூவிருந்தவல்லி குறுவட்டம் | புதிய திருவேற்காடு குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் |
| 1. | தலைமையிடம் | பூவிருந்தவல்லி | திருவேற்காடு | பூவிருந்தவல்லி |
| 2. | பரப்பளவு | 1581.38.5 | 763.75.0 | 817.63.5 |
| 3. | மக்கள்தொகை | 128595 | 39365 | 89230 |
| 4. | வருவாய் வட்டத்தின் பெயர் | பூவிருந்தவல்லி | பூவிருந்தவல்லி | பூவிருந்தவல்லி |
| 5. | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருவள்ளூர் | திருவள்ளூர் | திருவள்ளூர் |
| 6. | சட்டமன்ற தொகுதி பெயர் | பூவிருந்தவல்லி / ஆவடி | பூவிருந்தவல்லி /ஆவடி | பூவிருந்தவல்லி |
| 7. | பாராளுமன்ற தொகுதி பெயர் | திருவள்ளூர் | திருவள்ளூர் | திருவள்ளூர் |
| 8. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 8 | 4 | 4 |
| 9. | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 3 | 1 | 2 |
| 10. | நகராட்சியின்கீழ் வரும் கிராமங்களின் எண்ணிக்கை | 5 | 3 | 2 |
| 11. | தலைமையிடத்திலிருந்து வெகுதொலைவிலுள்ள கிராமம். | சுந்தரசோழவரம் | சுந்தரசோழவரம் | கோபரசநல்லூர் |

## பிற்சேர்க்கை – IV

*[அரசாணை (நிலை) எண்.668, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள திருமுல்லைவாயல் குறுவட்டம், புதிய கோவில்பதாகை குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள திருமுல்லைவாயல் குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல்**

| ஆவடி வட்டம் | | திருமுல்லைவாயல் குறுவட்டம் | | |
|---|---|---|---|---|
| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | தற்போதுள்ள திருமுல்லைவாயல் குறுவட்டம் | புதிய கோவில்பதாகை குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் |
| 1. | தலைமையிடம் | திருமுல்லைவாயல் | கோவில்பதாகை | திருமுல்லைவாயல் |
| 2. | பரப்பளவு | 4335.68.50 | 2558.51.0 | 1777.17.5 |
| 3. | மக்கள் தொகை | 270408 | 58381 | 212027 |
| 4. | வருவாய் வட்டத்தின் பெயர் | ஆவடி | ஆவடி | ஆவடி |
| 5. | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருவள்ளூர் | திருவள்ளூர் | திருவள்ளூர் |
| 6. | சட்டமன்ற தொகுதி பெயர் | ஆவடி / மாதவரம் / மதுரவாயல் | ஆவடி / மாதவரம் | ஆவடி / மதுரவாயல் |

| ஆவடி வட்டம் | | திருமுல்லைவாயல் குறுவட்டம் | | |
|---|---|---|---|---|
| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | தற்போதுள்ள திருமுல்லைவாயல் குறுவட்டம் | புதிய கோவில்பதாகை குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் |
| 7. | பாராளுமன்ற தொகுதி பெயர் | திருவள்ளூர் | திருவள்ளூர் | திருவள்ளூர் |
| 8. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 6 | 4 | 2 |
| 9. | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 2 | 1 | 1 |
| 10. | மாநகராட்சியின்கீழ் வரும் கிராமங்களின் எண்ணிக்கை | 4 | 3 | 1 |
| 11. | தலைமையிடத்திலிருந்து வெகுதொலைவிலுள்ள கிராமம். | பாலவேடு | பாலவேடு | அயப்பாக்கம் |

No.II(1)/REVDM/46/2025.

**[வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வருவாய் வட்டத்திலுள்ள தஞ்சாவூர் வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து தஞ்சாவூர் மேற்கு எனும் புதிய குறுவட்டம் உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.669, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு , நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
3. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண் ந.க. எண் 3155825/2025/உ(1), நாள் 05.04.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01/455/2025, நாள் 16.04.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:- எண்.669. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**14. “மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்”.**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வருவாய் வட்டத்திலுள்ள தஞ்சாவூர் வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து தஞ்சாவூர் மேற்கு எனும் புதிய குறுவட்டம் உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. உத்தேசிக்கப்பட்டுள்ள தஞ்சாவூர் மேற்கு குறுவட்டம் தோற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை குறித்த விவரங்கள்.

- தஞ்சாவூர் வருவாய் குறுவட்டமானது 63.4301 ச.கி.மீ பரப்பளவில் அமைந்துள்ளதாகவும், அக்குறுவட்டத்தில் 1,88,976 பொதுமக்கள் வசித்து வருவதாக தெரிவித்துள்ளார்.
- அப்பொதுமக்களிடமிருந்து சான்றுகள் கோரி இணையவழி மனுக்கள் சராசரியாக நாள் ஒன்றுக்கு 115 மனுக்கள் வீதம் மாதம் ஒன்றுக்கு 3500 மனுக்கள் பெறப்பட்டு நிலுவையில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

- உள்வட்டம் முழுவதும் நகர்பகுதிகளாக உள்ளதால் சட்ட ஒழுங்கு பணிகளை விரைவாகவும், சரியான தகவலை அரசுக்கு வழங்க ஏதுவாக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

ii. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் தஞ்சாவூர் குறுவட்டத்தில் உள்ள 13 வருவாய் கிராமங்களை சீரமைத்து புதியதாக தஞ்சாவூர் மேற்கு குறுவட்டம் தோற்றுவிக்கவும், எஞ்சியுள்ள தஞ்சாவூர் குறுவட்டத்தை தஞ்சாவூர் கிழக்கு என பெயர் மாற்றம் செய்யலாம்.

iii. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிக்கையானது தொடர்புடைய அறிக்கைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

iv. புதிய குறுவட்டங்கள் தோற்றுவிக்கும் நேர்வில், குறுவட்டங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடங்கள் வழங்கப்படுகிறது. எனவே, தற்போது புதியதாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் 1 குறுவட்டத்திற்கு வழங்கப்படும் 1 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடத்தை நிரந்தர பணியிடமாக வழங்கும்படி அரசிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், புதியதாக கோரப்படும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிரந்தர பணியிடம் மற்றும் ஊதிய நிலை விகிதம் கீழ்க்கண்டவாறு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது:–

| *வ.எண்* | *பணியிடங்களின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம் (In pay revised scale)* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை–10, ரூ.20,600–75,900/– | 1 |
| | | **மொத்தம்** | **1** |

v. மேற்காணும் அட்டவணையின் அடிப்படையில் புதியதாக தோற்றுவிக்கப்படும் 1 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் தஞ்சாவூர் வட்டத்தில் அமையவிருப்பதால் அப்பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு தஞ்சாவூர் வருவாய் வட்டாட்சியர் அவர்களின் DDO (Code)–இன் கீழ் உள்ளடக்கப்பட (Mapping) வேண்டும்.

vi. தஞ்சாவூர் வட்டத்தில் அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கத்தினால் தேவைப்படும் இணையவழி சான்றுகள், அரசு வழங்கும் நலத்திட்டங்கள் மற்றும் பல்வகை சேவைகள், தேர்தல் மற்றும் சட்டம் ஒழுங்கு நிகழ்வுகளின் போதும் சிறப்புடன் செயல்பட தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் கோரிக்கையினை ஏற்று, பொதுமக்கள் நலன் மற்றும் நிருவாக நலன் கருதி தஞ்சாவூர் குறுவட்டத்தினைச் சீரமைத்து தஞ்சாவூர் மேற்கு என்ற புதிய குறுவட்டத்தினை தோற்றுவிக்கவும், எஞ்சிய தஞ்சாவூர் குறுவட்டத்தினைச் தஞ்சாவூர் கிழக்கு என பெயர் மாற்றம் செய்திட ஆவண செய்யும்படி கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மாவட்டம் ஆகியோரின் கருத்துக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டத்திலுள்ள தஞ்சாவூர் வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை I & II–இல் உள்ளவாறு) தஞ்சாவூர் மேற்கு எனும் புதிய குறுவட்டம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள தஞ்சாவூர் குறுவட்டமானது தஞ்சாவூர் கிழக்கு என அமையும் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டம் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121

(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)

PSL No.202509PSL0171.

## பிற்சேர்க்கை — I

*[அரசாணை (நிலை) எண்.669, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தஞ்சாவூர் வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து புதிய தஞ்சாவூர் மேற்கு குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள தஞ்சாவூர் குறுவட்டமானது தஞ்சாவூர் கிழக்கு என அமையும். அதன் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள தஞ்சாவூர் குறுவட்டம் | | புதிய தஞ்சாவூர் மேற்கு குறுவட்டம் | | எஞ்சியுள்ள தஞ்சாவூர் கிழக்கு குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 20 | நீலகிரி தெற்கு தோட்டம் | 20 | நீலகிரி தெற்கு தோட்டம் | 21 | புதுப்பட்டினம் |
| 2. | 21 | புதுப்பட்டினம் | 27 | மேலவெளித்தோட்டம் | 22 | புளியந்தோப்பு |
| 3. | 22 | புளியந்தோப்பு | 28 | இராமநாதபுரம் முதன்மை | 23 | ஆவுசாகிப்தோட்டம் |
| 4. | 23 | ஆவுசாகிப்தோட்டம் | 28/1 | இராமநாதபுரம் கூடுதல் | 24 | கீரைக்கொல்லை |
| 5. | 24 | கீரைக்கொல்லை | 29 | பள்ளியேரி | 25 | கருந்தட்டான்குடி |
| 6. | 25 | கருந்தட்டான்குடி | 30/1 | வலம்புரியூனிட் | 30 | வேலூர்/வேலூர் கோவிந்தராவ் தோட்டம் |
| 7. | 27 | மேலவெளித்தோட்டம் | – | – | 33 | பள்ளியக்ரஹாரம் |
| 8. | 28 | இராமநாதபுரம் முதன்மை | – | – | – | – |
| 9. | 28/1 | இராமநாதபுரம் கூடுதல் | – | – | – | – |
| 10. | 29 | பள்ளியேரி | – | – | – | – |
| 11. | 30 | வேலூர் / வேலூர் கோவிந்தராவ் தோட்டம் | – | – | – | – |
| 12. | 30/1 | வலம்புரியூனிட் | – | – | – | – |
| 13. | 33 | பள்ளியக்ரஹாரம் | | – | – | – |

## பிற்சேர்க்கை — II

*[அரசாணை (நிலை) எண்.669, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தஞ்சாவூர் வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து புதிய தஞ்சாவூர் மேற்கு குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள தஞ்சாவூர் கிழக்கு குறுவட்டத்தின் ஆட்சி எல்லை பட்டியல்.**

| வ. எண் | ஆட்சி எல்லை | பிரிக்கப்படும் குறுவட்டம் | புதிய குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் |
|---|---|---|---|---|
| 1 | தலைமையிடம் | தஞ்சாவூர் | தஞ்சாவூர் மேற்கு | தஞ்சாவூர் கிழக்கு |
| 2 | பரப்பளவு | 63.4301 ச.கி.மீ | 35.5195 ச.கி.மீ | 27.9106 ச.கி.மீ |
| 3 | மக்கள்தொகை | 188976 | 85874 | 103102 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 6 | சட்டமன்றம் பெயர் | தஞ்சாவூர் திருவையாறு | தஞ்சாவூர் திருவையாறு | தஞ்சாவூர் |
| 7 | பாராளுமன்றம் பெயர் | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 13 | 6 | 7 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 5 | 4 | 1 |

| *வ. எண்* | *ஆட்சி எல்லை* | *பிரிக்கப்படும் குறுவட்டம்* | *புதிய குறுவட்டம்* | *எஞ்சியுள்ள குறுவட்டம்* |
|---|---|---|---|---|
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள கிராமம் / தூரம் | வலம்புரி யூனிட் 8.5 கி.மீ | பள்ளியேரி 5.0 கி.மீ | புளியந்தோப்பு 4.5 கி.மீ |

No.II(1)/REVDM/47/2025.

**[வருவாய் நிருவாகம் — ஆட்சி எல்லை — கடலூர் மாவட்டம் - கடலூர் வருவாய் வட்டத்திலுள்ள மஞ்சக்குப்பம், திருவந்திபுரம் மற்றும் ரெட்டிச்சாவடி ஆகிய வருவாய் குறுவட்டங்களைச் சீரமைத்து சேடப்பாளையம் எனும் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.670, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு , நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
3. கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண் ந.க. வி5/3178541/2025/உ(1), நாள் 09.05.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01–04/128/2025, நாள் 15.04.2025 மற்றும் 16.05.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:- எண்.670. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**14. “மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்”.**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், கடலூர் மாவட்டம், கடலூர் வருவாய் வட்டத்திலுள்ள மஞ்சக்குப்பம், திருவந்திபுரம் மற்றும் ரெட்டிச்சாவடி ஆகிய வருவாய் குறுவட்டங்களைச் சீரமைத்து சேடப்பாளையம் எனும் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடலூர் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. தற்போதுள்ள மஞ்சக்குப்பம் குறுவட்டத்தில் 28 வருவாய் கிராமங்களும், திருவந்திபுரம் குறுவட்டத்தில் 23 வருவாய் கிராமங்கள் மற்றும் ரெட்டிச்சாவடி குறுவட்டத்தில் 34 வருவாய் கிராமங்கள் அமைந்துள்ளதாகவும், அவ்வருவாய் கிராமங்களின் பெயர் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:–

ii. மஞ்சக்குப்பம் மற்றும் திருவந்திபுரம் குறுவட்டங்களில் உள்ள வருவாய் கிராமங்களை சீரமைத்து புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சேடப்பாளையம் குறுவட்டத்தில் மொத்தம் 18 வருவாய் கிராமங்கள் இணைக்கப்படுகிறது.

iii. கடலூர் வட்டம், ரெட்டிச்சாவடி குறுவட்டத்திற்குட்பட்ட 34 கிராமங்களில் நிருவாக காரணங்களால் 5 கிராமங்களை மஞ்சக்குப்பம் குறுவட்டத்துடனும், 5 கிராமங்களை திருவந்திபுரம் குறுவட்டத்துடனும் இணைத்திட வேண்டும்.

iv. புதிதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சேடப்பாளையம் குறுவட்டத்துடன் இணைக்கப்படும் கிராமங்களின் எண்ணிக்கை விவர அட்டவணை.

- **மஞ்சக்குப்பம் குறுவட்டம்**

| *நடைமுறையில் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை* | *மஞ்சக்குப்பம் குறுவட்டத்தி லிருந்து நீக்கம் செய்யப்பட்டு, புதிதாக தோற்றுவிக்கப்பட உள்ள குறுவட்டத்துடன் சேர்க்கப்படும் கிராமங்களின் எண்ணிக்கை* | *நிருவாக காரணங்களால் ரெட்டிச்சாவடி குறுவட்டத்திலிருந்து மஞ்சக்குப்பம் குறுவட்டத்துடன் இணைக்கப்படும் கிராமங்களின் எண்ணிக்கை* | *மறு சீரமைப்புக்குப் பின் மஞ்சக்குப்பம் குறுவட்டத்தில் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 28 | 13 | 05 | 20 |

- திருவந்திபுரம் குறுவட்டம்

| *நடைமுறையில் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை* | *திருவந்திபுரம் குறுவட்டத்தி லிருந்து நீக்கம் செய்யப்பட்டு, புதிதாக தோற்றுவிக்கப்பட உள்ள குறுவட்டத்துடன் சேர்க்கப்படும் கிராமங்களின் எண்ணிக்கை* | *ரெட்டிச்சாவடி குறுவட்டத்திலிருந்து திருவந்திபுரம் குறுவட்டத்திற்கு நிருவாக காரணங்களுக்காக சேர்க்கப்படும் கிராமங்களின் எண்ணிக்கை* | *மறு சீரமைப்புக்குப் பின் குறுவட்டத்தில் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 23 | 05 | 05 | 23 |

- ரெட்டிச்சாவடி குறுவட்டம்

| *நடைமுறையில் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை* | *ரெட்டிச்சாவடி குறுவட்டத்தி லிருந்து நீக்கம் செய்யப்பட்டு, மஞ்சக்குப்பம் குறுவட்டத்துடன் சேர்க்கப்படும் கிராமங்களின் எண்ணிக்கை* | *ரெட்டிச்சாவடி குறுவட்டத்திலிருந்து நீக்கம் செய்யப்பட்டு திருவந்திபுரம் குறுவட்டத்துடன் சேர்க்கப்படும் கிராமங்களின் எண்ணிக்கை* | *மறு சீரமைப்புக்குப் பின் குறுவட்டத்தில் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 34 | 05 | 05 | 24 |

- **புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சேடப்பாளையம் குறுவட்டத்தில் இணைக்கப்படும் கிராமங்களின் எண்ணிக்கை:-**

| *மஞ்சக்குப்பம் குறுவட்டத்திலிருந்து நீக்கம் செய்யப்பட்டு, புதிதாக தோற்றுவிக்கப்பட உள்ள குறுவட்டத்துடன் சேர்க்கப்படும் கிராமங்களின் எண்ணிக்கை* | *திருவந்திபுரம் குறுவட்டத்திலிருந்து நீக்கம் செய்யப்பட்டு, புதிதாக தோற்றுவிக்கப்பட உள்ள குறுவட்டத்துடன் சேர்க்கப்படும் கிராமங்களின் எண்ணிக்கை* | *மறு சீரமைப்புக்குப் பின் குறுவட்டத்தில் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| 13 | 05 | 18 |

v. உத்தேசிக்கப்பட்டுள்ள சேடப்பாளையம் குறுவட்டம் தோற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை.

- கடலூர் மாவட்டம் மற்றும் வட்டம், மஞ்சக்குப்பம் குறுவட்டத்தில் பொது மக்களிடமிருந்து அதிக எண்ணிக்கையில் இணைய வழிச்சான்றுகள் வரப்பெறுவதால், மேற்படி வட்டத்திற்குரிய சார் நிலை அலுவலர்களால் சான்றிதழ்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது.

vi. கடலூர் மாவட்டம், கடலூர் வருவாய் வட்டத்திலுள்ள மஞ்சக்குப்பம், திருவந்திபுரம் மற்றும் ரெட்டிச்சாவடி ஆகிய வருவாய் குறுவட்டங்களைச் சீரமைத்து சேடப்பாளையம் எனும் புதிய வருவாய் குறுவட்டம் தோற்றுவிக்க கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்.

vii. கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையானது தொடர்புடைய அறிக்கைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது. உத்தேசிக்கப்பட்டுள்ள சேடப்பாளையம் குறுவட்டமானது, திருவந்திபுரம் குறுவட்டத்தில் ஒரு வருவாய் கிராமமாக உள்ளது. இவற்றுள், உத்தேசிக்கப்பட்டுள்ள சேடப்பாளையம் குறுவட்டத்தில் 18 வருவாய் கிராமங்கள் (மஞ்சக்குப்பம் குறுவட்டத்தில் உள்ள 13 வருவாய் கிராமங்கள் மற்றும் திருவந்திபுரம் குறுவட்டத்தில் உள்ள 5 வருவாய் கிராமங்களை இணைத்து) கொண்டு செயல்படும் என தெரிவிக்கப்படுகிறது.

viii. மேலும், கடலூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் இடைப்பட்ட தூரமானது 20 கி.மீட்டருக்கு உட்பட்டுள்ளதால், பொது மக்களுக்கு இணையவழியில் அளிக்கப்படும் சான்றிதழ் மற்றும் பட்டா மாற்றம் தொடர்பான சேவையினை பெற அதிக தொலைவு செல்ல வேண்டிய சூழலினை தவிர்த்திட மஞ்சக்குப்பம் மற்றும் திருவந்திபுரம் குறுவட்டத்தினை சீரமைத்து புதியதாக சேடப்பாளையம் குறுவட்டம் உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ix. இதனை தவிர்த்து, உத்தேசிக்கப்பட்டுள்ள சேடப்பாளையம் தோற்றுவிக்கும் நேர்வில், உருவாக்கப்படவிருக்கும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிரந்தர பணியிடம் மற்றும் ஊதிய நிலை விகிதம் கீழ்க்கண்டவாறு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது:–

| வ. எண் | பணியிடங்களின் பெயர் | நிலை மற்றும் ஊதிய விகிதம் (In pay revised scale) | புதிய பணியிடம் |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை–10,ரூ.20,600 – 75,900/– | 1 |
| **மொத்தம்** | | | **1** |

x. கடலூர் மாவட்டம், மஞ்சக்குப்பம் உள்வட்டம் மாநகராட்சி பகுதிகளில் அமைந்துள்ளதால் மக்கள்தொகையினை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் எளிதில் சென்றடைய ஏதுவாகவும், நிருவாக நலன் கருதியும் கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று மஞ்சக்குப்பம் மற்றும் திருவந்திபுரம் குறுவட்டத்தினை சீரமைத்து சேடப்பாளையம் எனும் புதிய குறுவட்டம் உருவாக்கிட ஆவண செய்யுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், கடலூர் மாவட்டம் ஆகியோரின் கருத்துக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, கடலூர் மாவட்டம், கடலூர் வட்டத்திலுள்ள மஞ்சக்குப்பம், திருவந்திபுரம் மற்றும் ரெட்டிச்சாவடி ஆகிய குறுவட்டங்களைச் சீரமைத்து (பிற்சேர்க்கை I, II & III–இல் உள்ளவாறு) சேடப்பாளையம் எனும் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்க அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டம் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், கடலூர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121

(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)

PSL No.202509PSL0171.

## பிற்சேர்க்கை – I

*[அரசாணை (நிலை) எண்.670, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள மஞ்சக்குப்பம் மற்றும் திருவந்திபுரம் ஆகிய குறுவட்டங்கள், புதிய சேடப்பாளையம் வருவாய் குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள மஞ்சக்குப்பம் குறுவட்டம் | | தற்போதுள்ள திருவந்திபுரம் குறுவட்டம் | | புதிய சேடப்பாளையம் குறுவட்டம் (மஞ்சக்குப்பம் குறுவட்டத்திலிருந்து 13 வருவாய் கிராமங்கள் மற்றும் திருவந்திபுரம் குறுவட்டத்திலிருந்து 5 வருவாய் கிராமங்கள் இணைத்து) | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 80 | காயல்பட்டு | 73 | தொண்டமாநத்தம் | 80 | காயல்பட்டு |
| 2. | 81 | ஆண்டார்முள்ளிப் பள்ளம் | 77 | கோதண்டராமபுரம் | 81 | ஆண்டார் முள்ளிப்பள்ளம் |
| 3. | 79 | ஆலப்பாக்கம் | 60 | பாதிரிக்குப்பம் | 79 | ஆலப்பாக்கம் |
| 4. | 78 | கம்பளிமேடு | 61 | கருப்படித்துண்டு | 78 | கம்பளிமேடு |
| 5. | 75 | தியாகவல்லி | 41 | கூத்தப்பாக்கம் | 75 | தியாகவல்லி |
| 6. | 76 | திருச்சோபுரம் | 53 | நடுவீரப்பட்டு | 76 | திருச்சோபுரம் |
| 7. | 67 | பச்சையாங்குப்பம் | 70 | சேடப்பாளையம் | 67 | பச்சையாங்குப்பம் |
| 8. | 66 | பொன்னியாங்குப்பம் | 74 | செம்மங்குப்பம் | 66 | பொன்னியாங்குப்பம் |
| 9. | 26 | மருதாடு | 56 | ராமாபுரம் | 69 | காரைக்காடு |

| வ. எண் | *தற்போதுள்ள மஞ்சக்குப்பம் குறுவட்டம்* | | *தற்போதுள்ள திருவந்திபுரம் குறுவட்டம்* | | *புதிய சேடப்பாளையம் குறுவட்டம் (மஞ்சக்குப்பம் குறுவட்டத்திலிருந்து 13 வருவாய் கிராமங்கள் மற்றும் திருவந்திபுரம் குறுவட்டத்திலிருந்து 5 வருவாய் கிராமங்கள் இணைத்து)* | |
|---|---|---|---|---|---|---|
| | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* |
| 10. | 44 | செஞ்சிகுமாரபுரம் | 72 | கெங்கமநாயக்கன்குப்பம் | 68 | குடிகாடு |
| 11. | 43 | தோட்டப்பட்டு | 71 | அன்னவல்லி | 65 | கடலூர் முதுநகர் (முனுசிபல் அல்லாதது) |
| 12. | 27 | நத்தப்பட்டு | 54 | சென்னப்பநாயக்கன் பாளையம் | 39 | செல்லங்குப்பம் |
| 13. | 69 | காரைக்காடு | 63 | அரிசிபெரியாங்குப்பம் | 65 | கடலூர் முதுநகர் (முனிசிபல்) |
| 14. | 68 | குடிகாடு | 64 | வெட்டுக்குளம் | 73 | தொண்டமாநத்தம் |
| 15. | 65 | கடலூர் முதுநகர் (முனிசிபல் அல்லாதது) | 57 | மாவடிப்பாளையம் | 77 | கோதண்டராமபுரம் |
| 16. | 39 | செல்லங்குப்பம் | 59 | குமாரப்பேட்டை | 70 | சேடப்பாளையம் |
| 17. | 65 | கடலூர் முதுநகர் (முனிசிபல்) | 55 | வெள்ளக்கரை | 74 | செம்மங்குப்பம் |
| 18. | 40 | திருப்பாதிரிபுலியூர் | 51 | வானமாதேவி (வடக்கு) | 71 | அன்னவல்லி |
| 19. | 36 | மஞ்சக்குப்பம் | 52 | விலங்கல்பட்டு | – | – |
| 20. | 29 | வில்வராயநத்தம் | 82 | வானமாதேவி (தெற்கு) | – | – |
| 21. | 30 | உதாரமாணிக்கம் | 50 | திருமாணிக்குழி | – | – |
| 22. | 38 | வன்னியர்பாளையம் | 58 | திருவந்திபுரம் | – | – |
| 23. | 37 | தேவனாம்பட்டினம் | 49 | ஓட்டேரி | – | – |
| 24. | 42 | கோண்டூர் (முனிசிபல்) | – | – | – | – |
| 25. | 42 | கோண்டூர் (முனிசிபல் அல்லாதது) | – | – | – | – |
| 26. | 28 | வெளிச்செம்மண்டலம் | – | – | – | – |
| 27. | 62 | கரையேறவிட்டகுப்பம் (முனிசிபல்) | – | – | – | – |
| 28. | 62 | கரையேறவிட்டகுப்பம் (முனிசிபல் அல்லாதது) | – | – | – | – |

**பிற்சேர்க்கை — II**

*[அரசாணை (நிலை) எண்.670, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**கடலூர் வட்டம், ரெட்டிச்சாவடி குறுவட்டத்திற்குட்பட்ட 34 கிராமங்களில் நிருவாக காரணங்களால் 5 கிராமங்களை மஞ்சக்குப்பம் குறுவட்டத்துடனும், 5 கிராமங்களை திருவந்திபுரம் குறுவட்டத்துடன் இணைக்கப்படும் கிராமங்கள் மற்றும் எஞ்சியுள்ள ரெட்டிச்சாவடி குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | *தற்போதுள்ள ரெட்டிச்சாவடி குறுவட்டத்தில் அமைந்துள்ள கிராமங்கள்* | | *மஞ்சக்குப்பம் குறுவட்டம் (ரெட்டிச்சாவடி குறுவட்டத்திலிருந்து 5 கிராமங்களை இணைத்து)* | | *திருவந்திபுரம் குறுவட்டம் (ரெட்டிச்சாவடி குறுவட்டத்திலிருந்து 5 கிராமங்களை இணைத்து)* | | *எஞ்சிய ரெட்டிச்சாவடி குறுவட்டம்* | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* |
| 1. | 22 | களையூர் | 36 | மஞ்சக்குப்பம் | 60 | பாதிரிக்குப்பம் | 22 | களையூர் |
| 2. | 23 | இரண்டாயிர விளாகம் | 29 | வில்வராயநத்தம் | 61 | கருப்படித்துண்டு | 23 | இரண்டாயிர விளாகம் |

| வ. எண் | தற்போதுள்ள ரெட்டிச்சாவடி குறுவட்டத்தில் அமைந்துள்ள கிராமங்கள் | | மஞ்சக்குப்பம் குறுவட்டம் (ரெட்டிச்சாவடி குறுவட்டத்திலிருந்து 5 கிராமங்களை இணைத்து) | | திருவந்திபுரம் குறுவட்டம் (ரெட்டிச்சாவடி குறுவட்டத்திலிருந்து 5 கிராமங்களை இணைத்து) | | எஞ்சிய ரெட்டிச்சாவடி குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 3. | 21 | திருப்பணாம் பாக்கம் | 30 | உதாரமாணிக்கம் | 41 | கூத்தப்பாக்கம் | 21 | திருப்பணாம் பாக்கம் |
| 4. | 20 | கரைமேடு | 38 | வன்னியர்பாளையம் | 53 | நடுவீரப்பட்டு | 20 | கரைமேடு |
| 5. | 19 | உள்ளேரிப்பட்டு | 37 | தேவனாம்பட்டினம் | 56 | ராமாபுரம் | 19 | உள்ளேரிப்பட்டு |
| 6. | 18 | மலையபெருமாள் அகரம் | 42 | கோண்டூர் (முனிசிபல்) | 72 | கெங்கமநாயக்கன் குப்பம் | 18 | மலையபெருமாள் அகரம் |
| 7. | 17 | பள்ளிப்பட்டு | 42 | கோண்டூர் (முனிசிபல் அல்லாதது) | 54 | சென்னப்ப நாயக்கன் பாளையம் | 17 | பள்ளிப்பட்டு |
| 8. | 2 | நல்லாத்தூர் | 28 | வெளிச் செம்மண்டலம் | 63 | அரிசி பெரியாங்குப்பம் | 2 | நல்லாத்தூர் |
| 9. | 1 | மேலக்குப்பம் | 62 | கரையேறவிட்ட குப்பம் (முனிசிபல்) | 64 | வெட்டுக்குளம் | 1 | மேலக்குப்பம் |
| 10. | 3 | தூக்கணாம்பாக்கம் | 62 | கரையேறவிட்ட குப்பம் (முனிசிபல் அல்லாதது) | 57 | மாவடிப் பாளையம் | 3 | தூக்கணாம்பாக்கம் |
| 11. | 4 | தென்னம்பாக்கம் | 40 | திருப்பாதிரிபுலியூர் | 59 | குமாரப்பேட்டை | 4 | தென்னம்பாக்கம் |
| 12. | 48 | பில்லாலி | 27 | நத்தப்பட்டு | 55 | வெள்ளக்கரை | 24 | அழகியநத்தம் |
| 13. | 47 | குணமங்கலம் | 43 | தோட்டப்பட்டு | 51 | வானமாதேவி (வடக்கு) | 6 | கீழ்குமாரமங்கலம் |
| 14. | 45 | வரக்கால்பட்டு | 44 | செஞ்சிகுமாரபுரம் | 52 | விலங்கல்பட்டு | 7 | ஒடலப்பட்டு |
| 15. | 46 | காராமணிக்குப்பம் | 26 | மருதாடு | 82 | வானமாதேவி (தெற்கு) | 14 | மேலழிஞ்சிப்பட்டு |
| 16. | 25 | வெள்ளப்பாக்கம் | 35 | குண்டு உப்பலவாடி | 50 | திருமாணிக்குழி | 13 | கீழ்அழிஞ்சிப்பட்டு |
| 17. | 35 | குண்டுஉப்பலவாடி | 31 | பெரியகங்கணாங் குப்பம் | 58 | திருவந்திபுரம் | 15 | நாகப்பனூர் |
| 18. | 31 | பெரியகங்கணாங் குப்பம் | 32 | சின்னகங்கணாங் குப்பம் | 49 | ஓட்டேரி | 12 | மதலப்பட்டு |
| 19. | 32 | சின்னகங்கணாங் குப்பம் | 33 | உச்சிமேடு | 48 | பில்லாலி | 8 | புதுக்கடை |
| 20. | 33 | உச்சிமேடு | 34 | சுபஉப்பலவாடி | 47 | குணமங்கலம் | 9 | வடபுரம்கீழ்பாதி |
| 21. | 34 | சுபஉப்பலவாடி | – | – | 45 | வரக்கால்பட்டு | 11 | சிங்கிரிகுடி |
| 22. | 24 | அழகியநத்தம் | – | – | 46 | காராமணிக் குப்பம் | 10 | கிளிஞ்சிக்குப்பம் |
| 23. | 6 | கீழ்குமாரமங்கலம் | – | – | 25 | வெள்ளப்பாக்கம் | 5 | செல்லஞ்சேரி |
| 24. | 7 | ஒடலப்பட்டு | – | – | – | – | 16 | காரணப்பட்டு |
| 25. | 14 | மேலழிஞ்சிப்பட்டு | – | – | – | – | – | – |
| 26. | 13 | கீழ்அழிஞ்சிப்பட்டு | – | – | – | – | – | – |
| 27. | 15 | நாகப்பனூர் | – | – | – | – | – | – |
| 28. | 12 | மதலப்பட்டு | – | – | – | – | – | – |
| 29. | 8 | புதுக்கடை | – | – | – | – | – | – |
| 30. | 9 | வடபுரம் கீழ்பாதி | – | – | – | – | – | – |
| 31. | 11 | சிங்கிரிகுடி | – | – | – | – | – | – |
| 32. | 10 | கிளிஞ்சிக்குப்பம் | – | – | – | – | – | – |
| 33. | 5 | செல்லஞ்சேரி | – | – | – | – | – | – |
| 34. | 16 | காரணப்பட்டு | – | – | – | – | – | – |

**பிற்சேர்க்கை – III**

*[அரசாணை (நிலை) எண்.670, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**மறுசீரமைப்பிற்குப் பின் மஞ்சக்குப்பம், திருவந்திபுரம், ரெட்டிச்சாவடி குறுவட்டங்கள் மற்றும் புதிய சேடப்பாளையம் குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல்**

| *ஆட்சி எல்லை விவரம்* | *பிரித்தலுக்கு முன்* | | | *பிரித்தலுக்கு பின்* | | | *புதிய குறுவட்டம்* |
|---|---|---|---|---|---|---|---|
| *தலைமையிடம்* | *மஞ்சக்குப்பம்* | *திருவந்திபுரம்* | *ரெட்டிச்சாவடி* | *மஞ்சக்குப்பம்* | *திருவந்திபுரம்* | *ரெட்டிச்சாவடி* | *சேடப்பாளையம்* |
| பரப்பளவு | 47.5 Sq. km | 96.0 Sq. km | 66.0 Sq. km | 39.50 Sq. km | 90.0 Sq. km | 53.0 Sq. km | 27.0 Sq. km |
| மக்கள்தொகை | 2,46,260 | 1,46,481 | 1,35,025 | 1,87,575 | 1,15,844 | 1,02,458 | 1,21,889 |
| வருவாய் வட்டத்தின் பெயர் | கடலூர் | கடலூர் | கடலூர் | கடலூர் | கடலூர் | கடலூர் | கடலூர் |
| வருவாய் கோட்டத்தின் பெயர் | கடலூர் | கடலூர் | கடலூர் | கடலூர் | கடலூர் | கடலூர் | கடலூர் |
| சட்டமன்றம் பெயர் | கடலூர் மற்றும் குறிஞ்சிப்பாடி | கடலூர் மற்றும் குறிஞ்சிப்பாடி | கடலூர் மற்றும் குறிஞ்சிப்பாடி | கடலூர் | கடலூர் மற்றும் குறிஞ்சிப்பாடி | கடலூர் | கடலூர் மற்றும் குறிஞ்சிப்பாடி |
| பாராளுமன்றம் பெயர் | கடலூர் | கடலூர் | கடலூர் | கடலூர் | கடலூர் | கடலூர் | கடலூர் |
| வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 28 | 23 | 34 | 20 | 23 | 24 | 18 |
| கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 12 | 14 | 15 | 9 | 14 | 9 | 11 |
| தலைமையிடத்தி லிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம்/ தூரம் | ஆண்டார்முள் ளிப்பள்ளம் – 25 கி.மீ | சி.என். பாளையம் – 22 கி.மீ | நல்லாத்தூர் –17 கி.மீ | மருதாடு – 8 கி.மீ | சி.என். பாளையம் – 22 கி.மீ | நல்லாத்தூர் –17 கி.மீ | ஆண்டார் முள்ளிப்பள்ளம் – 20 கி.மீ |

No.II(1)/REVDM/48/2025.

**[வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – சென்னை மாவட்டம் – மாநகராட்சி பகுதிகளை மறுசீரமைத்து கத்திவாக்கம், கடப்பாக்கம், மாத்தூர், புழல், ராமாபுரம், வளசரவாக்கம், போரூர், முகப்பேர், மணப்பாக்கம், நங்கநல்லூர், சைதாபேட்டை, மடிப்பாக்கம், நீலாங்கரை மற்றும் துரைப்பாக்கம் ஆகிய 14 குறுவட்டங்கள் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.671, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு, நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
3. சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண் அ1/e–3147337/2025, நாள் 08.04.2025 மற்றும் 14.05.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01–04/126/2025, நாள் 16.04.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை:- எண்.671. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1) பிரிவு, நாள்: 29 செப்டம்பர் 2025.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**14. "மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், சென்னை மாவட்டம், மாநகராட்சி பகுதிகளை மறுசீரமைத்து கத்திவாக்கம், கடப்பாக்கம், மாத்தூர், புழல், ராமாபுரம், வளசரவாக்கம், போரூர், முகப்பேர், மணப்பாக்கம், நங்கநல்லூர், சைதாபேட்டை, மடிப்பாக்கம், நீலாங்கரை மற்றும் துரைப்பாக்கம் ஆகிய 14 குறுவட்டங்கள் உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட சென்னை மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. சென்னை மாவட்ட எல்லையை பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்கு இணையாக விரிவாக்கம் செய்து திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து 42 கிராமங்களும், காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து 25 கிராமங்களும் பிரிக்கப்பட்டு அம்பத்தூர், மாதவரம், மதுரவாயல், திருவொற்றியூர், ஆலந்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய ஆறு வட்டங்கள் சென்னை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு 16.08.2018 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது சென்னை மாவட்டத்தில் 17 வட்டங்கள், 49 குறுவட்டங்கள் மற்றும் 144 வருவாய் கிராமங்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ii. இந்நேர்வில், சென்னை நகரமயமாதல், பல்வேறு துறையின் வேலைவாய்ப்புகள், கல்வி மற்றும் மறுகுடியமர்வு மூலம் இடம்பெயரும் புதிய குடும்பங்கள் போன்ற காரணங்களினால் தற்பொழுது மக்கள் தொகை வெகுவாக வளர்ந்து வரும் சூழ்நிலையில் இவர்களிடமிருந்து தினந்தோறும் பெறப்படும் மனுக்கள் மீது துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளவும், அன்றாடம் அரசு இ–சேவை மையம் மூலம் விண்ணப்பிக்கும் பட்டா மாறுதல் மனுக்கள், சாதிச்சான்று, வருமான சான்று, வாரிசு சான்று, இருப்பிட சான்று, இரண்டு பெண் குழந்தைகள் சான்று, முதியோர் உதவி தொகை, விதவை உதவித் தொகை, ஆதரவற்ற விதவைத் தொகை மற்றும் வட்டாட்சியர்களால் அளிக்கப்படும் அனைத்து சான்றுகள் கோரி பொது மக்களிடமிருந்து எண்ணற்ற மனுக்கள் வரப்பெறுவதால் இம்மனுக்கள் மீது உடனடியாக தீர்வு கண்டு மக்களுக்கு அரசின் திட்டங்கள் சென்றடைவதற்கு கீழ்க்கண்டவாறு புதிய குறுவட்டங்களை உருவாக்குவது தேவையான ஒன்றாக உள்ளது எனவும் தெரிவித்து பின்வரும் 14 குறுவட்டங்களை புதியதாக உருவாக்க பரிந்துரை செய்துள்ளார்.

- திருவொற்றியூர் வட்டம், திருவொற்றியூர் குறுவட்டம் சீரமைத்து கத்திவாக்கம் எனும் 1 புதிய குறுவட்டம்.
- திருவொற்றியூர் வட்டம், மணலி குறுவட்டம் சீரமைத்து கடப்பாக்கம் எனும் புதிய குறுவட்டம்.
- மாதவரம் வட்டம், மாதவரம் குறுவட்டம் சீரமைத்து மாத்தூர் மற்றும் புழல் எனும் 2 புதிய குறுவட்டங்கள்.
- மதுரவாயல் வட்டம், மதுரவாயல் குறுவட்டம் சீரமைத்து ராமாபுரம், வளசரவாக்கம் மற்றும் போரூர் எனும் 3 புதிய குறுவட்டங்கள்.
- அம்பத்தூர் வட்டம், அம்பத்தூர் குறுவட்டம் சீரமைக்கப்பட்டு முகப்பேர் எனும் 1 புதிய குறுவட்டம்.
- ஆலந்தூர் வட்டம், ஆலந்தூர் குறுவட்டம் சீரமைத்து மணப்பாக்கம் மற்றும் நங்கநல்லூர் என 2 புதிய குறுவட்டங்கள்.
- மாம்பலம் வட்டம், மாம்பலம், விருகம்பாக்கம், கோடம்பாக்கம் மற்றும் சாலிகிராமம் குறுவட்டங்கள் சீரமைக்கப்பட்டு சைதாபேட்டை எனும் 1 புதிய குறுவட்டம்.
- சோழிங்கநல்லூர் வட்டம், பள்ளிக்கரணை குறுவட்டம் சீரமைக்கப்பட்டு மடிப்பாக்கம் மற்றும் துரைப்பாக்கம் எனும் 2 புதிய குறுவட்டங்கள், சோழிங்கநல்லூர் குறுவட்டம் சீரமைத்து நீலாங்கரை எனும் 1 புதிய குறுவட்டம்.

iii. நகர்ப்புற பகுதிகளில் புதியதாக குறுவட்டம் தோற்றுவிக்கப்படுவதால் புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடங்களின் விவரப்பட்டியல் பின்வருமாறு:–

| *தற்போதுள்ள பணியிடங்கள்* | | | | | | | *புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள்* | | | | | | | *புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய குறுவட்ட வருவாய் ஆய்வாளர் மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சோழிங்கநல்லூர் வட்டம் | மதுரவாயல் வட்டம் | மாதவரம் வட்டம் | ஆலந்தூர் வட்டம் | திருவொற்றியூர் வட்டம் | அம்பத்தூர் வட்டம் | மாம்பலம் வட்டம் | சோழிங்கநல்லூர் வட்டம் | மதுரவாயல் வட்டம் | மாதவரம் வட்டம் | ஆலந்தூர் வட்டம் | திருவொற்றியூர் வட்டம் | அம்பத்தூர் வட்டம் | மாம்பலம் வட்டம் | |
| 2 | 1 | 1 | 1 | 2 | 2 | 4 | 3 | 3 | 2 | 2 | 2 | 1 | 1 | 14 |

iv. சென்னை மாவட்ட வருவாய் அலகிற்குட்பட்ட திருவொற்றியூர், அம்பத்தூர், ஆலந்தூர், மாதவரம், மதுரவாயல், மாம்பலம் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய வட்டங்களில் புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை–14 என்று தெரிவித்து உள்ளார். மேலும், சென்னை மாவட்ட வருவாய் அலகில் உத்தேசிக்கப்பட்டுள்ள குறுவட்டம் தோற்றுவிக்கப்படும்.

v. சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிக்கையானது தொடர்புடைய அறிக்கைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது. சென்னை மாவட்டத்தில் தற்போது 17 வட்டங்கள், 3 கோட்டங்கள், 49 குறுவட்டங்கள் மற்றும் 144 வருவாய் கிராமங்கள் உள்ளது. இவற்றுள், திருவொற்றியூர், அம்பத்தூர், ஆலந்தூர், சோழிங்கநல்லூர், மாதவரம், மதுரவாயல் மற்றும் மாம்பலம் ஆகிய 7 வட்டங்களில் உள்ள குறுவட்டங்களை சீரமைத்து 14 குறுவட்டங்கள் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

vi. மேலும், பணியாளர் மாதிரியின் (Staff pattern) அடிப்படையில் உத்தேசிக்கப்பட்டுள்ள 14 குறுவட்டங்கள் தோற்றுவிக்கப்படும் நேர்வில், குறுவட்டத்திற்கு 1 வருவாய் ஆய்வாளர் பணியிடம் என்ற நிலையில், 14 குறுவட்டங்கள் புதியதாக தோற்றுவிக்கப்படும் நேர்வில் 14 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டியுள்ளது. அப்பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், புதியதாக கோரப்படும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிரந்தர பணியிடம் மற்றும் ஊதிய நிலை விகிதம் கீழ்க்கண்டவாறு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது:–

| *வ. எண்* | *பணியிடங்களின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம் (In pay revised scale)* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை–10,<br>ரூ.20,600 – 75,900/– | 14 |
| **மொத்தம்** | | | **14** |

vii. சென்னை நகரமயமாதல், பல்வேறு துறையின் வேலைவாய்ப்புகள், கல்வி மற்றும் மறுகுடியமர்வு மூலம் இடம்பெயரும் புதிய குடும்பங்கள் போன்ற காரணங்களினால் தற்போது மக்கள் தொகை வெகுவாக வளர்ந்து வரும் சூழ்நிலையில் பெறப்படும் மனுக்கள் மீது துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளவும், அரசின் நலத்திட்டங்களை மக்களை எளிதில் சென்றடையவும், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, திருவொற்றியூர், அம்பத்தூர், ஆலந்தூர், சோழிங்கநல்லூர், மாதவரம், மதுரவாயல் மற்றும் மாம்பலம் ஆகிய ஏழு வட்டங்களில் உள்ள குறுவட்டங்களை சீரமைத்து 14 குறுவட்டங்கள் உருவாக்க ஆவண செய்யுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் ஆகியோரின் கருத்துக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, கீழ்க்கண்டவாறு அமையும் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது:–

அ) சென்னை மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், திருவொற்றியூர் குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை I மற்றும் பிற்சேர்க்கை X, அறிவிக்கை 1–இல் உள்ளவாறு) கத்திவாக்கம் எனும் புதிய குறுவட்டம் உருவாக்கப்படுகிறது.

ஆ) சென்னை மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், மணலி குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை II மற்றும் பிற்சேர்க்கை X, அறிவிக்கை 2–இல் உள்ளவாறு) கடப்பாக்கம் எனும் புதிய குறுவட்டம் உருவாக்கப்படுகிறது.

இ) சென்னை மாவட்டம், மாதவரம் வட்டம், மாதவரம் குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை III மற்றும் பிற்சேர்க்கை X, அறிவிக்கை 3–இல் உள்ளவாறு) மாத்தூர் மற்றும் புழல் எனும் 2 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படுகிறது.

ஈ) சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம், மதுரவாயல் குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை IV மற்றும் பிற்சேர்க்கை X, அறிவிக்கை 4–இல் உள்ளவாறு) ராமாபுரம், வளசரவாக்கம் மற்றும் போரூர் எனும் 3 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படுகிறது.

உ) சென்னை மாவட்டம், அம்பத்தூர் வட்டம், அம்பத்தூர் குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை V மற்றும் பிற்சேர்க்கை X, அறிவிக்கை 5–இல் உள்ளவாறு) முகப்பேர் எனும் புதிய குறுவட்டம் உருவாக்கப்படுகிறது.

ஊ) சென்னை மாவட்டம், மாம்பலம் வட்டம், மாம்பலம், விருகம்பாக்கம், கோடம்பாக்கம் மற்றும் சாலிகிராமம் ஆகிய குறுவட்டங்களைச் சீரமைத்து (பிற்சேர்க்கை VI மற்றும் பிற்சேர்க்கை X, அறிவிக்கை 6–இல் உள்ளவாறு) சைதாப்பேட்டை எனும் புதிய குறுவட்டம் உருவாக்கப்படுகிறது.

எ) சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், ஆலந்தூர் குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை VII மற்றும் பிற்சேர்க்கை X, அறிவிக்கை 7–இல் உள்ளவாறு) மணப்பாக்கம் மற்றும் நங்கநல்லூர் எனும் 2 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படுகிறது.

ஏ) சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், சோழிங்கநல்லூர் குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை VIII மற்றும் பிற்சேர்க்கை X, அறிவிக்கை 8–இல் உள்ளவாறு) நீலாங்கரை எனும் புதிய குறுவட்டம் மற்றும் பள்ளிக்கரணை குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை IX மற்றும் பிற்சேர்க்கை X, அறிவிக்கை 9–இல் உள்ளவாறு) மடிப்பாக்கம் மற்றும் துரைப்பாக்கம் எனும் புதிய குறுவட்டங்கள் ஆகிய 3 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டங்கள் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டங்கள் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், சென்னை ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121

(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)

PSL No.202509PSL0171.

## பிற்சேர்க்கை – I

*[அரசாணை (நிலை) எண்.671, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள திருவொற்றியூர் குறுவட்டம், புதிய கத்திவாக்கம் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள திருவொற்றியூர் குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| *வ. எண்* | *தற்போதுள்ள திருவொற்றியூர் குறுவட்டம்* | | *புதியதாக உருவாக்கப்படும் கத்திவாக்கம் குறுவட்டம்* | | *எஞ்சியுள்ள திருவொற்றியூர் குறுவட்டம்* | |
|---|---|---|---|---|---|---|
| | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* |
| 1. | 06 | கத்திவாக்கம் | 07 | எர்னாவூர் | 08 | திருவொற்றியூர்–1 |
| 2. | 08 | திருவொற்றியூர் 1 | 06 | கத்திவாக்கம் | 08 | திருவொற்றியூர்–2 |
| 3. | 08 | திருவொற்றியூர் 2 | – | – | – | – |
| 4. | 07 | எர்னாவூர் | – | – | – | – |

## பிற்சேர்க்கை – II

*[அரசாணை (நிலை) எண்.671, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள மணலி குறுவட்டம், புதிய கடப்பாக்கம் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள மணலி குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| *வ. எண்* | *தற்போதுள்ள மணலி குறுவட்டம்* | | *புதிய கடப்பாக்கம் குறுவட்டம்* | | *எஞ்சியுள்ள மணலி குறுவட்டம்* | |
|---|---|---|---|---|---|---|
| | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* |
| 1. | 02 | மணலி | 11 | இடையஞ்சாவடி1 | 02 | மணலி |
| 2. | 10 | சின்ன சேக்காடு | 12 | இடையஞ்சாவடி2 | 10 | சின்ன சேக்காடு |
| 3. | 09 | சாத்தான்காடு | 01 | அறியலூர் | 09 | சாத்தான்காடு |
| 4. | 11 | இடையஞ்சாவடி1 | 05 | சடையாங்குப்பம் | – | – |
| 5. | 12 | இடையஞ்சாவடி2 | 04 | கடப்பாக்கம் | – | – |
| 6. | 01 | அறியலூர் | 03 | எலந்தாஞ்சேரி | – | – |
| 7. | 05 | சடையாங்குப்பம் | – | – | – | – |
| 8. | 04 | கடப்பாக்கம் | – | – | – | – |
| 9. | 03 | எலந்தாஞ்சேரி | – | – | – | – |

## பிற்சேர்க்கை – III

*[அரசாணை (நிலை) எண்.671, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள மாதவரம் குறுவட்டம், புதிய மாத்தூர் மற்றும் புழல் குறுவட்டங்கள் மற்றும் எஞ்சியுள்ள மாதவரம் குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள மாதவரம் குறுவட்டம் | | புதிய மாத்தூர் குறுவட்டம் | | புதிய புழல் குறுவட்டம் | | எஞ்சியுள்ள மாதவரம் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 18 | மாதவரம் | 24 | மாத்தூர் | 20 | புழல் | 18 | மாதவரம் |
| 2. | 23 | மஞ்சம்பாக்கம் | 23 | மஞ்சம்பாக்கம் | 17 | கதிர்வேடு | – | – |
| 3. | 24 | மாத்தூர் | 22 | வடபெரும்பாக்கம் | 15 | சுரப்பட்டு | – | – |
| 4. | 17 | கதிர்வேடு | 06 | கொசப்பூர் | 16 | புத்தகரம் | – | – |
| 5. | 06 | கொசப்பூர் | 07 | செட்டிமேடு | 19 | விளக்குப்பட்டு | – | – |
| 6. | 20 | புழல் | – | – | – | – | – | – |
| 7. | 15 | சுரப்பட்டு | – | – | – | – | – | – |
| 8. | 16 | புத்தகரம் | – | – | – | – | – | – |
| 9. | 22 | வடபெரும்பாக்கம் | – | – | – | – | – | – |
| 10. | 07 | செட்டிமேடு | – | – | – | – | – | – |
| 11. | 19 | விளக்குப்பட்டு | – | – | – | – | – | – |

## பிற்சேர்க்கை – IV

*[அரசாணை (நிலை) எண்.671, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள மதுரவாயல் குறுவட்டம், புதிய ராமாபுரம், வளசரவாக்கம் மற்றும் போரூர் குறுவட்டங்கள் ஆகிய குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள மதுரவாயல் குறுவட்டம் | | புதிய ராமாபுரம் குறுவட்டம் | | புதிய வளசரவாக்கம் குறுவட்டம் | | புதிய போரூர் குறுவட்டம் | | எஞ்சியுள்ள மதுரவாயல் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 13 | மதுரவாயல் | 16 | ராமாபுரம் | 15 | வளசரவாக்கம் | 07 | சிவபூதம் | 13 | மதுரவாயல் |
| 2. | 14 | நெற்குன்றம் | – | – | 14 | நெற்குன்றம் | 08 | செட்டியார் அகரம் | 05 | நொளம்பூர் |
| 3. | 05 | நொளம்பூர் | – | – | – | – | 09 | தண்டலம் | – | – |
| 4. | 16 | ராமாபுரம் | – | – | – | – | 12 | போரூர் | – | – |
| 5. | 07 | சிவபூதம் | – | – | – | – | 11 | காரம்பாக்கம் | – | – |
| 6. | 08 | செட்டியார் அகரம் | – | – | – | – | – | – | – | – |
| 7. | 09 | தண்டலம் | – | – | – | – | – | – | – | – |
| 8. | 15 | வளசரவாக்கம் | – | – | – | – | – | – | – | – |
| 9. | 12 | போரூர் | – | – | – | – | – | – | – | – |

| வ. எண் | தற்போதுள்ள மதுரவாயல் குறுவட்டம் | | புதிய ராமாபுரம் குறுவட்டம் | | புதிய வளசரவாக்கம் குறுவட்டம் | | புதிய போரூர் குறுவட்டம் | | எஞ்சியுள்ள மதுரவாயல் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 10. | 11 | காரம்பாக்கம் | – | – | – | – | – | – | – | – |

## பிற்சேர்க்கை – V

*[அரசாணை (நிலை) எண்.671, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள அம்பத்தூர் குறுவட்டம், புதிய முகப்பேர் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள அம்பத்தூர் ஆகிய குறுவட்டங்களில் கிராமங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள அம்பத்தூர் குறுவட்டம் | | புதிய முகப்பேர் குறுவட்டம் | | எஞ்சியுள்ள அம்பத்தூர் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 04 | அம்பத்தூர் | 08 | காக்காபள்ளம் | 04 | அம்பத்தூர் |
| 2. | 05 | அத்திப்பட்டு | 09 | முகப்பேர் | 05 | அத்திப்பட்டு |
| 3. | 06 | மண்ணூர்பேட்டை | 10 | பாடி | 06 | மண்ணூர்பேட்டை |
| 4. | 08 | காக்காபள்ளம் | – | – | – | – |
| 5. | 09 | முகப்பேர் | – | – | – | – |
| 6. | 10 | பாடி | – | – | – | – |

## பிற்சேர்க்கை – VI

*[அரசாணை (நிலை) எண்.671, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள மாம்பலம், விருகம்பாக்கம், கோடம்பாக்கம் (ம) சாலிகிராமம் குறுவட்டங்கள் மற்றும் புதிய சைதாப்பேட்டை குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள மாம்பலம் குறுவட்டம் | | தற்போதுள்ள விருகம்பாக்கம் குறுவட்டம் | | தற்போதுள்ள கோடம்பாக்கம் குறுவட்டம் | | தற்போதுள்ள சாலிகிராமம் குறுவட்டம் | | புதிய சைதாப்பேட்டை குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 06 | மாம்பலம் | 03 | விருகம்பாக்கம் | 02 | கோடம்பாக்கம்–1 | 01 | சாலிகிராமம் | 07 | சைதாப் பேட்டை |
| 2. | 07 | சைதாப்பேட்டை | 04 | நெசப்பாக்கம் | 05 | கோடம்பாக்கம்–2 | – | – | – | – |

மறுசீரமைப்புக்கு பின் மாம்பலம், விருகம்பாக்கம், கோடம்பாக்கம் (ம) சாலிகிராமம் குறுவட்டங்களில் அமையும் கிராமங்கள் விவரம்

| வ. எண் | தற்போதுள்ள மாம்பலம் குறுவட்டம் | | தற்போதுள்ள விருகம்பாக்கம் குறுவட்டம் | | தற்போதுள்ள கோடம்பாக்கம் குறுவட்டம் | | தற்போதுள்ள சாலிகிராமம் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 06 | மாம்பலம் | 03 | விருகம்பாக்கம் | 05 | கோடம்பாக்கம்–2 | 01 | சாலிகிராமம் |
| 2. | 02 | கோடம்பாக்கம்–1 | – | – | – | – | 04 | நெசப்பாக்கம் |

## பிற்சேர்க்கை – VII

*[அரசாணை (நிலை) எண்.671, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

தற்போதுள்ள ஆலந்தூர் குறுவட்டம், புதிய மணப்பாக்கம் மற்றும் நங்கநல்லூர் குறுவட்டங்கள் மற்றும் எஞ்சியுள்ள ஆலந்தூர் குறுவட்டம் ஆகிய குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.

| வ. எண் | தற்போதுள்ள ஆலந்தூர் குறுவட்டம் | | புதிய மணப்பாக்கம் குறுவட்டம் | | புதிய நங்கநல்லூர் குறுவட்டம் | | எஞ்சியுள்ள ஆலந்தூர் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 14 | நந்தம்பாக்கம் | 14 | நந்தம்பாக்கம் | 19 | பழவந்தாங்கள் | 16 | ஆலந்தூர் |
| 2. | 22 | மீனம்பாக்கம் | 22 | மீனம்பாக்கம் | 20 | நங்கநல்லூர் | – | – |
| 3. | 12 | முகலிவாக்கம் | 12 | முகலிவாக்கம் | 21 | தலக்கனஞ்சேரி | – | – |
| 4. | 13 | மணப்பாக்கம் | 13 | மணப்பாக்கம் | 18 | ஆதம்பாக்கம் | – | – |
| 5. | 11 | மதனந்தபுரம் | 11 | மதனந்தபுரம் | – | – | – | – |
| 6. | 19 | பழவந்தாங்கள் | – | – | – | – | – | – |
| 7. | 20 | நங்கநல்லூர் | – | – | – | – | – | – |
| 8. | 21 | தலக்கனஞ்சேரி | – | – | – | – | – | – |
| 9. | 16 | ஆலந்தூர் | – | – | – | – | – | – |
| 10. | 18 | ஆதம்பாக்கம் | – | – | – | – | – | – |

## பிற்சேர்க்கை – VIII

*[அரசாணை (நிலை) எண்.671, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

தற்போதுள்ள சோழிங்கநல்லூர் குறுவட்டம், புதிய நீலாங்கரை குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள சோழிங்கநல்லூர் குறுவட்டம் ஆகிய குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.

| வ. எண் | தற்போதுள்ள சோழிங்கநல்லூர் குறுவட்டம் | | புதிய நீலாங்கரை குறுவட்டம் | | எஞ்சியுள்ள சோழிங்கநல்லூர் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 16 | சோழிங்கநல்லூர் 1 | 14 | ஈஞ்சம்பாக்கம் | 16 | சோழிங்கநல்லூர் 1 |
| 2. | 16 | சோழிங்கநல்லூர் 2 | 10 | பாலவாக்கம் | 16 | சோழிங்கநல்லூர் 2 |
| 3. | 18 | செம்மஞ்சேரி | 09 | கொட்டிவாக்கம் | 18 | செம்மஞ்சேரி |
| 4. | 17 | உத்தண்டி | 12 | நீலாங்கரை | 17 | உத்தண்டி |
| 5. | 14 | ஈஞ்சம்பாக்கம் | – | – | – | – |
| 6. | 10 | பாலவாக்கம் | – | – | – | – |
| 7. | 09 | கொட்டிவாக்கம் | – | – | – | – |
| 8. | 12 | நீலாங்கரை | – | – | – | – |

## பிற்சேர்க்கை — IX

*அரசாணை (நிலை) எண்.671, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

தற்போதுள்ள பள்ளிக்கரணை குறுவட்டம், புதிய துரைப்பாக்கம் மற்றும் மடிப்பாக்கம் மற்றும் எஞ்சியுள்ள பள்ளிக்கரணை குறுவட்டம் ஆகிய குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.

| வ. எண் | தற்போதுள்ள பள்ளிக்கரணை குறுவட்டம் | | புதிய துரைப்பாக்கம் குறுவட்டம் | | புதிய மடிப்பாக்கம் குறுவட்டம் | | எஞ்சியுள்ள பள்ளிக்கரணை குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 03 | உள்ளகரம் | 13 | ஒக்கியம் துரைப்பாக்கம் | 03 | உள்ளகரம் | 11 | சீவரம் |
| 2. | 04 | மடிப்பாக்கம்–1 | 15 | காரப்பாக்கம் | 04 | மடிப்பாக்கம்–1 | 08 | பெருங்குடி |
| 3. | 04 | மடிப்பாக்கம்–2 | – | – | 04 | மடிப்பாக்கம்–2 | 07 | பள்ளிக்கரணை |
| 4. | 11 | சீவரம் | – | – | – | – | 06 | ஜல்லடியான் பேட்டை |
| 5. | 08 | பெருங்குடி | – | – | – | – | – | – |
| 6. | 07 | பள்ளிக்கரணை | – | – | – | – | – | – |
| 7. | 06 | ஜல்லடியான் பேட்டை | – | – | – | – | – | – |
| 8. | 13 | ஒக்கியம் துரைப்பாக்கம் | – | – | – | – | – | – |
| 9. | 15 | காரப்பாக்கம் | | | | | | |

## பிற்சேர்க்கை — X

*அரசாணை (நிலை) எண்.671, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

### அறிவிக்கை - 1

தற்போதைய திருவொற்றியூர் குறுவட்டம், புதிய கத்திவாக்கம் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள திருவொற்றியூர் குறுவட்டம் ஆகிய குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | திருவொற்றியூர் குறுவட்டம் (Parent Firka) | | |
|---|---|---|---|---|
| | | தற்போதுள்ள குறுவட்டம் | புதிய குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் |
| 1. | தலைமையிடம் | திருவொற்றியூர் | கத்திவாக்கம் | திருவொற்றியூர் |
| 2. | பரப்பளவு | 2365.64.10 | 1099.61.10 | 1266.03.00 |
| 3. | மக்கள் தொகை | 299264 | 103618 | 195646 |
| 4. | வருவாய் வட்டத்தின் பெயர் | திருவொற்றியூர் | திருவொற்றியூர் | திருவொற்றியூர் |
| 5. | வருவாய் கோட்டத்தின் பெயர் | வட சென்னை கோட்டம் | வட சென்னை கோட்டம் | வட சென்னை கோட்டம் |
| 6. | சட்டமன்ற தொகுதியின் பெயர் | திருவொற்றியூர் | திருவொற்றியூர் | திருவொற்றியூர் |
| 7. | பாராளுமன்றம் தொகுதியின் பெயர் | வட சென்னை | வட சென்னை | வட சென்னை |
| 8. | நகராட்சிகளின் எண்ணிக்கை | – | – | – |
| 9. | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | – | – | – |
| 10. | பேரூராட்சிகளின் எண்ணிக்கை | – | – | – |
| 11. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 4 | 2 | 2 |
| 12. | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | – | – | – |

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | திருவொற்றியூர் குறுவட்டம் (Parent Firka) | | |
|---|---|---|---|---|
| | | தற்போதுள்ள குறுவட்டம் | புதிய குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் |
| 13. | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | கத்திவாக்கம் (9 கி.மீ) | எர்னாவூர் (5 கி.மீ) | சாத்தான்காடு (3.4 கி.மீ) |
| 14. | சென்னை மாநகராட்சி | மண்டலம்–1 வார்டு–1 முதல் 10 வரை. | மண்டலம்–1 வார்டு–1 முதல் 5 வரை. | மண்டலம்–1 வார்டு–1 முதல் 14 வரை. |

**அறிவிக்கை - 2**

தற்போதுள்ள மணலி குறுவட்டம், புதிய கடப்பாக்கம் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள மணலி குறுவட்டம் ஆகிய குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | மணலி குறுவட்டம் (Parent Firka) | | |
|---|---|---|---|---|
| | | தற்போதுள்ள குறுவட்டம் | புதிய குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் |
| 1. | தலைமையிடம் | மணலி | கடப்பாக்கம் | மணலி |
| 2. | பரப்பளவு | 40.91 | 20.42 | 12.22 |
| 3. | மக்கள் தொகை | 157808 | 38947 | 66644 |
| 4. | வருவாய் வட்டத்தின் பெயர் | திருவொற்றியூர் | திருவொற்றியூர் | திருவொற்றியூர் |
| 5. | வருவாய் கோட்டத்தின் பெயர் | வட சென்னை கோட்டம் | வட சென்னை கோட்டம் | வட சென்னை கோட்டம் |
| 6. | சட்டமன்ற தொகுதியின் பெயர் | திருவொற்றியூர் மாதவரம் பொன்னேரி | மாதவரம் பொன்னேரி | திருவொற்றியூர் |
| 7. | பாராளுமன்றம் தொகுதியின் பெயர் | வட சென்னை திருவள்ளூர் | திருவள்ளூர் | வட சென்னை திருவள்ளூர் |
| 8. | நகராட்சிகளின் எண்ணிக்கை | – | – | – |
| 9. | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | – | – | – |
| 10. | பேரூராட்சிகளின் எண்ணிக்கை | – | – | – |
| 11. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 9 | 6 | 3 |
| 12. | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | – | – | – |
| 13. | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | இடையஞ்சாவடி (14 கி.மீ) | இடையஞ்சாவடி (3.5 கி.மீ) | சாத்தான்காடு (13.5 கி.மீ) |
| 14. | சென்னை மாநகராட்சி | மண்டலம்–2 வார்டு–15 முதல் 18 வரை | மண்டலம்–2 வார்டு–15 முதல் 17 வரை | மண்டலம்–2 வார்டு–18 |

**அறிவிக்கை - 3**

தற்போதுள்ள மாதவரம் குறுவட்டம், புதிய மாத்தூர் மற்றும் புழல் குறுவட்டங்கள் மற்றும் எஞ்சியுள்ள மாதவரம் குறுவட்டம் ஆகிய குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்

| வ. எண். | ஆட்சி எல்லை விவரங்கள் | மாதவரம் குறுவட்டம் (Parent Firka) | | | |
|---|---|---|---|---|---|
| | | தற்போதுள்ள குறுவட்டம் | புதிய குறுவட்டம் | | எஞ்சியுள்ள குறுவட்டம் |
| 1. | தலைமையிடம் | மாதவரம் | புழல் | மாத்தூர் | மாதவரம் |
| 2. | பரப்பளவு | 3938.61.21 | 1318.88.20 | 877.70.01 | 1742.03.0 |
| 3. | மக்கள் தொகை | 389340 | 132410 | 166930 | 90000 |
| 4. | வருவாய் வட்டத்தின் பெயர் | மாதவரம் | மாதவரம் | மாதவரம் | மாதவரம் |

**தற்போதுள்ள சிங்காநல்லூர் மற்றும் கோயம்புத்தூர் டவுன் குறுவட்டங்கள், புதிய இராமநாதபுரம் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள சிங்காநல்லூர் மற்றும் கோயம்புத்தூர் டவுன் குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள சிங்காநல்லூர் குறுவட்டம் | | தற்போதுள்ள கோயம்புத்தூர் டவுன் குறுவட்டம் | | புதிய இராமநாதபுரம் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 5 | சிங்காநல்லூர் | 1 | கோயம்புத்தூர் டவுன் | 2 | இராமநாதபுரம் |
| 2. | 4 | உப்பிலிபாளையம் | 1 | கோயம்புத்தூர் ரூரல் | 3 | சௌரிபாளையம் |
| 3. | 3 | சௌரிபாளையம் | 2 | இராமநாதபுரம் | – | – |

**மறுசீரமைப்பிற்கு பின் எஞ்சியுள்ள சிங்காநல்லூர் மற்றும் கோயம்புத்தூர் டவுன் குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | எஞ்சியுள்ள சிங்காநல்லூர் குறுவட்டம் | | எஞ்சியுள்ள கோயம்புத்தூர் டவுன் குறுவட்டம் | |
|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 5 | சிங்காநல்லூர் | 6 | கோயம்புத்தூர் டவுன் வடக்கு |
| 2. | 4 | உப்பிலிபாளையம் | 7 | கோயம்புத்தூர் டவுன் தெற்கு |
| 3. | – | – | 1 | கோயம்புத்தூர் ரூரல் |

**பிற்சேர்க்கை – VI**

*[அரசாணை (நிலை) எண்.673, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள சூலூர் குறுவட்டம், புதிய இருகூர் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள சூலூர் குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் குறுவட்டம் | புதிய குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் |
|---|---|---|---|---|
| 1 | தலைமையிடம் | சூலூர் | இருகூர் | சூலூர் |
| 2 | பரப்பளவு (ஹெக்டர்) | 11761.30.50 | 5045.45.00 | 6715.85.50 |
| 3 | மக்கள்தொகை | 2,28,763 | 1,22,754 | 1,06,009 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | சூலூர் | | |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் தெற்கு | | |
| 6 | சட்டமன்றம் பெயர் | 116. சூலூர் சட்டமன்றத் தொகுதி | | |
| 7 | பாராளுமன்றம் பெயர் | 20. கோயம்புத்தூர் பாராளுமன்றத் தொகுதி | | |

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் குறுவட்டம் | புதிய குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் |
|---|---|---|---|---|
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 10<br>இருகூர், ஒட்டர்பாளையம், பட்டணம், பீடம்பள்ளி, சூலூர், கண்ணம்பாளையம், கலங்கல், காங்கயம்பாளையம், காடாம்பாடி, ராசிபாளையம் | 04<br>இருகூர், ஒட்டர்பாளையம், பட்டணம், பீடம்பள்ளி | 06<br>சூலூர், கண்ணம்பாளையம், கலங்கல், காங்கயம்பாளையம், காடாம்பாடி, ராசிபாளையம் |
| 9 | கிராம ஊராட்சிகள்/ பேரூராட்சிகளின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி – 6<br>பட்டணம், பீடம்பள்ளி, கலங்கல், காங்கயம்பாளையம், காடாம்பாடி, ராசிபாளையம்<br>பேரூராட்சிகள் – 4<br>இருகூர், சூலூர், கண்ணம்பாளையம், ஒட்டர்பாளையம் | கிராம ஊராட்சி–2<br>பட்டணம், பீடம்பள்ளி<br>பேரூராட்சிகள்–2<br>இருகூர் ஒட்டர்பாளையம் | கிராம ஊராட்சி – 4<br>கலங்கல், காங்கயம்பாளையம், காடாம்பாடி, ராசிபாளையம்<br>பேரூராட்சிகள் – 2<br>சூலூர், கண்ணம்பாளையம், |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | பீடம்பள்ளி 11 கி.மீ | பீடம்பள்ளி 11 கி.மீ | கண்ணம்பாளையம் 6 கி.மீ |
| 11 | கடந்த ஓராண்டில் சான்றுகள் வழங்கப்பட்ட விவரம் | 12,459 | 5,003 | 7,456 |

## பிற்சேர்க்கை – VII

*[அரசாணை (நிலை) எண்.673, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள மேட்டுப்பாளையம் குறுவட்டம், புதிய சிறுமுகை குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள மேட்டுப்பாளையம் குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் குறுவட்டம் | புதியதாக உருவாக்கப்படும் குறுவட்டம் | எஞ்சியுள்ள மேட்டுப்பாளையம் குறுவட்டம் |
|---|---|---|---|---|
| 1 | தலைமையிடம் | மேட்டுப்பாளையம் | சிறுமுகை | மேட்டுப்பாளையம் |
| 2 | பரப்பளவு (ஹெக்டர்) | 19557.30 | 10523.47 | 9033.83 |
| 3 | மக்கள் தொகை | 238608 | 53852 | 184756 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | மேட்டுப்பாளையம் | | |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் வடக்கு. | | |
| 6 | சட்டமன்ற தொகுதி பெயர் | 111 –மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி | | |
| 7 | பாராளுமன்ற தொகுதி பெயர் | 19–நீலகிரி பாராளுமன்ற தொகுதி | | |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 11<br>சிறுமுகை, பெள்ளேபாளையம், இலுப்பநத்தம், மூடுதுறை, சின்னக்கள்ளிப்பட்டி, இரும்பறை, நெல்லித்துறை, ஓடந்துறை, தேக்கம்பட்டி, சிக்கதாசம்பாளையம், ஜடையம்பாளையம் | 6<br>சிறுமுகை, பெள்ளேபாளையம், இலுப்பநத்தம், மூடுதுறை, சின்னக்கள்ளிப்பட்டி, இரும்பறை | 6<br>நெல்லித்துறை, ஓடந்துறை, தேக்கம்பட்டி, சிக்கதாசம்பாளையம் கிழக்கு, சிக்கதாசம்பாளையம் மேற்கு, ஜடையம்பாளையம் |

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் குறுவட்டம் | புதியதாக உருவாக்கப்படும் குறுவட்டம் | எஞ்சியுள்ள மேட்டுப்பாளையம் குறுவட்டம் |
|---|---|---|---|---|
| 9 | கிராம ஊராட்சி / பேரூராட்சி / நகராட்சிகளின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகள்–10<br>நெல்லித்துறை<br>ஒடந்துறை தேக்கம்பட்டி<br>சிக்கதாசம்பாளையம்<br>ஜடையம்பாளையம்<br>பெள்ளேபாளையம்<br>இலுப்பநத்தம் மூடுதுறை<br>சின்னக்கள்ளிப்பட்டி<br>இரும்பறை<br>**நகராட்சி -1**<br>மேட்டுப்பாளையம்<br>**பேரூராட்சி -1**<br>சிறுமுகை | பேரூராட்சி – 1<br>சிறுமுகை<br>**கிராம ஊராட்சி – 5**<br>பெள்ளேபாளையம்<br>இலுப்பநத்தம் மூடுதுறை<br>சின்னக்கள்ளிப்பட்டி<br>இரும்பறை | நகராட்சி –1<br>மேட்டுப்பாளையம்<br>**கிராம ஊராட்சி – 5**<br>நெல்லித்துறை<br>ஒடந்துறை தேக்கம்பட்டி<br>சிக்கதாசம்பாளையம்<br>ஜடையம்பாளையம் |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | சின்னக்கள்ளிப்பட்டி, மூடுதுறை மற்றும் இரும்பறை கிராமங்களிலிருந்து தலைமை இடத்திற்கான தூரம் சுமார் 30 கி.மீ நெல்லித்துறை 15 கிலோ மீட்டர் மற்றும் செட்டில்மெண்ட் பகுதிகள் | சின்னக்கள்ளிப் பட்டி, மூடுதுறை மற்றும் இரும்பறை கிராமங்களிலிருந்து தலைமை இடத்திற்கான தூரம் சுமார் 15 கி.மீ | நெல்லித்துறை 15 கிலோ மீட்டர் மற்றும் செட்டில் மெண்ட் பகுதிகள் |
| 11 | ஓராண்டில் சான்றுகள் வழங்கப்பட்ட விபரம் | 15545 | 4843 | 10702 |

**பிற்சேர்க்கை – VIII**

*[அரசாணை (நிலை) எண்.673, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள கணபதி குறுவட்டம், புதிய சங்கனூர் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள கணபதி குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் குறுவட்டம் | புதிய குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் |
|---|---|---|---|---|
| 1 | தலைமையிடம் | கணபதி | சங்கனூர் | கணபதி |
| 2 | பரப்பளவு (ஹெக்டர்) | 2302.66.50 | 844.95.00 | 1457.71.50 |
| 3 | மக்கள்தொகை | 484713 | 178199 | 306514 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் வடக்கு | | |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் வடக்கு | | |
| 6 | சட்டமன்ற தொகுதி பெயர் | 118. கோயம்புத்தூர் வடக்கு | | |
| 7 | பாராளுமன்ற தொகுதி பெயர் | 20. கோயம்புத்தூர் | | |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 04<br>1. கணபதி கிழக்கு<br>2. கணபதி மேற்கு<br>3.கிருஷ்ணராயபுரம்<br>4.சங்கனூர் | 02<br>சங்கனூர் வடக்கு<br>சங்கனூர் தெற்கு | 03<br>1. கணபதி கிழக்கு<br>2. கணபதி மேற்கு<br>3. கிருஷ்ண ராயபுரம் |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | மாநகராட்சி 18 வார்டுகள் | மாநகராட்சி 7 வார்டுகள் | மாநகராட்சி 11 வார்டுகள் |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகுதொலைவிலுள்ள கிராமம் / தூரம் | 6.2 கி.மீ<br>சங்கனூர் | 5.3 கி.மீ<br>சங்கனூர் வடக்கு | 6.2 கி.மீ<br>கணபதி கிழக்கு |
| 11 | கடந்த ஓராண்டில் சான்றுகள் வழங்கப்பட்ட விவரம் | 17493 | 7341 | 10152 |

## பிற்சேர்க்கை — IX

*[அரசாணை (நிலை) எண்.673, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள துடியலூர் மற்றும் சரவணம்பட்டி குறுவட்டங்கள், புதிய கவுண்டம்பாளையம் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள துடியலூர் மற்றும் சரவணம்பட்டி குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்**

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விவரங்கள்* | *பிரிக்கப்படும் குறுவட்டம்* | *புதிய குறுவட்டம்* | *எஞ்சியுள்ள குறுவட்டம்* |
|---|---|---|---|---|
| 1 | தலைமையிடம் | 1. சரவணம்பட்டி<br>2. துடியலூர். | கவுண்டம்பாளையம் | 1. சரவணம்பட்டி<br>2. துடியலூர். |
| 2 | பரப்பளவு (ஹெக்டர்) | 1. சரவணம்பட்டி 7619.26.50<br>2. துடியலூர் 10922.95.13<br>**மொத்தம் – 18542.21.63** | 3014.84.41 | 1. சரவணம்பட்டி 5460.87.21<br>2. துடியலூர் 10066.50.01 |
| 3 | மக்கள் தொகை | 1. சரவணம்பட்டி 317535<br>2. துடியலூர் 254648<br>**மொத்தம் – 572183** | 239802 | 1. சரவணம்பட்டி 217697<br>2. துடியலூர் 114684 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் வடக்கு | | |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் வடக்கு | | |
| 6 | சட்டமன்றம் பெயர் | 117. கவுண்டம்பாளையம் | | |
| 7 | பாராளுமன்றம் பெயர் | 20.கோயம்புத்தூர் | | |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 13<br>சரவணம்பட்டி குறுவட்டம்<br>காளப்பட்டி கிழக்கு,<br>விளாங்குறிச்சி,<br>சரவணம்பட்டி,<br>வெள்ளகிணர்,<br>காளப்பட்டி மேற்கு,<br>சின்னவேடம்பட்டி<br>துடியலூர் குறுவட்டம்<br>துடியலூர்,<br>பன்னிமடை,<br>நஞ்சுண்டாபுரம்,<br>சின்னதடாகம்,<br>11.வீரபாண்டி,<br>சோமையம்பாளையம்,<br>கவுண்டம்பாளையம் | 3<br>கவுண்டம்பாளையம்,<br>சின்னவேடம்பட்டி,<br>வெள்ளகிணர் | 10<br>சரவணம்பட்டி குறுவட்டம்<br>காளப்பட்டி கிழக்கு,<br>விளாங்குறிச்சி,<br>சரவணம்பட்டி,<br>காளப்பட்டி மேற்கு<br>துடியலூர் குறுவட்டம்<br>துடியலூர்,<br>பன்னிமடை,<br>நஞ்சுண்டாபுரம்,<br>சின்னதடாகம்,<br>11.வீரபாண்டி,<br>சோமையம்பாளையம் |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஊராட்சிகள் – 5.<br>பன்னிமடை,<br>நஞ்சுண்டாபுரம்,<br>சின்னதடாகம்,<br>வீரபாண்டி,<br>சோமையம்பாளையம்<br>மாநகராட்சி வார்டுகள் – 27 | ஊராட்சிகள் – இல்லை.<br><br>மாநகராட்சி வார்டுகள் – 10 | ஊராட்சிகள் – 5.<br>பன்னிமடை,<br>நஞ்சுண்டாபுரம்,<br>சின்னதடாகம்,<br>வீரபாண்டி,<br>சோமையம்பாளையம்<br>மாநகராட்சி வார்டுகள் – 17 |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம்/தூரம் | துடியலூர்<br>நெ.11 வீரபாண்டி /<br>15 கி.மீ<br>சரவணம்பட்டி<br>காளப்பட்டி கிழக்கு<br>10 கி.மீ | வெள்ளகிணர் /<br>8 கி.மீ | துடியலூர்<br>நெ.11 வீரபாண்டி / 15 கி.மீ<br>சரவணம்பட்டி<br>காளப்பட்டி<br>கிழக்கு<br>10 கி.மீ. |
| 11 | ஒராண்டில் வழங்கப்பட்ட சான்றுகளின் எண்ணிக்கை | 24599 | 8525 | 16074 |

## பிற்சேர்க்கை – X

*[அரசாணை (நிலை) எண்.673, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள சிங்காநல்லூர் மற்றும் கோயம்புத்தூர் டவுன் குறுவட்டங்கள், புதிய இராமநாதபுரம் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள சிங்காநல்லூர் மற்றும் கோயம்புத்தூர் டவுன் குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்**

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விவரங்கள்* | *பிரிக்கப்படும் குறுவட்டம்* | *புதிய குறுவட்டம்* | *எஞ்சியுள்ள குறுவட்டம்* |
|---|---|---|---|---|
| 1 | தலைமையிடம் | 1. சிங்காநல்லூர்<br>2. கோயம்புத்தூர் டவுன் | இராமநாதபுரம் | 1. சிங்கநல்லூர்<br>2. கோயம்புத்தூர் டவுன் |
| 2 | பரப்பளவு (ஹெக்டர்) | சிங்காநல்லூர் 3195.0<br>கோயம்புத்தூர் டவுன் 1269.5<br>மொத்தம் 4464.5 | 1390.9 | சிங்காநல்லூர் 2392.0<br>கோயம்புத்தூர் டவுன் 681.6 |
| 3 | மக்கள்தொகை | சிங்காநல்லூர் 268655<br>கோயம்புத்தூர் டவுன் – 395051<br>மொத்தம் 663706 | 208104 | சிங்காநல்லூர் 161417<br>கோயம்புத்தூர் டவுன் 294185 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் தெற்கு | | |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் தெற்கு | | |
| 6 | சட்டமன்றம் பெயர் | 120. கோயம்புத்தூர் தெற்கு<br>121. சிங்காநல்லூர் | | |
| 7 | பாராளுமன்றம் பெயர் | 20. கோயம்புத்தூர் | | |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 6<br>சிங்காநல்லூர் குறுவட்டம் (சிங்காநல்லூர், உப்பிலி பாளையம், சௌரி பாளையம்)<br>கோயம்புத்தூர் டவுன் குறுவட்டம் (கோயம்புத்தூர் டவுன், கோயம்புத்தூர் ரூரல், இராமநாதபுரம்) | 2<br>இராமநாதபுரம், சௌரிபாளையம் | 4<br>சிங்காநல்லூர் குறுவட்டம் (சிங்காநல்லூர், உப்பிலிபாளையம்)<br>கோயம்புத்தூர் டவுன் குறுவட்டம் (கோயம்புத்தூர் டவுன் வடக்கு, கோயம்புத்தூர் டவுன் தெற்கு, கோயம்புத்தூர் ரூரல்) |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஊராட்சிகள் – இல்லை.<br>மாநகராட்சி வார்டுகள் – 26 | ஊராட்சிகள் – இல்லை.<br>மாநகராட்சி வார்டுகள் –11 | ஊராட்சிகள் – இல்லை.<br>மாநகராட்சி வார்டுகள் –15 |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | சிங்காநல்லூர் – 8 கி.மீ | சௌரிபாளையம் – 5 கி.மீ | சிங்காநல்லூர் – 8 கி.மீ |
| 11 | ஓராண்டில் வழங்கப்பட்ட சான்றுகளின் எண்ணிக்கை | 29740 | 8998 | 20742 |

No.II(1)/REVDM/51/2025.

**[வருவாய் நிருவாகம்—ஆட்சி எல்லை— காஞ்சிபுரம் மாவட்டம்—காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள காஞ்சிபுரம் குறுவட்டத்தினைச் சீரமைத்து காஞ்சிபுரம்-II எனும் புதிய குறுவட்டம் மற்றும் சிறுகாவேரிபாக்கம் மற்றும் காஞ்சிபுரம் குறுவட்டங்களைச் சீரமைத்து செவிலிமேடு எனும் புதிய குறுவட்டம் உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.674, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு, நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
3. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண் ந.க/ COLKPM/1697/2025–அ7, நாள் 07.04.2025 மற்றும் 16.04.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01–04/127/2025, நாள் 16.04.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை: எண்.674, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**14. "மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள காஞ்சிபுரம் மற்றும் சிறுகாவேரிப்பாக்கம் ஆகிய குறுவட்டங்களைச் சீரமைத்து காஞ்சிபுரம்–II மற்றும் செவிலிமேடு எனும் 2 புதிய வருவாய் குறுவட்டங்கள் உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. உத்தேசிக்கப்பட்டுள்ள காஞ்சிபுரம்–II மற்றும் செவிலிமேடு குறுவட்டம் உருவாக்க வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை குறித்த காரணங்கள்:–

- தற்போது காஞ்சிபுரம் குறுவட்டத்தில் 22 வருவாய் கிராமங்களும், சிறுகாவேரிப்பாக்கம் குறுவட்டத்தில் 29 வருவாய் கிராமங்களும் உள்ளன.
- காஞ்சிபுரம் குறுவட்டத்தில் உள்ள நசரத்பேட்டை, தேனம்பாக்கம் மற்றும் நத்தப்பேட்டை ஆகிய கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் காஞ்சிபுரம் உள்வட்டம் தலைமையிடம் செல்வதற்கு 8 கிலோ மீட்டர் பயணம் செய்ய வேண்டிய நிலை உள்ளதெனவும், அதே போன்று, சிறுகாவேரிப்பாக்கம் குறுவட்டத்தில் உள்ள கோளிவாக்கம், விப்பேடு மற்றும் நரப்பாக்கம் ஆகிய கிராம பொதுமக்கள் சிறுகாவேரிப்பாக்கம் உள்வட்டம் தலைமையிடம் செல்வதற்கு 14 கிலோமீட்டர் பயணம் செய்ய வேண்டிய நிலை உள்ளது.
- எனவே, மேற்படி கிராம பொதுமக்களின் வசதிக்காகவும், நிருவாக நலனுக்காவும், அனைத்து அரசு நலத்திட்ட உதவிகளும் பொதுமக்களுக்கு உடனுக்குடனே கிடைக்க ஏதுவாகவும் **காஞ்சிபுரம்–II** மற்றும் **செவிலிமேடு** கிராமத்தை தலைமையிடமாக கொண்டு இரு புதிய உள்வட்டங்களை உருவாக்கிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ii. மேற்கண்ட வகையில் காஞ்சிபுரம்–II மற்றும் செவிலிமேடு குறுவட்டத்தினை உருவாக்க பிற குறுவட்டங்களிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய நில விஸ்தீரணங்களின் விவரமும், காஞ்சிபுரம்–II மற்றும் செவிலிமேடு என்கிற புதிய குறுவட்டத்தின் மொத்த நிலப் பரப்பளவும் பின்வருமாறு:–

| வ. எண் | உள் வட்டத்தின் பெயர் | மொத்த பரப்பு (ஹெக்டேர்) | காஞ்சிபுரம்–II உள்வட்டத்திற்கு பிரிக்கப்பட வேண்டிய பரப்பளவு (ஹெக்டேர்) | செவிலிமேடு உள்வட்டத்திற்கு பிரிக்கப்பட வேண்டிய பரப்பளவு (ஹெக்டேர்) | எஞ்சிய பரப்பளவு (ஹெக்டேர்) |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 5852.71.22 | 1792.15.17 | 2359.50.50 | 2182.83.55 (சிறுகாவேரிப்பாக்கம் குறுவட்டத்தில் உள்ள நெட்டேரி, புத்தேரி–26 உட்பட்டு) |
| 2 | சிறுகாவேரிப் பாக்கம் | 7935.84.50 | – | 2341.42.00 | 5112.64.50 (சிறுகாவேரிப்பாக்கம் குறுவட்டத்தில் உள்ள நெட்டேரி, புத்தேரி–26 நீங்கலாக) |
| | | | 1792.15.17 | 4700.92.50 | |

iii. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையானது தொடர்புடைய அறிக்கைக்களுடன் பரிசீலனை செய்யப்பட்டதில், உத்தேசிக்கப்பட்டுள்ள காஞ்சிபுரம்–II மற்றும் செவிலிமேடு குறுவட்டங்கள் காஞ்சிபுரம் மற்றும் சிறுகாவேரிபாக்கம் வருவாய் குறுவட்டத்தில் ஒரு வருவாய் கிராமங்களாக இருந்து வருகிறது. காஞ்சிபுரம் வட்டத்தில் மொத்தம் 6 குறுவட்டங்களில் காஞ்சிபுரம் குறுவட்டம் மற்றும் சிறுகாவேரிபாக்கம் குறுவட்டங்கள் மட்டுமே தற்போது சீரமைக்கப்பட்டு உத்தேசிக்கப்பட்டுள்ள காஞ்சிபுரம்–II மற்றும் செவிலிமேடு குறுவட்டங்கள் தோற்றுவிக்கப்படவுள்ளது.

iv. இவற்றுள், காஞ்சிபுரம் குறுவட்டத்தில் உள்ள 22 வருவாய் கிராமங்களில், 10 வருவாய் கிராமங்களை கொண்டு காஞ்சிபுரம்–II குறுவட்டமும், காஞ்சிபுரம் குறுவட்டத்தில் உள்ள 6 வருவாய் கிராமங்கள் மற்றும் சிறுகாவேரிபாக்கம் வருவாய் குறுவட்டத்தில் உள்ள 8 வருவாய் கிராமங்கள் என மொத்தம் 14 வருவாய் கிராமங்களை கொண்டு செவிலிமேடு குறுவட்டமும் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

v. மேலும், காஞ்சிபுரம் குறுவட்டத்தில் உள்ள 22 கிராமங்களில் புதிய உள்வட்டங்களை உருவாக்க 16 கிராமங்கள் பிரித்து கொடுக்கப்பட்ட நிலையில், எஞ்சியுள்ள 6 கிராமங்கள் மற்றும் சிறுகாவேரிப்பாக்கம் குறுவட்டத்தில் உள்ள நெட்டேரி, புத்தேரி–26 ஆகிய 2 கிராமங்களை ஒன்றிணைத்து ஆக மொத்தம் 8 கிராமங்களை எஞ்சிய காஞ்சிபுரம் குறுவட்டத்திற்கு உட்படுத்தப்படுகிறது. மேலும், மீதமுள்ள பழைய காஞ்சிபுரம் குறுவட்டத்தின் பெயரை காஞ்சிபுரம்–I குறுவட்டம் என பெயர் மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

vi. இதனை தவிர்த்து, சிறுகாவேரிப்பாக்கம் குறுவட்டத்தில் உள்ள 29 கிராமங்களில் இருந்து 8 கிராமங்களை புதிய உள்வட்டங்களாக உருவாக்கப்படவுள்ள செவிலிமேடு குறுவட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் நெட்டேரி, புத்தேரி–26 ஆகிய 2 கிராமங்களை பழைய காஞ்சிபுரம் குறுவட்டம் (காஞ்சிபுரம்–I )–இல் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள 19 கிராமங்கள் சிறுகாவேரிப்பாக்கம் குறுவட்டத்திற்கு மறுசீரமைக்கப்பட வேண்டும்.

vii. உத்தேசிக்கப்பட்டுள்ள காஞ்சிபுரம்–II மற்றும் செவிலிமேடு குறுவட்டங்கள் தோற்றுவிக்கும் நேர்வில், உருவாக்கப்படவிருக்கும் 2 புதிய குறுவட்டங்களுக்கு கோரப்படும் 2 வருவாய் ஆய்வாளர் பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாகவும் வழங்கும்படி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| வ. எண் | பணியிடங்களின் பெயர் | நிலை மற்றும் ஊதிய விகிதம் (In pay revised scale) | புதிய பணியிடங்கள் |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை–10, ரூ.20,600 – 75,900/– | 2 |
| **மொத்தம்** | | | **2** |

viii. நகராட்சி பகுதிகளில் பெருகி வரும் மக்கள்தொகையினை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் விரைந்து பெற்றிடவும், பொதுமக்களின் வசதிக்காகவும், நிருவாக நலன் கருதி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, காஞ்சிபுரம் குறுவட்டத்தினை சீரமைத்து காஞ்சிபுரம்–II எனும் குறுவட்டமும், காஞ்சிபுரம் மற்றும் சிறுகாவேரிபாக்கம் குறுவட்டங்களை சீரமைத்து செவிலிமேடு எனும் புதிய குறுவட்டமும், எஞ்சியுள்ள காஞ்சிபுரம் குறுவட்டத்துடன் சிறுகாவேரிபாக்கத்தில் உள்ள இரண்டு வருவாய் கிராமங்களை சேர்த்து 8 வருவாய் கிராமங்களுடன் செயல்படவிருக்கும் எஞ்சிய காஞ்சிபுரம் குறுவட்டத்தினை காஞ்சிபுரம்–I என பெயர் மாற்றவும் அரசுக்கு ஆவண செய்யுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் மாவட்டம் ஆகியோரின் கருத்துக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, கீழ்கண்டவாறு அமையும் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது:–

அ) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள காஞ்சிபுரம் குறுவட்டத்தினைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை I & III–இல் உள்ளவாறு) காஞ்சிபுரம்–II** எனும் புதிய குறுவட்டம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள காஞ்சிபுரம் குறுவட்டமானது காஞ்சிபுரம்–I என அமையும்.

ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள சிறுகாவேரிப்பாக்கம் மற்றும் காஞ்சிபுரம் குறுவட்டங்களைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை I & III–இல் உள்ளவாறு) செவிலிமேடு** எனும் புதிய குறுவட்டம் உருவாக்கப்படுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டங்கள் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121

(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)

PSL No.202509PSL0171.

**பிற்சேர்க்கை – I**

*[அரசாணை (நிலை) எண்.674, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள காஞ்சிபுரம் குறுவட்டம் (ம) சிறுகாவேரிபாக்கம் குறுவட்டங்கள் மற்றும் புதிய காஞ்சிபுரம்-II (ம) செவிலிமேடு குறுவட்டங்களில் கிராமங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| *வ. எண்* | *தற்போதுள்ள காஞ்சிபுரம் குறுவட்டம்* | | *தற்போதுள்ள சிறுகாவேரிபாக்கம் குறுவட்டம்* | | *புதிய காஞ்சிபுரம்–II குறுவட்டம்* | | *புதிய செவிலிமேடு குறுவட்டம்* | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* |
| 1. | 47 | அஞ்சூர் | 37 | புஞ்சரசந்தாங்கல் | 44 | காஞ்சிபுரம் பகுதி எண்.2 (1 மற்றும் 2 ஆம் பிரிவுகள் (விஷ்ணு காஞ்சி) | 41 | செவிலிமேடு பகுதி எண்.1 |
| 2. | 48 | தேனம்பாக்கம் | 38 | வளத்தோட்டம் | 47 | அஞ்சூர் | 41 | செவிலிமேடு பகுதி எண்.2 |
| 3. | 46 | வீரம்பாடி | 39 | கமுகம்பள்ளம் | 48 | தேனம்பாக்கம் | 45 | சின்னையங்குளம் |
| 4. | 41 | செவிலிமேடு பகுதி எண்.1 | 35 | கோளிவாக்கம் | 46 | வீரம்பாடி | 40 | ஓரிக்கை |
| 5. | 41 | செவிலிமேடு பகுதி எண்.2 | 36 | அய்யங்கார்குளம் | 52 | நத்தப்பேட்டை | 42 | வேளிங்கப்பட்டரை |
| 6. | 45 | சின்னையங்குளம் | 4 | பெரும்பாக்கம் | 49 | தாட்டித்தோப்பு | 27 | கீழ்கதிர்பூர் |
| 7. | 40 | ஓரிக்கை | 5 | முத்தவேடு | 51 | நசரத்பேட்டை | 37 | புஞ்சரசந்தாங்கல் |
| 8. | 42 | வேளிங்கப்பட்டரை | 6 | பிச்சவாடி | 53 | திருவீதிபள்ளம் | 38 | வளத்தோட்டம் |
| 9. | 52 | நத்தப்பேட்டை | 20 | மேலம்பி | 50 | பெரியத்தோட்டம் | 39 | கமுகம்பள்ளம் |
| 10. | 49 | தாட்டித்தோப்பு | 8 | மேல்ஒட்டிவாக்கம் | 43 | கோட்டைக்காவல் | 35 | கோளிவாக்கம் |
| 11. | 51 | நசரத்பேட்டை | 3 | முசரவாக்கம் பகுதி–1 | – | – | 36 | அய்யங்கார்குளம் |
| 12. | 24 | அச்சுக்கட்டு | 3 | முசரவாக்கம் பகுதி–2 | – | – | 32 | நரப்பாக்கம் |
| 13. | 25 | சாலபோகம் | 65 | திம்மசமுத்திரம் | – | – | 34 | விப்பேடு |

| வ. எண் | தற்போதுள்ள காஞ்சிபுரம் குறுவட்டம் | | தற்போதுள்ள சிறுகாவேரிபாக்கம் குறுவட்டம் | | புதிய காஞ்சிபுரம்–II குறுவட்டம் | | புதிய செவிலிமேடு குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 14. | 44 | காஞ்சிபுரம் பகுதி எண்.1 (3,4 மற்றும் 5ஆம் பிரிவுகள்) | 63 | பாப்பாங்குழி | – | – | 33 | ஆளவந்தார் மேடு |
| 15. | 53 | திருவீதிபள்ளம் | 73 | ஏரிவாக்கம் | – | – | – | – |
| 16. | 50 | பெரியத்தோட்டம் | 74 | கள்ளகம்பன் பட்டடை | – | – | – | – |
| 17. | 43 | கோட்டைக்காவல் | 22 | சிறுகாவேரிபாக்கம் | – | – | – | – |
| 18. | 44 | காஞ்சிபுரம் பகுதி எண்.2 (1 மற்றும் 2ஆம் பிரிவுகள்) (விஷ்ணு காஞ்சி) | 23 | நெட்டேரி | – | – | – | – |
| 19. | 27 | கீழ்கதிர்பூர் | 64 | கருப்படி தட்டடை | – | – | – | – |
| 20. | 62 | கோனேரிக்குப்பம் பகுதி எண்.1 | 7 | விஷார் | – | – | – | – |
| 21. | 62 | கோனேரிக்குப்பம் பகுதி எண்.2 | 31 | சடந்தாங்கல் | – | – | – | – |
| 22. | 54 | அரப்பணஞ்சேரி | 26 | புத்தேரி | – | – | – | – |
| 23. | – | – | 21 | கீழம்பி | – | – | – | – |
| 24. | – | – | 28 | மேல்கதிர்பூர் | – | – | – | – |
| 25. | – | – | 29 | மங்கல்பாடி | – | – | – | – |
| 26. | – | – | 30 | மேட்டுக்குப்பம் | – | – | – | – |
| 27. | – | – | 32 | நரப்பாக்கம் | – | – | – | – |
| 28. | – | – | 34 | விப்பேடு | – | – | – | – |
| 29. | – | – | 33 | ஆளவந்தார் மேடு | – | – | – | – |

**பிற்சேர்க்கை – II**

*[அரசாணை (நிலை) எண்.674, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**மறுசீரமைப்பிற்கு பின் எஞ்சியுள்ள காஞ்சிபுரம்-I மற்றும் சிறுகாவேரிபாக்கம் குறுவட்டங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்**

| வ. எண் | எஞ்சியுள்ள காஞ்சிபுரம்–I குறுவட்டம் | | எஞ்சியுள்ள சிறுகாவேரிபாக்கம் குறுவட்டம் | |
|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 24 | அச்சுக்கட்டு | 4 | பெரும்பாக்கம் |
| 2. | 25 | சாலபோகம் | 5 | முத்தவேடு |
| 3. | 44 | காஞ்சிபுரம் பகுதி எண்3,4) 1. மற்றும் 5ஆம் பிரிவுகள்) | 6 | பிச்சவாடி |
| 4. | 62 | கோனேரிக்குப்பம் பகுதி எண்1. | 20 | மேலம்பி |
| 5. | 62 | கோனேரிக்குப்பம் பகுதி எண்2. | 8 | மேல்ஒட்டிவாக்கம் |
| 6. | 54 | அரப்பணஞ்சேரி | 3 | முசரவாக்கம் பகுதி1– |
| 7. | 23 | நெட்டேரி | 3 | முசரவாக்கம் பகுதி2– |
| 8. | 26 | புத்தேரி | 65 | திம்மசமுத்திரம் |
| 9. | – | – | 63 | பாப்பாங்குழி |
| 10. | – | – | 73 | ஏரிவாக்கம் |

| வ. எண் | எஞ்சியுள்ள காஞ்சிபுரம்–I குறுவட்டம் | | எஞ்சியுள்ள சிறுகாவேரிபாக்கம் குறுவட்டம் | |
|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 11. | – | – | 74 | கள்ளகம்பன் பட்டடை |
| 12. | – | – | 22 | சிறுகாவேரிபாக்கம் |
| 13. | – | – | 64 | கருப்படி தட்டடை |
| 14. | – | – | 7 | விஷார் |
| 15. | – | – | 31 | சடந்தாங்கல் |
| 16. | – | – | 21 | கீழம்பி |
| 17. | – | – | 28 | மேல்கதிர்பூர் |
| 18. | – | – | 29 | மங்கல்பாடி |
| 19. | – | – | 30 | மேட்டுக்குப்பம் |

**பிற்சேர்க்கை – III**

*[அரசாணை (நிலை) எண்.674, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள காஞ்சிபுரம் குறுவட்டம் (ம) சிறுகாவேரிபாக்கம் குறுவட்டங்கள் மற்றும் புதிய காஞ்சிபுரம்-II (ம) செவிலிமேடு குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விளக்கங்கள் | தற்போதைய குறுவட்டம் | | புதிய குறுவட்டம் | | எஞ்சிய குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தலைமையிடம் | காஞ்சிபுரம் | சிறுகாவேரிப் பாக்கம் | காஞ்சிபுரம்–II | செவிலிமேடு | காஞ்சிபுரம் (காஞ்சிபுரம்–I) | சிறுகாவேரிப் பாக்கம் |
| 2. | பரப்பளவு (ச.கி.மீ) | 58.5 | 79.3 | 17.9 | 47.0 | 21.8 (நெட்டேரி, புத்தேரி–26 உட்பட்டு) | 51.1 |
| 3. | மக்கள் தொகை | 332913 | 57132 | 133511 | 56154 | 162505 (நெட்டேரி, புத்தேரி–26 உட்பட்டு) | 37875 |
| 4. | வருவாய் கோட்டத்தின் பெயர் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 5. | சட்டமன்ற தொகுதியின் பெயர் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 6. | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 7. | மாநகராட்சி பெயர் | காஞ்சிபுரம் | – | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | – |
| 8. | ஊராட்சி ஒன்றியங்கள் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | – | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 9. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 22 | 29 | 10 | 14 | 8 (நெட்டேரி, புத்தேரி–26 உட்பட்டு) | 19 |
| 10. | கிராம பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை | 3 | 17 | – | 8 | 2 (நெட்டேரி, புத்தேரி–26 உட்பட்டு) | 10 |
| 11. | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | – | – | அஞ்சூர் (கிழக்கு பக்கம் – 10 கி.மீ) | அய்யங்கார் குளம் (வடக்கு பக்கம் – 16 கி.மீ) | – | – |

No.II(1)/REVDM/52/2025.

**[வருவாய் நிருவாகம் – ஆட்சி எல்லை – செங்கல்பட்டு மாவட்டம் – பல்லாவரம் வட்டம் – பல்லாவரம் குறுவட்டத்தினைச் சீரமைத்து பல்லாவரம் வடக்கு குறுவட்டம் – பல்லாவரம் மற்றும் பம்மல் குறுவட்டங்களைச் சீரமைத்து அனகாபுத்தூர் குறுவட்டம் மற்றும் தாம்பரம் வட்டம் - தாம்பரம் குறுவட்டத்தினைச் சீரமைத்து பெருங்களத்தூர் குறுவட்டம் - மேடவாக்கம் குறுவட்டத்தினைச் சீரமைத்து பெரும்பாக்கம் குறுவட்டம் ஆகிய 4 குறுவட்டங்கள் உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.675, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு , நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
3. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண்.4001/ 2025/அ7, நாள் 07.04.2025 மற்றும் 12.05.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01–04/126/2025, நாள் 16.04.2025 மற்றும்07.05.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை: எண்.675, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**14. “மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்”.**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டத்திலுள்ள பல்லாவரம் குறுவட்டத்தினைச் சீரமைத்து பல்லாவரம் வடக்கு குறுவட்டம், பம்மல் குறுவட்டத்தினைச் சீரமைத்து அனகாபுத்தூர் குறுவட்டம் மற்றும் தாம்பரம் வட்டத்திலுள்ள தாம்பரம் குறுவட்டத்தினைச் சீரமைத்து பெருங்களத்தூர் குறுவட்டம், மேடவாக்கம் குறுவட்டத்தினைச் சீரமைத்து பெரும்பாக்கம் ஆகிய 4 குறுவட்டங்கள் உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. செங்கல்பட்டு மாவட்டத்தில் 4 புதிய குறுவட்டங்கள் தோற்றுவிக்க வேண்டியதன் அவசியம் கருதி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ள காரணங்கள்:–

- பல்லாவரம் வட்டத்தில் பெறப்படும் அதிகப்படியான சான்றுகள்.
- தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் சுமார் 20,000க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாலும், மேலும், சென்னை ஒட்டியுள்ளதால் பல்வேறு புதிய நகர்ப்புற குடியிருப்புகள் அதிகரித்து வருவதாலும், புதிய குறுவட்டங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது.
- மேலும், முதியோர் உதவி தொகை கோரி வரப்பெறும் மனுக்கள், விதவை உதவித்தொகை, முதிர்கன்னி உதவித்தொகை, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, நலிந்தோர் உதவித்தொகை, விபத்து நிவாரணம், முதலமைச்சர் பொது நிவாரணம் என சமூக பாதுகாப்பு திட்ட மனுக்கள் அனைத்தும் இலவச வீட்டுமனை பட்டா கேட்டு வரப்பெறும் மனுக்கள், வரன்முறை செய்யக்கோரி வரப்பெறும் மனுக்கள், சட்டமன்ற தொகுதி உறுப்பினரிடம் பொதுமக்களால் அளிக்கப்படும் மனுக்கள் மீதான நடவடிக்கைகளின் பணிகள், பெருந்தொற்று மற்றும் பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் வெள்ளத் தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகள், நீதிமன்ற வழக்குகள், தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பான மனுக்கள் மற்றும் உயர் அலுவலர்களின் ஆய்வு உள்ளிட்ட அதிகப்படியான பணிகள் அதிகளவில் உள்ளது.
- பல்லாவரம் மற்றும் பம்மல் குறுவட்ட பகுதியில் சென்னை விமான நிலையம் அமைந்துள்ளதால் முக்கிய பிரமுகர்கள் வருகை கவனித்தல், பெருந்தொற்று மற்றும் பேரிடர் காலங்களில் அனைத்து விதமான மீட்பு பணிகள், பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற கூடுதல் பணி சுமை குறுவட்ட வருவாய் ஆய்வாளருக்கு உள்ளது.

ii. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் பல்லாவரம், பம்மல், தாம்பரம் மற்றும் மேடவாக்கம் குறுவட்டங்களை சீரமைத்து 4 புதிய குறுவட்டங்கள் உருவாக்கவும், பல்லாவரம் குறுவட்டத்தினை சீரமைக்கும் நேர்வில் எஞ்சியுள்ள பல்லாவரம் குறுவட்டத்தை பல்லாவரம் தெற்கு என பெயர் மாற்றம் செய்திடவும் பரிந்துரை செய்துள்ளார்.

iii. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிக்கையானது தொடர்புடைய அறிக்கைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது. தாம்பரம் மற்றும் பல்லாவரம் வட்டங்களில் பிரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வருவாய் குறுவட்டங்களான பெருங்களத்தூர், பெரும்பாக்கம், பல்லாவரம் மற்றும் பம்மல் ஆகியன தற்போது வருவாய் கிராமங்களாக இருந்து வருகிறது.

iv. பல்லாவரம் வருவாய் வட்டத்தில் தற்போது 2–வருவாய் குறுவட்டங்கள் மற்றும் 13–வருவாய் கிராமங்கள் உள்ளன. அதன் விபரம் பின்வருமாறு:–

| *வ. எண்* | *வருவாய் குறுவட்டங்களின் எண்ணிக்கை* | *வருவய் கிராமங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| 1. | பல்லாவரம் | 9 |
| 2. | பம்மல் | 4 |
| **மொத்தம்** | | **13** |

v. செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், தாம்பரம் மற்றும் மேடவாக்கம் ஆகிய இரண்டு குறுவட்டங்களில் உள்ள கிராமங்களை சீரமைத்து பெருங்களத்தூர் மற்றும் பெரும்பாக்கம் ஆகிய இரண்டு குறுவட்டங்களை தலைமையிடமாகக் கொண்டு புதிய குறுவட்டம் உருவாக்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது, தாம்பரம் குறுவட்டமானது தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியாகும். அதேபோன்று, மேடவாக்கம் குறுவட்டமானது புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியாகும்.

vi. தாம்பரம் வருவாய் வட்டத்தில் தற்போது 4– வருவாய் குறுவட்டங்கள் மற்றும் 28 வருவாய் கிராமங்கள் உள்ளன. அதன் விபரம் பின்வருமாறு:–

| *வ. எண்* | *வருவாய் குறுவட்டங்களின் எண்ணிக்கை* | *வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| 1. | தாம்பரம் | 7 |
| 2. | சிட்லபாக்கம் | 6 |
| 3. | மாடம்பாக்கம் | 7 |
| 4. | மேடவாக்கம் | 8 |
| **மொத்தம்** | | **28** |

vii. புதிய குறுவட்டங்கள் தோற்றுவிக்கும் நேர்வில் , குறுவட்டங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடங்கள் வழங்கப்படுகிறது. எனவே, தற்போது புதியதாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் 4 குறுவட்டங்களுக்கு வழங்கப்படும் 4 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

viii. மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள பல்லாவரம் வடக்கு, அனகாபுத்தூர், பெருங்களத்தூர் மற்றும் பெரும்பாக்கம் ஆகிய 4 குறுவட்டங்கள் தோற்றுவிக்கும் நேர்வில், உருவாக்கப்படவிருக்கும் தலா 1 வருவாய் ஆய்வாளர் பணியிடத்திற்கு அரசால் ஒப்பளிக்கப்படவிருக்கும் 4 வருவாய் ஆய்வாளர் பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், புதியதாக கோரப்படும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிரந்தர பணியிடம் மற்றும் ஊதிய நிலை விகிதம் கீழ்க்கண்டவாறு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது:–

| *வ. எண்* | *பணியிடங்களின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம்*<br>*(In pay revised scale)* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை–10,<br>ரூ.20,600 – 75,900/– | 4 |
| **மொத்தம்** | | | **4** |

ix. மாநகராட்சி பகுதிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கத்தினால் பொதுமக்கள் எளிதாக வருவாய் ஆய்வாளரை தொடர்பு கொண்டு பயன்பெறும் வகையிலும், நிர்வாக நலன்கருதியும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, பல்லாவரம் குறுவட்டத்தை சீரமைத்து பல்லாவரம் வடக்கு எனும் புதிய குறுவட்டமும், பல்லாவரம் பம்மல் குறுவட்டங்களைச் சீரமைத்து அனகாபுத்தூர் எனும் புதிய குறுவட்டம், தாம்பரம் குறுவட்டத்தை சீரமைத்து பெருங்களத்தூர் மற்றும் மேடவாக்கம் குறுவட்டத்தை சீரமைத்து பெரும்பாக்கம் எனும் புதிய குறுவட்டம் ஆக மொத்தம் 4 புதிய குறுவட்டங்களை உருவாக்கிடவும், எஞ்சிய பல்லாவரம் குறுவட்டத்தை பல்லாவரம் தெற்கு குறுவட்டம் என பெயர் மாற்றம் செய்திட ஆவண செய்யும்படி கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு மாவட்டம் ஆகியோரின் கருத்துக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, கீழ்க்கண்டவாறு அமையும் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது:–

அ) செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டம், பல்லாவரம் குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை I மற்றும் பிற்சேர்க்கை V அறிவிக்கை–1–இல் உள்ளவாறு) பல்லாவரம் வடக்கு எனும் புதிய குறுவட்டம் உருவாக்கப்படுகிறது. மேலும், எஞ்சியுள்ள பல்லாவரம் குறுவட்டமானது பல்லாவரம் தெற்கு என அமையும்.

ஆ) செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டம், பம்மல் மற்றும் பல்லாவரம் குறுவட்டங்களைச் சீரமைத்து (பிற்சேர்க்கை II மற்றும் பிற்சேர்க்கை V அறிவிக்கை–1–இல் உள்ளவாறு) அனகாபுத்தூர் எனும் புதிய குறுவட்டம் உருவாக்கப்படுகிறது.

இ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், தாம்பரம் குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை III மற்றும் பிற்சேர்க்கை V அறிவிக்கை–2–இல் உள்ளவாறு) பெருங்களத்தூர் எனும் புதிய குறுவட்டம் உருவாக்கப்படுகிறது.

ஈ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், மேடவாக்கம் குறுவட்டத்தைச் சீரமைத்து (பிற்சேர்க்கை IV மற்றும் பிற்சேர்க்கை V அறிவிக்கை–2–இல் உள்ளவாறு) பெரும்பாக்கம் எனும் புதிய குறுவட்டம் உருவாக்கப்படுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டங்கள் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121

(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)

PSL No.202509PSL0171.

**பிற்சேர்க்கை – I**

*[அரசாணை (நிலை) எண்.675, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள பல்லாவரம் குறுவட்டம், புதிய பல்லாவரம் வடக்கு மற்றும் எஞ்சியுள்ள பல்லாவரம் தெற்கு குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| *வ. எண்* | *தற்போதுள்ள பல்லாவரம் குறுவட்டம்* | | *புதிய பல்லாவரம் வடக்கு குறுவட்டம்* | | *எஞ்சியுள்ள பல்லாவரம் தெற்கு குறுவட்டம் (கண்டோன்ட்மெண்ட் பல்லாவரம் மற்றும் கவுல்பஜார் நீங்கலாக)* | |
|---|---|---|---|---|---|---|
| | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* |
| 1. | 20 | நெமிலிச்சேரி | 08 | புனித தோமையர்மலை | 20 | நெமிலிச்சேரி |
| 2. | 21 | ஜமீன் பல்லாவரம் –1 | 15 | திரிசூலம் | 21 | ஜமீன் பல்லாவரம்–I |
| | | ஜமீன் பல்லாவரம் –2 | 16 | மூவரசம்பட்டு | 38 | ஜமீன் பல்லாவரம்–II |
| 3. | 22 | ஈசா பல்லாவரம் ( ம) கீழ்கட்டளை | 22 | ஈசா பல்லாவரம் | 35 | அஸ்தினாபுரம் |
| 4. | 35 | அஸ்தினாபுரம் | 22 | கீழ்க்கட்டளை | – | – |
| 5. | 03 | கவுல் பஜார் | – | – | – | – |
| 6. | 08 | புனித தோமையர் மலை | – | – | – | – |
| 7. | 04 | கண்டோன்ட்மெண்ட் பல்லாவரம் | – | – | – | – |
| 8. | 15 | திரிசூலம் | – | – | – | – |
| 9. | 16 | மூவரசம்பட்டு | – | – | – | – |

**பிற்சேர்க்கை — II**

*[அரசாணை (நிலை) எண்.675, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள பம்மல் குறுவட்டம், புதிய அனகாபுத்தூர் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள பம்மல் குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள பம்மல் குறுவட்டம் | | புதிய அனகாபுத்தூர் குறுவட்டம் (பல்லாவரம் குறுவட்டத்திலுள்ள கண்டோன்மெண்ட் பல்லாவரம் மற்றும் கவுல்பஜார் உட்பட) | | எஞ்சியுள்ள பம்மல் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமத்தின் பெயர் | கிராமம் எண் | கிராமத்தின் பெயர் | கிராமம் எண் | கிராமத்தின் பெயர் |
| 1 | 1 | அனகாபுத்தூர் | 1 | அனகாபுத்தூர் – I | 23 | பம்மல் – I |
| 2 | 2 | பொழிச்சலூர் | 36 | அனகாபுத்தூர் – II | 37 | பம்மல் – II |
| 3 | 23 | பம்மல் | 2 | பொழிச்சலூர் | 24 | திருநீர்மலை |
| 4 | 24 | திருநீர்மலை | 4 | கண்டோன்ட்மெண்ட் பல்லாவரம் | – | – |
| – | – | – | 03 | கவுல்பஜார் | – | – |

**பிற்சேர்க்கை — III**

*[அரசாணை (நிலை) எண்.675, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள தாம்பரம் குறுவட்டத்தினைச் சீரமைத்து புதிய பெருங்களத்தூர் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள தாம்பரம் குறுவட்டம் ஆகிய குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| தற்போதுள்ள தாம்பரம் குறுவட்டம் | | | புதிய பெருங்களத்தூர் குறுவட்டம் | | எஞ்சியுள்ள தாம்பரம் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 8 | தாம்பரம் | 10 | பெருங்களத்தூர் | 8 | தாம்பரம் |
| 2. | 01 | புலிக்கொரடு | 9 | முடிச்சூர் | 01 | புலிக்கொரடு |
| 3. | 02 | கடப்பேரி | 12 | இரும்புலியூர் | 02 | கடப்பேரி |
| 4. | 10 | பெருங்களத்தூர் | 11 | பீர்க்கன்கரணை | | |
| 5. | 09 | முடிச்சூர் | – | – | – | – |
| 6. | 11 | பீர்க்கன்கரணை | – | – | – | – |
| 7. | 12 | இரும்புலியூர் | – | – | – | – |

**பிற்சேர்க்கை — IV**

*[அரசாணை (நிலை) எண்.675, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள மேடவாக்கம் குறுவட்டம், புதிய பெரும்பாக்கம் குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள மேடவாக்கம் குறுவட்டம் ஆகிய குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| தற்போதுள்ள மேடவாக்கம் குறுவட்டம் | | | புதிய பெரும்பாக்கம் குறுவட்டம் | | எஞ்சியுள்ள மேடவாக்கும் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 05 | மேடவாக்கம் | 27 | பெரும்பாக்கம் | 26 | மேடவாக்கம் |
| 2. | 01 | நன்மங்கலம் | 22 | அரசன்கழனி | 25 | கோவிலம்பாக்கம் |
| 3. | 02 | கோவிலம்பாக்கம் | 23 | ஒட்டியம்பாக்கம் | 28 | வேங்கைவாசல் |

| தற்போதுள்ள மேடவாக்கம் குறுவட்டம் | | | புதிய பெரும்பாக்கம் குறுவட்டம் | | எஞ்சியுள்ள மேடவாக்கும் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| *வ. எண்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* | *கிராமம் எண்* | *கிராமம் பெயர்* |
| 4. | 19 | பெரும்பாக்கம் | 21 | சித்தாலப்பாக்கம் | 24 | நன்மங்கலம் |
| 5. | 23 | ஒட்டியம்பாக்கம் | – | – | – | – |
| 6. | 22 | அரசன்கழனி | – | – | – | – |
| 7. | 21 | சித்தாலப்பாக்கம் | – | – | – | – |
| 8. | 20 | வேங்கைவாசல் | – | – | – | – |
| 9. | – | – | – | – | – | – |

**பிற்சேர்க்கை – V**

*[அரசாணை (நிலை) எண்.675, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**அறிவிக்கை – 1**

**புதிய பல்லாவரம் வடக்கு (ம) அனாகபுத்தூர் குறுவட்டங்கள் மற்றும் எஞ்சியுள்ள பல்லாவரம் தெற்கு (ம) பம்மல் குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்**

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விவரங்கள்* | *குறுவட்டங்கள் (Parent Firka)* | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *பிரிக்கப்படும் குறுவட்டங்கள்* | | *புதிய குறுவட்டம்* | | *எஞ்சியுள்ள குறுவட்டங்கள்* | |
| 1. | தலைமையிடம் | பல்லாவரம் | பம்மல் | பல்லாவரம் வடக்கு | அனகாபுத்தூர் | பல்லாவரம் தெற்கு | பம்மல் |
| 2. | பரப்பளவு | 2365.51.0 | 1653.13.0 | 509.60.0 | 1053.67.5 | 1347.10.5 | 1108.26.0 |
| 3. | மக்கள்தொகை | 371032 | 267476 | 160269 | 111878 | 197244 | 155598 |
| 4. | வருவாய் வட்டத்தின் பெயர் | பல்லாவரம் | | | | | |
| 5. | வருவாய் கோட்டத்தின் பெயர் | தாம்பரம் | | | | | |
| 6. | சட்டமன்றம் பெயர் | பல்லாவரம் (ம) ஆலந்தூர் | | பல்லாவரம் (ம) ஆலந்தூர் | | பல்லாவரம் | |
| 7. | பாராளுமன்றம் பெயர் | | ஸ்ரீபெரும்புதூர் | | | | |
| 8. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 11 | 4 | 5 | 5 | 4 | 5 |
| 9. | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 3 | 1 | 2 | 2 | 0 | 0 |
| 10. | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | கவுல் பஜார் – 10 கி.மீ (ம) கீழ்க்கட்டளை – 7 கி.மீ. | பொழிச்சலூர் – 4 கி.மீ | கீழ்க்கட்டளை – 7 கி.மீ. | கவுல் பஜார் – 6 கி.மீ | அஸ்தினாபுரம் – 3 கி.மீ | திருநீர்மலை – 2 கி.மீ |

## அறிவிக்கை — 2

### புதிய பெருங்களத்தூர் (ம) பெரும்பாக்கம் குறுவட்டங்கள் மற்றும் எஞ்சியுள்ள தாம்பரம் (ம) மேடவாக்கம் குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | குறுவட்டங்கள் (Parent Firka) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிரிக்கப்படும் குறுவட்டங்கள் | | புதிய குறுவட்டம் | | எஞ்சியுள்ள குறுவட்டங்கள் | |
| 1. | தலைமையிடம் | தாம்பரம் | மேடவாக்கம் | பெருங்களத்தூர் | பெரும்பாக்கம் | தாம்பரம் | மேடவாக்கம் |
| 2. | பரப்பளவு (ச.மி) | 2563.35.43 | 2822.27.22 | 1222.86.00 | 1248.39.00 | 1340.49.43 | 1573.88.22 |
| 3. | மக்கள் தொகை | 335409 | 350160 | 83602 | 169525 | 251807 | 180635 |
| 4. | வருவாய் வட்டத்தின் பெயர் | தாம்பரம் | | | | | |
| 5. | வருவாய் கோட்டத்தின் பெயர் | தாம்பரம் | | | | | |
| 6. | சட்டமன்றம் பெயர் | தாம்பரம் | சோழிங்க நல்லூர் | தாம்பரம் | சோழிங்க நல்லூர் | தாம்பரம் | சோழிங்க நல்லூர் |
| 7. | பாராளுமன்றம் பெயர் | ஸ்ரீபெரும்புதூர் | | | | | |
| 8. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 7 | 8 | 4 | 4 | 4 | 4 |
| 9. | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 1 | 8 | 1 | 4 | 0 | 4 |
| 10. | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம் / தூரம் | முடிச்சூர் – 3.4 கி.மீ. | ஒட்டியம் பாக்கம் – 7.8 கி.மீ | முடிச்சூர் – 2.8 கி.மீ. | ஒட்டியம் பாக்கம் – 2.8 கி.மீ. | புலிக்கொரடு – 3.9 கி.மீ. | கோவிலம் பாக்கம் – 5.6 கி.மீ |

No.II(1)/REVDM/53/2025.

**[வருவாய் நிருவாகம் — ஆட்சி எல்லை — திருவண்ணாமலை மாவட்டம் - திருவண்ணாமலை வருவாய் வட்டத்திலுள்ள திருவண்ணாமலை (வடக்கு) எனும் வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து அடிஅண்ணாமலை எனும் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.676, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு, நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
3. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண் ந.க. எம்2/3182984/2025, நாள் 07.04.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01–04/137/2025, நாள் 21.04.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை: எண்.676, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**14. "மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வருவாய் வட்டத்திலுள்ள திருவண்ணாமலை (வடக்கு) எனும் வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து அடிஅண்ணாமலை எனும் புதிய குறுவட்டம் உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. திருவண்ணாமலை வருவாய் கோட்டத்தில் திருவண்ணாமலை, செங்கம், கீழ்பென்னாத்தூர் மற்றும் தண்டராம்பட்டு ஆகிய நான்கு வட்டங்கள் அமைந்துள்ளன. திருவண்ணாமலை வட்டத்தில் திருவண்ணாமலை (வடக்கு), திருவண்ணாமலை (தெற்கு), தச்சம்பட்டு, வெறையூர், மங்கலம், நாயுடுமங்கலம் மற்றும் துரிஞ்சாபுரம் ஆகிய 7 உள்வட்டங்கள் அமைந்துள்ளது. தற்போது திருவண்ணாமலை (வடக்கு) உள்வட்டம் 25 கிராமங்களை கொண்டதாகவும், மக்கள்தொகை 2,17,741 (2011–ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி) ஆகவும், பரப்பளவு 94.19 சதுர கி.மீ ஆகவும் உள்ளது.

ii. உத்தேசிக்கப்பட்டுள்ள அடிஅண்ணாமலை உள்வட்டம் தோற்றுவிக்கப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை குறித்த விவரங்கள்.

- திருவண்ணாமலை (வடக்கு) உள்வட்டத்திற்கு சராசரியாக மாதத்திற்கு 3700–க்கும் மேற்பட்ட சான்று வழங்கிட கோரி இணையம் வழியாக வரப்பெறும் மனுக்கள், மேற்படி சான்றுகளில் திருத்தம் செய்திடக்கேட்டு 900–க்கும் மேற்பட்ட மேல்முறையீட்டு மனுக்கள் தபால் மூலமாகவும் வரப்பெறுகின்றன.
- மேலும் சமூக பாதுகாப்புத்திட்ட உதவித்தொகை கோரி வரப்பெறும் மனுக்கள், இலவச வீட்டுமனைப்பட்டா கேட்டு வரப்பெறும் மனுக்கள், சட்டமன்ற தொகுதி உறுப்பினர்களிடம் பொதுமக்களால் அளிக்கப்படும் மனுக்கள் இவ்வாறான மனுக்கள் மீதான நடவடிக்கைகளின் பணிகள் மற்றும் சட்டம் ஒழுங்கு தொடர்பான பணிகள் போன்ற அதிகப்படியான பணிகளும், திருவண்ணாமலை வடக்கு உள்வட்டத்தில் பிரசித்திப்பெற்ற அருள்மிகு அண்ணாமலையார் கோவில் அமைந்திருப்பதால் முக்கிய பிரமுகர்களின் வருகை காரணமாக வரவேற்பு பணி, மாத பௌர்ணமி மற்றும் திருவிழா தொடர்பாக நடைபெறும் ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுதல், அதிகப்படியான பணிகளும் மற்றும் இவ்உள்வட்டத்தில் அமைந்துள்ள கிராமங்களான அடிஅண்ணாமலை, கணந்தம்பூண்டி மற்றும் சில கிராமங்களுக்கும் உள்வட்டத்தின் தலைமையிடத்திற்கும் அதிகப்படியான தூரம் உள்ளது.
- எனவே மேற்படி சேவைகள் உடனுக்குடன் அனைத்து மக்களுக்கும் சென்றடையவும், பணியினை செவ்வனே செய்யவும் இவ்உள்வட்டத்தினை இரண்டாக பிரிக்க மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

iii. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிக்கையானது தொடர்புடைய அறிக்கைகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அதன் விவரங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

iv. புதிய உள்வட்டங்கள் தோற்றுவிக்கும் நேர்வில், உள்வட்டங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உள்வட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடங்கள் வழங்கப்படுகிறது. எனவே, தற்போது புதியதாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் ஒரு உள்வட்டத்திற்கு வழங்கப்படும் ஒரு உள்வட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| *வ. எண்* | *பணியிடங்களின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம் (In pay revised scale)* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை–10,<br>ரூ.20,600 - 75,900/– | 1 |
| **மொத்தம்** | | | **1** |

v. மேற்காணும் பணியிடத்தின் அடிப்படையில் புதியதாக தோற்றுவிக்கப்படும் 1 உள்வட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் அடிஅண்ணாமலை உள்வட்டத்தில் அமையவிருப்பதால் அப்பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு திருவண்ணாமலை வருவாய் வட்டாட்சியர் அவர்களின் DDO (Code)–இன்கீழ் உள்ளடக்கப்பட (Mapping) வேண்டும்.

vi. எனவே, திருவண்ணாமலை (வடக்கு) உள்வட்டத்தில் வருவாய் கிராமங்களின் மக்கள் தொகை மற்றும் பட்டாதாரர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் அரசின் சேவைகள் பொதுமக்களுக்கு தாமதமின்றி கிடைக்கவும், தேர்தல் பணி மற்றும் பேரிடர் காலங்களில் ஏற்படும் இழப்புகளை உடனடியாக அரசுக்கு அறிக்கை அனுப்புவதில் சிரமம் ஏற்படுவதை தவிர்க்கவும், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, திருவண்ணாமலை (வடக்கு) உள்வட்டத்தினை பிரித்து அத்தியந்தல் வருவாய் கிராமத்தினை தலைமையிடமாகக் கொண்டு அடிஅண்ணாமலை உள்வட்டம் உருவாக்க ஆவண செய்யுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை மாவட்டம் ஆகியோரின் கருத்துக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டத்திலுள்ள திருவண்ணாமலை (வடக்கு) எனும் வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து **(பிற்சேர்க்கை I & II–இல் உள்ளவாறு) அடிஅண்ணாமலை** எனும் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்க அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டம் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121

(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)
PSL No.202509PSL0171.

**பிற்சேர்க்கை – I**

*[அரசாணை (நிலை) எண்.676, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள திருவண்ணாமலை (வடக்கு) குறுவட்டம், புதிய அடிஅண்ணாமலை குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள திருவண்ணாமலை (வடக்கு) குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள திருவண்ணாமலை (வடக்கு) குறுவட்டம் | | புதிய அடிஅண்ணாமலை குறுவட்டம் | | எஞ்சியுள்ள திருவண்ணாமலை (வடக்கு) குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 65 | திருவண்ணாமலை நகரம் மற்றும் கிராமம் | 136 | திருவண்ணாமலை–II | 65 | திருவண்ணாமலை –I |
| 2. | 75 | கீழ்நாத்தூர் | 52 | அடிஅண்ணாமலை | 75 | கீழ்நாத்தூர் |
| 3. | 50 | ஆடையூர் | 53 | கோசாலை | 50 | ஆடையூர் |
| 4. | 54 | வேங்கிக்கால் | 51 | தேவனந்தல் | 54 | வேங்கிக்கால் |
| 5. | 52 | அடிஅண்ணாமலை | 68 | அய்யம்பாளையம் | 77 | சின்னகாங்கேயனூர் |
| 6. | 53 | கோசாலை | 67 | அத்தியந்தல் | 79 | நல்லான்பிள்ளை பெற்றாள் |
| 7. | 51 | தேவனந்தல் | 66 | ஆணாய்பிறந்தான் | 80 | பள்ளிகொண்டா பட்டு |
| 8. | 77 | சின்னகாங்கேயனூர் | 70 | காவேரியாம்பூண்டி | 78 | சம்மந்தனூர் |
| 9. | 79 | நல்லான் பிள்ளை பெற்றாள் | 69 | பண்டிதபட்டு | 64 | நொச்சிமலை |
| 10. | 80 | பள்ளிகொண்டாபட்டு | 71 | கணந்தம்பூண்டி | 76 | சோ.கீழ்நாச்சிப்பட்டு |
| 11. | 78 | சம்மந்தனூர் | 83 | சாவல்பூண்டி | 62 | வாணியந்தாங்கல் |
| 12. | 83 | சாவல்பூண்டி | 73 | கீழ்அணைக்கரை | 61 | மலப்பாம்பாடி |
| 13. | 73 | கீழ்அணைக்கரை | 74 | மேலத்திக்கான் | 60 | சு.பள்ளியம்பட்டு |
| 14. | 74 | மேலத்திக்கான் | – | – | – | – |
| 15. | 61 | மலப்பாம்பாடி | – | – | – | – |
| 16. | 60 | சு.பள்ளியம்பட்டு | – | – | – | – |
| 17. | 62 | வாணியந்தாங்கல் | – | – | – | – |
| 18. | 64 | நொச்சிமலை | – | – | – | – |
| 19. | 76 | சோ.கீழ்நாச்சிப்பட்டு | – | – | – | – |
| 20. | 68 | அய்யம்பாளையம் | – | – | – | – |
| 21. | 67 | அத்தியந்தல் | – | – | – | – |
| 22. | 66 | ஆணாய்பிறந்தான் | – | – | – | – |
| 23. | 70 | காவேரியாம்பூண்டி | – | – | – | – |
| 24. | 69 | பண்டிதபட்டு | – | – | – | – |
| 25. | 71 | கணந்தம்பூண்டி | – | – | – | – |

**பிற்சேர்க்கை — II**

*[அரசாணை (நிலை) எண்.676, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள திருவண்ணாமலை (வடக்கு) குறுவட்டம், புதிய அடிஅண்ணாமலை குறுவட்டம் மற்றும் எஞ்சியுள்ள திருவண்ணாமலை (வடக்கு) குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல்**

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விளக்கங்கள்* | *பிரிவினைக்கு முன் திருவண்ணாமலை (வடக்கு)* | *புதிய அடிஅண்ணாமலை குறுவட்டம்* | *எஞ்சியுள்ள குறுவட்டம் திருவண்ணாமலை (வடக்கு)* |
|---|---|---|---|---|
| 1 | தலைமையிடம் | திருவண்ணாமலை | அத்தியந்தல் | திருவண்ணாமலை |
| 2 | பரப்பளவு (சதுர கிலோ மீட்டர்) | 94.19 | 45.91 | 48.28 |
| 3 | மக்கள்தொகை | 217741 | 104100 | 113641 |
| 4 | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 5 | வருவாய் வட்டத்தின் பெயர் | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 6 | சட்டமன்ற தொகுதியின் பெயர் | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 7 | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 8 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 3 | 2 | 1 |
| 9 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 25 | 13 | 13 |
| 10 | மாநகராட்சி | திருவண்ணாமலை | | |
| 11 | தலைமையிடத்திலிருந்து வெகுதொலைவில் உள்ள கிராமத்தின் தூரம் | 8 | 7 | 8 |

No.II(1)/REVDM/54/2025.

[**வருவாய் நிருவாகம் — ஆட்சி எல்லை — திருநெல்வேலி மாவட்டம் - திருநெல்வேலி வருவாய் கோட்டம் — பாளையங்கோட்டை வருவாய் வட்டம் — பாளையங்கோட்டை வருவாய் குறுவட்டத்தினை சீரமைத்து மேலப்பாளையம் மற்றும் குலவணிகர்புரம் குறுவட்டங்கள் - திருநெல்வேலி வருவாய் வட்டம் — திருநெல்வேலி மற்றும் நாரணம்மாள்புரம் ஆகிய குறுவட்டங்களைச் சீரமைத்து பேட்டை குறுவட்டம் ஆகிய 3 புதிய வருவாய் குறுவட்டங்களை உருவாக்குவது - ஆணை வெளியிடப்படுகிறது.**]

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.677, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி—1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு—2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025—2026—ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு , நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025—1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
3. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண் COLTNV/2234/2025—A1 மற்றும் COLTNV/2235/2025—A1 நாள் 05.04.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01—04/118 /2025 மற்றும் ந.க.பணி6(1)/01/ 461 /2025, நாள் 15.04.2025 மற்றும் 27.05.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை: எண்.677, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025—2026—ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:—

**14. "மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வருவாய் கோட்டம், பாளையங்கோட்டை வருவாய் வட்டத்திலுள்ள பாளையங்கோட்டை வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து மேலப்பாளையம் மற்றும் குலவணிகர்புரம் எனும் குறுவட்டங்கள் மற்றும் திருநெல்வேலி வருவாய் வட்டத்திலுள்ள திருநெல்வேலி மற்றும் நாரணம்மாள்புரம் ஆகிய குறுவட்டங்களைச் சீரமைத்து பேட்டை எனும் குறுவட்டம் ஆகிய 3 வருவாய் குறுவட்டங்களை உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 3 வருவாய் குறுவட்டங்களின் விவரங்கள்

- திருநெல்வேலி வருவாய் கோட்டம், பாளையங்கோட்டை வருவாய் வட்டத்தில் உள்ள பாளையங்கோட்டை வருவாய் குறுவட்டத்தினை சீரமைத்து மேலப்பாளையம் மற்றும் குலவணிகர்புரம் எனும் 2 குறுவட்டங்கள்.
- திருநெல்வேலி வருவாய் வட்டம், திருநெல்வேலி மற்றும் நாரணம்மாள்புரம் ஆகிய குறுவட்டங்களை சீரமைத்து பேட்டை எனும் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்கவும், நாரணம்மாள்புரம் குறுவட்டத்தில் உள்ள தச்சநல்லூர் வருவாய் கிராமத்தினை திருநெல்வேலி குறுவட்டத்தில் இணைக்கவும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

ii. திருநெல்வேலி மாவட்டத்தில் புதியதாக 3 வருவாய் குறுவட்டங்கள் உருவாக்க வேண்டியதன் அவசியம் மற்றும் தேவை குறித்த காரணங்கள்.

- பாளையங்கோட்டை குறுவட்டத்திற்கு உட்பட்ட 19 கிராமங்களில் 17 கிராமங்கள் பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதியிலும், 2 கிராமங்கள் நாங்குநேரி சட்டமன்ற தொகுதியிலும் உள்ளது.
- பாளையங்கோட்டை குறுவட்டத்தின் மொத்த பரப்பளவு 74.15 ச.கி.மீ உள்ளது. மேலும், பாளையங்கோட்டை குறுவட்டத்தில் 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியின் போது 3,70,530 நபர்கள் இருந்துள்ளார்கள் தற்போது மேற்படி குறுவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 3,91,530 எண்ணிக்கை அளவில் பொது மக்கள் வசிக்கிறார்கள்.
- பாளையங்கோட்டை குறுவட்டத்திற்கு 2024–ஆண்டில் சான்றுகள் வழங்கிட கோரி இணையம் வாயிலாக வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 33,465 ஆகும். இதனடிப்படையில் மாதம் ஒன்றிற்கு சராசரியாக 3,000 மனுக்கள் சராசரியாக நாள் ஒன்றுக்கு சுமார் 100–க்கும் மேற்பட்ட இணையவழி மனுக்கள் சான்று வழங்கக்கோரி வரப்பெறுகிறது.
- திருநெல்வேலி குறுவட்டத்திற்கு மட்டும் 2024–ஆம் ஆண்டில் சான்றுகள் வழங்கிட கோரி இணைய வழியில் வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 22,051 ஆகும். சராசரியாக நாளொன்றிற்கு சுமார் 60–க்கும் மேற்பட்ட இணையவழி மனுக்கள் சான்று வழங்கிட கோரி வரப்பெறுகிறது.
- மேலும் ஏற்கனவே பெறப்பட்ட சான்றுகளில் திருத்தம் செய்திடக் கோரி ஒவ்வொரு மாதமும் 25–க்கும் மேற்பட்ட மேல்முறையீடு மனுக்கள் தபால் மூலமாகவும் வரப்பெறுகின்றன. இதனைத் தவிர்த்து சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பல்வேறு உதவித்தொகைகள் கோரி 765 இணையவழி மனுக்களும் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளன.
- கலைஞர் மகளிர் உரிமைத்தொகை மேல்முறையீட்டு விண்ணப்பங்களும் அதிக எண்ணிக்கையில் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளன. உழவர் பாதுகாப்புத்திட்டம், நலிந்தோர் உதவித்தொகை, விபத்து நிவாரணம், முதலமைச்சர் பொது நிவாரணம் என சமூக பாதுகாப்பு திட்ட மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டு வருகின்றன.
- இலவச வீட்டுமனை பட்டா கோரிக்கை மனுக்கள், பட்டா வரன்முறை கோரிக்கை மனுக்கள், பட்டா மேல்முறையீட்டு கோரிக்கை மனுக்கள், சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் பொதுமக்களால் அளிக்கப்படும் மனுக்கள், ஆகிய மனுக்கள் மீது தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது. மேலும் முக்கிய பிரமுகர்கள் வருகை கவனித்தல், பெருந்தொற்று மற்றும் பேரிடர் காலங்களில் அனைத்து விதமான மீட்பு பணிகள், பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற கூடுதல் பணிகளும் குறுவட்ட வருவாய் ஆய்வாளருக்கு உள்ளன.
- இதனை தவிர்த்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் போன்ற அதிகப்படியான பணிகள் உள்ளது. பாளையங்கோட்டை குறுவட்ட பகுதியான வண்ணார்பேட்டையில் அரசினர் விருந்தினர் மாளிகை இருப்பதால், முக்கிய பிரமுகர்கள் வருகை கவனித்தல், பெருந்தொற்று மற்றும் பேரிடர் காலங்களில் அனைத்து விதமான மீட்பு பணிகள், பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற கூடுதல் பணி பாளையங்கோட்டை குறுவட்ட வருவாய் ஆய்வாளருக்கு உள்ளது. எனவே மேற்படி குறுவட்டத்தினை மறுசீரமைப்பு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது.

iii. திருநெல்வேலி மாவட்டத்தில் மக்கள்தொகை அதிகரித்து வருவதாலும், பொதுமக்களின் அரசு வழங்கும் சேவைகள் எளிதில் கிடைக்கவும், நிருவாக நலனுக்காகவும் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வருவாய் வட்டத்தில் உள்ள பாளையங்கோட்டை குறுவட்டத்தை சீரமைத்து மேலப்பாளையம் மற்றும் குலவணிகர்புரம் எனும் 2 குறுவட்டங்கள் உருவாக்கவும், திருநெல்வேலி வருவாய் வட்டத்தில் உள்ள திருநெல்வேலி மற்றும் நாரணம்மாள்புரம் குறுவட்டங்களை சீரமைத்து பேட்டை குறுவட்டம் உருவாக்கிடவும் நாரணம்மாள்புரம் குறுவட்டத்தில் உள்ள தச்சநல்லூர் வருவாய் கிராமத்தினை திருநெல்வேலி குறுவட்டத்தில் இணைக்கவும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

iv. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையானது தொடர்புடைய அறிக்கைக்களுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

- பாளையங்கோட்டை குறுவட்டத்தில் தற்போது 19 வருவாய் கிராமங்கள் உள்ள நிலையில் மாநகராட்சி பகுதிகளாக உள்ள கீழவீரராகவபுரம் கிராமத்தினை இரண்டாக பிரித்து கீழவீரராகவபுரம்–II, மேலப்பாளையம், கொக்கட்டிகுளம் மற்றும் மேலநத்தம் ஆகிய 4 வருவாய் கிராமங்களை ஒருங்கிணைத்து மேலப்பாளையம் எனும் குறுவட்டமும், குலவணிகர்புரம், விஜயராகவமுதலியார் சத்திரம், சிவனடியார்குளம், ரெட்டியார்பட்டி, முத்தூர் (ரெட்டியார்பட்டி பகுதி–1), வெங்களுநீர் சமுத்திரம் ஆகிய 6 வருவாய் கிராமங்கள் திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் பாளையங்கோட்டை உள்ளாட்சி பகுதியை ஒருங்கிணைத்து குலவணிகர்புரம் கிராமத்தினை தலைமையிடமாக கொண்டு குலவணிகர்புரம் குறுவட்டம் உருவாக்கிட மாவட்ட ஆட்சியர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
- இவற்றுள், மறுசீரமைப்புக்கு முன் பாளையங்கோட்டை குறுவட்டத்தில் அமைந்துள்ள கீழவீரராகவபுரம் வருவாய் கிராமமானது சீரமைக்கப்பட்டு கீழவீரராகவபுரம்–II என உத்தேசிக்கப்பட்டுள்ள வருவாய் கிராமம் தோற்றுவிக்கப்பட்டு உத்தேசிக்கப்பட்டுள்ள மேலப்பாளையம் குறுவட்டத்தில் இணைக்கப்பட வேண்டும். எஞ்சியுள்ள கீழவீரராகவபுரம், கீழவீரராகவபுரம்–I என மாற்றம் செய்யப்பட்டு பாளையங்கோட்டை குறுவட்டத்தில் அமைந்திருக்கும்.
- திருநெல்வேலி மற்றும் நாரணம்மாள்புரம் குறுவட்டத்தினை சீரமைத்து புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பேட்டை குறுவட்டம் உருவாக்குதலுக்கு முன் திருநெல்வேலி மற்றும் நாரணம்மாள்புரம் குறுவட்டத்தில் அமையப்பெற்றுள்ள கிராமங்களின் விவரம். திருநெல்வேலி குறுவட்டத்தில் மொத்தம் உள்ள 19 வருவாய் கிராமங்களில் 14 வருவாய் கிராமங்களை கொண்டு புதியதாக உத்தேசிக்கப்பட்டுள்ள பேட்டை குறுவட்டம் உருவாக்கிடவும், நாரணம்மாள்புரம் குறுவட்டத்தில் உள்ள தச்சநல்லூர் வருவாய் கிராமத்தினை நாரணம்மாள்புரம் குறுவட்டத்திலிருந்து பிரித்து திருநெல்வேலி குறுவட்டத்தில் சேர்க்க திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

v. திருநெல்வேலி குறுவட்டம் ஏற்கனவே உள்ள திருநெல்வேலி மாநகராட்சியின் திருநெல்வேலி மற்றும் தச்சநல்லூர் மண்டலப்பகுதியில் உள்ளடங்கியதாக உள்ளது நாரணம்மாள்புரம் குறுவட்டம். நாரணம்மாள்புரம் பேரூராட்சி. பாளையங்கோட்டை ஊராட்சி பகுதிகளிலும் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சியின் தச்சநல்லூர் மண்டல பகுதியில் உள்ளடங்கியதாக உள்ளது. பேட்டை குறுவட்டம், மானூர் மற்றும் பாப்பாக்குடி ஊரக பகுதிகள் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சியின் திருநெல்வேலி மண்டல பகுதியில் உள்ளடங்கியதாக உள்ளது. எனவே குறுவட்டங்கள் சீரமைப்புக்கு பின்னும் ஏற்கனவே உள்ள சட்டமன்ற, நாடாளுமன்ற தொகுதிகளுக்கு உட்பட்டே அமைகிறது.

vi. இவற்றுள் உத்தேசிக்கப்பட்டுள்ள 3 வருவாய் குறுவட்டங்களும் திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் ஊரகபகுதிகளிலும் அமைந்துள்ளது. புதியதாக 3 வருவாய் குறுவட்டங்கள் தோற்றுவிக்கும் நேர்வில் 3 புதிய பணியிடங்கள் (வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர்–3) என 6 புதிய பணியிடங்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களால் கோரப்பட்டுள்ளது.

vii. மேலும், புதியதாக உத்தேசிக்கப்பட்டிருக்கும் குறுவட்டங்களுக்கு வழங்கப்பெறவிருக்கும் வருவாய் ஆய்வாளர் பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக வழங்கும்படி அரசிடம் தெரிவிக்கலாம். உத்தேசிக்கப்பட்டுள்ள மேலப்பாளையம் மற்றும் குலவணிகர்புரம் குறுவட்டங்கள் பாளையங்கோட்டை வருவாய் வட்டத்தில் அமையபெறவுள்ளது என்பதால் புதிய குறுவட்டம் தோற்றுவிக்கும் நேர்வில் வட்ட பணியமைப்பில் மாற்றம் ஏற்படாது. அவ்வாறே, பேட்டை குறுவட்டம் திருநெல்வேலி வட்டத்தில் அமையவுள்ளது. எனவே புதியதாக உருவாக்கப்படவிருக்கும் வருவாய் ஆய்வாளர் பணியிடங்களை பாளையங்கோட்டை மற்றும் திருநெல்வேலி வருவாய் வட்டாட்சியர்களின் DDO (Code)–இன் கீழ் உள்ளடக்கப்பட (Mapping) வேண்டும்.

viii. மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள மேலப்பாளையம், குலவணிகர்புரம் மற்றும் பேட்டை ஆகிய 3 குறுவட்டங்கள் தோற்றுவிக்கும் நேர்வில், உருவாக்கப்படவிருக்கும் தலா 1 வருவாய் ஆய்வாளர் பணியிடத்திற்கு குறுவட்டங்களின் அடிப்படையில் 1 குறுவட்டத்திற்கு 1 வருவாய் ஆய்வாளர் வீதம் 3 குறுவட்டங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளதால் 3 குறுவட்டங்களுக்கும் அரசால் ஒப்பளிக்கப்படவிருக்கும் வருவாய் ஆய்வாளர் பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், புதியதாக கோரப்படும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிரந்தர பணியிடம் மற்றும் ஊதிய நிலை விகிதம் கீழ்க்கண்டவாறு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது:–

| *வ.எண்* | *பணியிடங்களின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம் (In pay revised scale)* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை–10,<br>ரூ.20,600 – 75,900/– | 3 |
| **மொத்தம்** | | | **3** |

ix. மாநகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கத்தினால் பொதுமக்கள் எளிதாக வருவாய் ஆய்வாளரை தொடர்பு கொள்ளவும், நிருவாக நலன்கருதியும். இணையவழி உள்ளிட்ட அரசு வழங்கும் சேவைகள் அனைத்தையும் விரைந்து பெறும் வகையிலும், தேர்தல் மற்றும் சட்ட ஒழுங்கு நிகழ்வுகளின் போதும் சிறப்புடன் செயல்படவும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று திருநெல்வேலி வருவாய் கோட்டம், பாளையங்கோட்டை வட்டம், பாளையங்கோட்டை குறுவட்டத்தை சீரமைத்து மேலப்பாளையம் மற்றும் குலவணிகர்புரம் எனும் குறுவட்டங்களையும், திருநெல்வேலி வருவாய் வட்டம், திருநெல்வேலி மற்றும் நாரணம்மாள்புரம் குறுவட்டங்களை சீரமைத்து பேட்டை எனும் புதிய குறுவட்டம் உருவாக்கிடவும், நாரணம்மாள்புரம் குறுவட்டத்தில் உள்ள தச்சநல்லூர் வருவாய் கிராமத்தினை திருநெல்வேலி குறுவட்டத்தில் இணைக்கவும் ஆவண செய்யும்படி கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி மாவட்டம் ஆகியோரின் கருத்துக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, கீழ்க்கண்டவாறு அமையும் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது:–

அ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வருவாய் வட்டத்திலுள்ள பாளையங்கோட்டை வருவாய் குறுவட்டத்தினைச் சீரமைத்து (பிற்சேர்க்கை I & III–இல் உள்ளவாறு) மேலப்பாளையம் மற்றும் குலவணிகர்புரம் எனும் 2 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படுகிறது.

ஆ) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வருவாய் வட்டத்திலுள்ள திருநெல்வேலி மற்றும் நாரணம்மாள்புரம் ஆகிய குறுவட்டங்களைச் சீரமைத்து (பிற்சேர்க்கை II & IV–இல் உள்ளவாறு) பேட்டை எனும் புதிய குறுவட்டம் உருவாக்கப்படுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டங்கள் அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டங்கள் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121

(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)

PSL No.202509PSL0171.

**பிற்சேர்க்கை – I**

*[அரசாணை (நிலை) எண்.677, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள பாளையங்கோட்டை குறுவட்டம், புதிய மேலப்பாளையம் மற்றும் குலவணிகர்புரம் குறுவட்டங்கள் மற்றும் எஞ்சியுள்ள பாளையங்கோட்டை குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள பாளையங்கோட்டை குறுவட்டம் | | புதிய மேலப்பாளையம் குறுவட்டம் | | புதிய குலவணிகர்புரம் குறுவட்டம் | | எஞ்சியுள்ள பாளையங்கோட்டை குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 32 | பாளையம்கோட்டை பகுதி – 1 | 38 | மேலப்பாளையம் | 34 | குலவணிகர்புரம் | 32 | பாளையம்கோட்டை பகுதி – 1 |
| 2. | 32 | பாளையம்கோட்டை பகுதி – 2 | 37 | கொக்கட்டிகுளம் | 103 | முத்தூர் (ரெட்டியார்பட்டி பகுதி – 1) | 32 | பாளையம்கோட்டை பகுதி – 2 |
| 3. | 32 | பாளையம்கோட்டை பகுதி – 3 | 39 | மேலநத்தம் | 35 | ரெட்டியார்பட்டி | 32 | பாளையம்கோட்டை பகுதி – 3 |
| 4. | 28 | நடுக்கமுடையார் குளம் | 33 | கீழவீரராகவபுரம்–II | 36 | வெங்களுநீர் சமுத்திரம் | 28 | நடுக்கமுடையார் குளம் |
| 5. | 30 | திருவண்ணாதபுரம் | – | – | 25 | விஜயராகவ முதலியார்சத்திரம் | 30 | திருவண்ணாதபுரம் |
| 6. | 29 | திம்மராஜபுரம் | – | – | 26 | சிவனடியார்குளம் | 29 | திம்மராஜபுரம் |
| 7. | 27 | பனையன்குளம் | – | – | – | – | 27 | பனையன்குளம் |
| 8. | 10 | பாளையஞ்செட்டி குளம் | – | – | – | – | 10 | பாளையஞ்செட்டி குளம் |
| 9. | 31 | வெள்ளக்கோவில் | – | – | – | – | 31 | வெள்ளக்கோவில் |

| வ. எண் | தற்போதுள்ள பாளையங்கோட்டை குறுவட்டம் | | புதிய மேலப்பாளையம் குறுவட்டம் | | புதிய குலவணிகர்புரம் குறுவட்டம் | | எஞ்சியுள்ள பாளையங்கோட்டை குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 10. | 33 | கீழவீரராகவபுரம் | – | – | – | – | 33 | கீழவீரராகவபுரம்–I |
| 11. | 38 | மேலப்பாளையம் | – | – | – | – | – | – |
| 12. | 37 | கொக்கட்டிகுளம் | – | – | – | – | – | – |
| 13. | 39 | மேலநத்தம் | – | – | – | – | – | – |
| 14. | 34 | குலவணிகர்புரம் | – | – | – | – | – | – |
| 15. | 103 | முத்தூர் (ரெட்டியார்பட்டி பகுதி – 1) | – | – | – | – | – | – |
| 16. | 35 | ரெட்டியார்பட்டி | – | – | – | – | – | – |
| 17. | 36 | வெங்களுநீர் சமுத்திரம் | – | – | – | – | – | – |
| 18. | 25 | விஜயராகவ முதலியார் சத்திரம் | – | – | – | – | – | – |
| 19. | 26 | சிவனடியார்குளம் | – | – | – | – | – | – |

**பிற்சேர்க்கை – II**

*[அரசாணை (நிலை) எண்.677, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள திருநெல்வேலி மற்றும் நாரணம்மாள்புரம் குறுவட்டங்கள், புதிய பேட்டை குறுவட்டம் ஆகிய குறுவட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள திருநெல்வேலி குறுவட்டம் | | தற்போதுள்ள நாரணம்மாள்புரம் குறுவட்டம் | | புதிய பேட்டை குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 61 | கண்டியப்பேரி பகுதி – 1 | 25 | நாரணம்மாள்புரம் பகுதி– 1 | 61 | கண்டியப்பேரி பகுதி – 1 |
| 2. | 61 | கண்டியப்பேரி பகுதி – 2 | 25 | நாரணம்மாள்புரம் பகுதி– 2 | 81 | கருங்காடு |
| 3. | 81 | கருங்காடு | 24 | அனந்தகிருஷ்ணாபுரம் | 71 | கோடகநல்லூர் |
| 4. | 71 | கோடகநல்லூர் | 55 | தச்சநல்லூர் | 75 | கொண்டாநகரம் |
| 5. | 75 | கொண்டாநகரம் | 48 | சத்திரம் புதுக்குளம் | 70 | மேலக்கல்லூர் |
| 6. | 70 | மேலக்கல்லூர் | 45 | அபிஷேகப்பட்டி | 80 | நரசிங்கநல்லூர் |
| 7. | 58 | மேலவீரராகவபுரம் | 46 | இராமையன்பட்டி | 72 | பழவூர் |
| 8. | 80 | நரசிங்கநல்லூர் | 23 | இராஜவல்லிபுரம் | 60 | பேட்டை பகுதி – 1 |
| 9. | 72 | பழவூர் | 49 | கரையிருப்பு | 60 | பேட்டை பகுதி– 2 |
| 10. | 60 | பேட்டை பகுதி – 1 | 50 | அருகன்குளம் | 79 | பிள்ளையான் கட்டளை |
| 11. | 60 | பேட்டை பகுதி – 2 | 51 | சேந்திமங்கலம் | 69 | சங்கன்திரடு |
| 12. | 79 | பிள்ளையன் கட்டளை | 52 | மணிமூர்த்தீஸ்வரம் | 76 | சுத்தமல்லி |
| 13. | 64 | சமூகரெங்கையன் கட்டளை | 53 | பிரையன்குளம் | 64 | சமூகரெங்கன் கட்டளை |
| 14. | 69 | சங்கன்திரடு | 54 | அழகநேரி | 73 | வடுகம்பட்டி |
| 15. | 57 | சிந்துப்பூந்துறை | 47 | வேப்பன்குளம் | – | – |

| வ. எண் | தற்போதுள்ள திருநெல்வேலி குறுவட்டம் | | தற்போதுள்ள நாரணம்மாள்புரம் குறுவட்டம் | | புதிய பேட்டை குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 16. | 76 | சுத்தமல்லி | 62 | மேகமுடையார்குளம் | – | – |
| 17. | 59 | தென்பத்து | 63 | இராமலிங்கநேரி | – | – |
| 18. | 56 | திருநெல்வேலி | – | – | – | – |
| 19. | 73 | வடுகம்பட்டி | – | – | – | – |

**மறுசீரமைப்பிற்கு பின் எஞ்சியுள்ள திருநெல்வேலி மற்றும் நாரணம்மாள்புரம் குறுவட்டங்களில் கிராமங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்**

| வ. எண் | எஞ்சியுள்ள திருநெல்வேலி குறுவட்டம் | | எஞ்சியுள்ள நாரணம்மாள்புரம் குறுவட்டம் | |
|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 56 | திருநெல்வேலி | 25 | நாரணம்மாள்புரம் பகுதி – 1 |
| 2. | 57 | சிந்துப்பூந்துறை | 25 | நாரணம்மாள்புரம் பகுதி – 2 |
| 3. | 58 | மேலவீரராகவபுரம் | 24 | அனந்த கிருஷ்ணாபுரம் |
| 4. | 61 | கண்டியப்பேரி–2 | 48 | சத்திரம் புதுக்குளம் |
| 5. | 59 | தென்பத்து | 45 | அபிஷேகப்பட்டி |
| 6. | 55 | தச்சநல்லூர் (நாரணம்மாள்புரம் குறுவட்டத்திலிருந்து சேர்க்க வேண்டியது) | 46 | இராமையன்பட்டி |
| 7. | | – | 23 | இராஜவல்லிபுரம் |
| 8. | | – | 49 | கரையிருப்பு |
| 9. | | – | 50 | அருகன்குளம் |
| 10. | | – | 51 | சேந்திமங்கலம் |
| 11. | | – | 52 | மணிமூர்த்தீஸ்வரம் |
| 12. | | – | 53 | பிரையன்குளம் |
| 13. | | – | 54 | அழகநேரி |
| 14. | | – | 47 | வேப்பன்குளம் |
| 15. | | – | 62 | மேகமுடையார்குளம் |
| 16. | | – | 63 | இராமலிங்கநேரி |

**பிற்சேர்க்கை – III**

*[அரசாணை (நிலை) எண்.677, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள பாளையங்கோட்டை குறுவட்டம், புதிய மேலப்பாளையம் மற்றும் குலவணிகர்புரம் குறுவட்டங்கள் மற்றும் எஞ்சியுள்ள பாளையங்கோட்டை குறுவட்டம் ஆகிய குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்**

| வ. எண் | ஆட்சி எல்லை | பிரிக்கப்படும் குறுவட்டம் | புதிய குறுவட்டம் | | எஞ்சியுள்ள குறுவட்டம் |
|---|---|---|---|---|---|
| | | | குலவணிகர்புரம் | மேலப்பாளையம் | பாளையங்கோட்டை |
| 1 | தலைமையிடம் | பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை |
| 2 | பரப்பளவு (ஹெக்டேர்) | 7415.62.96 | 4035.04.5 | 1017.65.49 | 2362.92.97 |
| 3 | மக்கள்தொகை | 3,91,530 | 1,34,160 | 91,120 | 1,66,250 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி |

| வ. எண் | ஆட்சி எல்லை | பிரிக்கப்படும் குறுவட்டம் | புதிய குறுவட்டம் | | எஞ்சியுள்ள குறுவட்டம் |
|---|---|---|---|---|---|
| | | | குலவணிகர்புரம் | மேலப்பாளையம் | பாளையங்கோட்டை |
| 6 | சட்டமன்றம் பெயர் | பாளையங்கோட்டை மற்றும் நாங்குநேரி | பாளையங்கோட்டை மற்றும் நாங்குநேரி | பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை மற்றும் நாங்குநேரி |
| 7 | பாராளுமன்ற பெயர் | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 19 | 6 | 4 | 10 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 2 – பாளையஞ்செட்டிகுளம் மற்றும் ரெட்டியார்பட்டி (மற்றவை திருநெல்வேலி மாநகராட்சி) | 1 – ரெட்டியார்பட்டி (மற்றவை திருநெல்வேலி மாநகராட்சி) | அனைத்தும் திருநெல்வேலி மாநகராட்சி | 1 – பாளையஞ்செட்டிகுளம் (மற்றவை திருநெல்வேலி மாநகராட்சி) |
| 10 | தலைமை இடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம்/தூரம் | பாளையஞ்செட்டிகுளம் – 7 கி.மீ | சிவனாடியார்குளம் – 8.கி.மீ | கொக்கட்டிகுளம் – 5.கி.மீ | பாளையஞ்செட்டி குளம் – 7.கி.மீ |

**பிற்சேர்க்கை – IV**

*[அரசாணை (நிலை) எண்.677, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள திருநெல்வேலி மற்றும் நாரணம்மாள்புரம் குறுவட்டங்கள், புதிய பேட்டை குறுவட்டம் ஆகிய குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல் கீழ்க்கண்டவாறு அமையும்**

| வ. எண் | ஆட்சி எல்லை | பிரிக்கப்படும் குறுவட்டம் | | புதிய குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | | திருநெல்வேலி | நாரணம்மாள்புரம் | பேட்டை | திருநெல்வேலி | நாரணம்மாள்புரம் |
| 1 | தலைமையிடம் | திருநெல்வேலி | நாரணம்மாள்புரம் | பேட்டை | திருநெல்வேலி | நாரணம்மாள்புரம் |
| 2 | பரப்பளவு (ஹெக்டேர்) | 7540.69.44 | 6614.89.26 | 6465.0.0 | 1213.0.0 | 6477.10.46 |
| 3 | மக்கள்தொகை | 211823 | 111647 | 69790 | 163199 | 90481 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 6 | சட்டமன்றம் பெயர் | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 7 | பாராளுமன்ற பெயர் | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 19 | 17 | 14 | 6 | 16 |

| வ. எண் | ஆட்சி எல்லை | பிரிக்கப்படும் குறுவட்டம் | | புதிய குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | | திருநெல்வேலி | நாரணம்மாள்புரம் | பேட்டை | திருநெல்வேலி | நாரணம்மாள்புரம் |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி –10 {1. சங்கன்திரடு, 2.கோடகநல்லூர், 3.கொண்டாநகரம், 4.மேலக்கல்லூர், 5.பழுவூர்-(பழுவூர், வடுகம்பட்டி) 6.நரசிங்கநல்லூர், 7.கருங்காடு, 8.பேட்டை பகுதி–2, 9.சுத்தமல்லி 10.தென்பத்து} {மற்றவை திருநெல்வேலி மாநகராட்சி – 1. திருநெல்வேலி, 2.சிந்துப்பூந்துறை, 3.மேலவீரராகவபுரம், 4.பேட்டை பகுதி- 1, 5. பிள்ளையான் கட்டளை, 6.சமூகரங்கையன் கட்டளை, 7.கண்டியப்பேரி பகுதி - 1, 8.கண்டியப்பேரி பகுதி - 2} | கிராம ஊராட்சி–2 {1.இராஜவல்லிபுரம், 2.இராமையன்பட்டி (1.இராமையன்பட்டி, 2.அபிஷேகப்பட்டி, 3.வேப்பன்குளம், 4.இராமலிங்கநேரி, 5.மேகமுடையார் குளம்)}, பேரூராட்சி - 1 (நாரணம்மாள்புரம்- 1. நாரணம்மாள்புரம் பகுதி–1, 2.நாரணம்மாள்புரம் பகுதி–2, 3.அருகன்குளம், 4.அனந்த கிருஷ்ணாபுரம்) {மற்றவை திருநெல்வேலி மாநகராட்சி – 1.தச்சநல்லூர், 2.சத்திரம் புதுக்குளம், 3.கரையிருப்பு, 4.அழகநேரி, 5.பிராயன்குளம், 6.மணிமூர்த்தீஸ்வரம், 7.சேந்திமங்கலம்} | கிராம ஊராட்சி–9 {1.சங்கன்திரடு, 2.கோடகநல்லூர், 3.கொண்டாநகரம் 4.மேலக்கல்லூர், 5.பழுவூர் (பழுவூர், வடுகம்பட்டி) 6.நரசிங்கநல்லூர், 7.கருங்காடு, 8.பேட்டை பகுதி–2, 9.சுத்தமல்லி } {மற்றவை திருநெல்வேலி மாநகராட்சி – 1.பேட்டை பகுதி -1, 2.பிள்ளையான் கட்டளை, 3.சமூகரங்கையன் கட்டளை, 4.கண்டியப்பேரி பகுதி - 1} | கிராம ஊராட்சி–1 (1.தென்பத்து) {மாநகராட்சி – 1.திருநெல்வேலி, 2.சிந்துப்பூந்துறை, 3.மேலவீராகவபுரம், 4.கண்டியப்பேரி பகுதி 2, 5.தச்சநல்லூர்} | {கிராம ஊராட்சி–2 1.இராஜவல்லிபுரம், 2.இராமையன்பட்டி (1.இராமையன்பட்டி, 2.அபிஷேகப்பட்டி, 3.வேப்பன்குளம், 4.இராமலிங்கநேரி, 5.மேகமுடையார் குளம்)}, பேரூராட்சி - 1 (நாரணம்மாள்புரம் - 1.நாரணம்மாள்புரம் பகுதி–1, 2.நாரணம்மாள்புரம் பகுதி–2, 3.அருகன்குளம், 4.அனந்த கிருஷ்ணாபுரம்) {மற்றவை திருநெல்வேலி மாநகராட்சி – 1. சத்திரம் புதுக்குளம், 2.கரையிருப்பு, 3.அழகநேரி, 4.பிராயன்குளம், 5.மணிமூர்த்தீஸ்வரம், 6.சேந்திமங்கலம்} |
| 10 | தலைமை இடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமம்/தூரம் | சங்கன்திரடு 18 கி.மீ | நாரணம்மாள்புரம் பகுதி–2 12 கி.மீ | சங்கரன்திரடு 14 கி.மீ | தென்பத்து – 4 கி.மீ | நாரணம்மாள்புரம் பகுதி–2 12 கி.மீ |

No.II(1)/REVDM/55/2025.

**[வருவாய் நிருவாகம் — ஆட்சி எல்லை — திருப்பூர் மாவட்டம் - திருப்பூர் வடக்கு வருவாய் வட்டத்திலுள்ள திருப்பூர் வடக்கு மற்றும் வேலம்பாளையம் ஆகிய குறுவட்டங்களைச் சீரமைத்து நெருப்பெரிச்சல் எனும் புதிய குறுவட்டம் உருவாக்குவது - ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண்.678, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி–1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025 புரட்டாசி 13, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**படிக்கவும்:-**

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்த அறிவிப்பு , நாள் 03.04.2025.
2. அரசு கடித எண் 5482/வ.நி.1(1)/2025–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.04.2025.
3. திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண். 7181/2025/அ1, நாள் 08.04.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் ந.க.பணி6(1)/01/456/2025, நாள் 16.04.2025.
5. அரசாணை (நிலை) எண் 650, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [வ.நி.1(1)] துறை, நாள் 24.09.2025.

**ஆணை: எண்.678, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி-1(1) பிரிவு 29 செப்டம்பர் 2025**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 03.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் 2025–2026–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

**14. "மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் 17 மாவட்டங்களில் 50 புதிய குறுவட்டங்கள் உருவாக்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வருவாய் வட்டத்திலுள்ள திருப்பூர் வடக்கு மற்றும் வேலம்பாளையம் ஆகிய குறுவட்டங்களைச் சீரமைத்து நெருப்பெரிச்சல் எனும் புதிய குறுவட்டம் உருவாக்குவது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:–

i. திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், திருப்பூர் வடக்கு மற்றும் வேலம்பாளையம் ஆகிய குறுவட்டங்களைச் சீரமைத்து, உத்தேசிக்கப்பட்டுள்ள நெருப்பெரிச்சல் குறுவட்டம் தோற்றுவிக்க வேண்டியதன் அவசியம்:–

- திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டத்தில் நெருப்பெரிச்சல் கிராமமானது 20.40 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 53,579 நபர்கள் கொண்ட மக்கள் தொகையினையும் கொண்டுள்ளது.
- மேலும், திருப்பூர் வடக்கு வட்டத்தில் மண்ணரை கிராமமானது 8.30 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 17,261 நபர்கள் கொண்ட மக்கள் தொகையையும் கொண்டுள்ளது. மேற்படி உள்வட்டத்திலேயே தொட்டிபாளையம் கிராமமானது 18.00 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 40,503 நபர்கள் கொண்ட மக்கள் தொகையையும் கொண்டுள்ளது எனவும்,
- மேற்படி திருப்பூர் வடக்கு வட்டத்தில் உள்ள மூன்று கிராமங்களில் இருந்தும் வருமானச்சான்று, சாதிச்சான்று, பிறப்பிடச்சான்று, இருப்பிடச் சான்று, முதல் பட்டதாரி சான்று, விதவைச் சான்று, வாரிசு சான்று, சிறு, குறு விவசாய சான்று, பட்டா மாறுதல், உட்பிரிவு / உட்பிரிவு அல்லாதது ஆகிய சான்றுகள் மேலும் சமூக பாதுகாப்பு திட்டம் தொடர்பான ஓய்வூதிய பலன்கள் மற்றும் பல திட்டங்கள், மேலும் குடும்ப அட்டை தொடர்பாக மொத்தம் 55,486 விண்ணபங்கள் கடந்த ஓராண்டிற்குள் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்றுள்ளன.

ii. உத்தேசிக்கப்படும் உள்வட்டம், தோற்றுவிக்கப்படும்போது வருவாய் ஆய்வாளர்–1, உள்வட்ட நில அளவர் மற்றும் அலுவலக உதவியாளர் என 3 பணியிடங்கள் தேவைப்படுவதாக திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

iii. திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின், திருப்பூர் வடக்கு வட்டம், திருப்பூர் வடக்கு மற்றும் வேலம்பாளையம் குறுவட்டங்களைச் சீரமைத்து நெருப்பெரிச்சல் எனும் புதிய குறுவட்டம் உருவாக்குவது தொடர்பான முன்மொழிவுகள் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டதை தொடர்புடைய ஆவணங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

iv. இந்நேர்வில், பணியாளர் மாதிரியின் (Staff Pattern) அடிப்படையில் வட்டங்கள் தோற்றுவிக்கப்படும்போது குறுவட்ட வருவாய் ஆய்வாளர்களுக்கு தலா 1 அலுவலக உதவியாளர் பணியிடங்கள் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தாலும் அப்பணியாளர் மாதிரி வடிவமைக்கப்பட்ட பின்பு உருவாக்கப்பட்டுள்ள வட்டங்களுக்கு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிலையில் அலுவலக உதவியாளர் பணியிடங்கள் வழங்கப்படவில்லை. புதியதாக 1 குறுவட்டம் தோற்றுவிக்கப்படும் நேர்வில், 1 குறுவட்டத்திற்கு 1 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் தேவைப்படுவதால் புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நெருப்பெரிச்சல் குறுவட்டத்திற்கு 1 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடத்தை நிரந்தர பணியிடமாக வழங்க வேண்டும். மேலும், புதியதாக கோரப்படும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் நிரந்தர பணியிடம் மற்றும் ஊதிய நிலை விகிதம் கீழ்க்கண்டவாறு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது:–

| *வ. எண்* | *பணியிடங்களின் பெயர்* | *நிலை மற்றும் ஊதிய விகிதம் (In pay revised scale)* | *புதிய பணியிடம்* |
|---|---|---|---|
| 1. | குறுவட்ட வருவாய் ஆய்வாளர் | நிலை–10,<br>ரூ.20,600 - 75,900/– | 1 |
| மொத்தம் | | | 1 |

v. நகரப்பகுதிகளில் அதிகரித்து வரும் மக்கள்தொகை பெருக்கத்தினை கருத்தில் கொண்டு நிருவாக வசதிக்காகவும் பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் எளிதில் கிடைக்க ஏதுவாக திருப்பூர் வடக்கு வருவாய் வட்டம், திருப்பூர் வடக்கு உள்வட்டம் மற்றும் வேலம்பாளையம் உள்வட்டத்தை பிரித்து 2 வருவாய் கிராமங்களை உள்ளடக்கி நெருப்பெரிச்சல் கிராமத்தினை தலைமையிடமாகக் கொண்டு புதிய குறுவட்டம் உருவாக்கிட ஆவண செய்யுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், புதியதாக உருவாக்கப்படும் 50 குறுவட்டங்களுக்கு தலா ஒரு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடம் வீதம் 50 புதிய நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவித்தும் அப்பணியிடங்களுக்கு ஒரு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினமாக ரூ.2,07,62,400/– (ரூபாய் இரண்டு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருப்பூர் மாவட்டம் ஆகியோரின் கருத்துக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டத்திலுள்ள திருப்பூர் வடக்கு மற்றும் வேலம்பாளையம் ஆகிய குறுவட்டங்களைச் சீரமைத்து (பிற்சேர்க்கை I & II–இல் உள்ளவாறு) நெருப்பெரிச்சல் எனும் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்க அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**6. இவ்வரசாணை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் குறுவட்டம், அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் செயல்படும்.**

7. மேலே பத்தி 5–இல் புதிய வருவாய் குறுவட்டம் உருவாக்குவது குறித்த ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், திருப்பூர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வரசாணை வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1121

(IFHRMS Additional Sanction Ledger No.2025081121)

PSL No.202509PSL0171.

### பிற்சேர்க்கை – I

*[அரசாணை (நிலை) எண்.678, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**தற்போதுள்ள திருப்பூர் வடக்கு மற்றும் வேலம்பாளையம் குறுவட்டங்கள் மற்றும் புதிய நெருப்பெரிச்சல் குறுவட்டத்தின் விவரம் கீழ்க்கண்டவாறு அமையும்.**

| வ. எண் | தற்போதுள்ள திருப்பூர் வடக்கு குறுவட்டம் | | தற்போதுள்ள வேலம்பாளையம் குறுவட்டம் | | புதிய நெருப்பெரிச்சல் குறுவட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 6 | தொட்டிபாளையம் | 5 | வேலம்பாளையம் | 3 | நெருப்பெரிச்சல் |
| 2. | 7 | மண்ணரை | 4 | செட்டிபாளையம் | 2 | கணக்கம்பாளையம் |
| 3. | 3 | நெருப்பெரிச்சல் | 1 | பொங்குபாளையம் | | – |
| 4. | | – | 2 | கணக்கம்பாளையம் | | – |

**மறுசீரமைப்பிற்கு பின் எஞ்சியுள்ள திருப்பூர் வடக்கு மற்றும் வேலம்பாளையம் குறுவட்டங்களில் கிராமங்கள் கீழ்க்கண்டவாறு அமையும்**

| வ. எண் | எஞ்சியுள்ள திருப்பூர் வடக்கு குறுவட்டம் | | எஞ்சியுள்ள வேலம்பாளையம் குறுவட்டம் | |
|---|---|---|---|---|
| | கிராமம் எண் | கிராமம் பெயர் | கிராமம் எண் | கிராமம் பெயர் |
| 1. | 6 | தொட்டிபாளையம் | 5 | வேலம்பாளையம் |
| 2. | 7 | மண்ணரை | 4 | செட்டிபாளையம் |
| 3. | | | 1 | பொங்குபாளையம் |

### பிற்சேர்க்கை – II

*[அரசாணை (நிலை) எண்.678, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 29 செப்டம்பர் 2025.]*

**மறுசீரமைப்புக்கு பின் திருப்பூர் வடக்கு குறுவட்டம், வேலம்பாளையம் குறுவட்டம் மற்றும் புதிய நெருப்பெரிச்சல் குறுவட்டங்களின் ஆட்சி எல்லை பட்டியல்**

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | பிரிக்கப்படும் குறுவட்டம் (Parent Firka) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | தற்போதுள்ள குறுவட்டம் | தற்போதுள்ள குறுவட்டம் | புதிய குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் | எஞ்சியுள்ள குறுவட்டம் |
| 1 | தலைமையிடம் | திருப்பூர் வடக்கு | வேலம்பாளையம் | நெருப்பெரிச்சல் | திருப்பூர் வடக்கு | வேலம்பாளையம் |
| 2 | பரப்பளவு | 46.7 ச.கி.மீ | 46.12 ச.கி.மீ | 28.4 ச.கி.மீ | 26.3 ச.கி.மீ | 38.12 ச.கி.மீ |

| வ. எண் | ஆட்சி எல்லை விவரங்கள் | *பிரிக்கப்படும் குறுவட்டம் (Parent Firka)* | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | *தற்போதுள்ள குறுவட்டம்* | *தற்போதுள்ள குறுவட்டம்* | *புதிய குறுவட்டம்* | *எஞ்சியுள்ள குறுவட்டம்* | *எஞ்சியுள்ள குறுவட்டம்* |
| 3 | மக்கள் தொகை (2011) | 111343 | 87427 | 65739 | 57764 | 75267 |
| 4 | வருவாய் வட்டத்தின் பெயர் | திருப்பூர் வடக்கு | திருப்பூர் வடக்கு | திருப்பூர் வடக்கு | திருப்பூர் வடக்கு | திருப்பூர் வடக்கு |
| 5 | வருவாய் கோட்டத்தின் பெயர் | திருப்பூர் | திருப்பூர் | திருப்பூர் | திருப்பூர் | திருப்பூர் |
| 6 | சட்ட மன்றம் பெயர் | திருப்பூர் வடக்கு | திருப்பூர் வடக்கு | திருப்பூர் வடக்கு | திருப்பூர் வடக்கு | திருப்பூர் வடக்கு |
| 7 | பாராளுமன்ற பெயர் | திருப்பூர் | திருப்பூர் | திருப்பூர் | திருப்பூர் | திருப்பூர் |
| 8 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 3 | 4 | 2 (திருப்பூர் வடக்கு குறுவட்டத்திலிருந்து நெருப்பெரிச்சல் கிராமத்தையும், வேலம்பாளையம் குறுவட்டத்திலிருந்து கணக்கம்பாளையம் கிராமத்தையும் பிரித்து புதிதாக நெருப்பெரிச்சல் குறுவட்டம் மறுசீரமைப்பு செய்வதன் மூலம்) | 2 | 3 |
| 9 | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | 0 | 2 | 1 | 0 | 1 |
| 10 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள கிராமம் / தூரம் | – | – | – | – | – |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பெ. அமுதா,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.